
கோரக்கர் மருத்துவம்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)



வெளியீடு

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

2012

தமிழ் மருத்துவ நூல் வரிசை: 21

கோரக்கர் மருத்துவம்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106

2012

தமிழ் மருத்துவ நூல் வரிசை: 21
கோரக்கர் மருத்துவம்
(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

பதிப்புத் தகவல்

- நூல் பெயர் : **கோரக்கர் மருத்துவம்**
- பதிப்பு : **சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு**
  இந்திய மருத்துவம் ஓமியோபதித்துறை
  சென்னை – 600 106
- பதிப்புரிமை : தமிழக அரசு
- பொருள் : சித்த மருத்துவம்
- பதிப்பாண்டு : முதற் பதிப்பு: 2012
- பக்கங்கள் : viii + 220 = 228
- படிகள் : 1000
- அச்சுத்தாள் : 70 ஜிஎஸ்எம் டிஎன்பிஎல் காகிதம்
- தாள் அளவு ; டெமி 1 × 8
- அச்சுப்புள்ளி : 10 புள்ளி
- கட்டமைப்பு : சாதாரண அட்டைக்கட்டு
- விலை : ரூ.

- அச்சிட்டோர் : வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ்,
  3/13, பிளாகர்ஸ் ரோடு, அண்ணா சாலை,
  சென்னை – 600 002.
  தொலைபேசி: 2851 4748

இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை

சென்னை – 600 106

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

நூலாக்கப் பணிக்குழு

ஆய்வு மருத்துவ அலுவலர்

மரு. ச. கௌரி, பி.ஐ.எம்.,

பதிப்பாசிரியர்கள்

திரு. த. அழகப்பராசு, M.A., M.L.I.S., M.Phil., B.Ed.,

சிறப்பு அலுவலர் – மொழிபெயர்ப்பு (பொ)

திருமதி. செ. இரா. பிரசன்னா, M.A., M.Phil., B.Ed.,

தமிழ்ப்புலவர்

சுவடி நகலெடுப்போர்

திரு. தி. சுபாஷ் சந்திரபோஸ்

திரு. வெ. சாரங்கபாணி

திருமதி. த. லெட்சுமி

பதிப்புரை

இது ஒரு ஓலைச்சுவடி பதிப்பு நூல். இதுவரை ஓலைச்சுவடிகளிலிருந்து இருபது நூல்கள் வெளிவந்துள்ளன. **கோரக்கர் மருத்துவம்** எனும் இந்நூல் இருபத்தி ஒன்றாவது நூலாக வெளிவருகிறது.

செந்தூரம், மாத்திரை, கஷாயம், குழம்பு, எண்ணெய், சூரணம், பற்பம், தைலம், லேகியம், நெய், எண்ணெய், வடகம், மருந்து என்ற பல்வேறு தலைப்புகளில் நூற்றிற்கும் மேற்பட்ட மருந்து செய்யும் முறைகளைச் சொல்கிறது இந்நூல். எளிமையான சிறிய மருந்து செய்யும் முறைகளைச் சொல்லி, அதனால் குணமாகும் நோய்களும் உணர்த்தப்படுகின்றன.

சன்னிக்குக் கசாயம், இருமலுக்குக் குழம்பு, மேகத்திற்கு வங்கச் செந்தூரம், பேதிக்கு வாய்வு புத்திரன் மாத்திரை போன்ற தலைப்புகளில் சொல்லப்பட்டிருப்பன ‘நோயும் அதற்கான மருந்தும்’ என்ற முறையில் அமைந்துள்ளன. இன்னும் சில தலைப்புகள் இரசசெந்தூரம், ஈருள்ளி நெய், ஏலாதிச் சூரணம், பரங்கிப் பட்டை பதங்கம் போன்ற மருந்துகளின் பெயரை மட்டும் சொல்லும் தலைப்புகளும் அமைந்துள்ளன.

நூலின் நடை எளிமையான நடையாக அமைந்துள்ளது. பாடல்கள் விருத்தப்பாவில் அமைந்துள்ளன. முறையான நான்கு அடிகளுக்குப் பதிலாகப் பல பாடல்கள் மூன்று அடிகளுடன் முடிந்து விடுகின்றன. சீர்கள் நீண்டும் குறுகியும், பாடல் வரிகள் மிகுந்தும் குறைந்தும் காணப்பட்டாலும் பொருள் முழுமையடைந்துள்ளது. பாடலின் தொடக்கத்தில் ஒரு மருந்தின் செய்முறை கூறப்பட்டு இடையில் அதன் தொடர்ச்சியாக அடுத்த செய்முறையின் தொடக்கம் காணப்படுவதால், எந்தப் பாடலுக்கு எந்தத் தலைப்பைக் கொடுப்பது என்ற குழப்பம் ஏற்பட்டது. இயன்ற வரை சரி செய்து உரிய திருத்தங்களுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

சுத்தி செய்து பயன்படுத்தப்பட வேண்டிய மருந்து சரக்குகளை எவ்வாறு சுத்தி செய்ய வேண்டும் என்பதையும் பல பாடல்கள் நவில்கின்றன.

இனி வரும் இந்நூலின் பதிப்புகள் செம்மைப் பதிப்பாக அமைய மருத்துவ வல்லுநர்களின் கருத்துகளும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

– பதிப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

கோரக்கர் மருத்துவம்

உதயாக்கினிச் செந்தூரம்

பாரப்பா லோகமென்ற யுருக்குத் தன்னை
பாடுகிறேன் காமாலை பாண்டு தீர
சீரப்பா யிதன்பெருமை சொல்லா தேநீ
திசைமுகமா முதயாக்கி செந்தூர மென்பார்
சேரப்பா சூதமொன்று கெந்தி ரண்டு
சிறப்பான காந்தமது பலமுங் காலு
நேரப்பா யுருக்கினுட பலமும் நாலு
நெகிழாட்டு கற்றாழைச் சாறு வார்த்தே! 1

பொ.ரை: காமாலை, பாண்டு, தீருவதற்கான உதயாக்கினிச் செந்தூரம் செய்முறை வருமாறு. சூதம் 35 கி., கெந்தகம் 70 கி, காந்தம் 9 கி, உருக்கு (எஃகு) 120 கி. எடுக்க. கற்றாழைச்சாற்றைத் தேவையான அளவு எடுத்துக்கொள்ளவும்.

கற்றாழைச் சாற்றினால் கடிகை நாலு
களிப்போலே ஆட்டியே வில்லை தட்டி
விற்றாழைச் சட்டியிலே ஆல யிலையைப் பரப்பி
மேலேவைத்து வில்லைதனை யிலையால் மூடி
கொற்றருளைச் சட்டிக்குச் சீலைமண் செய்து
பொடியதோர் அடுப்பேற்றித் தீயை மூட்டி
முற்றாழை மூன்றுபத்து கடிகை அங்கே
மூட்டிநீ பார்ப்பளவில் செந்தூர மாமே! 2

பொ.ரை: மேற்குறிப்பிட்ட சரக்குகளைக்கற்றாழைச் சாறூற்றி ஒன்றரை மணி நேரமரைத்துக் களிபோல் ஆனவுடன் வில்லைகளாய் உருட்டவும். சட்டியிலே ஆல இலையைப் பரப்பி அதன் மீது வில்லைகளை வைத்து ஆல இலையை வைத்து மூடவும். சட்டியின் வாய்க்குச் சீலை மண் செய்யவும். ஏற்றிய அடுப்பின் மீது சட்டியை இட்டு பன்னிரெண்டு மணிநேரம் எரிக்கச் செந்தூரமாகும்.

ஆகியதோர் செந்தூரம் தூளா யாட்டி
அடைத்திடுவாய் குழலிலே அப்பா மைந்தா
பாகியதோர் சுக்குதூள் வராக னொன்று
பாய்ச்சடா செந்தூரம் பணந்தான் மூன்று
வாகியதோர் நெய்தேனி யுண்ணச் சொல்லும்
வரியதோர் பெருவயிறும் காமாலை சோகை
ஏகியதோர் பாண்டுபித்தம் விசபாகம் தானு
மிந்தனத்தில் விஷத்தீப் போலெரியுந் தானே! 3

பொ.ரை: செந்தூரக்கட்டிகளைப் பொடித்துக் குழலில் அடைத்துக் கொள்வாய். 4 கி சுக்கு சூரணத்துடன் 1½ கி உதயாக்கினிச் செந்தூரத்தைக் கலக்கவும். நெய், தேன் இவற்றை அனுபானமாய்க் கொண்டு உட்கொள்ள பெருவயிறு, காமாலை, சோகை, பாண்டு, பித்தம், விடபாகம் ஆகிய நோய்கள் தீரும்.

அண்டவாதத்துக்கு உதயாக்கினி சஞ்சீவி

தானென்ற யுதயாக்கினி மகாசஞ் சீவி
சாற்றுகிறேன் ரசம்கெந்தி அரப்பொடியும் காந்தம்
தேனென்ற வகையொன்று கழஞ்சி ரெண்டு
சிதறாமல் கற்றாழம் சாற்றா லாட்டு
மானென்ற கல்வத்தி லிட்டு வைத்து
வாய்மூடி பார்த்திருக்க வேகும் பாரும்
கானென்ற சாற்றாலே ஆற விட்டு
கடினமாம் மூன்றுதரம் வேக வைய்யே! 4

பொ.ரை: இரசம், கெந்தகம், அரப்பொடி, காந்தம் ஆகியவற்றை வகைக்கு 10கி எடுக்க. கற்றாழைச்சாறூற்றிய கல்வத்திலிட்டு சரக்குகளைச் சேர்த்தரைக்கவும். அரைத்த விழுதைக் கல்வத்திலிட்டு வாயினைச் சில்லிட்டு மூடி வேக வைக்கவும். அவ்வாறு மூன்று முறை வேகவைக்கவும்.

கலந்ததொரு மருந்தங்கே யாகித் தானால்
கனலிலிட்டு பார்க்கவே தூளா யாட்டி
அலந்ததொரு அனுபான வாய்வுக் கானால்
அப்பனே திரிகடுகு பொடியாய்ச் செய்து

குலந்ததொரு பணவெடைதா னிரண்டு கூட்டிக்
குழப்பிநீ பொடியிரண்டு காசெடைதா னொக்க
மலந்ததொரு வாதமுதல் அண்ட வாதம்
மயக்கம்வரும் சன்னிக்கு வரிசை கேளே! 5

பொ.ரை: தக்க நேரங் கழித்தெடுத்துப் பார்க்க மருந்து பக்குவமாகியிருக்கும். அதனை எடுத்துத் தூளாக்கவும், சுக்கு, மிளகு, திப்பிலியைத் தூளாக்கி 8 கி எடுத்து அதில் 975 மி.லி சஞ்சீவி மருந்தைக் கூட்டிக்கொடுக்க வாதம், அண்டவாதம் தீரும்.

வரிசைபெற பணவெடைதான் ரெண்டு தூக்கு
மயங்காமல் வெள்ளுள்ளித் தயிலத் தூட்டுப்
பிரிசைபெற பிரமேகந் தீர வென்றால்
பேரான மருந்தோன்றிச் சாற்றி லூட்டுப்
பரிசைபெற எரிகுன்மம் போக வேண்டும்
பருஞ்சீந்தித் தண்டில்நீ பரிவா யூட்டு
வரிசைபெற வாதங்கள் தீர வென்றால்
உற்றநொச்சி கொழுஞ்சியோடு வேளை தானே! 6

பொ.ரை: 975 மி.கி. சஞ்சீவி மருந்தை வெள்ளைப்பூண்டுத் தைலத்தில் கலந்து கொடுக்க மயக்கம் வரும். சன்னி குணமாகும். மருதோன்றிச்சாற்றில் கொடுக்க பிரமேகம் தீரும். சீந்தில் தண்டு சாற்றில் கொடுக்க எரிகுன்மம் குணமாகும். நொச்சி, கொமூஞ்சி, வேளை,

வேளையிலை முருங்கைத்தோல் சாற்றி லாதல்
விரைத்திடவே வாதம்போம் மிகுதி யானால்
நாளையிது தன்னிலிடு நல்மஞ்சள் காமாலை
நாசமாகத் தூதுளையிலைப் பூவருஞ் சீரகமும்
... ...
நேராய்த்தூ ளாட்டின்பாலிலே உண்ணப் போகும்.
காலையிலே வெல்லமிடு பிறக்க வென்றால்
காக்கைநீ வெள்ளையொன்று பிடித்தி டாயே! 7

பொ.ரை: முருங்கைப்பட்டை ஆகியவற்றின் சாற்றில் இச்சஞ்சீவி மருந்தைக் கலந்து கொடுக்க வாதம் நீங்கும்.

தூதுவளையிலை, பூ, சீரகம் ஆகியவற்றைச் சமனெடுத்துத் தூளாக்கி ஆட்டுப்பாலில் கலந்து கொடுக்க மஞ்சள் காமாலை தீரும். காலையில் வெல்லத்திலே சஞ்சீவியை வைத்துச் சாப்பிடவும்.

பிடித்ததொரு காக்கையுடன் வாயிற் கேளு
பெருக்கவே உப்பிட்டு விடத்தலையின் விறகால்
அடுத்ததொரு விசலிடை விறகு தன்னால்
அணுகவே தீயெரித்துக் கம லாக்கினி
எடுத்ததொரு சாம்பல் வெற்பு வேறாய்
இரண்டையுந்தான் வீட்டின்மேல் தூவக் கேளு
குடித்ததொரு வெண்ணெய்கொப் பளித்தாப் போல
கூட்டமெல்லாம் வெவ்வேறாய்ப் பிரிந்து போமே! 8

பொ.ரை: வெள்ளைக்காக்கையைப்பிடித்து அதன் வாயினைப் பிளந்து உப்பிட்டு நிரப்புக. விடத்தலை விறகினால் அடுப்பிலிட்டெரிக்கவும். இரண்டு விறகால் எரித்துச் சாம்பலான பிறகு வீட்டின்மீது தூவவும். வெண்ணெய் கொப்பளித்தது போல காக்கை கூட்டம் கலைந்து வேறு வேறாகப் பிரியும். (அடர்கருப்பு நிற அண்டங்காக்கை அல்லாத, சாதாரண காக்கையை வெள்ளை என்றார் போலும்)

கோடாசூரிக்குளிகை

கூட்டமென்றும் நோயதுவே கோடா சூரி
குளிகைதனைச் சூட்டுகிறேன் கூர்ந்து கேளு
வீட்டமென்னும் நாவிரசம் காந்தம் கெந்தம்
வியப்பான அரிதாரம் சேவலாங் கொட்டை
நாட்டமெனுந் திப்பிலியும் திரிபாலையும் முள்ளி
நலமாக வகையொன்று கழஞ்சி யொன்றும்
காட்டமெனுஞ் செம்புத் தூளீ ராகும்
கழஞ்சியப்பா அக்கிரா கார மொன்றே! 9

பொ.ரை: கோடாசூரிக் குளிகையைக் கூறுகிறேன். கேட்பீராக! நாவி, இரசம், காந்தம், கெந்தகம், அரிதாரம், நேர்வாளக்கொட்டை, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய்,

தான்றிக்காய், முள்ளி, அக்கிராகாரம் இவற்றை வகைக்கு 5 கி எடுக்கவும்.

ஒன்றாகும் எவச்சாரம் நீருள்ளி விரைதா
னுற்றநிலப் பனைக்கிழங்கு மொக்கக் கூட்டி
நன்றாக நாளொன்று கரிப்பான் சாற்றில்
நலமாக விடாமலே கடிகை யொன்று
மன்றாக வெட்டுநாள் அரைத்து நீயு
மப்பனே உளுந்துபோல் குளிகை கூட்டி
குன்றாகும் வியாதியோட உறுதி கண்டு
கொண்டுவர அவர்பலமும் குறித்துப் பாரே! 10

பொ.ரை: எவட்சாரம், நீருள்ளிவிதை, நிலப்பனங்கிழங்கு ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக் கரிசாலைச்சாற்றில் இருபத்து நான்கு நிமிடங்கள் விடாமல் அரைக்கவும். அவ்வாறே எட்டு நாட்களும் தொடர்ந்தரைத்து 65 மி.கி. அளவுள்ள குளிகைகளாய் உருட்டிக் கொண்டு நோயாளியின் வன்மை, மென்மை, நோயின் தன்மை அறிந்து கொடுக்கவும்.

பார்த்துச்செய் பலஉறுதி யான பேர்க்கு
பழச்சாற்றி லிரண்டுருண்டை பதமாய் ஊட்டு
சேர்த்துச்சே யறியாமைக் குணத்துக் கென்றால்
செப்பரிய பசுவின் நெய்தான் கிராணி யானால்
சேர்த்துச்செய் விரோசிக்க யேரண் டெண்ணெய்
கட்டுமலங்க ளற்றவென்றால் வெல்லத் தாட்டே! 11

பொ.ரை: வன்மையுள்ளவர்க்கு இரண்டு குளிகைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கொடுக்கவும். கிராணி நோய்க்கு பசுவின் நெய்யில் இழைத்துத் தரவும். கழிச்சலாக வேண்டியிருப்பின் விளக்கெண்ணெயில் அளிக்கவும். கழிச்சல் நிற்க வேண்டின் வெல்லத்தில் இழைத்துக் கொடுக்கவும்.

ஊட்டடா பழச்சாற்றில் விஷத்துக் கெல்லா
முள்ளுக்கும் மேலுக்கும் துவளை போடு
நாட்டடா நெல்லுண்ண நாச மாகும்
நல்வினைக ளத்தனையும் நன்றாய்க் கேளு

பூட்டடா வெள்ளுடைப்பு நீர்ப்பிளவை யோடு
புகழான லேபனத்துக் கெல்லா மாகும்
நீட்டடா முத்தக்கா சிடித்த நீரில்
நேரான கிராணிக்கு நேரே கேளே! 12

பொ.ரை: எலுமிச்சம் பழச்சாற்றில் குளிகையை இழைத்துக் கொடுத்து மேலுக்கும் துவாலையாகப் போடவும். அனைத்து விடங்களும் குணமாகும். அரிசியினால் செய்யப்பட்ட சோறும் மற்ற பொருட்களும் ஆகாது. அரைத்தசோறு போல் குழந்தைகள் வெள்ளையாய்க் கழியும் வெள்ளுடைப்பு, நீர்ப்பிளவை இவற்றிற்கும் இம்மருந்தைத் தரலாம். பூசு மருந்தாகவும் செயல்படுகிறது. முத்தக்காசினை இடித்த குடிநீரில் கொடுக்க கிராணி குணமாகும்.

நேரான அசீரணமுங் கிராணி சூலை
நிலையாத கடுஞ்சூலைக் கெல்லா மப்பா
வேரான முருங்கைத்தோல் சாற்றி லூட்டு
மிகுந்த செரியாமைக்குத் தயிரி லூட்டு
வாரான சன்னிக் கூமத்தஞ் சாறும்
மைந்தனே உள்ளுக்கும் மேலுக்கும் பூசு
சீரான மூச்சடைப்புச் சுவாச காசம்
தீரவே வெள்ளாட்டுப் பாலி லூட்டே! 13

பொ.ரை: செரியாமை, கிராணி, சூலை, கடுஞ்சூலை ஆகிய நோய்களுக்கு முருங்கைப்பட்டைச் சாற்றிலும் செரியாமை அதிகமாயின் தயிரிலும் குளிகையை உரைத்துக் கொடுக்கவும். சன்னிக்கு ஊமத்தஞ் சாற்றிலிழைத்து உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் துவாலையிடவும். மூச்சடைப்பு சுவாச காசத்திற்கு வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கவும்.

ஊட்டுநீ பிரமேகம் உஷ்ணம் தீர
உறவாக நொச்சிச்சாற் றூட்டி யாட்டு
நாட்டுநீ கண்புகைச்சல் போக வென்றால்
நலமான பழச்சாற்றில் நெய்யில் தோய்ப்பாய்
நீட்டுவாய் உடலெரிவு போக வென்றால்
நெல்லிக்காய்ச் சாற்றில் நினவாய் ஊட்டு
கூட்டுநீ தண்ணீரில் பித்தம் போகும்
கூரான கழுநீரில் உஷ்ணம் போமே! 14

பொ.ரை: பிரமேகம், உஷ்ணம், தீர்வதற்கு நொச்சிச் சாற்றில் குளிகையை உரைத்துக் கொடுக்கவும். கண் புகைச்சலுக்கு எலுமிச்சம் பழச்சாற்றிலும் நெய்யிலும் இழைத்துக் கொடுக்க நீங்கும். உடலெரிச்சலுக்கு நெல்லிக்காய்ச் சாற்றிலும் பித்தத்திற்குத் தண்ணீரிலும் வெப்பத்திற்குக் கழுநீரிலும் குளிகையைத் தர அந்நோய்கள் குணம் பெறும்.

போகுமடா வாய்வுவாதம் நடுக்கு வாதம்
புகட்டுநீ சாதிக்காய்ப் பொடியி லப்பா
ஆகுமடா உடல்வீக்கஞ் சிறுநீரில் தீரும்
அப்பனே விடகரியும் விடமும்
வாகுமடா வஞ்சினைக்குச் சுக்கு நீரில்
வலிகடுப்பு தீரவென்றால் வசம்புத் தூளில்
ஏகுமடா வாதமது உள்ளிச் சாற்றில்
இயல்பான அனுபானங் கோடி தானே! 15

பொ.ரை: வாய்வு அதிகமாதல், வாதம், நடுக்குவாதம் இவற்றிற்கு சாதிக்காய்ப் பொடியிலும் உடல் வீக்கத்திற்குச் சிறுநீரிலும் விடங்களுக்கும் வெஞ்சினத்திற்கும் சுக்கு நீரிலும் வலிக்கும் கடுப்பிற்கும் வசம்புப் பொடியிலும் வாதத்திற்குப் பூண்டுச் சாற்றிலும் கொடுக்க அந்நோய்கள் குணமாகும். இது போன்று அனுபானம் பல உள.

வாய்வுக்குத்தைலம்

கோடியென்றால் வாய்வுக்குத் தைலம் சொல்வோம்
கூர்ந்துகேள் புலத்தியனே குறுக்கித் திட்டம்
தேடிநல்ல வேருடனே நொச்சி வேரும்
சிற்றாமணக் கம்வேரு வகைக்குக் கேளு
கேடில்லாப் பலமொன்று இடித்து வாங்கி
கிருபையுடன் சலம்பத்து படியும் விட்டு
நாட்டியே யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
நாட்டுசிற்றா மணக்கம்நெய் படியு மொன்றே! 16

பொ.ரை: வாய்வுக்கு உண்டான தைலத்தைச் சுருக்கிக் கூறுகிறேன். கேட்பீராக! நல்வேளை வேர், நொச்சிவேர், சிற்றாமணக்கு வேர் ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுத்திடித்துக்

கலசத்தில் போடவும். 13. லி தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்தெரித்து எட்டிலொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி இறக்கி வடிக்கவும். 1.3 லி சிற்றாமணக்கெண்ணெயைச் சேர்க்கவும்.

ஒன்றாகக் கள்ளிப்பால் படிதா னொன்று
உத்தமனே வெள்ளுள்ளி பலமி ரண்டு
நன்றாகக் கோசலந்தான் படியு மொன்று
நலமான திரிபலையும் பலமு மூன்று
குன்றாம லாட்டியிந்த தயிலத் தாட்டு
குறுக்கியந்த பதமறிந்து வடித்துக் கொண்டு
நின்றாடு மீசனுக்குப் பூசை செய்து
நினைவோடே காசெடைதா னுண்ணச் சொல்லே! 17

பொ.ரை: 1.3 லி கள்ளிப்பால், வெள்ளைப்பூண்டு 70 கி, கோமியம் 1.3 லி எடுத்துக் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வகைக்கு 105 கி எடுத்தரைத்து அவ்விழுதை மேற்கூறிய தைலத்தில் இடவும். மேற்கூறிய குடிநீருடன் இவை அனைத்தையும் சேர்த்து அடுப்பிலிட்டெரித்துக் காய்ச்சித் தக்க பதத்தில் வடித்து வைக்கவும். ஈசனுக்குப் பூசை செய்து 12 கி உட்கொள்ளவும்.

செந்தூரக் குளிகை

உண்டவுடன் வாய்வதென் றனைத்தும் போகும்
மொழியாக வாய்வென்றால் கோடா சூரி
உண்டையிட்டு உண்ணச்சொல்லு தீரும் தீரும்
உத்தமனே யானந்த வயிரவனைக் கேளு
உண்டாகும் வியாதிகளில் சுரங்கள் கூடில்
சீதமடா விபரமுட னாற்றக் கேளு
உண்டாகு மிதன்பேருஞ் செந்தூரக் குளிகை
உற்பனத்தை யொருத்தருக்கு முரைக்கொண் ணாதே! 18

பொ.ரை: இத்தைலத்தால் பலவகை வாயுக்களும் தீரும். தீராத வாயுவென்றால் கோடாசூரி உருண்டையை உட்கொள்ளத்தீரும். பலவகைச் சுரங்களுக்கும் ஆனந்த வயிரவன்

குளிகையைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். செந்தூரக் குளிகை எனும் பெயருள்ள இதன் தோற்றத்தையும் செய்முறையையும் யாருக்கும் கூறாதே.

உறையாத சூதமொரு பலமுந் தூக்கி
உற்றரசஞ் செந்தூரம் பலமு மொன்று
நிறையாத கெந்தகந்தான் பலமு மொன்று
நேராக அப்பிரகம் பலந்தா னொன்று
கறையாத நாவியுமோ பலமு மொன்று
காணப்பா பலமூன்று சேவலாங் கொட்டை
வறையாத யிவைசேர நாகவல்லிச் சாற்றில்
மயனம்போல் திரட்டிநீ வழித்தி டாயே! 19

பொ.ரை: இரசம், இரசசெந்தூரம், கெந்தகம், அப்பிரகம் ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுக்கவும். 35 கி நாவியையும் 105 கி நேர்வாளங்கொட்டையையும் சேர்த்து வெற்றிலைச்சாறூற்றி கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து விழுதை வழிக்கவும்.

வழித்ததொரு மருந்துக்கு விபரம் கேளு
மைந்தனே வெற்றிலையை அரைத்து வாங்கி
வழித்திடுவாய் விரல்கனத்தின் குகையிற் குள்ளே
மறுபடியு மருந்தந்த குகைக்குள் வைத்து
வழித்தரைத்து வெற்றிலையைக் குகையின் மேலும்
சிலாக்காக சீலைசெய்து மண்ணுஞ் செய்து
வழித்தகெச புடமொன்று போடு போடு
வருமயறுண்ண போலிருக்கும் வரிசை கேளே! 20

பொ.ரை: வெற்றிலையை அரைத்து விரல் அளவு கனமுள்ள குகையை அமைத்து அதற்குள் மேற்சொன்ன அரைத்த விழுதை வைக்கவும். குகையின் வாயை அரைத்த வெற்றிலையின் விழுதால் ஏழு சீலை மண் செய்து மூடுக. ஆயிரம் வறட்டியைப் புடமாக அடுக்கி அதனுள் குகையை வைத்தெரிக்கவும். தக்க நேரங்கழித்தெடுத்துப் பார்க்க செந்தூரமாகும்.

கேளப்பா செந்தூர மெல்லாம் வாங்கி
கிருபைபுரி சேவலாங் கொட்டை யோடு
நாளப்பா யிவைபலமும் இரண்டுங் கூட்டி
நாட்டுவாய் வெற்றிலைச்சாற் விட்டு நன்றாய்
நாளப்பா யொன்றயரைத்து வழித்து வைத்து
நன்குன்றி பிரமாணம் உருண்டை கூட்டி
மீளப்பா சுக்குசீந்தி சித்திர மூலம்
மீறாமல் பொடிசெய்து வெருகடிதான் தூக்கே! 21

பொ.ரை: செந்தூரத்துடன் 70 கி நேர்வாளக்கொட்டையையும் சேர்த்து வேண்டிய அளவு வெற்றிலைச் சாற்றை ஊற்றி அரைத்து அவ்விழுதை வழித்து வைக்கவும். 130 மி.கி. அளவுள்ள உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். ஒரு உருண்டையைச் சுக்கு, சீந்தில், சித்திரமூலம் இவற்றை அளவுடன் எடுத்துப் பொடித்து மூவிரலளவு சேர்த்து உட்கொள்ளவும்.

இரசகெந்தி வயிரவன்

அடுத்ததொரு வயிரவ ரசாயனத்தைச் சொல்வோம்
அப்பனே ரசகெந்தி அறிந்து கொள்ளு
தொடுத்த நோய்க்கெல்லாம் சம்பிர தாயம்
தொடுமுன்னே நோயெல்லாம் தூளாய்ப் போகும்
கடுத்ததொரு சூதமிரண்டு வசம்பி ரண்டு
கழஞ்சியப்பா சுக்குரண்டு மிளகு ரண்டு
மெடுத்ததொரு கெந்திரண்டு வாளமி ரண்டு
இயல்பான திரிபாலை கழஞ்சி ரண்டே! 22

பொ.ரை: இரசகெந்தி வயிரவனின் செய்முறையை அறிவோமாக. சூதம், எனும் இரசம், வசம்பு, சுக்கு, மிளகு இவற்றை வகைக்கு 10 கி எடுக்க. கெந்தகம், நேர்வாளம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு 10 கி எடுக்கவும்.

இரண்டாகும் முத்திருக்கம் இவைக்கு நேராய்
இட்டிடுவாய் வெள்ளுள்ளி பருப்பு நேராய்

இரண்டாகு மபானத்தில் விட்டுக் கிண்டி
மீறாம லதற்குள்ளித் தயிலங் கொண்டு
இரண்டாகுஞ் சாமமொன்று மத்தித்த பின்பு
எருக்கலம்பால் வார்த்தொரு சாம மத்தி
இரண்டாகுஞ் சாமமொன்று வெள்ளாட்டுப் பாலில்
இட்டிறக்கிக் கெண்டைமீன் பித்து வாங்கே! 23

பொ.ரை: முத்தெருக்கஞ்செவி, வெள்ளைப்பூண்டுப்பல் இவற்றையும் வகைக்கு 10 கி எடுத்து வேண்டிய அளவு தண்ணீரூற்றி அடுப்பிலிட்டுக் கிளறிக் கொள்ளவும். வெள்ளைப் பூண்டுத் தைலத்தை இதனுடன் சேர்த்து மூன்று மணிநேரம் எரித்துக் குழைக்கவும். எருக்கம் பால், வெள்ளாட்டுப் பாலையும் அவ்வாறே ஊற்றி மத்திக்கவும்.

வாங்கியதோர் பித்துக்குச் சாம மொன்று
மத்தித்து ஆறியபின் எடுத்து மைந்தா
பாங்கியதோர் குன்றியெடை குளிகை கட்டிப்
பதறாம லந்தந்த வியாதி பார்த்து
தாங்கியதோர் கரிப்பான் நீருள்ளி நீரில்
சலந்தீரும் மிஞ்சிநீரி லிவையி லூட்டி
தேங்கியதோர் மயல்மூர்ச்சை வாய்வு மூர்ச்சை
சிலேற்பன மூர்ச்சையிவை யனைத்தும் போமே! 24

பொ.ரை: கெண்டைமீனின் பித்தையும் உடன் சேர்த்து மூன்று மணிநேரம் எரித்துக் கலக்கி ஆறவிடவும். ஆறினதும் 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாய் உருட்டிப் பத்திரப்படுத்தவும். நோய்களுக்கேற்றவாறு கரிசாலைச் சாறு, நீருள்ளிச்சாறு, இஞ்சிச்சாறு ஆகியவற்றில் இழைத்துக் கொடுக்க மயக்க மூர்ச்சை, வாய்வு மூர்ச்சை, சிலேற்பன மூர்ச்சை ஆகிய நோய்கள் தீரும்.

சிலைபாணக் குளிகை

போமப்பா தலைவலியுஞ் சன்னி மூர்ச்சை
புகழான காதுவே தனையா மூர்ச்சை
ஆமப்பா மூலத்தில் நீர்ப்பாய்ச்சல் தானும்
மரோசிமுதற் பறந்தோடு மப்பா கேளு

வேமப்பா சுரமெல்லாம் ஒழிந்து தீர்க்க
மென்மைசிலை பாணமென்ற குளிகை சொல்வோம்
நாமப்பா சிலையொன்று துத்த மொன்று
நயமாகச் சுத்திசெய்து எடுத்தி டாயே! 25

பொ.ரை: தலைவலி, சன்னிமூர்ச்சை, காது வலிமூர்ச்சை, மூலத்தில் காணும் நீர்பாய்ச்சல், அரோசிகம், எனும் உணவில் வெறுப்பு, போன்றவை தீரும். சுரவகைகள் குணமாவதற்குச் சிலை பாணமென்ற குளிகை செய்முறையை நோக்குவாம். மனோசிலை, துத்தநாகம் இவையிரண்டையும் முறைப்படி சுத்தி செய்தெடுக்க.

எடுத்திடாய் மோர்காய்ச்சித் தெளிந்து கொண்டு
இதமாக சாமமொன்று ஆட்டி வாங்கி
தொடுத்திடாய் மிளகெடை குளிகை கட்டி
சுரங்களுக்குப் பலமறிந்து யுள்ளே யூட்டு
விடுத்திடாய் சுரமெல்லாம் விட்டே போகும்
மீறியதோர் சிலேத்துமத்து சுரத்துக் கெல்லாம்
கொடுத்திடாய் சுவாசக் குடோரி மாத்திரை
கூறுவேன் மருந்துவகை கூறு வேனே! 26

பொ.ரை: மோரினைக்காய்ச்சி மேற்சொன்ன சரக்கிலூற்றி மூன்று மணிநேரமரைத்து அவ்விழுதை மிளகளவுள்ள குளிகைகளாய் உருட்டி நிழலிலுலர்த்தவும். சுரங்களின் தன்மை அறிந்து தகுந்த அனுபானங்களில் உரைத்துக் கொடுக்க சுரம் குணமாகும். சிலேத்தும சுரங்களுக்குப் பயன்படும் சுவாசக் குடோரி மாத்திரை செய்முறை வருமாறு.

சுவாசக் குடோரி மாத்திரை

கூறுவேன் அரிதாரம் இரதம் சுக்கு
குணகியதோர் வெங்காரம் திப்பிலியும் தானும்
மீறுமே சசபாகம் கரிப்பான் சாற்றில்
வெண்ணெய்போல் சாமமொன்று ஆட்டி வாங்கி
ஊறுமே நொச்சிச்சாற் சாம மொன்று
உலர்பா வட்டங்காய் போலக் கட்டி

தேறுமே இஞ்சிச்சாற் தேனுற சேர்த்தி
திறமாக உருண்டையொன்று கொடுத்தி டாயே! 27

பொ.ரை: அரிதாரம், இரசம், சுக்கு, வெங்காரம், திப்பிலி, இவற்றைச்சமஅளவெடுத்து கரிசாலைச்சாற்றில் மூன்று மணிநேரமரைத்து வெண்ணெய் போல விழுதானவுடன் அதில் நொச்சிச்சாறூற்றி மூன்று மணிநேரமரைத்துப் பாவட்டங் காயளவுள்ள குளிகைகளாய்த் திரட்டவும். இஞ்சிச்சாறு, தேன் இவற்றை அனுபானமாய்க் கொண்டு உரைத்துக் கொடுக்கவும். சுரம், காசம், தீரும்.

சுரசுவாசகாச மாத்திரை

கொடுத்திடவே சுரகாசம் சுவாச காசம்
குத்திருமல் நெட்டிருமல் குறுகு றுப்பு
விடுத்திடவே சுரம்பாய்ந்தாப் போலே ஆடும்
வீறடங்காச் சுத்தியோடும் மருந்து சொல்வோம்
தொடுத்திடவே நாவிக்குச் சிறுகீரைச் சாற்றில்
சூட்டுவாய் தினமொன்று பழச்சாற் கொண்டு
வடித்திடவே நாளொன்று சிலைதான் சுத்தி
அப்பனே தாளகத்தின் சுத்தி கேளே! 28

பொ.ரை: சுரகாசம், சுவாசகாசம், குத்திருமல், நெட்டிருமல், குறுகுறுப்பு, சுரம் அதிகமாய்க் காய்தலுக்கான மருந்து வருமாறு. நாவியைச் சிறுகீரைச் சாற்றில் வடித்தெடுக்க சுத்தியாகும். மனோ சிலையைத் தினமும் எலுமிச்சம் பழச்சாற்றில் எரித்தெடுக்க சுத்தியாகும். தாளகத்தின் சுத்தி வருமாறு.

தாளகத்தை அரசன்தோல் கசாயத்தி லிட்டு
தயவாக மறுதினத்தில் எடுத்துக் கொண்டு
மிளகத்தின் யுயிற்றெல்லாம் நோயத் தள்ளி
விடாச்சுரமும் நேத்துக்கு விபரம் கேளு
தாளகத்தை வலுவிக்கும் கற்பூ ராதி
கஸ்தூரி மாத்திரையின் கட்டுத் தானும்
கிளகத்து கற்பூர றமிறா மிச்சா
கிருபையாய் சாதிக்காய் சமனாய் ஆட்டே! 29

பொ.ரை: தாளகத்தை அரசம்பட்டைக் குடிநீரில் ஊறவைத்து மறுநாள் அவித்தெடுக்கச் சுத்தியாகும். தாளகத்திற்கு மேலும் வன்மை சேர்க்கும் கற்பூராதி, கஸ்தூரி மாத்திரையின் கட்டினை எடுக்க. கற்பூரம், இலாமிச்சு, சாதிக்காய் இவற்றைச் சமமாய் எடுத்துச் சேர்த்து அரைக்கவும்.

ஆட்டியதோர் தூளெடைக்கு றட்டி வாளம்
அப்பனே சேர்த்தந்த குமரிச் சாற்றால்
தீட்டியதோர் சாமம்நீ அரைத்து வாங்கு
சிறுஉளுந்து பிரமாண முண்டை சேர்த்தி
நாட்டியதோர் சர்க்கரையி லீந்தா யானால்
நலமான யெட்டுவகை சுரமும் போகும்
நீட்டியதோர் உடலறிந்து கொடுத்தா யானால்
நின்றுபோம் கடிகையொரு மூன்று மூன்றே! 30

பொ.ரை: அரைத்த விழுதிற்கு இரண்டு மடங்கு அளவு நேர்வாளத்தைச் சேர்த்து கற்றாழைச்சாறு உடன் ஊற்றி மூன்று மணி நேரமரைக்க. பின் 32 மி.கி. அளவுள்ள உருண்டைகளாய் உருட்டி பத்திரப்படுத்தவும். சர்க்கரையை அனுபானமாய்க் கொண்டு இவ்வுருண்டையைக் கொடுக்க எட்டு வகை சுரம் தீரும். நோயாளியின் உடல் வன்மை அறிந்து கொடுக்க ஒன்றே கால் மணி நேரத்தில் குணமாகும்.

சன்னிக்கு மாத்திரை

மூன்று நாழி கைக்குள்ளே சுரங்கள் நிற்கும்
முறையாகப் பத்தியங்கள் இச்சாபத்தி யங்கள்
மூன்று நாழிகை வாளதிக்கே சாங்கு சாத்தை
உரைக்கிறேன் ரசம்துத்தம் நாவி நாகம்
தூன்றுநாள் மடைக்கும் வாண கெந்தி
சொர்ன்னமது லோகமிரண்டு சமனாய்ச் சேர்த்து
தான்றுநாள் யுத்தமமாம் தாளிச் சாற்றில்
தயவாக யேழுபிர கார மாட்டை! 31

பொ.ரை: முறையான பத்தியங்களைக் கைக்கொண்டு இம்மாத்திரையை உட்கொள்ள ஒன்றே கால்மணி நேரத்தில் சுரம் குணமாகும். இரசம், துத்தம், நாவி, துத்தநாகம், வாண கெந்தகம், தங்கம், இரும்பு ஆகியவற்றைச் சமமாய் எடுத்து உத்தமதாளியின் சாற்றில் ஏழு முறைஅரைத்துக் கொள்ளவும்.

ஆட்டியே மத்தஞ்சாற் மணத்தக் காளி
அடவாக பொரிகார மாட்டி வாங்கி
... ...
நினவாகக் குகைக்குள்ளே தடவிப் பின்பு
ஊட்டியே யுண்டைதனைக் குகைக்கு ளிட்டு
மினவுசொல் வெங்காரம் அரைத்து மேலும்
மூட்டியே தெரியாமல் யெழு சீலை
முறையாகச் சுற்றிநீ மண்ணுஞ் செய்யே! 32

பொ.ரை: ஊமத்தஞ்சாறு, மணித்தக்காளிச்சாறு எடுத்து பொரிகாரத்தைச் சேர்த்து அரைத்து குகையைத் தயாரித்து அதன் உள்ளே பூசவும். மேற்சொன்ன அரைத்த விழுதைக் குளிகை களாக்கி உள்ளே வைக்கவும். வெங்காரத்தை அரைத்து குகையின் மேலே ஏழு சீலை மண் செய்து மூடி மண்ணைக்கொண்டு மூடவும்.

மண்செய்து பாண்டத்தின் நடுவே தானும்
மைந்தனை அமரிட்டு ஒடு மூடி
திண்செய்து அதின்மேலே மணலைக் கேளு
திறமாக நால்விரற் கடையு மிட்டு
பண்செய்தா குகைதனை மணலில் மேலும் வைத்து
பாங்காக மேலு மந்தமணலை முக்கா லிட்டு
... ...
தயவாக மேல்சட்டி கவிழ்த்தி மூடே! 33

பொ.ரை: அப்பாண்டத்தின் நடுவிலுற்ற துளையினை ஓட்டினால் மூடி அதன் மீது நான்கு விரல் கனமுள்ள மண்ணினைப் பூசுக. மணலின் மீது இக்குகையை வைத்து மேலும் மணலைப் போடுக. மேலே சட்டியினைக் கொண்டுமூட-வும்.

மூட்டியே யெண்சாமம் கமல வன்னி
மூட்டிநன்றாய் ஆறியபின் கல்வத் திட்டு
நாட்டியே கணேசருக்குப் பூசை செய்து
நலமாகத் தூளாக்கிச் சிமிழில் வைத்து
நீட்டியே நோயறிந்து குன்றி யூட்டு
நிலத்தில்நின்ற திருவகையாம் விடங்கள் தீரும்
வீற்றியே அனுபான வெற்றிலையில் பொதிந்து
மென்றுதின்னச் சொல்லங்கே விபரங் காணே! 34

பொ.ரை: இருபத்து நான்கு மணி நேரம் இரண்டு விறகினால் எரிக்கவும். அந்நேரங்கழித்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கணபதிக்குப் பூசையிடவும். அதனைச் சிமிழிலிட்டுத் தேவையான போது 130 மி.கி. அளவு எடுத்து வெற்றிலையில் பொதிந்து வைத்து மென்று தின்னச் சொல்லவும்.

காணப்பா சலக்கழிச்சல் குட்ட ரோகம்
சுவாசம்கோ தினத்துக் கெல்லாம்
பூணப்பா சீனியிலே யுண்ணச் சொல்லு
புகழாக வயிற்றுவலி வியாதிக் கேதான்
னூணப்பா காட்டாமணக்கு நீரி லூட்ட
வெள்ளைச் சாரணைநீர் சுரத்தைத் தள்ளு
தோணப்பா திரிகடுகு பொடியி லூட்ட
சுகசன்னி ஆன தெல்லாம் போமே! 35

பொ.ரை: சலக்கழிச்சல், குட்டநோய், சுவாசத்தின் கோளாறுகளுக்கு சர்க்கரையில் கலந்து கொடுக்கவும். காட்டாமணக்குச்சாற்றில் கலந்து கொடுக்க வயிற்றுவலி குணமாகும். வெள்ளைச்சாரணை நீரில் கொடுக்க சுரம்மும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் கலந்த பொடியில் கொடுக்க சுகசன்னியும் குணமாகும்.

போமப்பா இஞ்சிச்சாறு யுள்ளே யுண்ண
பொதுவான திரிதோசம் போகும் போகும்
வேமப்பா சூலைக்குப் பெருங்காயத்தி லூட்டு
மேலுமினி அனுபானம் வினைய மாக
தாமப்பா அஷ்டகுன்மம் நீராமை கவுச்சி
அப்பனே மகோதரமும் தீரக் கேளே. 36

பொ.ரை: இஞ்சிச்சாற்றில் கலந்து கொடுக்க திரிதோடங்கள் நீங்கும். சூலைநோய்க்குப் பெருங்காயத்திலும் கொடுக்கத்தீரும். எட்டு வகைக்குன்மம், நீராமை, கவிச்சி, மகோதரம் ஆகிய நோய்கள் தீருவதற்கான மருந்து வருமாறு.

அஷ்டகுன்மம், நீராமை, கவிசை, மகோதரம் - உருண்டை

கேளப்பா மகோதரத்து வுண்டை தன்னை
கெட்டியாகச் சொல்லுகிறேன் யிருப்பு சல்லி
நாளப்பா செம்புதுத்தம் நாகம் மூன்று
நயமாக வெவ்வேறே சல்லி யாக்கி
நீளப்பா வகையொன்று கழஞ்சி யாக
நிறையாக யிந்துப்பு நிமிளை கெந்தி
வீளப்பா மனோசிலையும் கெந்தி தானும்
மீறாமல் ஒவ்வொன்றும் கழஞ்சி தூக்கே! 37

பொ.ரை: மகோதரத்திற்கான உருண்டை வருமாறு, செம்பு, வெள்ளைதுத்தம், துத்தநாகம் இம்மூன்றையும் தனித்தனியே வகைக்கு 5 கி எடுத்துப் பொடிக்கவும். இந்துப்பு, நிமிளை, கெந்தகம், மனோசிலை இவற்றை வகைக்கு 5 கி எடுக்கவும்.

தூக்கியே பொடிசெய்து வைத்துக் கொண்டு
சொல்லுகிறேன் தகட்டை எருக்கம் பாலில்
மூக்கவா யாழாக்கு உள்ளே நீயும்
தயவாக மூன்றுதின மூறிய பின்பு
வாக்கியதோர் முன்தகட்டுப் பொடியும் கூடவை
மைநத்துக்குள் ளெருக்கம்பால் சிறுக விட்டு
வீக்கியே பழச்சாறு மரைக்கால் விட்டு
விரவியொரு கற்கத்தில் அடைத்தி டாயே! 38

பொ.ரை: மேற்சொன்னவற்றைத் தனித்தனியே பொடித்து வைக்கவும். எருக்கம்பால் 162 மி.லி எடுத்து செம்புத் தகட்டினை உள்ளே இட்டு மூன்று நாட்கள் ஊறவைக்கவும். மேற்சொன்ன பொடியையும் உடன் சேர்த்து எருக்கம் பாலைச் சிறிதளவு ஊற்றுக. எலுமிச்சம் பழச்சாறும். 162 மி.லி. சேர்த்துக் கற்கத்தில் விட்டு மூடியால் அடைக்கவும்.

அடைத்ததொரு மருந்துதன்னை ரவியில் வைத்து
அன்றடங்கி கிண்டில் தினமுந் தானே
புடைத்ததொரு ரவிபட்டு வெந்து நீறி
பொன்மெழுகு போலிருக்கும் ஒன்ப தாம்நாள்
உடைத்ததொரு யுண்டை சுண்டைக்காய் போலும்
உருட்டிநீ உலரவைத்து குழலி லிட்டு
மடைத்ததொரு வியாதிக்கு அனுபா னங்கள்
வகைசொல்வேன் மைந்தாகேள் கண்டி டாயே! 39

பொ.ரை: அம்மருந்தினை வெயிலில் வைக்கவும். பகலில் வைத்து மாலையில் தினமும் கிளறிவிடவும். சூட்டால் மருந்து வெந்து நீற்றுப்போய் ஒன்பதாம் நாளில் மெழுகு போலிருக்கும். அதனைச் சுண்டைக்காயளவுள்ள உருண்டைகளாய் உருட்டி உலரச்செய்து குழலில் அடைக்கவும். அனுபானங்கள் வருமாறு.

கண்டிடாய் அனுபானம் வியாதி கண்டு
தீருகிற வியாதிதான் கேளு கேளு
மண்டிடாய் மகோதரமும் சலக்கோவை ஆகும்
மதியளிக்கும் நீராமை கவிசை பாண்டு
வண்டடா வலியகுன்மம் ... ...
மகத்தான சத்திகுன்மம் வெப்புப் பார்வை
தென்றிடா கட்டிகுன்ம மேழு குன்ம
மெரிகுன்மம் விசபாகம் சேரப் போமே! 40

பொ.ரை: மகோதரம், நீர்க்கோர்வை, நீராமை, கவிசை, பாண்டு, வன்குன்மம், சத்தி குன்மம், வெப்புப்பார்வை, கட்டிகுன்மம், எரிகுன்மம், விடபாகம் ஆகிய நோய்கள் மேற்சொன்ன உருண்டையால் குணமாகும்.

சலதாரை உருண்டை

போமப்பா கிரீச்சனங்கள் ஆறு முண்ண
பூட்டுகிறேன் சிலதாரை யுண்டை தன்னை
ஏமென்ற நாவிகெந்தி சூதம் விந்து
மென்கெவுரி பெருங்காயம் சவுக்காரம் துருசு

ஆமென்ற நேர்வாளம் நஞ்சு போக்கி
இவையெல்லாம் சமனாகத் தூளாய் ஆட்டு
வேமென்ற கல்வத்தில் பழச்சாற் வார்த்து
வெண்ணெய்போல் ஆட்டிநீ வாங்கு வாங்கே! 41

பொ.ரை: ஆறுவகை கிரீச்சனங்கள் தீருவதற்கான உருண்டை வருமாறு: நாவி, கெந்தகம், இரசம், கௌரி, பெருங்காயம், சவுக்காரம், துருசு, நேர்வாளம் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சமமாய் எடுத்து முறைப்படி சுத்தித்துத்தூளாக்கிக் கொள்ளவும். கல்வத்தில் அத்தூளினைப் போட்டு எலுமிச்சம் பழச்சாறூற்றி அரைத்து வெண்ணெய் போலானவுடன் வழித்துக் கொள்ளவும்.

வாங்கியதோர் மருந்துதன்னை மிளகு போல
மணியாக்கி குழலிலே வைத்துக் கொண்டு
மூங்கியதோ ரனுபானம் வெல்லம் நெய்யா
முற்றப்பழச் சாறாகுஞ் சுருக்கிச்ச ரெண்டு
தேங்கியசீர் வியாதிகேளு தூல காயம்
திறமான பெருவயிறும் நோய்களவை வெண்ணோய்
பாங்கியதோர் பெருவயிறு கெண்டை குன்மம்
பறந்தூரும் நீர்க்கோவை தீரும் பாரே! 42

பொ.ரை: மிளகு அளவுள்ள குளிகைகளாக்கிக் குழலில் அடைக்கவும். வெல்லம், நெய், சுடவைத்த பழச்சாறு இவற்றை அனுபானமாய்க் கொண்டு இரண்டு வேளை நோய்களுக்கேற்ற வாறு கொடுக்க பெருவயிறு, வெண்ணோய், கெண்டை குன்மம், நீர்க்கோவை ஆகியநோய்கள் குணமாகும்.

சுராங்கிஷம்

பாரப்பா சுராங்கிஷத்தை யுரைக்க நீகேள்
பண்பாகப் புறக்கருவி உள்கருவி மடக்கி
பாரப்பா பனிரெண்டு லட்சம் பாட்டில்
பாடினேன் அனைத்துமே பகுத்துப் பார்த்துப்
பாரப்பா நோயெல்லாம் பத்தி யோடும்.
பண்டிதற்கு யிந்தனூல் பழைய தங்கம்

பாரப்பா நாலுதிக்கும் யோகி சித்தர்
பார்த்திருப்பார் பொருளாசை பாரார் காணே! 43

பொ.ரை: சுராங்கிஷத்தை உரைக்கிறேன்: புறக்கருவி, உள்கருவியை மடக்கி பன்னிரெண்டு இலட்சம் பாடல்களில் பாடியுள்ளேன். எந்த நோயாயிருப்பினும் இந்த நூலிலுள்ள மருந்துகள் தீர்த்து வைக்கும். பண்டிதர்க்கு இந்த நூல் பழைய தங்கமாகும். நான்கு திசையிலுள்ள யோகிகள், சித்தர்கள் பொருளின் மேல் ஆசையை வைக்காது இந்நூலையே நோக்குவார்கள்.

காணப்பா சூதமொன்று கெந்தி யொன்று
கருமத்தம் விதைமூன்று சுக்கு நாலு
ஊணப்பா திப்பிலியும் நாலு தூக்கு
விரைக்கவதைத் தூளாட்டி யரைத்துக் கொண்டு
பூணப்பா குன்றியெடைப் பழச்சாற் தன்னில்
புகட்டினால் விஷசுரம்போம் விபரங் கேளு
தோணப்பா பழச்சாற்றில் இஞ்சிச் சாற்றில்
துவளவரை வெவ்வேறே சாம மிரண்டே! 44

பொ.ரை: சூதம், கெந்தகம் இவற்றை வகைக்கு ஒரு பங்கு கருஊமத்தை விதை மூன்று, சுக்கு, திப்பிலி வகைக்கு நான்கு பங்கு எடுத்துப் பொடித்துக்கொள்ளவும். கல்வத்திலிட்டு அரைத்து அவ்விழுதை 130 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாய்த்திரட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்க விடசுரம் தீரும். எலுமிச்சம் பழச்சாற்றில், இஞ்சிச்சாற்றில் தனித்தனியே நான்கு மணிநேரம் அரைக்கவும்.

இரண்டாகும் சாமமரை கடலை போல
என்மகனே யிடித்துலர்த்தி வைத்துக்கொண்டு
வெண்டாகுஞ் சுடுவெந்நீர் தன்னி லூட்ட
வெண்சுரமுந் திரிசுரமும் சன்னி பின்னும்
உண்டாகும் விஷசுரமுந் தானும் முற்ற
உரைக்கிறேன் முறைசுரமு மொழிந்து போகும்
அண்டாகுஞ் சுரமெல்லாம் மெய்விட் டோட
அரையிறேன் துத்தரசத் தாண்மை பாரே! 45

பொ.ரை: அவ்விழுதைக் கடலை அளவுள்ள குளிகைகளாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். அதனை வெந்நீரில் உரைத்துக் கொடுக்க வெண்சுரம் எனும் ஒரு வகைச்சுரமும் திரிசுரம் என்று அழைக்கப்படும் வாத, பித்த கபசுரமும் சன்னியும் விடசுரமும் முறைச்சுரமும் குணமாகும். சுரங்கள் பலவற்றை ஒழிக்கும் துத்தரசம் செய்யும் முறை வருமாறு.

துத்த ரசம்

ஆண்மையென்ற துத்தமொன்று துருசு வொன்று
அரிதாரந் தானொன்று சூத மொன்று
வாண்மையென்ற கெந்தியொன்று மனோசிலை தானொன்று
மைந்தனை யிவைசேரத் தூளா யாட்டி
தாண்மையென்ற சட்டிக்குள் ளிட்டுப் பின்பு
சாரணையிலைச் சாறுபடி கால்விட்டுக் கொண்டு
கேண்மையென்ற வெண்கலத்தின் கிண்ணி யாலே
சிக்காக மூட்டியே சீலை செய்யே! 46

பொ.ரை: துத்தம், துருசு, அரிதாரம், சூதம் ஆகியவற்றை வகைக்கு ஒரு பங்கு, கெந்தகம், மனோசிலை இவற்றை வகைக்கு ஒரு பங்கு எடுத்துத் தூளாய்ச் செய்து சட்டிக்குள் போட்டுக் கொள்ளவும். சாரணையிலைச்சாறு 325 மி.லி. உடன் ஊற்றி வெண்கலக் கிண்ணியால் சட்டியினை மூடி, அதற்குப் பொருந்துமாறு சீலை மண்செய்யவும்.

சீலைசெய்து மண்செய்து மணலும் விட்டுத்
தீபாக்கினி யாலே சாமம் ஒன்று
சாலைசெய்து வாயபின் கல்வத் திட்டுத்
தக்காளிச் சாறுவகை ரெண்டுஞ் சேர்த்து
சீலைசெய்து மயனம்போலே வழித்து நீயும்
சிறுபயிற்றின் பிரமாண முண்டை செய்து
காலைசெய்யா லனுபானம் பூரஞ் சூடன்
கஸ்தூரி சீரகத்தில் கலந்து வூட்டே! 47

பொ.ரை: சட்டியினை மணலுக்குள் வைத்து அடுப்பெரிக்கவும். ஒரு விறகு கொண்டு மூன்று மணிநேர மெரித்து ஆறியபின் எடுத்துக் கல்வத்திடவும். தக்காளிச்

சாற்றினைச் சேர்த்துச் சீலை மண் செய்து எரித்து மைபோலானதை வழித்தெடுத்துக் கொள்ளவும். 32 மி.கி. அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து பத்திரப்படுத்தவும். பூரம், கற்பூரம், கஸ்தூரி, சீரகம் ஆகியவற்றைச் சேர்த்து அதில் இவ்வுருண்டையைக் கொடுக்கவும்.

ஊட்டினால் மாறல்போம் முறைக்காய்ச் சல்போகும்
உத்தமனே தேனிலிட சுரமும் போகும்
மாட்டினால் அண்டரண்டங் குலுங்கி யாடும்
அறுபத்து நாலுசுர மனைத்து மோடுங்
காட்டினாற் சீதசுரம் பறந்து வோட
காட்டிடா பாசாண உருண்டை மார்க்கம்
நாட்டினால் கெவுரியொன்று வெளைசீன மொன்று
நயமாகச் சுண்ணாம்புக்குள் வைத்து வைய்யே! 48

பொ.ரை: மாறல்சுரம், முறைக்காய்ச்சல் தீரும், தேனை அனுபானமாய்க் கொண்டு கொடுக்க சுரம்தீரும். அறுபத்து நான்கு சுரங்களும் குணமாகும். சீதசுரம் நீங்க பாசாண உருண்டை மார்க்கம் உதவும், கௌரி, வெள்ளைப்பாடாணம், சீனம் ஒரு பங்கெடுத்து சுண்ணாம்புக்குள் பொதித்து வைக்கவும்.

கௌரி உருண்டை

வைத்துநீ பொதிந்தனை விளாங்காய் போல
வஷ்திரத்தில் பொதிந்ததனைச் சுற்றிக் கட்டு
மொத்துநீ கரிபோக்கிப் பாசாண மெல்லாம்
முறையோடே யெடுத்துமைந்தா சூத மொன்று
மைத்துநீ முறியதனை மத்தஞ் சாற்றில்
மைந்தனே சேரவரை சாம மொன்று
வைத்துநீ பின்பதனில் வாள மொன்று
மகத்தான திப்பிலிதா னொன்று கூட்டே! 49

பொ.ரை: துணி ஒன்றினால் பொதிந்ததனைச் சுற்றிக்கட்டி அடுப்பில் வைத்து சுட்டெடுத்து ஆறியபின் அதன்மீதுள்ள கரியை நீக்கவும். சூதத்தினை முறைப்படி முறித்து அதனுடன் ஊமத்தஞ் சாறு சேர்த்து மூன்று மணிநேரமரைத்து

அவ்விழுதுடன் நேர்வாளம் திப்பிலி இவற்றை வகைக்கு ஒரு பங்கு சேர்க்கவும்.

கூட்டியே மைபோல யாட்டி வாங்கி
கூறுகிறேன் சிறுபயிறு போலே கட்டி
நாட்டியே உலர்ந்தபின்பு குளிர்காய்ச்சல் தனக்கு
நயமாக வொருவுண்டை வெந்நீரி லூட்டு
நீட்டியே முலைப்பாலில் உண்டை யூட்ட
நெறியில்லா சுரமெல்லாம் நெகிழ்த மாகும்.
பூட்டியே பத்தியங்கள் மோருஞ் சோறும்
புலத்தியனே உண்டுவர பொறுக்குந் தானே! 50

பொ.ரை: சேர்த்தரைத்து மைபோல ஆனவுடன் வழித்து 32 மி.கி. அளவுள்ள உருண்டைகளாய் உருட்டி நிழலில் உலர்த்தவும். குளிர்காய்ச்சலுக்கு ஒரு உருண்டையை வெந்நீரில் இழைத்துக் கொடுக்கவும். தாய்ப்பாலில் ஒரு உருண்டையை உரைத்துக்கொடுக்க சுரங்கள் தீரும். மோர் சாதம் சாப்பிடவும்.

பரங்கி சூலைக்கு மூலிகை உருண்டை

தானென்ற பரங்கிமுதல் சூலை போக
சாதகமாய் மூலிகையைச் சாற்றக் கேளு
வேனென்ற பேய்ப்புடலும் கொடிவேலி வேரும்
வெள்ளாட்டின் பாலினா லாட்டி வாங்கி
தேனென்ற முள்ளிக்கா யளவு ருட்டி
தின்றுவர ஆவின்பா லுண்ணப் போகும்
வானென்ற வெள்ளாட்டுப் பாலு மாகும்
மைந்தனே பாலுஞ்சோ றுண்ணக் கேளே! 51

பொ.ரை: பரங்கி நோய் முதல் சூலை தீருவதற்கான மூலிகைச் சாறு வருமாறு: பேய்ப்புடல், கொடிவேலி வேர் இவற்றை வெள்ளாட்டுப் பாலுற்றி அரைத்து முள்ளிக்காயளவு உருண்டைகளாய் உருட்டி நோய்க்குத் தக்கவாறு கொடுக்கவும். பசும்பால், வெள்ளாட்டுப்பால் கலந்த சோறு உண்ணவும்.

சூலைக்குக் குளிகை

கேளப்பா மருந்துண்ட மூன்று நாளும்
கெடியாகச் சிலத்திலே யிருக்க வேணும்
வாளப்பா புளியுப்பு மாற்ற வேணும்
மயங்காத சூலைக்கு வயனங் கேளு
நாளப்பா யிரதமொரு பலந்தான் தூக்கு
நலமான கெவுரியொரு பலந்தான் தூக்கு
நீளப்பா கடுக்காயு மெட்டு வாங்கு
நேருறியப் பட்டையது கழஞ்சி அஞ்சே! 52

பொ.ரை: மேற்கண்ட மருந்து சாப்பிடும் மூன்று நாளும் தண்ணீரில் இருக்கவேண்டும். புளி, உப்பு, நீக்க வேண்டும். இரசம் 35 கி, கௌரி 35 கி, எட்டு கடுக்காயை எடுக்கவும். கடுக்காயின் மேல்தோல் பட்டை 25 கி எடுக்கவும்.

அஞ்சான வன்னித்தோல் கழஞ்சி கால்தான்
அப்பனே யிதுவெல்லாம் ஒன்றாய்ச் சேரு
சஞ்சான வெல்லமதில் ஒன்றாய்க் கூட்டி
சாதகமாய் ஆறவிட்டு யிடித்துத் தூளாய்
மிஞ்சாமல் நாழிகைதான் முப்ப தானால்
மேவியெல்லாம் வாரியே சுண்டைக் காய்போல்
குளிகைகட்டி நிழலுலர்த்திக் காய வைத்து
கூறகத்தில் வைத்தங்கே மூடு மூடே! 53

பொ.ரை: வன்னிப்பட்டை 1 ¼ கி எடுத்து அனைத்தையும் ஒன்று சேர்த்து வெல்லத்தையும் இடித்துக்கூட்டி உலர விட்டு இடித்துப் பொடித்துக் கொள்ளவும். 12 மணிநேரம் கழித்து எடுத்துச் சுண்டைக்காயளவுள்ள குளிகைகளாய் உருட்டி நிழலில் உலர்த்தவும். சீசாவில் பத்திரப்படுத்தவும்.

மூட்டினதோர் குளிகையிலே யைந்து வாங்கி
முறையாக மூன்றுநாள் பதினைந்து கூட்டு
நாட்டினதோர் புளியுப்பை தவிர்க்கச் சொல்லு
நயமாக வயிற்றிலேதான் யெரிவித் தானால்
நீட்டியதோர் நெய்ப்பாலு மெல்லாம் கூட்டி
நேரான பருத்தியிலைச் சாறு சேர்த்தி

ஊட்டியதைக் கொடுக்கத் தீரும் முற்றும்
மண்டை சூலைக்கு உரைக்கி றேனே! 54

பொ.ரை: ஐந்து குளிகைகளைத் தினமும் உட்கொள்ளவும். இவ்வாறே மூன்று நாட்களுக்குப் பதினைந்து கொடுக்கவும். புளி, உப்பை நீக்கவும், வயிற்றிலே எரிச்சல் அதிகமானால் நெய், பால், பருத்தியிலைச் சாறு உள்ளுக்குக் கொடுக்கவும். சூலை தீரும்.

மண்டைச் சூலைக்குக் குளிகை

உரைக்கிறேன் துளசியிலை கரிப்பான் மேனி
உத்தமத் தாளிக் கொழிஞ்சி தானும்
நிறைக்குறே னிவையெல்லாம் நிழலு லர்த்தி
நேராகத் தூளாக யிடித்த பின்பு
நிறைக்குநேர் சூதமொரு கழஞ்சி வாங்கி
நிறைவாக வெற்றிலையில் முறித்துக் கொண்டு
யரைக்குநேர் பொடியுடனே கூடச் சேர்த்தி
மைந்தனே பகல்முழுதும் இடித்தி டாயே! 55

பொ.ரை: துளசியிலை, கரிசாலைச்சாறு, குப்பைமேனி, உத்தமதாளி எனும் வேலிப்பருத்தி, கொழுஞ்சி இவற்றைச் சமமெடுத்து நிழலில் உலர்த்திப் பின் சூரணித்துக் கொள்ளவும். 5 கி சூதத்தை வெற்றிலைச் சாற்றில் முறித்து மேற்சொன்ன சூரணத்திற்குச் சமமெடுத்துப் பகல் முழுதும் இடிக்கவும்.

இடித்ததொரு மருந்துதன்னை வடிதான் கட்டி
இயல்பாகப் புதுக்கற்கத் திட்டுக் கொண்டு
மடித்ததொரு பொடியிலே வெருகடிதான் தாக்கி
வாகாகச் சலம்விட்டுக் குழைத்து ருட்டி
பிடித்ததொரு குளிகைமூன் றாக்கி யுண்ணப்
போகுமப்பா தலைசூலை புண்ணு தானும்
கடித்ததொரு புளியதிய மாயித் தானால்
கலந்துண்ண அனுபான கூட்டைக் கேளே! 56

பொ.ரை: இடித்துத் தூளாக்கிய மருந்தினை வடிகட்டிப் புதுக்கறகத்தில் அடைக்கவும். மூவிரலளவு தூளைத்தண்ணீரில் குழைத்து மூன்று குளிகைகளாய் உருட்டிக்கொள்ளவும். இவற்றைத் தொடர்ந்து உட்கொள்ள தலையில் தோன்றும் சூலை குணமாகும். புண்ணாறும். புளி அதிகமானால் கலந்துண்ணும் அனுபானம் வருமாறு.

சன்னிக்குக் கசாயம்

கட்டான பூசணிக்காய் காசா யத்தால்
கடுவீழிச் சாற்றில் பாலிலே தான்நீ
மட்டான வெல்லமிட்டு கொள்ளத் தீரும்
மண்டைநோய் தலை கரப்பான் தீரும்
திட்டான சன்னிக்குக் கசாயமுஞ் சொல்வேன்
சிறியவழு தலைவேரு கழஞ்சி நாலு
தேட்டான சுக்கிரண்டு சீந்தி லிரண்டு
துவளவது யிருநாழி நீரில் போடே! 57

பொ.ரை: பூசணிக்காய்க் குடிநீர், வீழிச்சாறு, பால் இவற்றில் வெல்லம் கலந்து மேற்சொன்ன குளிகையை இழைத்துக் கொடுக்க தலை நோய், தலை கரப்பான் குணமாகும். சன்னிக்குக் குடிநீர் வருமாறு: சிறு வழுதலைவேர் 20 கி, சுக்கு, சீந்தில் வகைக்கு 10 கி எடுத்து இடித்து 2.6 லி தண்ணீரில் போடவும். அடுப்பேற்றித் தண்ணீரைக் காய்ச்சி எட்டிலொன்றாய் சுருக்கிக் கொடுக்க சன்னி குணமாகும்.

இருமலுக்குக் கசாயம்

போட்டதனை யெட்டொன்றா யாக்கிக் கொள்ளப்
புகழான சன்னியெல்லாம் முறிந்து போகும்
நாட்டமுடன் இருமலுக்குக் கசாயம் சொல்வேன்
நலமான முத்தக்கா சுழக்கு நீயும்
நீட்டிதனை பேய்ப்புடலை கழஞ்சி நாலு
நேரான பற்படகங் கழஞ்சிரண்டு சீந்திரண்டு

முட்டிதனை சுக்கிரண்டு
முன்போலே யிருநாழி நீரில் போடே! 58

பொ.ரை: இருமலுக்கான குடிநீர் வருமாறு. 325 மி.லி. கோரைக்கிழங்கு, பேய்ப்புடல் 20 கி, பற்பாடகம், சீந்தில்,சுக்கு இவற்றை வகைக்கு 10 கி எடுத்து இடித்து மேற்சொன்னவாறே 2.6 லி தண்ணீரில் இடவும்.

நீரிலிட்டு யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
நேரான காசளவு நாகத் தாட்டி
நீரிலிட்டு யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
நேரான மோருண்ண பேதி நிற்கும்
நீரிலிட வாய்வுமுதல் இருமல் போக
நேரான வேர்க்கொம்பு திப்பிலியுங் கூட
நீரிலிடக் கரிப்பானுஞ் சமூலம் வாங்கி
நேரான சங்கம்வேர்த் தோடை வேரே! 59

பொ.ரை: அடுப்பிலிட்டு காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும் பின் அதனின்று குடிநீரை எடுத்து 12 கி துத்தநாகத்தைச் சேர்த்தரைத்து எட்டிலொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி கொடுக்கவும். கழிச்சலானால் மோர் குடிக்கவும். வாய்விலிருந்து இருமல் வரை தீர்வதற்கான குடிநீர் வருமாறு: சுக்கு திப்பிலி, கரிசாலை சமூலம், சங்கம் வேர், ஆடா தோடை வேர் சம அளவு எடுக்க.

தோடையுடன் தேள்கொடுக்கு சிறுதேக்கு தானும்
சோரமுட னிருநாழி நீரில் போட்டு
வேட்டையுட னெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கி
மறுபொடியின் திப்பிலியின் மூல மாட்டி
மாடையுடன் கசாயத்தைக் கொண்ட போது
மாற்றிருமல் விட்டோடு மப்பா கேளு
சாடையுடன் சொர்ணத்தின் மேற்கசாயம் சொல்வேன்
சாதகமா யிலவங்க மேலந் தானே! 60

பொ.ரை: தேள்கொடுக்கு, சிறுதேக்கு, சமமாக எடுத்து மேற் சொன்னவற்றுடன் சேர்த்திடித்து 2.6 லி தண்ணீரில் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கவும். திப்பிலி

மூலத்தைச் சேர்த்தரைத்துக் குடிநீருடன் கலந்து கொடுக்க இருமல் நீங்கும்.

இருமலுக்குக் குழம்பு

தானென்ற கெந்தம் பூலா விருட்சம்
சாதகமாம் பூலாவேரு நீர்த்தூளி வித்து
மானென்ற யிவையெல்லாம் சமன்தூளா யாட்டி
மைந்தனே யாழாக்கு அளந்து கொண்டு
ஊனென்ற வாநெய்யி பாலாழாக்குக் கூட்டி
உறவுசெய்து சற்றெடுத்து உண்ட பின்னை
தானென்ற குழம்பெடுத்தி நக்கி னாக்கால்
தீராத வினைகளெல்லாந் தீருந் தானே! 61

பொ.ரை: இலவங்கம், ஏலம், சந்தனம், பூலாவிருட்சம், பூலாவேர், நீர்த்தூளி வித்து ஆகியவற்றைச் சமமாய் எடுத்துச் சூரணமாக்கி 162 மி.கி. அளவெடுக்கவும். நெய், பால், வகைக்கு 162 மி.லி. எடுக்க. சரக்குகளை இடித்துக் கலவையில் கலந்து காய்ச்சிக் குழம்பானவுடன் உள்ளங்கையிலிட்டு உட்கொள்ளவும். நோய் தீரும்.

கிரீச்சத்துக்குக் குடிநீர்

தீருமே கிரீச்சனங்க ளாறுந் தீரு
செப்புகிறேன் கசாயத்தைத் திறமாய்க் கேளு
தாருமே கொடுப்பைச்சாற், காணச் சாறு
சாதகமாய் வெந்த சாறாக வாங்கி
தேருமே யிரண்டுஞ் சமனாய்க் கூட்டி
திறமாக கால்படிநீரி லுண்ணச் சொல்லு
தீருமே கல்தெரிக்கும் சிலதாரை யாகும்
தூர்ந்திடாத தசையடைப்புக் கியம்பு றேனே! 62

பொ.ரை: ஆறு வகை கிரீச்சங்கள் தீருவதற்கான குடிநீர் வருமாறு: கொடுப்பைச்சாறு, காணச் சாறு எடுத்துக் கொதிக்க வைத்துச் சமமாய் எடுக்கவும். 325 மி.லி. தண்ணீரில் சாற்றைக்

கலந்து குடிக்கக் கொடுக்கவும். கல் உடையும். அடைபட்டு உள்ள மூத்திரத்தாரையின் அடைப்பு நீங்கி சிறுநீர் வெளியாகும். தசையடைப்புக்குக் கூறுகிறேன்.

இயம்பிறேன் யின்னமன்றி காரஞ் சேர
கிலிசையான தசைதெரிக்கு மின்னங் கேளு
இயம்பிறேன் கட்டிரத்தம் முறிந்து வீழும்
இறங்கிற நீர்த்தாரைக் கிடறு தீரும்
இயம்பிறேன் கசாயமொன்று சிறுதேக்கு மிளகு
எரிசங்கம் வேர்சுக்கு கரிப்பான் பத்திரி
இயம்பிறேன் தோடைவேர் கொம்மட்டி வேரும்
இவையொன்றுக் கோர்கழஞ்சி யிருநாழி நீரே! 63

பொ.ரை: தசை தெறிக்கும். கட்டியாகி உள்ள இரத்தம் உறைதல் நீங்கி நலம்பெறும். சிறுநீர் அடைப்பு அதனால் வரும் துன்பம் நீங்கும், சிறுநீர்ப் பாதையிலேற்படும் அல்லல் தீரும். சிறுதேக்கு, மிளகு, சங்கம்வேர், சுக்கு, கரிசாலை, சாதி பத்திரி, ஆடாதோடைவேர், கொம்மட்டி வேர் இவற்றினை வகைக்கு 5 கிமும் 2.6 லி தண்ணீரும் எடுக்க.

நீரதனை உழக்காகக் குறுக்கிக் கொள்ள
நீரடைப்புச் சலவடைப்பு தீரும் தீரும்
தீராத கிரீச்சனங்க ளாறுந் தீரும்
மறந்தொருத்தற் கின்னூலை வழங்கி டாதே
பேரதனைச் செப்பாதே வாதா டாதே
பொய்சொல்லிப் புலையாடி திரிந்தி டாதே
சீரதனை யறியாரைச் சேர்த்தி டாதே
சீஷவர்க்க மறிந்துகொண்டு தீட்சை சொல்லு
பேரதனை யறிந்துநின்றால் வாகடத்தைக் காட்டு
பித்தவறிலாய மேலே போடு போடே! 64

பொ.ரை: சரக்கினை இடித்துத் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி 325 மி.லி. யாய்க் குறுக்கவும். இதனை அளவறிந்து கொடுக்க கிரீச்சனங்கள் ஆறும் தீரும். ஒருவருக்கும் இந்நூலை மறந்தும் அளிக்காதே. பேரையும் சொல்லாதே. வாதாடாதே. பொய், கோள்கூறல், விடுக. சீஷ வர்க்கம், அறிந்து தீட்சைமுறைகளையும் மருந்து முறைகளையும் கூறுக.

போட்டவுடன் வணங்கினால் கருவைச் சொல்லு
பொய்கூறில் பண்டிதரைப் பொல்லாக் காதே
நீட்டமுடன் துணிந்தவர்கள் போலே யப்பா
நெறிநிற்க வெல்லுமடா யில்லா விட்டால்
நாட்டமுடன் பாழ்பழிகள் நிமிசை யாகும்
நலமறிந்து செய்வதற்குத் தோச மில்லை
கூட்ட லொன்றான பெண்ணைப் போலே
கூட்டுமப்பா சீஷவர்க்கம் கூட்டுந் தானே! 65

பொ.ரை: பணிவால் வணங்குபவர்க்குக் கருவினைக் கூறு. பொய் பேசுபவர்க்கு விளக்காதே. நற்செயலுக்கென முன் வந்தவர்கள் துணிந்தோராகவும் நெறியில் நிற்போராகவும் விளங்கவேண்டும். பழிச்செயல்கள் நீக்க வேண்டும். நற் செயல்கள் செய்வதற்குத் தோடங்கள் குற்றங்கள் இல்லை.

இரத்த பித்தத்திற்கு எண்ணெய்

கூடிநின்ற சீரத்தில் ரச முறிக்க
கூறுகிறேன் சுரைக்குடுக்கை கறியா யாட்டி
நீடிநின்ற பழமாறிக் கலந்து கொள்ள
நீங்காத ரசமுறிந்து நீறாய்ப் போகும்
நாடிநின்ற வாதபித்தம் போக வென்றால்
நற்குன்றி மருக்காரை வெப்பூலா வேரு
மோடிநின்ற முசுமுசுக்கை சிறுகி ளாவும்
முப்பிலிவேர் திருநாமப் பாலை வேரே! 66

பொ.ரை: சுரைக்குடுக்கையை விழுதாயரைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து விட இரசம் முறியும். வாதபித்தம் தீருவதற்கான மருந்து, குன்றி, மருக்காரை, வெட்பூலாவேர், முசுமுசுக்கை, சிறுகிளா, இண்டங்கொடி திருநாமப்பாலை ஆகியவற்றின் வேர்கள்.

சுரத்திற்குக் குளிகை

பாலையோடு மிளகுகடு கொன்றாய் கூட்டி
பரிவாக ஆட்டியே நல்லெண்ணெய் விட்டு

வாலையுட னடுப்பேற்றி வடித்து நக்க
அப்பனே ரத்தபித்த மனைத்தும் போகும்
பாலையுடன் சுராங்கிசத்தைச் சொல்லக் கேளு
வளர்சூதம் பின்கஞ்சா வசுவாசி நேராய்
சோலையுடன் தூதளையின் சாற்றி லாட்டி
துவரைபோல் குளிகைகட்டி வைத்தி டாயே! 67

பொ.ரை: மிளகு, கடுகு, ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்து நல்லெண்ணெய் ஊற்றி அடுப்பேற்றி வைத்துக் காய்ச்சிப் பக்குவத்தில் வடித்து அளவறிந்து உள்ளங்கையிலிட்டு வழித்துச் சாப்பிட இரத்தபித்தம் குணமாகும். சுராங்கிஷமாவது, சூதம், அபின், கஞ்சா, வசுவாசி இவற்றைச் சமமாயெடுத்துத் தூதுவளைச் சாறூற்றி அரைத்துத் துவரை அளவுள்ள குளிகைகளாய்த் திரட்டுக.

கிரீச்சனத்துக்கு மருந்துகள்

வைத்ததொரு குளிகையொன்று இஞ்சிச் சாற்றில்
மைந்தனே குளிர்மாறல் வெகுசுரமும் போகும்
வைத்ததொரு கிரீச்சனத்துக் கின்னஞ் சொல்வேன்
மண்ணில்வளர் பூநாக மிலுச்சங் காயளவு
வைத்ததொரு பாலிலே கலக்கிக் கொள்ள
மகத்தான கல்லடைப்புத் தெரித்து வீழும்
வைத்ததொரு முசுட்டையிலை பாக்களவு அரைத்து
மருவிதொரு வெண்ணையிலே கொடுத்தி டாயே! 68

பொ.ரை: ஒரு குளிகையை இஞ்சிச் சாற்றில் இழைத்துக் கொடுக்க குளிர்மாறல் சுரம் தீரும். கிரீச்சனம் எனும் நீரடைப்பிற்கு மருந்தாவது: மண்வளர் மண்புழுவை எலுமிச்சங் காயளவு அரைத்து எடுத்துப் பாலிலே கலந்து கொடுக்க கல்லடைப்பு நீங்கும். கல் கரைந்து வெளியேறும். முசுட்டையிலையை அரைத்துப் பாக்களவு எடுத்து வெண்ணையிலே குழைத்துக் கொடுக்கவும்.

கொடுத்திடவே நீரடைப்பு தீரும் கண்டாய்
கூறுகிறேன் கொள்ளுச்சாறு வாங்கிக் கொண்டு

கொடுத்திடவே அரிசியிட்டுக் கஞ்சி காய்ச்சி
குடித்திடவும் நீர்ச்செருவும் குணமாய்க் காணும்
கொடுத்திடவே மாவுலிங்கம் வடவே றொன்று
கூரான நெருஞ்சிவேரு பிராயமுட்டி வேரும்
கொடுத்திடவே சிறுபீளை வேருங் கூட்டி
ஒரொன்றாய் நீரிலிட் டெட்டொன்றாய்க் காய்ச்சே! 69

பொ.ரை: நீரடைப்பு நீங்கி நீர் எளிதில் வெளியேறும். கொள்ளினின்று சாறு பிழிந்தெடுத்துக் குடிக்கவும். அரிசியினின்று கஞ்சி காய்ச்சிக்குடித்தாலும் நீர்ச்செறிவு குணமாகும். மாவிலிங்கத்தின் வடதிசை நோக்கிச் செல்லும் வேர், நெருஞ்சி, பிராயமுட்டி, சிறு பீளை ஆகியவற்றின் வேர்களைச் சம அளவு சேர்த்துத் தண்ணீர்விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சவும்.

காய்ச்சிவடித் துண்டிடவே பாமுத லளுக்கும்
கல்தெரிக்கும் நீர்க்கடுப்புக் கரைய வென்றால்
காய்ச்சி வடித்திருந்த பழங்கஞ்சிக் குள்ளே
கடுநெல்லி முள்ளியொரு பிடிதா னிட்டு
காய்ச்சிநறுந் தாழையுட விழுதுச் சாறும்
கலந்தரைத்து எட்டுநா ளுண்ணக் கேளு
காய்ச்சலறும் நீர்க்கடுப்பும் தீரு முடைப்பும்
கடுப்புக்குப் பணவிடைதான் தூக்கு தூக்கே! 70

பொ.ரை: குடிநீரை வடித்துக் கொடுக்க கல்கரையும். நீர்க்கடுப்பு நீங்கும். நீரெரிச்சல் தீர்ந்து சிறுநீர் தாராளமாய்க் கழியும். காய்ச்சி வடிகட்டிய பழங்கஞ்சியில் கருநெல்லி முள்ளியை ஒரு பிடி இடவும். குடிநீராய்க் காய்ச்சி அதனுடன் நறுந்தாழையின் விழுதுச் சாற்றைச் சேர்த்து எட்டு நாட்களுக்கும் தொடர்ந்து கொடுக்கவும். காய்ச்சலும் நீர்க்கடுப்பும் தீரும்.

தூக்கியே யிளவெந்நீரில் போட்டுக் கொள்ளத்
துளிவிழுதல் பொசிந்தூறல் துறந்து வோடும்
தாக்கியே யிருமலமு மடைத்து தானால்
சாற்றுகிறே னிருமல் முத்தாரை தன்னை
தேக்கியே திருகுகள்ளிப் பாலா ழாக்கு
சிற்றாமணக் கெண்ணெ யாழாக் கப்பா

தேக்கியே ஆவின்நெய் தான்படி யாழாக்கு
சேராமல் பாண்டத்தில் ஊற்று ஊற்றே! 71

பொ.ரை: கடுப்புக்கு 488 மி.கி. எடுத்து இளவெந்நீரில் கலந்து உட்கொள்ள சிறுநீர் துளித்துளியாய் விழுதல், சொட்டு சொட்டாய் விழுதல் குணமாகும். சிறுநீர், மலம் இவை அடைத்தால் திருகு கள்ளிப்பால் 162 மி.லி, சிற்றாமணக் கெண்ணெய் 162 மி.லி, பசு நெய் 162 மி.லி. எடுத்துப் பாத்திரத்தில் ஊற்றவும்.

ஊற்றியே நிலப்பனை வேர்வெள் ளுள்ளி
உத்தமனே பெருங்காய மஞ்ச ளோடு
நேர்த்தியாய் வகைக்கரைப் பலமா யாட்டி
ரேகித்துப் பதமாக வடித்து நீயும்
மாற்றியே ரெண்டு காசிடைதான் நக்க
யப்பனே மலத்தாரை தீற்கு பின்பு
போற்றியே பால்கஞ்சி கொள்ள வேணும்
பொழுதுபோகப் பருப்பிட்டு கஞ்சி வையயே! 72

பொ..ரை: நிலப்பனைவேர், வெள்ளைப்பூண்டு, பெருங் காயம், மஞ்சள், இவற்றை வகைக்கு 17½ கி எடுத்துக் கலந்தரைத்து அடுப்பிலிட்டுக் காய்ச்சிப் பதமாக வடித்து 975 மி.லி. உள்ளங் கையிலிட்டு குடிக்க மல விருத்தியாகும். பால்கஞ்சியும் பருப்புக்கஞ்சியும் உட்கொள்ளவும்.

கஞ்சிகொள்ள நீரடைப்பு வெளியாய்ப் போகும்
காட்டாதே இன்னூலைக் கண்ணில் கண்டால்
அஞ்சியே நடப்பவர்போல் கிறிஷ்க மட்டும்
அடிதொழுவார் நூல்கிட்டினா லகந்தை செய்வர்
மிஞ்சியே வேறு வீண்ற ************
வாக்கொன்றும் விள்ள வேண்டாம்
பஞ்சியே போவென்று தள்ளி விட்டுப்
பாரப்பா பராபரத்தைப் பற்றிப் பாரே! 73

பொ.ரை: நீரடைப்பு தீர்ந்து சிறுநீர் வெளியேறும். நன்மை செய்பவர்க்கு மட்டும் நூலைக்காட்டு, மற்றவர் ஆண்மையுடன் நடப்பர். வாக்கு வாதம் பேசாது பஞ்சு போன்று தள்ளிவிடு.

பராபரமான இறைவனைப் போன்றிருக்க முயற்சி செய்; அவனை நினை; அவனைப்பற்றிப்பேசு.

பாரப்பா பராபரமா யிருக்க வென்றால்
பத்தியங்க ளிருக்கநீ மலைக்க வேண்டாம்
தாரப்பா பழம்புளியுஞ் சமனா யாட்டி
சாதகமா யாறுதிங்கள் சென்ற காடி
வாரப்பா கலக்கிநீ யுண்ணச் சொல்லு
மருவியதோர் பத்தியத்தை விளங்கி றேனே! 74

பொ.ரை: இறைவழி வாழ வேண்டுமென்றால் பத்தியங்களைக் கடைபிடிக்க அஞ்சாது செயல்படவேண்டும். பழைய புளியை நன்கு அரைத் தெடுத்து ஆறுமாதம் பழகிய காடியையும் அதனுடன் சேர்த்துக் கொடுக்கவும் இன்னும் பத்தியம் வருமாறு.

விளங்கியதோர் பச்சரிசி பயிறு நேராய்
மைந்தனே பால்கஞ்சி குடிக்கச் சொல்லு
விளங்கியதோர் வெண்சாவல் குடலீர லரைத்து
மென்பசுவின் பாலிலே கொள்ளச் சொல்லு
புளங்கியதோர் வாய்பேசா துண்ணச் சொல்லு
பூட்டக்கேள் நறுந்தாளிச் சாறு வாங்கி
அளங்கியதோர் வால்குருவை நெல்லரிசி வாங்கி
ஆட்டியே வெல்லமுட னாட்டி நெய்யே! 75

பொ.ரை: பச்சரிசியையும் பயிறையும் சமமாய்க் கொண்டு பால் கஞ்சியாய் காய்ச்சிக் குடிக்கவும். வெண்சேவலின் குடல், ஈரலை அரைத்துப் பசும்பாலில் கலந்து குடிக்கவும். வாய் பேசாது உட்கொள்ளவும். நறுந்தாளிச்சாறு எடுத்து குறுவை நெல்லரிசியையும் வெல்லத்தையும் சேர்த்தரைக்கவும்.

நெய்விட்டுக் கிளறியே தின்னும் போது
நேராகக் கல்லடைப்பு வீக்கம் நீங்கும்
நெய்விட்டுப் பலகறையின் சாம்பல் வாங்கி
நின்றபழச் சாறுண்ண நீர்த்தாரை யாறும்
நெய்விட்டு ஆவின்பால் சங்கங்குப்பி யிலையை
நேராக உண்டிடவே சிறப்பு வாங்கும்

நெய்விட்டு உத்தாம மெட்டி தன்னை
நேராகத் தண்டிலே பொரியப் போடே! 76

பொ.ரை: அரைத்த விழுதுடன் நெய்யை ஊற்றிக் கிளறி உண்ண கல்லடைப்பு, வீக்கம் தீரும். பலகரைச்சாம்பலுடன் நெய்யையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் விட்டுக் கிளறி சாப்பிட சிறுநீர்ப்பாதைப் புண் ஆறும், பசும்பாலுடன் சங்கங்குப்பி இலையைச் சேர்த்து அதனுடன் நெய்யை விட்டு உண்ணவும். உத்தமதாளியையும் எட்டியையும் நெய்விட்டு வதக்கி அரைத்து ஆணுறுப்பின் மீது தடவி விடவும்.

போட்டங்கே கழுத்தளவு சலத்தில் நிற்கில்
போகாத கல்லடைப்புப் புண்கள் தீரும்
நீட்டங்கே புன்முருங்கை நன்னாரி வேரும்
நேரான ஆவாரைவேரு அமுக்கிரா வேரு
நாட்டங்கே உத்தம தாளி வேரும்
நயமாக ஆட்டியே விளக்கெண்ணெய் குத்தி
பூட்டங்கே குழப்பிக்கும் வீக்கம் துக்கம்
பொருமலோடு கல்லடைப்புப் பிளந்து போமே! 77

பொ.ரை: பிறகு கழுத்தளவு தண்ணீரில் நிற்க கல்லடைப்புப் புண்கள் குணமாகும். புனல்முருங்கை, நன்னாரிவேர், ஆவாரை, அமுக்கிரா, உத்தமதாளி இவற்றின் வேர்களை அரைத்து அவ்விழுதை விளக்கெண்ணெயுடன் கலந்து குழப்பிக் கொடுக்க வீக்கம், வலி, பொருமல், கல்லடைப்பு குணமாகும்.

போமப்பா யிவைவாலி மனோசிலையும் நேராய்
புகழ்மேனிச் சாற்றிலுண்டா லொழியும் மொழியும்
வாமப்பா கிண்ணிச்சாறு நாவல் பட்டை
வளமாக யதின்கொட்டைப் பருப்புங் கூட
வேமப்பா சமபாக மரைத்து வாங்கி
வெள்ளாட்டுப் பாலிலுண்ணப் போகும் போகும்
ஆமப்பா வல்லாரைச் சூரணத்தைக் கேளு
அப்பனே மேகமென்ற தனைத்தும் போமே! 78

பொ.ரை: குதிரை வாலியையும் மனோசிலையையும் சம அளவெடுத்து குப்பைமேனிச்சாறிலுண்ணவும்.

பொன்னாங்கண்ணிச்சாறு, நாவல்பட்டை, நாவல் கொட்டைப்பருப்பு, இவற்றைச் சமமாயெடுத்தரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலந்து கொடுக்க கல்லடைப்பு குணமாகும். வல்லாரைச் சூரணத்தைக் கொடுக்க மேகவகை தீரும். செய்முறை வருமாறு.

வல்லாரைச் சூரணம்

அனைத்தும்போம் வல்லாரைச் சமூலம் வாங்கி
அப்பனே நிழலுலர்த்திச் சூரணந்தான் செய்து
அனைத்தும்போம் நெய்யிலுண்ண மேக மெல்லாம்
அப்பனே நிலக்குமிழம் வேரி டித்து
அனைத்தும்போம் நீரிலெட் டொன்றாய்க் கொள்ள
அடைத்திறந்த கல்லுவிழு மப்பா கேளு
அனைத்தும்போம் மெய்யப்பா கனத்தைச் சூறி
யடயூறு கருஞ்சீரகஞ் சலத்தில் கூட்டே! 79

பொ.ரை: வல்லாரைச் சமூலத்தை எடுத்து நிழலில் உலர்த்திப் பொடித்துச் சூரணமாகச் செய்து தகுந்த அளவெடுத்து நெய்யில் கலந்து கொடுக்க மேகம் பல குணமாகும். நிலக் குமிழம் வேரை இடித்துத் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கி அளவுடன் கொடுக்க கல்லடைப்பு நீங்கி கல் தெறித்து விழும். கருஞ்சீரகத்தைத் தண்ணீரில் இடித்துப் போடவும்.

கூட்டியே யெட்டொன்றாய்க் கொள்ளக் கேளு
கூட்டோடே கல்தெரிக்கு மீறி வீழும்
நாட்டியே மூன்றுதின முண்ணத் தீரும்
நலமான நொச்சிச்சாற் கொடுப்பைச் சாறு
மூட்டியே வகைக்குழக்கு கலந்து கொள்ள
முடந்தீருங் கல்லடைப்பு தசையடைப்பு
நீட்டியே பிரமேக மிரண்டுபத்தும் போக
நிகழ்த்திறேன் மகாமேகக் குடோரி தானே! 80

பொ.ரை: எட்டிலொன்றாய்க் குறுக்கிக் குடிநீராய்க் காய்ச்சவும். கல் கரையும்; வெளியேறும். மூன்று நாட்களும் தொடர்ந்து உண்ண கல்லடைப்பு குணமாகும். நொச்சிச்சாறு, கொடுப்பைச்சாறு இவற்றை வகைக்கு 325 மி.லி எடுத்துக் கலந்து உண்ண கல்லடைப்பு, தசையடைப்பு குணமாகும். இருபத் தொரு வகை மேகம் தீர மகாமேகக் குடோரி வருமாறு.

மேகத்துக்கு வங்க செந்தூரம்

தானென்ற காரீய மிலுப்பை நெய்யில்
    தனித்தனியே யேழுதரம் முருக்கிச் சாய்க்க
தானென்ற கண்டங்கத் திரியின் சாற்றை
    சாதகமா யெடுத்ததனைச் சட்டிக்குள் ளிட்டு
தானென்ற நாயுருவி சிவந்த தாகச்
    சட்டிக்குள் ளிட்டுநீ வறுக்கும் போது
தானென்ற கரண்டிகொண்டு கிண்டி கிண்டி
    சாமம் செந்தூர மான பின்பு
தானென்ற செந்தூரங் குழலில் சேர்த்து
    சாப்பிட்டாய் மேகாதி குடோரி தானே. 81

பொ.ரை: தேவையான அளவு காரீயத்தை எடுத்து இலுப்பை நெய்யில் தனித்தனியே ஏழுமுறையும் (ஒருமுறை பாத்திரத்தில் நெய்யிட்டுக்காய்ச்சி உருக்குதல்) அவ்வாறே செய்யவும். அந்தச் சட்டிக்குள் கண்டங்கத்திரிச்சாற்றை ஊற்றி நாயுருவியைச் சிவக்க வறுக்கவும். பின் பாத்திரத்தில் அச்சமயம் கரண்டியினால் மேற்சொன்ன சரக்குகளைக் கிளறி விடவும். செந்தூரமாகும். இதுவே மேகாதி குடோரி என்றழைக்கப்படும்.

மகாமேக குடோரிக்கு அனுபானம்

குடோரியென்ற செந்தூரம் பற்பந் தன்னைக்
    கடிகைகேள் பணமூன்று நெய்யிற் கொள்ளக்
குடோரியான சுக்கிலத்து மேகம் போகும்
    கூரான தேனிலிட சலமேகந் தீரும்

குடோரியெனக் கீழ்க்காயின் சாற்றி லூட்ட
கொத்தோடே சுரோணிதத்தின் மேகந் தீரும்
குடோரியென்று மிரத்த மேகங்கள் போக்கும்
குருவாழைத் தண்டுநீர் தன்னி லூட்டே! 82

பொ.ரை: மேற்சொன்ன குடோரி செந்தூரத்தை 1.464 கி எடுத்து நெய்யில் கொடுக்க சுக்கில மேகம் தீரும். தேனில் கொடுக்க சல மேகமும் கீழாநெல்லிச் சாற்றில் கொடுக்க சுரோணித மேகமும் வாழைத்தண்டுச் சாற்றில் கொடுக்க இரத்த மேகங்களும் குணமாகும்.

ஊட்டடா சிறுபீளைச் சாற்றில் நீயும்
உத்தமனே கல்லெரிப்பு தீரும் தீரும்
நாட்டடா கஞ்சாசாற் சீதசுரம் போக்கும்
நலமான மேனிச்சாற் தன்னி லூட்ட
வாட்டடா வரும்சன்னி வாதசுரம் போக்கும்
மைந்தனே வெற்றிலைச்சாற் கிராம்புங் கூட்டி
நீட்டடா வாதசுரம் வெருவி ஒடும்
நேராகத் தாபசுரம் தனக்குக் கேளே! 83

பொ.ரை: சிறு பீளைச் சாற்றில் அளிக்க கல்லெரிப்பும் கஞ்சாச்சாற்றில் கொடுக்க சீதசுரமும் குப்பை மேனிச் சாற்றில் கலந்தளிக்க சன்னிவாத சுரமும் வெற்றிலைச் சாற்றில் கிராம்பினைக் கலந்து அதில் கொடுக்க வாதசுரமும் தீரும்.

சுரத்துக்கு அனுபானம்

கேளப்பா இளநீரைச் செதுக்கி வெந்து
கெடியாக நீர்விழைத்த பித்தசுரம் போகும்
வீளப்பா பழச்சாற்றி லூட்டு லூட்டு
விலகாத நீரழிவு போக வென்றால்
வேளப்பா அபினியோடு விளாம்பிசினும் நேராய்
விரைவாய்த் தேனிலே யென்படிதான் ரெண்டு
நாளப்பா யேழுதின முண்ணத் தீரும்
நலமான கிரீச்ச னங்கள் போக்கே! 84

பொ.ரை: இளநீரைக் கொணர்ந்து அதில் கலக்கிக் கொடுக்க பித்தசுரம் தீரும். பழச்சாற்றிலும் இம்மருந்தைத் தர பித்தசுரம் குணமாகும். அபினி, விளாம்பிசின் இவற்றைச் சமமாய் எடுத்திடித்துத் தேனை 2.6 லி சேர்த்து அதில் செந்தூரம் கலந்து கொடுக்க நீரிழிவு தீரும் அவ்வாறே ஏழு நாட்கள் தொடர்ந்து சாப்பிடவும்.

கிரிச்சனங்கள் போகவென்றால் முசுட்டை வித்து
கெடியான நெரிஞ்சிவித்து ஆவரையின் வித்து
கிரிச்சனங்கள் போகவே நாலுகழஞ் சுலர்த்தி
நன்றாயித் தூளாயாட்டி வெருகடிதான் தூளில்
... ...
கெடியாகக் கொண்டாக்கால் கூர்ந்து கேளு
கிரிச்சனங்கள் போகவென்றால் யிந்தனூலி லேதான்
கெடியாகச் செந்தூரம் பாடிப் போட்டே! 85

பொ.ரை: முசுட்டை விதை, நெருஞ்சிவிதை, ஆவரைவிதை, இவற்றை வகைக்கு 20 கி எடுத்து நிழலில் உலர்த்திப் பொடித்து அதில் மூவிரலளவெடுத்து மேற்குறிப்பிட்ட வங்க செந்தூரத்தைக் கலந்து கொடுக்க கிரீச்சனங்கள் தீரும்.

நீரிழிவுக்குச் செந்தூரம்

போட்டிடுவாய் நீரிழிவு தீரும் கேளு
புகலான செந்தூரம் போக்கு மெத்த
போட்டிடுவாய் நல்லோற்கு யிந்த முறையாக
பொருந்தவே நீரிழிவைக் கேளு கேளு
நாட்டிடுவாய் சூதமொரு கழஞ்சி பத்து
நலமான கெந்திமுக் கழஞ்சி பத்து
நீட்டிடுவாய் குகைக்குள்ளே கெந்தி சூதம்
நேராக வைத்துநீ மூடு மூடே! 86

பொ.ரை: நீரிழிவுக்கு மேற்சொன்ன மருந்து மட்டுமன்றி கீழ் வரும் மருந்தைக் கேளு. சூதம் 50 கி, கெந்தகம் 150 கி எடுத்து குகைக்குள்ளே இரண்டையும் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பின் உள்ளே வைத்து குகையின் மூடியை மூடுக.

மூடியே குகைக்கடியில் வெற்றிலையை யிட்டு
விளங்கவே யிருநூறு பரத்திக் கட்டி
நாடியே பொதிந்து அதின்மேல் கேளு
நலமான வாழையிலை யிருநூறுதான் பொதிந்து
நீடியே சீராய்ப் பிளவைத்து கட்டி
இறக்கியே ஒரு குழியும் சில்லிட்டி
ஊடியே குழிக்குள்ளே புளிப்பு ரோணி
உத்தமனே ஈரஞ்சு மரக்கால் கொட்டே! 87

பொ.ரை: குழியினை குகை வைப்பதற் கேற்றவாறு வெட்டிவைக்கவும். குகைக்கு அடியில் இருநூறு வெற்றிலையை வைத்து அதன் மீது வாழையிலையை இருநூறு வைத்து நன்றாய் அடுக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்க்கவும். சில்லு கொண்டு குகையை மூடவும். குழிக்குள் புளியம் சிராயை 53 கி.கி அளவில் கொட்டவும்.

கொட்டியே அதுமேலே யிலையைப் பொதிந்து வைத்து
குவித்திடா அதின்மேலே காரளைப் புரோணி
கொட்டியே அனலிட்டு வெந்து நீறி
நீறாகு தெரியாமல் மண்ணைமூடி கொட்டி
கொட்டியே மூன்றுதினம் கழிந்த பின்பு
கூட்டடா மருந்தெடுத்துக் கல்வத்தி லிட்டு
கொட்டியே தூளாக்கிப் பதனம் பண்ணும்
கொடுக்கவே மருந்தினுட குணத்தைக் கேளே! 88

பொ.ரை: சிராயின் மேல் இலையைப் பொதிந்து வைக்கவும். காரளைப்பு சிராயை மேலே கொட்டவும். அதன் மீது அனலிட்டு குகையினை வைத்து வேக விடவும். வெந்த பிறகு மணலைக் கொட்டவும். மூன்று நாள் கழிந்த பிறகு எடுத்துக் கல்வத்தில் இடவும். பொடித்துப் பத்திரப்படுத்தவும். செந்தூரமாகும்.

குணங்கேளு மதுமேகம் பித்த மேகம்
கூரான வாய்வினத்தின் கொடிய மேகம்
சினங்கேளு யுண்டவுடன் நீரறிந்து போகும்
செயவாறு கிரீச்சனங்கள் தீரக் கேளு

மனங்கேளு அத்தித்தோல் ஆவரையின் தோலு
மைந்தனே யுதியமரப் பட்டை தானும்
சனங்கேளு சமபாக முலர்த்திப்பொடி யாக்கி
செயமாக நீர்பிரிய தேனில் கொள்ளே! 89

பொ.ரை: இச்செந்தூரத்தை அளவறிந்து உட்கொள்ள மதுமேகம், பித்தமேகம், வாய்வினால் கொடிய மேகம் ஆகிய நோய்கள் தீரும். கிரீச்சனங்கள் தீருவதற்கான மருந்தாவது. அத்திப்பட்டை, ஆவாரைப்பட்டை, உதியமரப்பட்டை ஆகிய வற்றைச் சமமாக எடுத்துப் பொடித்துத் தேனில் கலந்து உட்கொள்ளவும்.

கொள்ளக்கேள் கிரீச்சனங்கள் போகும் போகும்
சூரான மன்றி நீர் ... ...
இறங்கக்கேள் மாம்பட்டை ஆவரையின் பட்டை
வெள்வேல்தோல் வேப்பந் தோலது ஒன்றாய்
அள்ளக்கேள் பிடித்துமொரு பாண்டத்தி லிட்டு
அப்பனே சலம்விட்டு ஊற வைத்து
குறுக்கியதை தினமுழுக்கு அருந்துயரந் தீரும்
மேகாதி சூரணத்தைப் பாரு பாரே! 90

பொ.ரை: மூத்திர அடைப்பு தீர மாம்பட்டை, ஆவாரைப் பட்டை, வெள்வேலம்பட்டை, வேப்பம்பட்டை இவற்றைச் சம அளவெடுத்துப் பாத்திரத்தில் போடவும். தேவையான அளவு தண்ணீரூற்றி ஊறவைத்துக் குறுகிய பிறகு நாள்தோறும் 325 மி.லி. அளவு குடிக்க தீரும்.

நீர் இறங்க மேகாதிச் சூரணம்

பாரப்பா முந்திரிகை பேரீச்சம் பழமும்
பருநெல்லி அதிமதுர மேலம் கல்நார்
நேரப்பா திப்பிலியும் சிறுபீளை வேரும்
நேரான சந்தனமும் கொத்து மல்லி
வேரப்பா வெள்ளரியின் வித்துங் கூடா
மீறாமல் சமபாகம் சூரணத்தைச் செய்து
வாரப்பா வெருகடிதான் கழுநீரில் கொள்ள
மைந்தனே கடுப்பெரிவு கிரீச்சனங்கள் தீரும்

ஆரப்பா அறிந்துசெய்வார் சித்தர் முத்தர்
அப்பனே மற்றோர்க்குத் தெரிந்தி டாதே! 91

பொ.ரை: முந்திரிகை, பேரீச்சம்பழம், நெல்லிக்காய், அதிமதுரம், ஏலம், கல்நார், திப்பிலி, சிறுபீளைவேர், சந்தனம், கொத்துமல்லி, வெள்ளரிவித்து ஆகியவற்றைச் சமஅளவெடுத்துச் சூரணம் செய்துகொள்ளவும். மூவிரலளவெடுத்துக் கழுநீரில் கலந்து குடிக்க கடுப்பு, எரிச்சல், கிரீச்சனங்கள் குணமாகும்.

அட்டகுன்மத்துக்கு வங்க பற்பம்

தெரித்திடவே குன்மங்கள் சிதறி யோடா
செப்புகிறேன் வங்கபற்பம் திறமாய்க் கேளு
வருந்திடா வங்கத்தின் தகடு தன்னை
அப்பனே சட்டியொன்றில் அரவாசி யுப்பு
சரிந்திடா அதின்மேலே தகடு வைத்து
சோர்வின்றி சட்டிரொம்ப யுப்பு மிட்டு
வறிந்திட மேல்சட்டி கவிழ்த்து மூடி
மைந்தனே சாமமொன்று எரித்தி டாயே! 92

பொ.ரை: குன்மங்களை ஒழிக்கும் வங்க பற்பத்திற்கு, வங்கத் தகட்டினை அரைப்பாகம் உப்பு நிரப்பிய சட்டி ஒன்றின் நடுவில் வைக்கவும். பின் அச்சட்டி முழுவதும் உப்பினை இடவும். மற்றொரு சட்டியினை அச்சட்டியின் மீது கவிழ்த்து மூடவும். ஏற்றிய அடுப்பிலிட்டு மூன்று மணி நேரம் எரிக்கவும்.

எரித்தாகி யெடுத்து மப்பா பற்பம்
என்மகனே பணந்தான் வாங்கு
எரித்தச் சாராற் சர்க்கரையில் குழப்பி யுண்ண
எழுந்ததொரு குன்மங்க ளெல்லாந் தீரும்
எரித்தாலும் நோய்க்கெல்லா மனுபான மப்படியே
யிட்டுவர வங்கபற்ப மின்னங் கேளு
எரித்தாலும் நோயனைத்து முசித மிந்த
இயல்புகேள் தினக்கண்ணி பிடுங்கி டாயே! 93

பொ.ரை: எரித்தணைந்த பின் அப்பறபத்தை 488 மி.கி. எடுத்து நாட்டுச்சர்க்கரையில் குழப்பி உட்கொள்ள குன்மங்கள் அனைத்தும் குணமாகும். நோய்களுக்கேற்றவாறு அனுபானங்களை மாற்றிக் கொடுக்க பல நோய் தீரும். தினக்கண்ணி எனும் கரிசலாங்கண்ணியை எடுக்கவும்.

பிடுங்கியொரு சட்டியிலே கழுவிக் கொண்டு
போர்க்கத் தாழிக்குள் பாதி யிட்டு
பிடுங்கியோர் சட்டியினால் கவிழ்த்து மூடி
பதறாம லெண்சாமம் மூத்தீ யிட்டு
மடுங்கியே ஆறவிட் டெடுத்துப் பாரு
மைந்தனே வங்கமது பற்ப மாமே! 94

பொ.ரை: அம்மூலிகையைக் கழுவி தாழிக்குள் போடவும். அதன் வாயைச் சட்டியினால் கவிழ்த்து மூடவும். அடுப்பி லிட்டு இருபத்து நான்கு மணிநேரம் தீபாக்கினி (1 விறகு), கமலாக்கினி (2 விறகு), காடாக்கினி (3 விறகு) கொண்டு எரிக்கவும். தக்க நேரங்கழித்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்க வங்கம் பற்பமாகும்.

ஆமப்பா வங்கத்தில் பணந்தான் ரெண்டு
ஆவின்நெய்யில் கொண்டிடவே தீரும் நோய்கேள்
ஓமப்பா எலும்புருக்கி வெள்ளை வீழ்தல்
உடல்காந்தல் கடுப்புகள் கிரீச்சனங் களாறு
வேமப்பா சலக்கழிச்சல் காமாலை பாண்டு
வெங்கழுநீர் பஞ்சுபோல் வேகும் வேகும்
நாமப்பா மருந்தெல்லா முள்ளபடி சொன்னோம்
நாதாக்க ளிக்கருவை மறைத்தி டாரே! 95

பொ.ரை: 976 மி.லி. வங்க பற்பத்தைப் பசுநெய்யில் கலந்து கொடுக்க எலும்புருக்கி, வெள்ளை, உடலெரிச்சல், உடல் கடுப்பு ஆறுவகை கிரீச்சனங்கள், சலக்கழிச்சல், காமாலை, பாண்டு ஆகிய நோய்கள் கொடிய கழுநீரில் வெந்து போகும். பஞ்சு போல் தீரும். இக்கருத்துள்ள மருந்தை மறக்கக் கூடாது.

அப்பிரகச் செந்தூரம்-1

மறைபோற்று மப்பிரகச் செந்தூ ரத்தை
வயனமாய்ச் சொல்லுகிறேன் மச்ச கேந்திரா
நிறை போற்றும் அப்பிரக மிடித்து மைந்தா
நேராகப் பாண்டத்தி லிட்டு நீயும்
நறைபோற்றுங் கல்லத்தி அரசு அத்தி
நயமான அயில்பட்டை யிவைகள் நேராய்
குறைபோக்கி யிடித்துநீ சமூலம் விட்டு
குமட்டியே கழியவதை ஊற வைய்யே! 96

பொ.ரை: அப்பிரகச் செந்தூரத்தைக் கூறுகிறேன்! கேட்பீராக! அப்பிரகத்தை இடித்துப் பாத்திரத்தில் போடவும். கல்லத்தி, அரசு, அத்தி, ஆயிலியப்பட்டை இவற்றைச் சமூலங் களாக எடுத்திடித்துத் தண்ணீரில் ஊறவைத்துக்கொள்ளவும்.

ஊறியதோர் நீர்பிழிந்து அப்பிரக மாட்டி
உத்தமனே எருக்கிலையில் தப்பி யாற்றிப்
மீறியதோர் கனநிழலி லுலர்ந்த பின்பு
வீதியிலே எருக்குவித்து அடையை வைத்து
மாறியதோ ரடைமேலே யெருவுக் கொட்டி
மைந்தனே வரக்காவிப் புடைத்துப் போட்டு
தேடியதோ ரிப்படியே யிருபத்தொரு தரம்
புடம்போடு அப்பிரகஞ் செந்தூர மாமே! 97

பொ.ரை: ஊறின தண்ணீரினால் அப்பிரகத்தை அரைத்து அவ்விழுதை எருக்கிலையில் வைத்து நிழலில் உலர வைக்கவும். அடுப்பில் எருக்கு விதைகளை அடையாய்த் தட்டி அதன்மீது 10 வறட்டிகளை அடுக்கி வைக்கவும். அதன் மேல் தயாரித்த அப்பிரகத்தினை வைத்து இருபத்தொரு முறை புடம் போடவும். செந்தூரமாகி அப்பிரகச் செந்தூரம் என்ற பெயர்பெறும்.

செந்தூர மெடுத்துநீ சலத்தில் போடு
சீக்கிரத்தில் தாழ்ந்துபோ மிதந்தி டாது
செந்தூரம் பணவிடைதான் தேனிற் கொள்ள
தீராத நீரிழிவுந் தீரும் தீரும்

செந்தூரம் உண்டிடவே கிரீச்சனங்கள் தீரும்
செப்பரிய சயந்தீரும் மந்தம்குன்மம் தீரும்
செந்தூர முண்டிடவே நோய்களெல்லாந் தீரும்
சிவசிவா அப்பிரகந் தெளிந்த போக்கே! 98

பொ.ரை: அப்பிரகச் செந்தூரத்தைத் தண்ணீரில் போட மிதக்காது. அமிழ்ந்து விடும். 488 மி.கி. செந்தூரத்தைத் தேனில் கலந்து கொள்ள நீரிழிவு தீரும். கிரீச்சனங்கள், சயம், மந்தம், குன்மம் குணமாகும். நோய்கள் பல தீரும்.

அப்பிரகச் செந்தூரம்–2

போக்கான பிரமேகம் ஒழியக் கேளு
பூட்டிறேன் ஈருள்ளி பழச்சாறு வெல்லாம்
தாக்காக சமபாகம் பனியில் வைத்து
தான்பிழிந்து சாப்பிடவே தணிந்து போகும்
தேக்கான அப்பிரகம் இன்னஞ் சொல்வேன்
திருமாலின் அப்பிரக மெடுத்து வந்து
வாக்கான வெள்ளாட்டு நீரில் வெந்து
மைந்தனே மறுபடியு மாட்டக் கேளே! 99

பொ.ரை: பிரமேகம் ஒழியும் மருந்தாவது: வெங்காயத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் சம அளவு ஊறவைத்துப் பனியில் வைக்கவும். ஊறிய பின்எடுத்து உட்கொள்ள பிரமேகம் தீரும். விஷ்ணு அப்பிரகத்தை வெள்ளாட்டுச் சிறுநீரில் வேகவைத்து எடுத்துச் சுண்ணாம்புத் தண்ணீரில் அரைத்துக் கொள்ளவும்.

ஆட்டக்கேள் சுண்ணாம்புத் தண்ணீர்க் குள்ளே
வாகான கோநீரி லவித்துக் கொண்டு
நாட்டக்கேள் சலம்விட்டுக் கழுவிப் போட்டு
நன்றாக யிதழிதழாய் எடுத்துக் கூட்டி
ஊட்டக்கேள் புதுச்சீலைக் குள்ளே யிட்டு
புகலாகப் பருநெல்லுங் கூட விட்டு
மூட்டக்கேள் கிழிக்கட்டி சட்டிக்குள் ளிட்டு
முத்துப்போற் றெளிகட்டி மட்டாய் வாரே! 100

பொ.ரை: கோமியத்தில் அரைத்த விழுதை இட்டு வேகவைத்துப் பின் அதனைத் தண்ணீரில் கழுவவும். கழுவின பின் தனித்தனியே இதழ் இதழாகப் பிரித்துப் புதுத் துணிக்குள் வைத்துப்பெரிய நெல்லையும் சேர்த்துக் கிழியாகக் கட்டவும். சட்டிக்குள்வைத்து தண்ணீரூற்றித் தெளியவைக்கவும்.

வைத்துநன்றாய்ப் பிசைந்திடவே அப்பிரகங் கரைந்து
மண்டிபோல் கீழ்நிற்கும் தெளிந்தி றுத்து
வார்த்துநன்றா யுலர்த்தி வாலம் பாலும்
வழா விழுது மதின் முகிழுங் கூட்டி
வார்த்துநன்றாய் மயனம்போ லாட்டி வாங்கி
மைந்தனே வில்லைகட்டி வெய்யி லுலர்த்தி
வார்த்துநன்றா யாவிலையின் பழுப்பு வாங்கி
மடக்கொன்றில் மருந்தப்பி மடக்கான மூடே! 101

பொ.ரை: தெளிந்த பிறகு நன்கு பிசைந்து கொள்ள அப்பிரகம் கரைந்து கீழே தெளிந்து நிற்கும். அதை எடுத்து உலரச் செய்து அதனுடன் ஆலம்பால், விழுது, முகிழ் சேர்த்து மைபோல் அரைத்து வில்லைகளாய்ச் செய்து வெயிலில் காயவைக்கவும். ஆவிலையின் பழுப்பையும் சேர்த்துக் கொள்ளவும்.

மூட்டியே சீலை செய்து யுறுதியாய்
கெசபு டந்தான் போட்டு வாங்கு
நாட்டியே மூன்றுதர மிரட்டையிலை யிட்டு
நயமாக யாறுபுட யிப்பிடியே போடு
நீட்டியே கற்றாழஞ் சாற்றி லாட்டி
நேராக மூன்றுதரம் புடத்தைப் போடு
தேற்றியே ஒரிதழ்த் தாமரையின் சாற்றில்
சிறக்கவே மூன்றுபுடம் போடு போடே! 102

பொ.ரை: வாய்க்குச் சீலைமண்செய்து வலுப்படுத்துவும். ஆயிரம் வறட்டியினைப் புடம் போட்டடுக்கி தக்க நேரங்கழித் தெடுக்கவும். மூன்று முறை மிரட்டியிலையைப் போட்டு ஆறு புடம் வைக்கவும். மறுபடியும் எடுத்துக் கற்றாழைச் சாற்றாலரைத்து மூன்று முறை புடம்போடவும். அதை ஓரிதழ்த்தாமரைச் சாற்றாலரைத்து மூன்று புடம் போடவும்.

போட்டதொரு அப்பிரக மெடுத்துப் பின்னும்
போகவெள் ளாட்டுநீர் தன்னி லிட்டு
மூட்டதொரு கையாலே பிசைந்து நீயும்
முழங்கவே கொடுப்பைதனை சமூலம் வாங்கி
கூட்டதொரு சட்டிக்குள் குறுகரிந்து போடு
குறையன்றி முச்சாம மெரிக்க பற்பம்
தீட்டதொரு நாவல்தோல் அத்தித் தோலும்
சிறப்பான வாதித்தோலு மரசன் தோலே! 103

பொ.ரை: அந்த அப்பிரகத்தை வெள்ளாட்டுச் சிறுநீரில் அரைத்துக் கையாலே பிசைந்து சட்டிக்குள் இடவும். கொடுப்பையின் சமூலத்தைக் குறுக்காக அரிந்து உடனிடவும். ஏற்றிய அடுப்பில் வைத்து ஒன்பது மணிநேரம் எரிக்க பற்பமாகும். நாவல்தோல் பட்டை, அத்திப்பட்டை, வேப்பம்பட்டை, அரசமரப் பட்டை ஆகியவற்றைச் சமமாய் எடுக்கவும்.

தோல்சமனாய் பெருக்கெல்லாஞ் சீவிப் போட்டு
துண்டுதுண்டாய் நொறுக்கியே சன்ன மாக்கி
தோல்சமனாய் நாற்குறுணி நீரில் போட்டு
சூலையி லெரித்து யெட்டொன் றாக்கி
தோல்சமனாய் வெந்தசலம் அப்பிரகத்தி லூற்றி
துவழாட்டி வில்லைகட்டி யுலர வைத்து
தோல்சமனாய் கெசபுடந்தான் போடு போடு
கொறைபோல் கொல்லருக்குக் கசாயம் வைய்யே! 104

பொ.ரை: பின் அவற்றின் மேற்றோலினைச் சீவி பின் துண்டுகளாய் நறுக்கி 20 லி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும். பட்டைகள் வெந்த பிறகெடுத்து அப்பிரகத்தில் ஊற்றி அரைத்து வில்லைகளாய்ச் செய்து உலரச் செய்யவும். அவற்றைச் சட்டியிலிட்டு ஆயிரம் வறட்டியின் அடுக்கில் புடம் வைத்தெரிக்கவும்.

கோலாக்கிக் கசாயத்தால் புடந்தான் பத்துக்
குமட்டியே வெந்தபின்பு சீனி வாழை
போலாக்குச் சட்டியிலே அடுப்பி லேற்று
பொறிமூன்று தீயுமிட்டுப் புகழ்ந்து கொண்டு

மாலாக்குங் கனகம்போல் பதமே பாரு
மைந்தனே பதமில்லா மருந்தென்ன செய்யும்
பாலாக்கும் பதமெது சலந்தான் வற்றில்
பாரமெல்லாங் காணாமல் நெய்பதமாங் காணே! 105

பொ.ரை: எரித்ததைக் குடிநீரிலிட்டுப் புடமாக்கவும், பத்து முறை அவ்வாறே செய்யவும். வேக வைத்தெடுத்துச் சர்க்கரை வாழை போலாக்கு. அவ்விழுதைச்சட்டியிலிட்டு தீபாக்கினி (1 விறகு), கமலாக்கினி ((2 விறகு), காடாக்கினி (3 விறகு) கொண்டு எரிக்க தங்கம் போல் பற்பமாகும். தண்ணீர்வற்றி நெய் பதமாகும்.

நெய்பதமாய் நிற்கையிலே செந்தூர மாகும்
நேராக வாறியபின் வைத்துக் கொண்டு
மெய்பதமா யனுபானஞ் சுரத்துக் கெல்லா
மீறாமல் சீனியிலே அரைமா வுட்டுச்
செய்பதமாய் செந்தூர மறையே வூட்டு
கடுஞ்சுரங்கள் சன்னிக்கு முருங்கைத் தோலே! 106

பொ.ரை: அப்பதத்தில் செந்தூரமாகும். ஆறிய பின் எடுத்துச் சுரங்களுக்கேற்ற அனுபானங்களுடன் கொடுக்கவும். சுரத்திற்குச் சீனி அரைப்பங்கும் செந்தூரம் அரைப்பங்கும் எடுத்துக் கலந்து கொடுக்கவும்.

முருங்கைத்தோல் கசாயத்தி லறைமா ஆட்டு
மூர்ச்சையுறுந் தோஷசுர மனைத்துந் தீரும்
முருங்கைத்தோல் பத்தியங்கேள் வெள்ளாட்டுப் பாலில்
மொளிகுறுணை யிட்டங்கே கஞ்சி காய்ச்சு
முருங்கைத்தோல் பனைவெல்லமிரு கழஞ்சு மிட்டு
மொறுமொலெனப் பொங்கவே குடிக்கச் சொல்லு
முருங்கைத்தோல் தாலத்திலுள்ள வியாதிக் கெல்லாம்
மூன்றுநாள் தேனிலே குன்றி யூட்டே! 107

பொ.ரை: முருங்கைப்பட்டைக் குடிநீரில் செந்தூரம் கொடுக்க மூர்ச்சையளிக்கும் தோடசுரம் அனைத்தும் நீங்கும். வெள்ளாட்டுப் பாலில் குருணையையிட்டு கஞ்சி யாகக் காய்ச்சிக்குடிக்கவும். முருங்கைப் பட்டையுடன்

பனைவெல்லத்தை 10 கி சேர்த்துப் பொங்க வைத்துக்கொடுக்கவும். 130 மி.கி. முருங்கைப் பட்டைச் சூரணத்தைத் தேனிலே கலந்து மூன்று நாட்கள் கொடுக்கவும். நோய் தீரும்.

ஊட்டுவா யரண்டுமாச் செந்தூரம் வாங்கி
உறநொச்சிச் சாற்றிலிடு அஷ்டகுன்மம் போகும்
நாட்டுவார் உதரத்தில் கட்டி போக
நறுநெய்யை சேர்த்துநீ யுண்ணச் சொல்லு
நீட்டுவாய் நீரிழிவு போக வென்றால்
நிறுத்தொரு மாச்செந்தூரம் தேனி லூட்டு
மாட்டுவாய் காச சுவாசம் போக
மைந்தனே செந்தூரம் காணி போடே! 108

பொ.ரை: இவ்வப்பிரகச் செந்தூரத்தை நொச்சிச் சாற்றிலுண்ண எட்டு வகைக் குன்மம் தீரும். நெய்யில் கலந்து கொடுக்க வயிற்றுக்கட்டியும் தேனில் கலந்து உண்ண நீரிழிவும் பொன்னாங்காணிச் சாற்றிலிட காசசுவாசமும் குணமாகும்.

காணியோடு நெய்யிலே சயரோகம் போகும்
காசசுவாசம் போகும் வறட்சி போகும்
ஊணிவிடு வலிகுன்மம் போக வென்றால்
உத்தமனே சுக்குவெந்த சலத்தி னுள்ளே
பேணியிடுஞ் செந்தூர ஒறுமா நீயும்
பேரான இரச பற்பம்தான் தூக்கி
நீணியிடு அட்டகுன்மம் பறந்து போகும்
நேராய் பத்தியத்தை நீகே ளப்பா
நாணியிடும் பிரமகுலத் துதித்தோர்க் கெல்லாம்
நலமான துவரையாம் தூதளங்கா யாமே! 109

பொ.ரை: பொன்னாங்காணி நெய்யிலே கலந்தளிக்க சயநோய், காசசுவாசம், வறட்சி ஆகியவை தீரும். சுக்குக்குடி நீரில் கலந்தளிக்க வலி குன்மம் தீரும். இரசபற்பத்தைச் செந்தூரத்துடன் சேர்த்து சுக்குக்குடி நீரில் உண்ண எட்டு வகைக் குன்மம் குணமாகும். பத்தியத்தைக் கேட்பாயாக! துவரையையும் தூதுளங்காயையும் உட்கொள்ளலாம்.

லோக செந்தூரம்

ஆமப்பா மாங்கிசங்க ளான பேர்க்கு
ஆட்டுவற்றல் முயலிறைச்சி வேது கேளு
சாமப்பா சலக்கழிச்ச லனைத்தும் போக
சாற்றுகிறேன் லோகமென்ற செந்தூரம் தன்னை
நாமப்பா கண்டபடி சுருக்கங் கேளு
நல்லபழச் சாற்றிலரைப் பொடியாப் போடே! 110

பொ.ரை: அசைவ உணவு உட்கொள்வோர்க்கு ஆட்டிறைச்சியினை வற்றலாகச் செய்ததும் முயலிறைச்சியினை வேக வைத்ததும் ஆகும். சலக்கழிச்சல் அனைத்தும் தீருவதற்கு லோக செந்தூரத்தைச் சுருக்கமாக உரைக்கிறேன். எலுமிச்சம் பழச்சாற்றில் அரப்பொடியை ஊறவைக்கவும்.

போட்டதனைக் கழுவியே ரவியில் போடு
புகழாக யுலர்ந்தபின்பு நாவல் பட்டை
ஆட்டதனைப் பிழிந்திந்த அரைப்பொடி யாக
அப்பனே சுவரமட்டும் ரவியில் போடு
நாட்டதனை மூன்றுதர மிப்படியே செய்ய
நலமான செந்தூர மாகும் பாரு
கூட்டதனை ஆவிரையின் விரைதூ ளாட்டி
கோதன்றி சீலைவடி கொண்டி டாயே! 111

பொ.ரை: சிறிது நேரத்தில் கழுவியெடுத்து வெயிலில் வைக்கவும். நன்கு உலறிய பின் நாவல் பட்டைச் சாற்றைச் சேர்த்து ஊறவைக்கவும். நன்கு உலருமட்டும் வெயிலில் வைக்கவும், இவ்வாறு மூன்று முறை மாறி மாறிச்செய்ய செந்தூரமாகும். ஆவாரையின் விதையைத் தூளாகச் செய்து தூய்மையான துணியில் வடிகட்டிக்கொள்ளவும்.

வடிகொண்ட தூளிலே வராகன் மூன்று
மகத்தான செந்தூரம் பணந்தான் மூன்று
வடிகொண்ட தேனினோடு கசாயத் தூட்டு
மைந்தனே கசாயத்தின் மருந்து கேளு
வடிகொண்ட கடல்மணியும் வெள்ளுள்ளி கடுக்காய்
வசம்பு தேற்றன் சுக்கோ டாறு மாக

வடிகொண்டு யெட்டொன்றாய் காய்ச்சிக் கொள்ளு
மைந்தனே கிராணிக்குக் கசாயங் கேளே. 112

பொ.ரை: வடிகட்டிய சூரணத்தில் 12 கி, 1 ½ கி அப்பிரகச் செந்தூரம் இவற்றைத் தேவையானஅளவு தேனுடன் கலந்து கொடுக்கவும். உடன் சேரும் குடிநீருக்கான மருந்து வருமாறு. கடல் மணி, வெள்ளுள்ளி, கடுக்காய், வசம்பு, தேற்றான், சுக்கு ஆகிய இவ்வாறையும் சேர்த்துத் தண்ணீரூற்றி எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சிக்கொள்ளவும். கிராணிக்கான குடிநீர் வருமாறு.

கேளப்பா சலக்கழிச்சல் தீரு தற்கே
கெடியான கடலாஞ்சிப் பட்டை தானும்
நாளப்பா மூன்றே முக்கா லாகும்
நலமான ஆவரைத்தோல் மூன்றே முக்கால்
நீளப்பா மஞ்சு கருங்காலிப் பட்டை
நேரஞ்சு பலந்தூக்கி கூட்டது சமூலம்
தாளப்பா கடுக்காய்தான் பலநா லாகும்
தான்றிக்காய் பதினஞ்சு வாங்கே! 113

பொ.ரை: சலக்கழிச்சல் தீருவதற்கான குடிநீர் கடலழிஞ்சிப் பட்டை மூன்றே முக்கால் பகுதியாகவும் ஆவாரைப்பட்டை மூன்றே முக்கால் பகுதியாகவும் எடுத்துக் கொள்ளவும். கருங்காலிப் பட்டை 175 கி, கடுக்காய் 140 கி, தான்றிக்காய் பதினைந்து எண்ணிக்கைகள் சேர்க்கவும்.

தகர்த்திடுவா யிரண்டரைதான் வராக னப்பா
சாதிக்கா யிவைசேர்த்துத் தூளா யாட்டி
தகர்த்திடுவா யிருநாழி சலத்தில் காய்ச்சி
சார்வாக யெட்டொன்றாய்க் குறுக்கி நன்றாய்
தகர்த்திடுவாய் சலக்கழிச்சல் மாறும் மாறும்
தலைமுழுகத் தயிலமொன்று சாற்றக் கேளே 114

பொ.ரை: 9 கி சாதிக்காயையும் மேற்கூறிய சரக்குகளுடன் சேர்த்திடித்துத் தூளாக்கி 2.6 லி தண்ணீரிலிட்டுக் காய்ச்சி, எட்டொன்றாய்க் குறுக்கிக் குடிநீராய் அளவுடன் குடிக்க சலக்கழிச்சல் தீரும். தலை குளிக்கத் தைலமொன்றின் செய்முறை வருமாறு.

மதுனாதித் தைலம்

சாற்றக்கேள் மதுனாதித் தயில மொன்று
தபோதரைக ளிட்டதொரு சாபந் தீர்த்து
சாற்றக்கேள் சிறுகீரை பொன்னாங் காணி
தனிகுப்பை விரையிலையுந் தாமரையின் வளையம்
சாற்றக்கேள் முட்டாழை விழுதுங் கூடச்
சமபாக மிடித்ததனைப் பதக்கு தண்ணீர்
சாற்றக்கேள் வொன்றாகக் குறுக்கி வாங்கி
தயிர்போலே பிழிந்துவைத்துப் பின்பு கேளே! 115

பொ.ரை: சிறுகீரை, பொன்னாங்காணி, குப்பைமேனி விதை, தாமரை வளையம், தாழைவிழுது, இவற்றைச் சமமாக எடுத்திடித்து 10.7 லி தண்ணீருள்ள பாத்திரத்திலிட்டு கொதிக்க வைத்துக் குறுக்கிக் கொள்ளவும். பின் அதனின்று சரக்குகளைப் பிழிந்து தயிர் போன்று கலவையைத் தனியே வைக்கவும்.

கேளப்பா வெட்டிவேர் பலமஞ் சாகும்
கெடியான யிலாம்பிச்சு பலந்தா னஞ்சு
நாளப்பா சந்தனமும் பலந்தா னஞ்சு
நலமான ரெண்டுபலஞ் செங்கழுநீர் மூலம்
தாளப்பா யிவையெல்லாம் செவ்விளநீர் விட்டு
சாதகமாய் அனல்போலே ஆட்டி வாங்கி
நீளப்பா முக்குறுணி சலத்தில் சேர்த்து
நெருப்பெரித்து யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கே! 116

பொ.ரை: வெட்டிவேர், இலாமிச்சு, சந்தனம் வகைக்கு 175 கி., 70 கி. செங்கழுநீர் வேர் இவற்றைச் செவ்விளநீர் ஊற்றி அரைத்துக் கொள்ளவும். மைய அரைத்த விழுதை 16.5 லி தண்ணீரில் போட்டு அடுப்பிலிட்டு எரித்து எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும்.

வாங்கிநீ முந்தின கசாயத் தூட்டி
மைந்தனே மென்மருந்தை மாட்டக் கேளு
பாங்கியே யிலவங்க மேலங் கோஷ்டம்
பருமதுரஞ் செண்பகப்பூ சாதிப் பத்திரி

சாங்கியே மஞ்சிட்டி சிறுநாவல் கல்நார்
சாதிக்காய் சடாமாஞ்சி கிராம்பு சீரகமும்
வாங்கிமாஞ் சிகையுங் கூகை நீறு
முத்தமனே வகையொன்று கழஞ்சி யொன்றே! 117

பொ.ரை: இக்குடிநீரை மேற்சொன்ன குடிநீருடன் சேர்க்கவும். இலவங்கம், ஏலம், கோட்டம், அதிமதுரம், செண்பகப்பூ, சாதிபத்திரி, மஞ்சிட்டி, சிறுநாவல், கல்நார், சாதிக்காய், சடாமாஞ்சில், கிராம்பு, சீரகம், கூகைநீறு இவற்றை வகைக்கு 5 கி எடுக்கவும்.

ஒன்றாக மருந்தெல்லாம் பிரட்டி வாங்கி
உருகவே முன்வைத்த கசாயத் தூட்டு
நன்றாக நல்லெண்ணெய் படியும் விட்டு
நயினார்க்குப் பூசைசெய்து வடித்துப் பின்பு
குன்றாக கற்பூரம் புழுகு சட்டம்
கோரோசனையு மிரண்டு பணந்தான் சேர்த்து
பொன்றாக தயிலம்விட்டு சீயக்காய் சேர்த்து
புகழாக முழுகிவர புதுமை கேளே. 118

பொ.ரை: மேற்சொன்ன சரக்குகளைப் பொடித்துக் குடிநீரிலிடவும். 1.3 லி நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பிலிட்டுக் கொதிக்க வைத்து எண்ணெய்ப் பக்குவத்தில் வடித்துப் பூசை செய்திறக்கவும். கற்பூரம், புனுகுசட்டம், கோரோசினை இவற்றை வகைக்கு 976 மி.கி. சேர்த்துத் தைலத்தை இறக்கவும். இத் தைலத்தைத் தலையிலிட்டுத் தேய்த்து சிகைக்காயினால் தலை குளிக்கவும்.

புதுமையென்ற மேகங்க ளிரண்டு பத்தும்
பொரிவிழுந்த கருமருந்து போலே வேகும்
பதுமையென்ற வுருவம்போல் வாகடங்கள் சொன்னார்
பண்டிதர்க ளறியாமல் பளிகை கொண்டார்
கதுமையென்ற தொழிலெல்லாம் சூத்திரத்தில் சொன்னேன்
கண்கெட்ட குருட்டுக்குங் காணும் காணும்
கோதுமையென்ற பூபதியைக் கேளு கேளு
கோடான கோடிபிணி தீருந் தானே! 119

பொ.ரை: இருபது வகை மேகநோய்கள் குணமாகும். பல மருந்துகளை வைத்தியர்கள் மறைபொருளாகவும் தெளிவாகவும் இயம்பியுள்ளனர். வெளிப்படையாகவும் உள்ளது. குருடர்களும் அறியும் வண்ணம் உள்ளது. பல நோய்களைத் தீர்க்கும் பூபதி மாத்திரை செய்முறை வருமாறு.

பூபதி மாத்திரை

தானென்ற தாமிரமது பலந்தான் ரெண்டு
 தகடுவெகு லேசாகத் தட்டி வாங்கி
தானென்ற புளியிலைச்சாற் குள்ளே போட்டு
 சாதகமாய்க் கொதிப்பித்து எடுத்துக்கொண்டு
தானென்ற கெந்திரண்டு பலந்தான் வாங்கி
 தயவாக எருக்கிலையின் பால்விட்டு ஆட்டி
தானென்ற தகட்டிலே யிருபுறமும் பூசி
 தயவாக ரவியிலே உலர்த்தி வாங்கே! 120

பொ.ரை: 70 கி. தாமிரத்தை எடுத்து இலேசான தகடாகத்தட்டி எடுக்கவும். புளியிலைச் சாற்றிலிட்டு அடுப்பில் வைத்தெரித்துக் கொதிக்க வைத்து எடுக்க. 70 கி. கெந்தகத்தை எருக்கம் பாலூற்றி அரைத்து அவ்விழுதைத் தாமிரத் தகட்டின் இருபுறமும் பூசி வெய்யிலில் உலரச் செய்யவும்.

வாங்கியந்த தகடுதன்னை சிறுசட்டிக் குள்ளே
 மாட்டியே மேற்சட்டி கொண்டு மூடி
தாங்கியந்தச் சட்டிக்குச் சீலை செய்து
 சாதகமாய் மண்செய்து யிருசாண் மட்டுத்
தேங்கியே யெருவடுக்கிச் சட்டிதனை வைத்து
 திரும்பவொரு முழுஉயரம் எருவ டுக்கிப்
பாங்கியந்த அனலூட்டி எரித்து வாரி
 பார்மகனே செந்தூரம் பற்ப மாமே! 121

பொ.ரை: உலர்ந்த தகட்டினைச் சிறிய சட்டிக்குள் வைத்து அதற்குப் பொருத்தமானசட்டியை மேலேமூடி வாய்க்குச் சீலை மண் செய்யவும். இரு சாண் அளவுக்கு எருவடுக்கி அதன் மீது

சட்டியை வைத்து அதன் மீது முழுஉயர அளவு எருவினை அடுக்கி எரியூட்டவும். தக்க நேரங்கழித்தெடுத்துப் பார்க்க செந்தூரமாகும்.

பற்பமென்ற தாமிரத்தைத் தூளா யாட்டி
பாய்ச்சடா சமபாகம் சூதம் கெந்தி
அற்பமென்று யெண்ணாதே செருப்படிச்சாற் விட்டு
ஆட்டியே குகையிட்டு மண்ணும் செய்து
சிற்பமென்று முன்போலே புடத்தைப் போடு
சிவசிவா ஆறவிட் டெடுத்துக் கொண்டு
சொற்பமென்றோ யெட்டிலொன்று நாவி கூட்டி
சேராமல் நாலிலொன்று மிளகு கூட்டே! 122

பொ.ரை: தாமிர பற்பத்தைத் தூளாக்கி அதற்குச் சமபாகம் சூதம், கெந்தகம் எடுத்து செருப்படிச்சாறு ஊற்றி அரைக்கவும். குகை ஒன்றினைச் செய்து அதற்குள்ளிட்டுப் புடம் போட்டெரித்து ஆறவிட்டெடுத்துக் கொள்ளவும். அவ்வெடையில் எட்டிலொரு பங்கு நாவியையும் நான்கிலொரு பங்கு மிளகையும் சேர்க்கவும்.

மிளகிட்டு கொடிவேலி வேரு வாங்கி
வெந்ததொரு கசாயமிட்டு ஆட்டு ஆட்டு
மிளகிட்டு யிருமாவுங் கழித்த பின்பு
விதமாக குன்றியெடை குளிகை கட்டி
மிளகிட்டு குகையிலிட்டு மண்ணும் செய்து
நெல்லுக்குள்ளே வைத்து வொரு திங்கள்
பளகிட்டு நோய்க்கெல்லாம் அனுபானந் தன்னை
பாடுகிறேன் பண்டிதரே பார்த்தி டீரே! 123

பொ.ரை: கொடிவேலி வேர், ஆகியவற்றில் குடிநீர் காய்ச்சி பற்பத்தை அரைக்கவும். விழுதை 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாகச் செய்து மண்ணிலான குகையை அமைத்து அதனுள் குளிகைகளை வைத்து நெல்லிற்குள் ஒரு மாதம் புதைத்துப் பின் நோய்களுக்கேற்றவாறு அனுபானங்களை மாற்றி அளிக்கவும்.

பார்த்திடவே திப்பிலித்தூள் பணந்தா னொன்று
பாய்ச்சடா பூபதியாம் உண்டை யொன்று
சேர்த்திடவே பதிமூன்று சன்னி போகும்
சோறாதா குளிர்ச்சிச்சார் திறமாய் நீயும்
கார்த்திடவே கொடிவேலி கசாயத் தூட்டு
கடுசுறுக்கு பதினெட்டு சூலை தீரும்
கோர்த்திடவே திரிகடுகு வெந்நீரில் ஆட்டி
கொடுத்தவுடன் சுரமனைத்தும் கூசிப் போமே! 124

பொ.ரை: 488 மி.கி. திப்பிலித்தூளுடன் பூபதியாம் உருண்டையைச் சேர்த்துக் கொடுக்க பதின்மூன்று வகைச் சன்னி குணமாகும். குளிர்ச்சி நீங்க கொடிவேலிக் குடிநீரில் உருண்டையை உரைத்துக் கொடுக்கவும். சுருக்கு, பதினெட்டு வகைச் சூலை தீரும். திரிகடுகுக் குடிநீரில் அதே உருண்டையைக் கொடுக்க சுரமனைத்தும் குணமாகும்.

கூசிப்போம் அஷ்டகுன்மம் தேனி லூட்டு
குலாவியதோர் சயரோகம் கும்பிட்டு ஓடும்
பேசிப்போம் பவுத்திரமும் கரப்பான் புண்ணு
பிரண்டுவரும் குத்துமுதல் பிறகெட் டோடும்
மாசிப்போ மென்றுநினை வாகித் தென்றால்
மைந்தனே யிந்தநூல் வாசிப் பாயே! 125

பொ.ரை: அட்டகுன்மத்திற்குத் தேனில் கொடுக்கவும். சயநோய், பவுத்திரம், கரப்பான், புண்வகைகள், குத்து முதல் பிறநோய் வகைகள் ஆகியவை பூபதி உருண்டையைத் தேனில் இழைத்துக் கொடுக்க குணமாகும்.

கெந்தகத் தைலம்

வாசிக்கும் கெந்திதன்னைத் தயிலம் வாங்க
வகைகேளும் புலத்தியனே மச்ச கேந்திர
நேசிக்கும் கெந்தியொரு பலந்தான் மூன்று
நிறுவிகற்பம் சூதமஞ்சு லிங்கமே மூன்று
ஆசிக்கும் கெவுரியும் மூன்று தூக்கும்
அரிதாரம் ஒருமூன்று சிலைதான் மூன்று

பூசிக்கும் ஆயிமுதல் நிறுவா ணிக்கும்
புகழாக வாமத்தில் பூசிப் பாயே! 126

பொ.ரை: கெந்தகம் 105 கி, சூதம் 175 கி, இலிங்கம் 105 கி, கௌரி 5.1 கி.கி, அரிதாரம் 105 கி, மனோசிலை 105 கி, எடுக்கவும்.

பூசித்து மஞ்சளிலே தயிலம் வாங்கி
புகட்டிநீ மருந்தெல்லாம் மயனம் போல
பூசித்து யெட்டுநாள் ஆட்டி வாங்கி
புகழாகப் பரணியிலே போட்டு மைந்தா
பூசித்து பரணிக்குள் வளப்பக் கல்லால்
பொருந்திநீ அடைத்தங்கே சந்து வாங்கு
பூசித்து சுறணசோறும் கூட பொங்கி
நின்றயுமி கறியும் ஆட்டி வாங்கே! 127

பொ.ரை: மஞ்சளினால் தைலத்தை அமைத்துக்கொள்ளவும். மேற்குறிப்பிட்ட மருந்து சரக்குகளைச் சேர்த்தரைத்து மை போல எட்டுநாள் அரைத்து அவ்விழுதைப் பரணிக்குள் வைத்து மேலே வளப்பக்கல்லினைக் கொண்டு மூடவும். சோறு வேக வைத்து உமிக்கறியையும் சேர்த்து அரைக்கவும்.

வாங்கியதோர் மருந்துதன்னைச் சீலையி லூட்டி
வாகாக சந்துவாய் அடைத்துச் சுற்றி
வாங்கியதோர் பரணிதன்னை அதுமேலே வைத்து
மைந்தனே ஆறுதிங்கள் தாண்டி வாங்கே 128

பொ.ரை: அரைத்த விழுதைச் சீலையில் ஏற்றி பரணியின் வாயைச் சுற்றி மூடவும். ஆறு மாதங்கள் அவ்வாறே வைக்கவும்.

ஆறுதிங்கள் சென்றபின்பு திறந்து பார்க்க
அப்பனே நீலவர்ணம் தயில மாகும்
வேறுதுணை யொன்றுமில்லை தயிலம் கொள்ளா
வேதாந்தத் தாயெனக்கு விருத்திச் சொன்னாள்
ஆறுவித மூன்றப்பா தயில மாச்சு
மகத்தான தயிலமிது மரண மில்லை
ஏறுவிதம் வியாதிகளுக்கு அனுபா னந்தான்
என்மகனே மஞ்சள்சா றெடுத்தி டாயே! 129

பொ.ரை: அக்காலம் கழித்துப் பார்க்க உள்ளே நீலவர்ணத் தைலம் இருக்கும். இத்தைலம் பல நோய்களைத் தீர்க்கும் என்று வேதாந்தத்தாய் எனக்குக் கூறியிருக்கிறாள். மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம். மஞ்சள் சாற்றினை அனுபானமாய்க் கொண்டு பல வியாதிகளை நீக்கலாம்.

வியாதிகளுக்கு அனுபானம்

மஞ்சள்சா றூட்டுமகோ தரங்கள் தீரும்
அழகான நிம்பைச்சாற்றி லிடகுறைநோய் தீரும்
மிஞ்சாமல் வெருகம்வேர்த் தயிலம் வாங்கி
வேதித்துக் கொடுத்திடவே குட்டம் தீரும்
அஞ்சாமல் சீனியிலே கொள்ளச் சொல்லு
அப்பனே தாதுவெல்லாம் அமிர்த மூறும்
துஞ்சாமல் சாதிக்காய் பத்திரித் தூளில்
தேன்விட்டுத் தயிலமது மூட்டு மூட்டே! 130

பொ.ரை: மஞ்சள் சாற்றில் சேர்த்துக் கொடுக்க மகோ தரங்களும் எலுமிச்சம் பழச்சாற்றில் அளிக்க குறைநோயும் வெருகம் வேர்த்தைலத்தைச் சூடாக்கி சேர்த்துக் கொடுக்க குட்டமும் தீரும். சர்க்கரையில் சேர்த்துக் கொடுக்க தாது விருத்தியாகும். சாதிக்காய், சாதிபத்திரி சூரணத்துடன் தேனைச் சேர்த்துத் தைலத்தைக் கலக்கவும்.

ஊட்டியுண்ண தாதுவெல்லாம் பெருத்து நிற்கும்
உத்தமனே கொடிவேலித் தயிலம் வாங்கி
கூட்டியுண்ண கடுவிடம் தீரும் தீரும்
கொண்டஅன்னம் செரியாட்டால் திரிகடுகி லூட்டு
ஒட்டிவிடும் பித்தமெல்லாம் தீர வென்றால்
மைந்தனே வேறுநீச்சு தண்ணீர் ஆகும்
வீட்டில்வளர் சிறுகீரை வெந்த நீரில்
வேதித்துக் கொடுத்திடவே மேகம் போமே! 131

பொ.ரை: கலந்ததை அளிக்க தாது விருத்தியாகும். கொடிவேலித் தைலத்தைச் சேர்த்தளிக்க கடுமையான விடம் தீரும். செரியாமை ஏற்பட்டு உணவு செரிக்க வில்லையானால்

சுக்கு, மிளகு, திப்பிலி, சூரணத்தில் கொடுக்கவும். நீராகாரத்தில் கலந்தளிக்க பித்தம் தீரும். சிறுகீரைக் குடிநீரில் தைலத்தைக் கலந்து கொடுக்க மேகம் தீரும்.

மேகம்போம் தயிலம் குடவனி லூட்ட
மேவிநின்ற கரும்பத்து சொர்ன்ன மாகும்
மேகம்போம் லோகங்கள் பொன்னு மாகும்
வெள்ளிசெம்பு யிருவகையும் பொன்னு மாகும்
மேகம்போம் யிக்கருவை வெளிவி டாதே
வேதையாம் காயசித்தி நோயும் தீரும்
மேகம்போம் சூதசெந் தூரம் கேளும்
விபரமுடன் புலத்தியனே விரும்பி நீயே! 132

பொ.ரை: ஒரே கொட்டையுள்ள காயாகிய குடவனில் தைலத்தை அளிக்க கரும்பொன்னாகிய இரும்பு தங்கமாகும். இரும்பு, வெள்ளி,செம்பு போன்ற உலோகங்கள் தங்கமாகும். இதனை எங்கும் கூறாதே. வாதவேதைக்குப் பயன்படும் இத்தைலம் காய கற்பமாகவும் விளங்கி நோயை நீக்கும். சூத செந்தூரம் செய்முறை வருமாறு.

சூத செந்தூரம்

விரும்பிக்கேள் சூதமொன்று கெந்தி ரெண்டு
மீறாமல் கருந்துளசி சாற்றி லாட்டி
விரும்பிக்கேள் ரெண்டுதினம் குப்பிக் கேற்றி
விபரமுடன் சீலைமண் ணேழு செய்து
விரும்பிக்கேள் குப்பினுட வாய்க்குத்தான்
வெண்ணுப்பு பச்சைமண்ணு உப்புங் கூட்டி
விரும்பிக்கேள் ஆட்டியதை விறத்தப்போற் றிறந்து
மேல்வாய்க்கு ளுலர்த்திநன்றாய் வைத்தி டாயே! 133

பொ.ரை: சூதம் ஒரு பங்கு, கெந்தகம் இரண்டு பங்கு, எடுத்துக் கருந்துளசிச் சாற்றாலரைத்து இரண்டு நாட்கள் குப்பிக்குள் வைக்கவும். குப்பியின் வாய்க்குச் சீலை மண் செய்ய உப்பையும் மண்ணையும் சேர்த்தரைக்கவும். அவ்விழுதை குப்பியின்வாய்க்குப் பொருந்தி வைக்க.

வைத்திட்டு அடிகனத்த பானைத் தூரில்
மைந்தனே தமரிட்டு மணலைக் கொட்டி
வைத்திட்டு விரகனந்தா னாவ தாக
வாகாக அதின்மேலே அடுப்பி லேற்று
வைத்திட்டுக் குப்பிக்குக் கழுத்து மட்டு
மணற்சொரிந்து சூட்டடுப்பில் வைத்தி டாய்நீ
வைத்திட்ட மந்தமாக் கினியை மூட்டி
மைந்தனே ரெண்டுபத்து சாம மாட்டே! 134

பொ.ரை: அடிகனமாக உள்ள பானையின் அடியில் சிறிய துளையிட்டு மணலை விரல்கன அளவுக்குக் கொட்டுக. அதன்மீது மேற்சொன்ன குப்பியை வைத்து அதன் கழுத்தளவிற்கு மணலினைக் கொட்டி சூட்டடுப்பின்மீது வைக்கவும். அனலினை மெதுவாக இட்டு அறுபது மணிநேரம் எரிக்கவும்.

மாட்டடா காடாக்கினியைப் பத்து சாமம்
வளமாகச் செந்தூர மாகும் பாரு
நீட்டடா ஆறியபின் னிறக்கிப் பாரு
நிறமிந்திர கோபம்போல் கடுஞ்சிவப்பு மாகி
வாட்டடா அதையனலிட் டிறக்கும் போது
வாய்க்குப் பூசைநன்றாய் வைத்து நீயும்
ஊட்டடா அனுபானத் துறையோ டொக்க
ஒவ்வொன்றாய்ச் சொல்லுகிறே னூன்றிக் கேளே! 135

பொ.ரை: மூன்று விறகினால் முப்பது மணிநேர மெரித்துப் பின் ஆறியதும் எடுத்துப் பார்க்க இந்திரகோபப் பூச்சிபோல் கருஞ்சிவப்பாகும். அதனை வைத்து இறைவணக்கம் செய்து தக்க அனுபானங்களுக்கேற்றவாறு பயன்படுத்தவும் அவை வருமாறு.

கேளப்பா பொரிமாவிற் செந்தூரம் பணந்தான்
கெடியாக உண்டிடவே சத்திசுரம் போகும்
நாளப்பா உள்காய்ச்சல் போக வென்றால்
நயமான முன்பொடியி லூட்டு வூட்டு
தாளப்பா சர்க்கரையிற் றாபசுரம் தீரும்
சயகாசந் தீரவென்றால் இஞ்சிச் சாற்றில்

வாளப்பா சாத்தியமாஞ் சுரங்கள் மாறல்
மாற்றவென்றால் நொச்சிச்சார்க் குள்ளே யூட்டே! 136

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தைப் பொரிமாவிற் கலந்து கொடுக்க சத்திசுரம், உள்காய்ச்சல் தீரும். சர்க்கரையிற் கலந்து உட்கொள்ள தாபசுரமும் இஞ்சிச்சாற்றில் கொள்ள சயகாசமும் நொச்சிச்சாற்றில் எடுக்க மாறல் சுரமும் குணமாகும்.

ஊட்டுவாய் வயிற்றாலே சீதம் வீழில்
உத்தரிக்கச் சோம்பலிலே ஊட்டு மைந்தா
நீட்டுவாய் அட்டகுன்மம் போக வென்றால்
நேரான கொடிவேலி கசாயத் தூட்டு
ஊட்டுவாய் சன்னிவகை யெறிய வென்றால்
உற்றறி சமூலக் கசாயத்தி லூட்டு
நாட்டுவாய் திரிதோசம் போக வென்றால்
நலமான திசமூலக் கசாயத் தூட்டே! 137

பொ.ரை: வயிற்றில் தொல்லையேற்பட்டு சீதம் விழல், எட்டு வகைக் குன்மம் இவற்றிற்குக் கொடிவேலிக்குடி நீரில் செந்தூரத்தைக் கொடுக்கவும். பலவகைச் சன்னிகள் குணமாக கொடிவேலி சமூலக் குடிநீரில் அளிக்கவும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி, வில்வம், பெருங்குமிழ், தழுதாழை பாதிரி, வாகை ஆகியவற்றினாலான குடிநீரில் கொடுக்க திரி தோடம் தீரும்.

கசாயமிட்டு அரோசிசுரம் போக வென்றால்
கடுஞ்சுக்கு நெல்லுமிவை சமன்வ றுத்து
கசாயமிட்டு யிவைரண்டுங் கூட்டி யூட்டு
கணங்கொண்ட பவுத்திரங்கள் போக வென்றால்
கசாயமிட்டு அமுக்கிராக் கிழங்கு வெந்து
கன்னிக்கு கெர்ப்பவிப் புருதி யானால்
கசாயமிட்டுத் தோடைநீர் தன்னில் நீயுங்
கரிப்பானு மிளகுநன்றா யரைத்தி டாயே! 138

பொ.ரை: சுக்கு, நெல் இவற்றைச் சமமாக எடுத்து வறுத்துக் குடிநீராக்கிச் செந்தூரத்தைக் கலந்து கொடுக்க அரோசிகசுரம் தீரும். துன்பம் கொடுக்கும் பவுத்திரத்திற்கு அமுக்கிராக்கிழங்கு

வேகவைத்த குடிநீரிலும் கர்ப்பவிப்புருதிக்கு ஆடாதோடைக் குடிநீரிலும் கொடுக்க குணமாகும்.

அரைத்ததொரு மருந்துடனே செந்தூரம் சேர்த்து
அறிந்திடவே அஞ்சுவகைப் பாண்டு தீரும்
இறைந்ததொரு பதினெட்டு வாதம் போகு
மேரண்டத் தயிலத்தி லூட்டு வூட்டு
நிறைந்ததொரு அறுமூலம் போக வென்றால்
நேர்ச்சாரணைச் சாற்றி லுண்ணப் போகும்
மரைத்ததொரு பயித்திரண்டு மேகம் போகும்
பருத்திவித்தைத் தயிலத்தில் பாய்ச்சு பாய்ச்சே! 139

பொ.ரை: கரிசாலை, மிளகினை அரைத்துச் செந்தூரத்தை உடன் சேர்த்துக் கொடுக்க ஐந்துவகைப் பாண்டும் ஏரண்டம் எனும் சிற்றாமணக்குத் தைலத்தில் கொடுக்க பதினெட்டு வகை வாதமும் தீரும். ஆறுவகை மூலத்திற்குச் சாரணைச்சாற்றிலும் இருபத்தொரு வகை மேகத்திற்குப் பருத்தி விதைத் தைலத்திலும் கொடுக்கத் தீரும்.

காதுக்குச் சயகுலாந்தகச் செந்தூரம்

பாய்ச்சப்பா காதுரண்டுங் கேளா தாகில்
பன்றிமுள்ளை புங்கெண்ணெய் கொண்டு வாட்டி
பாய்ச்சப்பா காதிலே யடைத்து காற்றுப்
படாமலே பஞ்சுகொண்ட டைத்து நன்றாய்
பாய்ச்சப்பா வீட்டிலே மஞ்சி யோரம்
பாங்காக மூன்றுநா ளிருக்கக் கேளு
பாய்ச்சப்பா வயித்தியங்க ளின்ன முண்டு
பார்த்ததெல்லாஞ் சுருக்கியதிற் பாடி னேனே! 140

பொ.ரை: முள்ளம் பன்றியின் முற்களைப் புங்கெண்ணெய் ஊற்றி வாட்டி அதில் வரும் எண்ணெயைக் காதிலே சிலதுளிகள் விட்டு காற்றுபடாது பஞ்சினை வைத்து அடைக்கவும். எங்கும் வெளியே செல்லாது வீட்டிலேயே மூன்று நாள் இருக்கவும். வைத்தியங்கள் இன்னுமுண்டு. உள்ளவற்றில் சுருக்கிப் பாடி யுள்ளேன்.

பாடுகிறேன் சிலேற்பனந்தான் தொண்ணூற் றாறும்
பற்றறுக சயகுலாந் தகனைக் கேளு
கோடுகிறேன் காட்சியிலே சொன்ன தெல்லாம்
கொடுஞ்சுறுக்கு கொடுஞ்சுறுக்கு கூர்ந்து காணு
நாடுகிறேன் அரிதாரம் பலந்தா னொன்று
நலமான சிலாசத்து பலந்தா னொன்று
நீடுகிறேன் செம்பருத்திச் சாற்றில் நீயும்
நேராக மூன்றுநா ளாட்டி வாங்கே! 141

பொ.ரை: தொண்ணூற்றாறுவகைச் சிலேற்பனங்கள் தீர்வதற்குரிய சயகுலாந்தகச் செந்தூரம் வருமாறு. அரிதாரம் 35 கி, சிலாசத்து 35 கி எடுத்துச் செம்பருத்திச் சாறூற்றி மூன்று நாள் தொடர்ந்து அரைத்துக் கொள்ளவும்.

வாங்கியதைக் குகையிலிட்டு மண்ணுஞ் செய்து
மண்கனத்த சிறுதாளி கொண்டு வந்து
வாங்கியதைத் தமரிட்டு மணலைக் கொட்டி
மைந்தனே மணல் மேலே குகையை வைத்து
வாங்கியே மணல்கொட்டி சட்டி மூடி
வாகாக அடுப்பிலே வைத்து நன்றாய்
வாங்கியே யேழுதிர மதியவன்னி யாட்டி
மாட்டியே ஆறவிட்டு இறக்கிப் பாரே! 142

பொ.ரை: அரைத்த விழுதை மண்ணினாலான குகையைச் செய்து அதற்குள்ளிடுக. சிறுதாளியில் துளையை இட்டு மணலைக் கொட்டி அதன் மேலே அக்குகையைவைத்துச் சுற்றிலும் மணலைக் கொட்டுக. பின் குகையின் மீது சட்டியினை மூடுக. அடுப்பிலிட்டு ஏழுமுறை வன்னி விறகினால் எரித்து தக்க நேரங்கழித்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்கவும்.

பார்க்கையிலே தேவிக்குப் பூசை செய்து
பார்பவழ இந்திர கோபம் போலாம்
சேர்க்கையிலே பணவிடைதான் வல்லிச் சாற்றில்
செலுத்தினாற் சயகாசந் தீரும் தீரும்
தீர்க்கையிலே சிலேற்பனத்தின் வாத மானால்
தென்னம்பட்டை சாற்றிலிடத் தீர்ந்து போமே! 143

பொ.ரை: செந்தூரத்தை எடுத்து தேவியின் முன்வைத்துப் பூசைசெய்க. பவழம் இந்திரகோபப்பூச்சியின் நிறமான கருஞ் சிவப்பாகியிருக்கும். 488 மி.கி. செந்தூரத்தை வல்லிச்சாற்றில் கலந்தளிக்க சயகாசம் தீரும். தென்னம் பட்டைச்சாற்றில் கொடுக்க சிலேற்பனவாதம் குணமாகும்.

சாற்றுகிறேன் வறட்சிவிக்கல் போக வென்றால்
 தயவாக வெண்ணெயிலே குழப்பி யூட்டு
சாற்றுகிறேன் செங்கழுநீர் சாற்றி லூட்ட
 சர்வசுர மனைத்தும்போம் சத்திய மாகும்
சாற்றுகிறேன் சுரத்திற் குள்ளு மாகா
 சார்வான தீவினைக்குப் பிரம்பு மாக
சாற்றுகிறே னிப்பட்டிதா னிருந்த பேர்க்கு
 சகலசித்து மாடவே தாய்சொல் வாளே! 144

பொ.ரை: சயகுலாந்தகச் செந்தூரத்தை வெண்ணெயிலே குழப்பிக் கொடுக்க வறட்சி விக்கலும் செங்கழுநீர்ச்சாற்றில் கலந்தளிக்க சுரங்கள் அனைத்தும் நீங்கும். சித்துகள் கைவரப் பெற தாயானவள் கூறுவாள்.

சொல்லுகிறேன் தனித்திருந்து சீரத் துள்ள
 துடக்கெல்லா மகற்றிநின்றாய்ச் சுத்தி செய்து
மல்லுகிறேன் கலையையும் விடாமல் கூட்டி
 மகத்தான பதவொளியை விழியால் நோக்கி
வெல்லுகிறேன் நிற்குணத்தி லிருந்து கொண்டு
 மேலான ஆதிசத்தி மென்றாள் போற்றி
கொல்லுறேனென் றெண்ணுகிற அறுவமய் யிட்டு
 கொத்தோடே திரோதாயி மாய்கை தள்ளே! 145

பொ.ரை: தனிமையாயிருந்து உடலழுக்கினைப் போக்கி மன அழுக்கினை நீக்கி தூய்மைப்படுத்தி கலைகளைப் பெருக்கி திருவடிகளின் ஒளியைக் கண்களால் நோக்கியும் இறைவனை நினைத்தும் போற்றுதலைச் செய்யவும். ஆதி சத்தியின் பாதங்களைப் போற்றுக. அறுகோணமிட்டு வணங்கி மாயத்தை நீக்குக.

தள்ளிட்டுப் பதியிலே இருந்து கொண்டு
சங்கற்ப விகற்பமெல்லாம் தகர்த்து வோட்டி
தள்ளிவிட்டு சாத்தியமாய் நோயுள்ளே பாரு
சற்குணமாய் புனைந்தாக்கால் சாத்திய மாகும்
தள்ளிவிட சத்தியமாய் நோயுள் ளோர்க்கு
சண்டாள கோபம்வரில் நோய்தீ ராதே! 146

பொ.ரை: இறைவனிடமிருந்து கொண்டு தம் விகற்பங்களை நீக்கி தனக்குள்ள நோய்களைப் பார்த்தல் வேண்டும். நற்குணங்களைக் கொண்டு நோய்களை நீக்கலாம். நோயுள்ளோர்க்கு கோபம் அதிகமாய் வந்தால் நோய் கொண் டோரை விட்டு நீங்காது.

திரிந்திட்டேன் அண்டரண்டம் பதங்க டோறு
செப்பினதோர் சாத்திரங்கள் கோடா கோடி
திரிந்திட்ட சித்தர்முதல் ரிஷிகள் தேவர்
திஷ்டித்த நூலெல்லாம் திறமாய்ப் பார்த்து
திரிந்திட்ட சாத்திரமும் நிகண்டும் திரட்டு
முதலாகப் பலசுவடி தெளிந்து பார்த்தேன்
திரிந்திட்ட பண்டிதங்கள் இதற்கொவ் வாது
சீஷனுக்குஞ் சஞ்சீவி யின்னூல் பாரே! 147

பொ.ரை: உலகில் பல்வேறிடங்களில் சாத்திரங்கள் பல கோடானுகோடி உள. சித்தர்கள், ரிஷிகள், தேவர்கள், படைத்த நூற்களைச் செவ்வைபட படித்து நிகண்டுகளைப்புரட்டி தெளிந்து படித்தேன். எத்துணை பாண்டித்யங்களும் இதற்கு ஈடாகாது. சீடர்களாகிய நீங்கள் சஞ்சீவியாகிய இந்நூலைப் பாரும்.

வீக்கத்திற்கு மருந்து

பாரப்பா பிடைத்தெழுந்த பிளவை யோடும்
பலவீக்கஞ் சிலந்திபரும் படுவ னுக்கு
சீரப்பா சிறுகொட்டைப் பருப்பு வாங்கி
சிறந்தமுலைப் பால்தன்னால் திறமாய் ஆட்டி
வாரப்பா யேரண்டம் வீசம் குத்தி
வளமாக முலைப்பாலும் கூட சேர்த்திப்

பாரப்பா சாரித்து சினந்தமுகம் விட்டு
சுகமாகப் போடு போடே! 148

பொ.ரை: பிளவை, வீக்கம், சிலந்தி, படுவன் ஆகியவற்றிற்கு சிறுகொட்டைப் பருப்பு, எடுத்துத் தாய்ப்பால் ஊற்றி அரைத்து அவ்விழுதுடன் சிற்றாமணக் கெண்ணெயைத் 1.4 லி அளவு ஊற்றி தாய்ப்பாலையும் உடன் சேர்த்துக் குழப்பி வீக்கம் உள்ள இடங்களில் போடவும்.

போடப்பா அந்திசந்தி .... ———
போட்டிடவே வற்றிப்போம் நீர்கொண்ட தானால்
போடப்பா அனுதினமும் போடப் போடப்
புரைகளில்லை வீக்கத்தை மேலே யேத்தும்
போடப்பா பழுத்துடையும் வித மாறும்
புண்வாயில் சீலைதனைப் பூட்டிப் போடு
போடப்பா காரங்கள் வைத்த பின்பு
புரைப்புண் களாறியே விழலாம் பூச்சே! 149

பொ.ரை: காலை, மாலை அவ்வாறு செய்ய தேங்கியுள்ள நீரானது வற்றி வீக்கம் போகும். நாள்தோறும் பின்பற்ற புரைகள், வீக்கம் நீங்கும். கட்டிகள் பழுத்து உடையும். புண்ணின் மீது சீலையை வைத்து, அதன் மீது காரங்களைப் போட புண்கள் ஆறும்.

சன்னிக்கு அஞ்செண்ணெய்த் தைலம்

விழலாகு சன்னிக்கு அஞ்செண்ணெய்த் தயிலம்
விளம்புகிறேன் புங்கெண்ணெய் வேப்பெண்ணெ யுடனே
அழலாகு மெள்ளெண்ணெ யிலுப்பை யெண்ணெய்
யாமணக்கின் எண்ணெயிவை யஞ்சு மைங்கால்
தழலாக்கி மேல்மருந்தை சேர்க்கத் தானும்
சாற்றக்கேள் ரசங்கெந்தி தாளகமு மஞ்சிலையு
முழலாக லிங்கம்வகைக் குமொரு கழஞ்சு
மொக்கவே பழங்காடி யூட்டி யாட்டே! 150

பொ.ரை: புங்கெண்ணெய், வேப்பெண்ணெய், எள்ளெண்ணெய், இலுப்பை எண்ணெய், ஆமணக்கெண்ணெய் ஆகிய இவ்வைந்தெண்ணெய்களையும் வகைக்கு 325 மி.லி. சேர்த்து அனலிட்டுக் கொதிக்க வைக்கவும். இரசம், கெந்தகம், தாளகம், மனோசிலை, இலிங்கம் இவற்றை வகைக்கு 5 கி எடுத்துப் பழைய காடியூற்றி அரைத்துக் கொள்ளவும்.

ஆட்டியே பழஞ்சீலை தன்னி லூட்டி
அதற்கிசைந்த குறுங்கோயில் திரிபந்த மாக்கி
நீட்டியே எண்ணெய்க்குத் தீக்கொளுத்தி யெரித்து
நினவோடே எண்ணெய்கீழ் வார்க்கும் போது
வீட்டிமை யில்லாமலந்த மருந்துடனே தயிலம்
விடவே மூன்றுதரம் விட்டிறங்கு மப்பா
வீட்டிவித்த தயிலமது காசிடைதான் கொள்ளில்
வியன்றெழுந்த வாதமொடு சீதம் போமே! 151

பொ.ரை: அரைத்த விழுதைப் பழைய துணியில் அப்பி அதனைத் தக்க கோலில் சுற்றி திரிபந்தமாக்கி தீயிட்டுக் கொளுத்தி எரிக்கவும். தீபிடித்து எரிந்து சொட்டு சொட்டாக எண்ணெய் பாத்திரத்தில் சேரும். இவ்வாறே மூன்று முறை செய்ய தைலம் வடியும். இதனை 12 கி அளவு உட்கொள்ளில் வாதமொடு சீதம் குணமாகும்.

சீதமோடு சன்னிபதி மூன்று வாதம்
திகையாத உழச்சலோடு திமிர்முதலாய் வாங்கும்
பேதமில்லை சன்னியோடு பத்தியங்கள் தீரும்
பிணியுள்ளோர்க் கிதுநன்று பேணிவைக்க லாகும்
நீதமுள்ள சஞ்சீவிநோய் குமார பாணி
நீங்காத பிணிநீங்கும் நித்தியசுகங் காணும்
வேதமுறை கண்டுசொன்னேன் சிறுசந்த னாதி
விசேஷமடா வைப்பதற்கு மேகவெட்டை போமே! 152

பொ.ரை: சீதம், சன்னி, பதின்மூன்று வகை வாதம், உழச்சல், திமிர் ஆகிய நோய்கள் தீரும். நோய் நீங்கிய பின் பத்தியங்களை நீக்கலாம். நீங்காத நோயையும் நீக்கும் திறன் வாய்ந்த சஞ்சீவியான சிறுசந்தனாதித் தைலம் மேக வெட்டையைத் தீர்க்கும்.

சிறு சந்தனாதித் தைலம்

மேகவெட்டை நீரிழிவு காசக் கூறும்
மிஞ்சுபித்தம் நெஞ்செரிவாய்வு நீரேற்றம் போகும்
போகுந்தி றதாத்து நாட்டம் வாத பித்த
பிரண்டெழுந்த தொந்திப்பு பெரிய குன்மம்
ஆகவெல்லா முதறிவிடும் இருமல் ஈளை
அதிசாரங் குடல்வாதம் குதி வாதம்
மேகமாய் குத்தெடுக்கும் முளைச்சோடு வீக்கமோடு
பலச்சூலை குட்டயின்ன வகை யறியே! 153

பொ.ரை: மேகவெட்டை, நீரிழிவு, காசம், பித்தம், நெஞ் செரிவு, வாய்வு, நீரேற்றம், முக்குண, தொந்திப்பு, பெருங்குன்மம், இருமல், ஈளை, அதிசாரம், குடல்வாதம், குதிவாதம், குத்தலுடன் கூடிய உளைச்சல் வீக்கம், பலவகைச் சூலை, குட்டம் ஆகிய நோய்களும்.

அறிவான சோகைபித்தம் காமாலை பாண்டு
வறட்சியோடு வாய்வேப்ப மக்கினி மந்தம்
குறிகுணங்கள் விகற்பமுள்ள பீனசங்கள் சுரங்கள்
கூறரிய நேத்திரநோய் சயங்கள் பலவொளிய
நெறியுடனே பாடுகிறேன் சிறுசந்த னாதி
நேர்த்தியாஞ் சூத்திரத்தில் நீயறிந்து செய்ய
பிறியாத ரோகங்களனைத்தும் விழுந் தோடும்
பலத்த இருபத்தொரு மேகம் போகும்! 154

பொ.ரை: சோகை, பித்தம், காமாலை, பாண்டு, வறட்சி, வாய்வு, ஏப்பம், அக்கினிமந்தம், பீனசங்கள், சுரங்கள், நேத்திர (கண்) நோய்கள், சயங்கள் ஆகியவற்றின் வகைகளனைத்தும் நீங்க சிறுசந்தனாதித் தைலம் செய்முறையைக் கூறுகிறேன். இத்தைலத்தால் இருபத்தொரு வகை மேகமும் குணமாகும்.

போய்விடுமே கசாயகற்க மருந்துவகை சொல்ல
புலத்தியனே மச்சகேந் திரனே கேளு
நேயமுடன் சந்தனமு மாறுபலங் கூட
கோதமக்கு வெட்டிவேரு நிறுத்துத் தூளாய்

வீயமுடன் சலம்பதக்கு விட்டுநா லொன்றாய்
வேகவைத்த பின்பு பின்னுங் கேளு
மாயமடா கசாயமா முன்னை வில்லை
வள்ளிக்கிழங்கு மப்பனே சீந்தியுடன் முத்தக் காசே! 155

பொ.ரை: குடிநீருக்கான கற்கவகை மருந்துகளைக் கூறுகிறேன். புலத்தியனே, மச்சகேந்திரனே கேட்பாயாக! 210 கி சந்தனம், வெட்டி வேர் எடுத்துப் பொடித்து 10.7 லி தண்ணீரூற்றிய பாத்திரத்திலிட்டு நான்கிலொன்றாய்ச் சுருக்கிக் குடிநீராக்குக. மற்றுமொரு குடிநீர் முன்னை, வில்வம், வள்ளிக்கிழங்கு, சீந்தில் கிழங்கு, முத்தக்காசு.

முத்தக்காசு சல்லிகொட்டி நெய்தல் தாமரையின்
மூலம்நிலைப் பனைக்கிழங்கு மிலாமிச்சன் வேரு
மித்ததோர் குறுந்தொட்டி வேராலம் விழுது
பொன்னாங் காணிவே ரவரையின் பட்டை
வகைக்குநா லரைப்பல மிதமா யிடித்தற்குள்
சலமாறு குறுணிவிட் டெட்டொன்றா யிறுத்து
சுகமாக முன்வைத்த கசாயமதிற் கூட்டே! 156

பொ.ரை: அதிமதுரம், கொட்டி, நெய்தற்கிழங்கு, தாமரைவேர், நிலப்பனைக்கிழங்கு, இலாமிச்சன்வேர், குறுந்தொட்டிவேர், ஆலம்விழுது, பொன்னாங்காணி வேர், அவரைப்பட்டை இவற்றை வகைக்கு 158 கி எடுத்திடித்து 31.8 லி தண்ணீருள்ள பாத்திரத்திலிட்டு எட்டிலொரு பாகமாய்ச் சுருக்கிக் குடிநீராய்க் காய்ச்சி மேற்சொன்ன குடிநீருடன் சேர்க்கவும்.

கூட்டியபின் சாறுவகை சொல்லக் கேளு
கூறரிய முடக்கொத்தான் வீழியோடு தான்றி
நாட்டியதோர் நொச்சியொடு முருக்கிலை கற்றாழை
நயமாகப் பொன்னாங்காணி நீர்வள்ளிக் கிழங்கு
மாட்டியதோர் வகைக்காறு படிநீர் வண்ணம்
அப்பனே தாழியொன்றி லடுப்பேற்றிக் காய்ச்சி
வீட்டிமை யில்லாமல் எட்டொன்றாய்க் குறுக்கி
வேடுகட்டி வினாயகனைப் பணியே! 157

பொ.ரை: கலக்கும் சாறு வகைகளாவன முடக்கொத்தான், வீழி, தான்றி, நொச்சி, முருக்கிலை, கற்றாழை, பொன்னாங்காணி, நீர்வள்ளிக்கிழங்கு ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 7.8 லி தாழியில் ஊற்றி ஏற்றிய அடுப்பில் வைத்து எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் குடிநீராய்க் காய்ச்சவும்.

பணிந்துஒரு தாழிக்கு காப்பதனைப் புனைந்து
பாங்கான கசாயங்கள் சாறுகளும் விட்டு
துணிந்ததிலே நல்லெண்ணெய் ஆறுபடி விட்டு
சொல்லரிய ஆவின்பா லவ்வண்ணம் விட்டு
வணிந்ததிலே கற்கவகை அறைகிறே னப்பா
அகில்கெந்தம் சந்தனமு மல்லாமல் கேளு
கணிந்ததொரு சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு
கச்சோல மேலமில வங்கங் காணே! 158

பொ.ரை: தாழி ஒன்றினை எடுத்து அதில் மேற்சொன்ன குடிநீர்கள், சாறுகள் ஊற்றுக. நல்லெண்ணெய், பசும்பால் இவற்றை வகைக்கு 7.8 லி சேர்க்க. அகில், செஞ்சந்தனம், சந்தனம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கச்சோலம், ஏலம், இலவங்கம் ஆகியவற்றையும்,

காணப்பா லவங்கபத்திரி சிற்ற ரத்தை
கடுக்கார மஞ்சிட்டி வங்காளப் பச்சை
பூணப்பா பேரீந்து முந்திரிகைப் பழமும்
புழுக்கைவேர் சடாமாஞ்சி பூலாங் கிழங்கு
பேணப்பா செவ்வள்ளிக் கொடிதேவ தாரம்
பெருஞ்சிறு செண்பகமுந் தாளிசப் பத்திரியும்
நாணப்பா கிளியூறல் குரோசாணி யோமம்
நன்மதுரஞ் சிறுநாவல் பூவும்வகை சேரே! 159

பொ.ரை: இலவங்கப்பத்திரி, சிற்றரத்தை, மஞ்சிட்டி, வங்காளப்பச்சை, பேரீந்து, முந்திரிகைப்பழம், புழுக்கைவேர், சடாமாஞ்சில், பூலாங்கிழங்கு, செவ்வள்ளிக்கொடி, தேவதாரம், சிறுசெண்பகம், பெருஞ்செண்பகம், தாளிசபத்திரி, கிளியூறல்பட்டை, குரோசாணி ஓமம், அதிமதுரம், சிறுநாவல் பூ ஆகியவற்றையும்,

சேரடா சாத்திரபேதி யாறு கழஞ்சும்
சேரவே தூளாக்கி நீரில் ஆட்டி
வாரடா இளநீரில் குழப்பி யொன்றாய்
வளமாகத் தாழிக்குள் கலக்கி விடு
மெழுகு பதங்கண்டு நினை வோடே
வடிக்கும் போதப்பா கேளே! 160

பொ.ரை: சாத்திரபேதியையும் சேர்த்து வகைக்கு 30 கி எடுத்திடித்துப் பொடித்துத் தண்ணீரில் அரைத்து இளநீரில் கலந்து தாழியிலுள்ள குடிநீருடனும் சாறுடனும் கலக்கிக் கொள்ளவும். அடுப்பிலிட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டவும்.

கேளப்பா சாம்பிராணி கோஷ்டம்வகைக் காறு
கெடியான அபின்கழஞ்சு காலரையுங் கூட்டி
நீளப்பா குங்குமப்பூ கோரோசினை யோடு
நீள்வெள்ளி லோத்திரமும் வகைக்குமுக் கழஞ்சு
வாட்டியதை ஓலைப்பூப் பரத்தித் தூவி
வடிகட்டி சூட்டுடனே கலசத் துள்ளே
நாளப்பா கஸ்தூரி பச்சைப் பூரம்
நம்புகு சட்டமிவை வகைக்குக் கழஞ்சே! 161

பொ.ரை: வடிகட்டும் பருவத்தில் சாம்பிராணி, கோட்டம் வகைக்கு 30 கி, அபின் 3 ¾ கி, குங்குமப்பூ, கோரோசினை, வெள்ளிலோத்திரம் இவற்றை வகைக்கு 15 கி எடுத்துப் பொடித்துத் தூவிக் கொள்ளவும். கலசத்தில் சூட்டுடன் வடிகட்டி அதில் கஸ்தூரி, பச்சைப்பூரம், புனுகுசட்டம் இவற்றை வகைக்கு 5 கி. எடுத்துப் பொடித்திடவும்.

வகைமூன்றுங் கூட்டியதி லிட்டு
வடித்தி றுக்கும் தயிலத்தை வைத்து
பகையாமல் தேவிக்கும் வடுகன் கணபதிக்கும்
பாங்காகப் பூசித்து தானியபுடம் வைத்து
திகையாமல் நாலுநாளுக் கொருக்கால் மூழ்கு
சீயக்கா யிட்டு வெந்நீரும் விடுவாய்
நகைத்தபடி யொன்றுமோர் தயிர்பால் புளிப்பு
நல்லிறைச்சி கைப்பகற்ற நலமாம் பாரே! 162

பொ.ரை: தைலத்தைக் கலக்கி தேவிக்கும் வடுகன் கணபதிக்கும் வைத்துப் பூசை செய்து ஆறினபின் தானிய புடத்தினுள் வைக்கவும். நான்கு நாட்களுக்கொரு முறை தைலத்தைத் தலையில் தேய்த்து சீயக்காய், வெந்நீரிட்டுக் குளிக்கவும். மோர், தயிர், பால், புளிப்பு, இறைச்சி, கைப்பு இவற்றை நீக்க நன்மை பயக்கும்.

பாரப்பா மறுநாள் கூட்டுவதைக் கூட்டு
பத்தியங்கள் கடலிலே பறக்குமடா நோய்கள்
யாரப்பா யிதின்பெருமை யறிந்தமட்டுஞ் சொன்னோம்
யாருக்கும் சொல்லாதே ஆச்சரியந் தன்னை
நேரப்பா உள்ளவர்க்குச் சொன்னாலும் நன்று
நினைவுகெட்ட மாந்தரிட மணிசொல் லாதே
சாரப்பா பராபரையைத் தியானம் கொண்டு
கர்த்தாவை யுள்ளத்திருக்க பலிக்குமிந்தத் தொழிலே! 163

பொ.ரை: அடுத்த நாள் சேர்க்க வேண்டிய பொருட்களைச் சேர்த்துக் கொள்ளவும். இத்தைலத்தால் பல நோய்கள் நீங்கும். இதன் சிறப்பை எவர்க்கும் கூறாதீர். நினைவு தவறிய மனிதர்க்கு எதனையும் கூறாதே. பராபரனைத் தியானித்து உள்ளத்தில் இறைவனை நினைத்து இத்தொழிலைச் செய்யவும்.

இந்துப்பு நேர்வாளம் வகைக்கிரு கழஞ்சு
இருக்கறவே சுத்தி செய்துகல் வத்தில்
இட்டரைக்க யிருசாமம் அரைத்து
தனிச்சிமிளி லிட்டடைத்துத் தாக்கக் கேளு
முந்தவொரு குன்றியிடை இஞ்சிச் சாற்றில்
மிளகுடைய கசாயத்தில் கொள்ள பேதி
....
சாத்திடவே பனவெல்லத்தி லருந்தி டாயே! 164

பொ.ரை: நேர்வாளம், இந்துப்பு இவற்றை வகைக்கு 10 கி எடுத்து முறைப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு ஆறுமணி நேரமரைத்துத் தனியே சிமிழில் பத்திரப்படுத்தவும். 130 மி.கி. அளவு இஞ்சிச்சாற்றில், மிளகுக்குடிநீரில், பனை வெல்லத்தில் உட்கொள்ளவும்.

அருந்தயரை நாழிகைக்குமேல் வெந்நீர் கொள்ள
அபானத்தில் உள்ளமல மனைத்தும் போகும்
உருந்தியே ஆசனத்தில் வெந்நீரால் சுத்தி
வயற்றெடு பதமெந்த மட்டுவிட்டு பார்த்து
திருந்தியதோர் ஆசனமறி னிதங்கவென் றாக்கி
மைந்தா குளிந்தண்ணீரில் சுத்தி செய்து
பொருந்தியதோர் அன்னப்பால் குளிரப் பண்ணி
புரைதிற யுப்புவிட்டு கஞ்சி கொள்ளே! 165

பொ.ரை: 12 நிமிடங்கள் கழித்து வெந்நீரினைக் குடிக்கவும். அபானத்தில் தங்கியுள்ள மலம் நீங்கும். ஆசனத்தை வெந்நீரால் தூய்மையாக்கிப் பின் குளிர்ந்த தண்ணீர் கொண்டுதூய்மை செய்யவும். பாலைக் காய்ச்சி ஆறவிட்டுப் புரை ஊற்றி தயிராக்குக. மோராக்கிச் சோற்றுக் கஞ்சியிலூற்றிச்சாப்பிடவும்.

கஞ்சிகொள்ள குளிர்ந்தசலத் தாலே பேதி
கட்டிடும் பேதியின்ன காண வென்றால்
தஞ்சமுறு வறுத்தகஞ்சி யுப்பு விடாமல்
நான்சூடாய்க் கொண்டிடவே பேதி யாகும்
மிஞ்சிக்கும் வெகுபேதி மிளகுபனை வெல்லம்
எந்தமட்டும் பேதியாம் மியல்புண் டாகும்.
பஞ்சியா படவில்லை வண்மை யாக
பற்றிநின்று செய்வதற்குப் பலிக்கு மாமே! 166

பொ.ரை: கஞ்சியைச் சாப்பிட்டுக் குளிர்ந்த தண்ணீர் குடித்திட கழிச்சல் கட்டும். பேதி இன்னும் ஆகவேண்டுமென்றால் வறுத்த கஞ்சியை உப்பு சேர்க்காது சூடாகக் குடித்திடவும். கழிச்சல் அதிகமானால் மிளகுத் தூளைப் பனைவெல்லத்தில் சேர்த்து சாப்பிட இயல்பாகும்.

பேதிக்கு வாய்வு புத்திரன் மாத்திரை

ஆமப்பா பேதிக்கு வாய்வுபுத்திரன் தன்னை
அறையிறேன் புலத்தியனே மச்ச கேந்திரா
காமப்பா திரிகடுகு கடுகுரோ கணியும்
மேலான தேசபுரம் வாய்வி ளங்கம்

வாமப்பா வொன்பதா யிருக ழஞ்சு
யுற்றமுளைக் களைந்துபத்து கழற்சிப் பருப்பு
வேமப்பா யிருகழஞ்சி யிஞ்சிச் சாற்றில்
விரைத்துயிரு சாமமாட்டி யுண்டைக் கட்டே! 167

பொ.ரை: சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, தேசாவரம் எனும் கண்ட திப்பிலி, வாய்விடங்கம் இவற்றை வகைக்கு 10 கி எடுத்து முளைகளைநீக்கி சுத்தம் செய்து கொள்ளவும். கழற்சிப் பருப்புகள் பத்தினையும் சேர்த்து 10 கி இஞ்சிச்சாற்றினை ஊற்றி ஆறுமணி நேரமரைத்து விழுதினை உருண்டைகளாய்ச் செய்யவும்.

கட்டியதோர் குளிகைதன்னை நிழலு லர்த்தி
கலகொம்பு சிமிளிலே கடிகை வைத்து
முட்டியதோர் வாய்வுமலக் கட்டு வாங்க
முந்தியதோர் யிஞ்சிதட்டிப் பிழிந்த சாற்றில்
அட்டியில்லா வொருபொழுது குன்றிரண்டு தானரைத்து
அப்பனே குடித்திடவே ஆகமுதல் நீங்கும்
வெட்டியெல்லா பனைவெல்ல மதனி லருந்த
வெந்நீர் கொண்டிடவே விரோசனமாம் பாரே! 168

பொ.ரை: உருண்டைகளை நிழலில் உலர்த்தி 24 நிமிடங்கள் மான் கொம்புச்சிமிளில் வைக்கவும். 260 மி.கி. அளவுள்ள மாத்திரையை இஞ்சிச்சாற்றிலிழைத்து ஒரு நேரத்திற்குக் கொடுக்க வாய்வு, மலக்கட்டு நீங்கும். பனைவெல்லத்தில் கொடுத்து வெந்நீரளிக்க கழிச்சலாகும்.

சுகபேதிக் கசாயம்

பாரப்பா சுகபேதிக் கசாயம் தன்னைப்
பாடுகிறேன் பிரமியிலை கடுக்காய் நான்கு
பாரப்பா களிப்பாக்கு மூன்றுசுக் கிரண்டு
பளிப்பற்ற யிந்துப்பு யிதனை யெல்லாம்
பாரப்பா கசாயமொரு படிசலத்தில் போட்டு
பரிவாக யெட்டொன்றாய்க் குறுக்கிக் கொள்ளு
பாரப்பா பேதியுண்டா லின்னமதி லொன்று
பகருகிறேன் கற்கமொன்று பகருகி றேனே! 169

பொ.ரை: சுகபேதிக்கான கசாயம் வருமாறு. பிரமியிலை, நான்கு கடுக்காய், மூன்று களிப்பாக்கு, இரண்டு சுக்கு, இந்துப்பு, இவற்றை இடித்து 1.3 லி. தண்ணீரில் போட்டு குடிநீராய்க் காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும். கழிச்சலான பிறகும் அதற்கான மற்றுமொரு கற்கம் வருமாறு.

பகருகிறேன் பிரமியிலை நீங்க னாலும்
பண்பாக முன்போலே கசாயம் செய்து
பகருகிறேன் இஞ்சிதட்டிப் பிழிந்த சாற்றில்
பாங்காகத் தேனிலே நாலுவகையு மரைத்து
பகருகிறேன் பேதிரொம்ப கண்டா லப்பா
பண்பாக மோர்அன்னம் பண்ணிப் பாரே! 170

பொ.ரை: மேற்கூறிய சரக்குகளில் பிரமியிலை ஒழித்த கடுக்காய், களிப்பாக்கு, சுக்கு, இந்துப்பு ஆகிய மற்ற நான்கினால் குடிநீர் காய்ச்சிக் கொள்ளவும். இஞ்சிச் சாற்றிலும் தேனிலும் அந்நான்கை மட்டும் தனியே அரைத்துக்கொடுக்கவும். கழிச்சல் அதிகமானால் மோர்ச்சோற்றினைக் கொடுக்கவும்.

இரத்தக்கிராணிக்கு வச்சிரகபாடம்

பாரப்பா திறப்பதுக்கு வகையும் சொன்னோம்
பாடுகிறேன் அடப்பதற்கு பண்பாய் மைந்தா
நேரப்பா வச்சிர கபாடம் கேளு
நெடுநாளை முதல்ரத்தக் கிராணியதி சாரம்
வேரப்பா முளைமூலம் வயிற்றுளைச்சல் கழிச்சல்
வீறடங்கா சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு
சீரப்பா வால்மிளகு ஏலமுடன் சுக்கு
திறமாக வகைக்குயிரு கழஞ்சு கூட்டே! 171

பொ.ரை: முளைமூலம், வயிற்றுளைச்சல், கழிச்சல், அதிசாரம், இரத்தக்கிராணியைத் தீர்க்கும் வச்சிரகபாடம் எனும் மருந்தின் செய்முறை வருமாறு. சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, வால்மிளகு, ஏலம், சுக்கு இவற்றை வகைக்கு 10 கி எடுக்கவும்.

கூட்டடா வெட்பாலை சீரகந்தான் இரண்டு
குரோசாணி கோதில்லா விடையம் அதிமதுரம்
நாட்டடா வெந்தயமும் வகைக்கு நாற்கழஞ்சு
நலமான அபினிமருந்து கழஞ்சரைபோடு
வாட்டடா இளவறுப்பாய் வெதுப்பி வாங்கி
மைந்தனே வெந்தயமோர் பலம்க சாயம்
மாட்டடா கசாயமிட்டு மருந்து நன்றாய்
ஆட்டியதை மெத்தடா தட்டு வாயே! 172

பொ.ரை: வெட்பாலை, நற்சீரகம், கருஞ்சீரகம், குரோசாணி, அதிவிடையம், அதிமதுரம், வெந்தயம் இவற்றை வகைக்கு 20 கி எடுத்து, 2.5 கி அபினியையும் சேர்த்து அடுப்பிலிட்டு இளவறுப்பாய் வெதுப்பி விடவும். 35 கி வெந்தயத்தை எடுத்துக் குடிநீராக்கி அதை மேற்சொன்ன மருந்துகளில் ஊற்றி அரைத்து அடை தட்டிக் கொள்ளவும்.

தட்டியதோ ரடைக்குமொரு சட்டி வைத்து
தணல்மூட்டி அடைதன்னைத் தானே போடு
விட்டுநீ கசாயத்தைச் சுருக்கிப் போட்டு
வெந்தந்த கசாயத்தா லரைத்த பின்பு
வட்டில்லா ஆறுதரம் கருக்கிக் கட்டி
அரைத்திடவே கபாடமருந்து ஆகு மப்பா
திட்டித்த வயனம்போல் சொன்னபடி கேட்கும்
சித்திரமா யின்னமொரு கபாடம் செய்யே! 173

பொ.ரை: சட்டியில் அடையை இட்டு அடுப்பில் வைத்து குடிநீரை ஊற்றி சுருக்கிக் கொள்ளவும். பின் அந்தக் குடிநீரால் அரைத்து ஆறுமுறை சுருக்கிக் கட்டவும். வேதம் போல சொன்னவாறு கேட்கும் மற்றுமொரு மருந்தைக் காண்போம்.

செய்துதான் சாதிக்காய் அஞ்சு கழஞ்சு
சிறந்ததொரு பத்திரியும் முக்க ழஞ்சு
பெய்வதுதான் கிராம்புமொரு நாற்க ழஞ்சு
பெருமரத்துப் பட்டைத்தூள் ஆறுக ழஞ்சு
வெய்வதுதான் குரோசாணி ஒருக ழஞ்சு
இயம்பியதோர் வெப்பாலை அரிசஞ்சு கழஞ்சு

உய்வதற்கு கசகசா வூமத்து வித்து
ஒவ்வொன்று முக்கழஞ்சு அரைத்துப் போடே! 174

பொ.ரை: சாதிக்காய் 25 கி, சாதிபத்திரி 15 கி, கிராம்பு 20 கி, பெருமரப்பட்டைத்தூள் 30 கி, குரோசாணி 5 கி, வெட்பாலையரிசி 25 கி, கசகசாவிதை, ஊமத்தம் விதை வகைக்கு 15 கி, எடுத்து அரைத்துக் கொள்ளவும்.

போடப்பா சடைக்கஞ்சா புடமேழுந் தீர்ந்து
பொடியுமொரு பதினஞ்சுகழஞ்சு பொலிவாய்க் கூட்டி
வாடப்பா அபினிமருந்து கழஞ்சி சேர்த்தி
அப்பனே ஊமத்தன்சாற் தன்னா லாட்டி
சூடப்பா குளிகைசுண் டைக்கா யளவு
சுகமாக நிழலுலர்த்திச் சுண்ட வைத்து
நாடப்பா வயிற்றுளைச்சல் கடுப்புவெகு பேதி
நடுக்கல்வயற் றிரைச்சல்ரத்தம் மூலம்போய் விடுமே! 175

பொ.ரை: சடைக்கஞ்சாவை ஏழுமுறை புடம்போட்டு பொடியை எடுத்து 75 கி அளவுடன் 5 கி அபினியையும் உடன் சேர்த்து ஊமத்தஞ் சாறூற்றி அரைத்து அவ்விழுதைச் சுண்டைக் காயளவு குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதைத் தக்க அனுபானத்துடன் கொடுக்க வயிற்றுளைச்சல், கடுப்பு, கழிச்சல், நடுக்கல், வயிற்றிரைச்சல், இரத்தமூலம் தீரும்.

போய்விடுமே ஆறுவகைக் கிராணிஅதி சாரம்
போவதற்கு அனுபானம் புகலக் கேளு
வாவுரு முத்தக்காசு இருகழஞ்சு தட்டி
மைந்தனே கசாயமது யெட்டொன் றாக்கி
வீரமுடன் ஒருவுண்டை அரைத்து நன்றாய்
அருந்திடவே மூன்றுதினம் அருந்த ருந்து
நேயமுடன் இளவெந்நீர் தேன்முலைப்பால் தன்னில்
நின்றுபோ மின்னவகை நிகழ்த்து வோமே! 176

பொ.ரை: ஆறுவகைக்கிராணி. அதிசாரம் நீங்குவதற்கு அனுபானமாவது. கோரைக்கிழங்கு 10 கி எடுத்துத் தண்ணீரூற்றி எட்டொன்றாய்க் குறுக்கிக் குடிநீராக்கி மேற்சொன்ன குளிகையில் ஒன்றை இழைத்துக் கொடுக்கவும். அவ்வாறே

மூன்றுநாட்கள் கொள்ளவும். இளவெந்நீர், தேன், தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்கவும்.

வோமமது வடித்திறுத்து தேனுஞ் சேர்த்தி
ஒரு போது கொடுத்திடவே யோட்டம் நிற்கும்
சாமமிரு நான்கினுக்கு எடுத்த பேருக்கு
சாந்தமாய் அனுபானம் சாற்றக் கேளு
வோமமெனு மறப்பைபூ பிட்டவி சாற்றி
லிருபோது தேன்கலந்து மிட்டா யாகில்
போமிந்த கிராணிஅதி சாரம்வயிற் றிரைச்சல்
பொல்லாத கழிச்சல்ரெத்தக் கடுப்புபோம் பாரே! 177

பொ.ரை: தேனைக் குடிநீருடன் சேர்த்துக்கொடுக்க கழிச்சல் குணமாகும். இருபத்து நான்கு மணி நேரம் கழிச்சலானவர்க்கு அனுபானமாவது. வோமத்தின் பூவைப் பிட்டவியலாக்கி அச்சாற்றில் தேனைக் கலந்து அதில் குளிகையை இழைத்து இருவேளையும் கொடுக்க கிராணி, அதிசாரம், வயிற்றிரைச்சல், பொல்லாக்கழிச்சல், இரத்தக் கடுப்பு தீரும்.

கபாட லேகியம்

பாரின்னம் பேதிக்குக் கபாடலே கியத்தைப்
பகருகிறேன் புலத்தியனே மச்ச கேந்திரா
பேறுபெற்ற பெருமரத்துப் பட்டைசா ரணைவேரு
பினைப்பிரண்டை வேரிலந்தை வேரு பட்டை
வேறுநாறி அமுக்கிராவேர் நடலைவேர்க் கிழங்கு
வகைக்கொரு பலந்தான் தூக்கி
கூறுபொடி வடிகட்டி எடுத்துக் கொள்ள
கடைமருந்து வகையாகக் கூறுகி றேனே! 178

பொ.ரை: பெருமரத்துப்பட்டை, சாரணைவேர், பிரண்டை வேர், இலந்தை வேர்ப்பட்டை, பீநாறி, அமுக்குராவேர், நடலைவேர்க்கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுத்துப் பொடிசெய்து வடிகட்டிச் சூரணமாகச் செய்து கொள்ளவும்.

கூறியதோர் மிளகுசுக்கு அதிவிடையம் ஓமம்
குரோசாணி சாதிக்காய் பத்திரி கிராம்பு

தேறினதோர் வெப்பாலை அரிசியிவை பலங்கால்
சிறந்தவபின் மருந்துமொரு கழஞ்சிவை வெதுப்பி
ஆறினதோர் பனைவெல்லம் மூன்றுமு டைத்ததிலே
பாகாக காய்ச்சுவது சித்த மாமே! 179

பொ.ரை: மிளகு, சுக்கு, அதிவிடையம், ஓமம், குரோசாணி ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, வெட்பாலையரிசி இவற்றை வகைக்கு 9 கி, 5 கி அபின் எடுத்து இளவறுவலாய் வறுத்துச் சூரணம் செய்யவும். பனைவெல்லம் மூன்றெடுத்துப் பாகாகக் காய்ச்சவும்.

சித்தமாய் சேர்த்துவிடு பருவமதில் தானும்
பொடிதனை நேராகத் தூவியதைக் கிளறியபின்
வெச்சுவிடு பருவமதில் தேனும்நறு நெய்யும்
விடுவகைக்கு மாகாணி விரைந்து கிண்டி
வச்சிடுவாய் புதுகற்கந் தன்னில் மைந்தா
வகையறிந்து அந்திசந்தி மூன்றுதினம் அருந்து
எச்சகுடல் பொருமல் பக்கமுண் டாக்கு
யென்பதுவு பொறிகருந்து இயம்பலாம் பாரே! 180

பொ.ரை: வெல்லப்பாகில் மேற்குறிப்பிட்ட சூரணத்தைத் தூவி நன்றாகக் கிளறி பக்குவமாக இறக்கும் நேரத்தில் தேனையும் நெய்யையும் ஊற்றி இலேகிய பக்குவத்தில் இறக்கி புதுகற்கத்தில் வைக்கவும். 1/16 பங்கு அளவு காலை, மாலை மூன்று நாட்கள் உட்கொள்ள குடல் பொருமல் தீரும்.

கபாட சூரணம்

பாருமே கபாடசூ ரணத்தை மைந்தா
பண்பாகச் சொல்லுகிறோம் பரிந்து கேளு
தீருகிற வியாதியதி சாரமோடு கிராணி
தெளியாத வயற்றிரைச்சல் கழிச்சல் இரைச்சல்
நேருகிற பொருமலோடு குடல்பொருமல் சோபை
நிற்பதற்கு மருந்துவகை நீதான்விரை ஒன்றாய்
கிருபையுடன் சடைகஞ்சா புடமேழு தீர்ந்து
சிறந்ததொரு சாதிக்காய் பத்திரி கிராம்பே! 181

பொ.ரை: அதிசாரம், கிராணி, வயிற்றிரைச்சல், கழிச்சல், இரைச்சல், பொருமல், குடல்பொருமல், சோபை ஆகிய நோய்கள் தீர்வதற்கு மருந்து வருமாறு. சடைக்கஞ்சாவினை ஏழுமுறை புடம் போட்டெடுத்துப் பொடியாக்கவும். சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு,

பேரான அதிவிடையம் குரோசாணி ஓமம்
பொடிதூளில் பெருமரத்துப் பட்டைமுத்தக் காசு
வேரான சுக்குடனே மாதுளம்பழத் தோடு
வெப்பாலை அரிசிசமன் முக்கழஞ்சு கூட்டி
காரான அபின்மருந்து கழஞ்சொன் றரையாக
கடைமருந்தை வெதுப்பி யதைத்தூ ளாக்கி
நேராக கலந்துதூள் சூரண மப்பா
நினவறிந்து செய்வதும் நின்று போமே! 182

பொ.ரை: அதிவிடையம், குரோசாணி ஓமம், பெருமரத்துப் பட்டை, கோரைக்கிழங்கு, சுக்கு, மாதுளம்பழத்தோல், வெட்பாலை அரிசி இவற்றைச் சமமாக 15 கி எடுக்கவும். அபின் மருந்து 7 ½ கி எடுத்து அனைத்தையும் இளவெதுப்பாக்கிப் பொடித்துச் சூரணமாக்கவும்.

நின்றுபோம் சூரணந்தான் வெருகடியாய் சேர்த்து
நினவுடனே யிருபோதுங் கொள்வா யாகில்
தின்றுவிடு நேரின்ன மனுபானங் கேளு
தென்னம்பனை வெல்லஞ்சேர்த்து அருந்தத் தீரும்
வெற்றியுள்ள இன்னமொரு சூரணந்தா னப்பா
விளம்புறேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
இன்றியே குரோசாணி வெப்பாலை அரிசி
இயல்பான பெருமரத்துப் பட்டைத்தூள் கூட்டே! 183

பொ.ரை: மூவிரலளவு சூரணத்தைக் காலை, மாலை இரு நேரமும் உட்கொள்ளவும். அனுபானமாக, பனை வெல்லத்துடன் சூரணத்தைச் சேர்த்துக் கொடுக்கவும். மற்றுமொரு சூரணமாவது சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, குரோசாணிஓமம், வெட்பாலையரிசி, பெருமரப்பட்டைத் தூள் ஆகியவற்றுடன்,

கூட்டடா மலைதாங்கி வேர்முத்தக் காசு
கொடியதொரு வால்மிளகு அக்கிரா காரம்
நீட்டடா சடாமாஞ்சி சுக்குமதி மதுரம்
நினவாக வகைக்குயிரு கழஞ்சியது வப்பா
பூட்டடா அபின்மருந்து வகைக்கழஞ்சு வெதுப்பி
பொடிசெய்து வெருகடியாய் தேனிலே பொசிக்க
பூட்டடா அந்திசந்தி கசாயத்தில் செலுத்த
மோசமில்லை கசாயவகை மொழிகூறு வேனே! 184

பொ.ரை: மலைதாங்கிவேர், கோரைக்கிழங்கு, வால் மிளகு, அக்கிராகாரம், சடாமாஞ்சில், சுக்கு, அதிமதுரம் இவற்றை வகைக்கு 10கி, அபின் 5 கி எடுத்து இளவறுவலாய் வறுத்துப் பொடித்துக் கொள்ளவும். அச்சூரணத்தில் மூவிரலளவெடுத்து தேனில் கலந்து காலை, மாலை குடிக்கவும். உட்கொள்ள வேண்டிய குடிநீர்வகை வருமாறு.

பொருமலுக்குக்குடிநீர்

மொழிகிறேன் மலைதாங்கி வேர்முத்தக் காசு
முக்கியமாம் பெருமரத்துப் பட்டைசுக்கு மிளகு
தெளிவாக வகைக்கொரு கழஞ்சு கூட்டி
சலமிரண்டு படிவிட்டு கிராம்புபதி னைந்தும்
வளியாக முடிச்சிட்டுப் போட்டெட்டொன் றாக
வறுத்துயதில் பாதி கிராம்பு மரைத்து
நெளியாம லந்திசந்தி மேல்பொடியும் நன்றாய்
நீமூன்று தினங்கொடுக்க நெய்சொல்லக் கேளே! 185

பொ.ரை: மலைதாங்கி வேர், கோரைக்கிழங்கு, பெரு மரத்துப்பட்டை, சுக்கு, மிளகு இவற்றை வகைக்கு 5 கி சேர்த்திடித்து 2.6 லி தண்ணீருள்ள பாத்திரத்திலிடுக. அதனுடன் 15 எண்ணிக்கை கிராம்பினைத் துணியில் முடிந்து போட்டு எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் குடிநீராய்க் காய்ச்சவும். பின்பு அதில் பாதியளவு கிராம்பினை அரைத்துச் சேர்த்துக் காலை, மாலை மூன்று நாள் உட்கொள்ள பொருமல் தீரும். நெய் வருமாறு.

ஈருள்ளி நெய்

சொல்வோம் ஈருள்ளி யிருகழஞ்சு தானும்
துணுக்காக நொறுக்கியொரு சட்டிக்குள் ளிட்டு
வலுவான மணிபிரண்டைச் சாறுசுருக் கிட்டு
வறுப்பதுதான் பொன்னிறம்போல் வறுக்கும் போது
பலவிதநெய் யாகாது பசுவின்நெய் விட்டு
பதமறிந்து யிறக்கிரண்டு காசெடைதா னூட்ட
கொல்வோமென்று வந்தயெம தூதரையும் வெல்லும்
கொடியதொரு நெய்யையின்னங் கூறு வேனே! 186

பொ.ரை: 10 கி வெங்காயத்தைச் சிறுது சிறிதாக நறுக்கி ஒரு சட்டியிலிட்டு மணி பிரண்டைச்சாறு ஊற்றிச் சுருக்கிட்டு வறுத்துக் கொள்ளவும். பொன்னிறமாகும் போது வேறு நெய் விடாது பசு நெய்யைச் சேர்த்து அடுப்பிலேற்றி எரித்துப் பக்குவத்தில் காய்ச்சிப் பதத்தில் இறக்கவும். 24 கி உள்ளுக்குக் கொடுக்கவும். எமன் நம்மைச் சேராது. மற்றொரு நெய்யைக் கூறுவேனாக.

கூறினேன் நாயுருவி ஊமத்தங் கொழுந்து
கொட்டைப்பாக் களவரைத்து வெவ்வேறே வைத்து
ஈறில்லா ஈருள்ளி நொறுக்கியிரு கழஞ்சு
யிரண்டுவமை மருந்து எருமைவெண்ணை யுழக்கு
மாறில்லா வெந்திறக்கு பதத்தில்வடித்தி றுத்து
மருந்துநெய்யும் அறிந்திடவே வளமாகு மப்பா
தேறினது தான்தேறாத் தெளிய வின்னஞ்
செப்பிறேன் மைந்தா தெளிந்து கொள்ளே! 187

பொ.ரை: நாயுருவி, ஊமத்தங்கொழுந்து இவற்றை 2.2 கி எடுத்துத் தனித்தனியே அரைக்கவும். வெங்காயத்தை நசுக்கி 10 கி எடுத்து இரண்டையும் ஒன்று சேர்த்து 325 மி.லி. எருமை வெண்ணெயை உடன் ஊற்றி அடுப்பில் வைத்தெரிக்கவும். வேக வைத்துப் பக்குவமான நெய் பதத்தில் வடித்திறக்கி உள்ளுக்குக் கொடுக்கவும். தெளியும் மருந்து வருமாறு.

தெளிந்துகொள்ள இன்னமொரு வகைதான் கேளு
திறமாக மிளகுயிரு கழஞ்சி யப்பா

களிந்திடவே நுணுக்கியதூள் நல்லவெல்லஞ் சேர்த்தி
கடுகவே வெருகடிதான் காலைசந்தி யேற்றும்
வொளிவது வொளியாவதற்கு யின்னமொன்று சொல்வோம்.
உத்தமனே மிளகுநறு நெய்யு மாட்டி
தெளிந்திருக்கும் பேதிக்கும் கபாடத்தில் சேர்த்து
நீயருந்த கசாயங்கள் நிகழ்த்து வோமே! 188

பொ.ரை: 10 கி மிளகைப் பொடித்து அதனுடன் வெல்லத்தையும், இடித்துச் சேர்த்து மூவிரலளவு காலை, மாலை உட்கொள்ளவும். மற்றொரு மருந்தாக மிளகுடன் நெய்யைச் சேர்த்தரைத்து பேதி நீக்கும் மருந்துடன் கொடுக்கவும்.

அருளாதிக் கசாயம்

நிகழ்த்தவே அருளாதிக் கசாயந் தன்னை
நெடுநாளை மாதுளைபஞ் சாங்கமோ டப்பா
செகத்திலுள்ள பனைவெல்லம் கருங்காலி வேருஞ்
சிறந்ததொரு நீர்ப்பூலா வேரருகம் வேரும்
முகத்தியுள்ள ஆல்முகிழ்மாம் பட்டைபலா வேரும்
ஒங்குபெரு மரத்துப்பட்டை சிற்றண்டம் வேரும்
மகத்திமுத்தக் காசு யிலவு கருவேல
மதின்பிசினும் வெப்பாலை அரிசியுமோ ரெடையே! 189

பொ.ரை: மாதுளையின் ஐந்து பாகங்களான இலை, பூ, காய், வேர், பட்டை ஆகியவை பனைவெல்லம், கருங்காலி வேர், நீர்ப்பூலாவேர், அருகம்வேர், ஆல், முகிழ், மாம்பட்டை, பலாவேர், பெருமரத்துப்பட்டை, சிற்றேரண்டத்தின் வேர், கோரைக்கிழங்கு, இலவு, கருவேலம்பிசின், வெட்பாலையரிசி இவற்றை வகைக்கு 15 கி எடுக்கவும்..

ஒரெடையாங் கோட்டமது வகைக்குமுக் கழஞ்சு
ஒன்றாக யிடித்துதூள் மூன்றும்கூ றிட்டு
நீறுமிரு நாழிதன்னிற் மொருகூறும் விட்டு
நீட்டவதிற் கிழிகட்டி போடவகை சொல்வோம்
பேர்பெரிய சாதிக்காய் கிராம்புசீ ரகமும்
பேரான அதிவிடையம் குரோசாணி ஓமம்

சாரமுடன் நாறுகிழி கட்டிரெண்டு கிழியும்
தறுமெட் டொன்றாக்கியதை யரைத் திடுமே. 190

பொ.ரை: கோட்டம் 15 கி எடுத்து அனைத்தையும் சேர்த் திடித்து அச்சூரணத்தை மூன்று பங்கிட்டு அதில் ஒரு கூறினைக் கிழிகட்டி 2.6 லி தண்ணீரில் போடவும். கிழி கட்டிபோடும் மற்றொரு மருந்து வருமாறு. சாதிக்காய், கிராம்பு, சீரகம், அதிவிடையம், குரோசாணிஓமம் இவற்றை வெள்ளைத்துணியில் முடிந்து குடிநீரில் போட்டு எட்டொன்றாய்ச் சுருக்கிக் காய்ச்சவும்.

அரைத்தமருந்து யிருபோது கசாயத்தில் கலக்கி
அருந்திடுவாய் மூன்றுதின மடங்கு மப்பா
திரைத்தால்வயிற் றிரைச்சல்மற்ற கடுப்புடன்சீ யாவைகள்
தீருதற்கு நரியிலந்தை யாவாரைவேர்ப் பட்டை
நரைத்த தலைபோலிருந்த விஷ்ணுகிரந்தி யுடனே
நாட்டுவா யிருநாழி தண்ணீர் விட்டு
கரைத்திடவே சாதிக்காய் கிராம்புசீ ரகமும்
கருத்துடனே கிழியாறு கட்டிரெண்டு போடே! 191

பொ.ரை: ஆறினபிறகு அவ்விரு மருந்துகளையும் அரைத்து அக்குடிநீரில் கரைத்து காலை, மாலை மூன்று நாட்களுக்குக் கொடுக்கத் தீரும். வயிற்றிரைச்சல், கடுப்பு, சீழ் தீருதற்கு நரி யிலந்தை, ஆவாரைவேர்ப்பட்டை, வெள்ளையாயிருக்கும் விஷ்ணுகிரந்தி, எடுத்து 2.6 லி தண்ணீருள்ள பாத்திரத்திலிடவும். சாதிக்காய், கிராம்பு, சீரகம் இவற்றை வெள்ளைத்துணியில் முடிந்து ஆறு கிழியாய்க் கட்டி அதில் இரண்டைக் குடிநீரில் போடவும்.

போட்டகிழி கசாயத்தி லெட்டொன் றாக்கி
புனிதமா யிருபோது கிழியரைத்துக் கொடுக்க
சாட்டையில்லா பம்பரம்போ லாட்டுவது போலுஞ்
சாதகமா யின்னம்வரிசை சாற்றக் கேளு
ஊட்டமெல்லாந் தனைப்பதற்கு விளாம்பழத்தி னோடு
உற்பனஞ்சேர் மாதுளையின் தோடுங் கூட்டு
வாட்டமில்லா புழுக்கைவேரு அருகம்வேரு மப்பா
மறுவில்லா வில்லைவேர் முத்தக்கா சாமே! 192

பொ.ரை: எட்டொன்றாய்ச் சுருக்கி அதில் கிழியைச் சேர்த்தரைத்து இரு பொழுது கொடுக்க கழிச்சல் தீரும். ஊட்டமெலாம் தழைப்பதற்கான மற்றுமொரு மருந்து வருமாறு. விளாம்பழத்தின் ஓடு, மாதுளம்பழத்தின் தோல், புழுக்கைவேர், அருகம் வேர், வில்வவேர், கோரைக்கிழங்கு எடுக்கவும்.

ஆமடா வெப்பாலை யரிசிநெற் பொரியும்
அதிவிடையம் மிளகு சமானா யிட்டு
நாமடா சலமுமிரு நாழியெட்டொன் றாக்கி
நறுந்தேனுங் காசெடைதா னந்தி சந்தி
ஓமடா சாதிக்காய் பத்திரி கிராம்பு
ஓங்குமதி விடையமுடன் குரோசாணி ஓமம்
போமடா வெதுப்புத்தூள் மேல்பொடியுந் தூவிப்
பொல்லாத வயிற்றுளைச்சல் கடுப்பும்போய் விடுமே! 193

பொ.ரை: வெட்பாலையரிசி, நெற்பொரி, அதிவிடையம், மிளகு ஆகியவற்றைச் சமமாயெடுத்து 2.6 லி தண்ணீரூற்றிய பாத்திரத்தில் போட்டு எட்டிலொன்றாய்க்காய்ச்சி அதில் தேனைத் தக்க அளவு ஊற்றவும். 12 கி காலை, மாலை உட்கொள்ளவும். சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடையம், குரோசாணிஓமம் இவற்றை இளவறுவலாய் வெதுப்பித் தூளாக்கிச் சூரணத்தைத் தூவிக் கொடுக்க வயிற்றுளைச்சல், கடுப்பும் தீரும்.

போய்விடவே வயிற்றூரத்த கடுப்புளைச்சல் தனக்கு
புகழான ஆவரையி லஞ்சுவகை கூட்டு
மாயவல்லி மொட்டுப்பூ கிராம்புசா திக்காய்
மகத்தான வகைக ழஞ்சு சமனாய்
வியமுட னொருசட்டி வேடுகட்டி வைத்து
விரைந்தரைத்து யெருமைமோர் தயிரி லூட்ட
நேயமாய் நின்றுபோம் மின்னும்விசித் திறமாய்
நிகழ்த்துறது உற்பனமாய் நீயறிந்து செய்யே! 194

பொ.ரை: ஆவாரையில் ஐந்து வகைப் பூக்களுள்ளதைச் சேர்க்கவும். மொட்டுப்பூவாக இருக்கும் கிராம்பு, சாதிக்காய் இவற்றை வகைக்கு 5 கி எடுத்துப் பொடித்து ஒரு சட்டியிலிட்டு

வேடு கட்டி வேகவைத்து, அச்சூரணத்தை எருமை மோர், தயிரில் கலந்து கொடுக்க வயிற்றுளைச்சல், கடுப்பு குணமாகும்.

மற்றுமொரு கசாயம்

செய்யடா இன்னமொரு கசாயங் கேளு
சித்தரத்தை மலைதாங்கி வேருபூ நாகம்
மெய்யடா பெருமரத்துப் பட்டைசமன் கூட்டி
மேல்மருந்து கிராம்புபத்து கிழிகட்டிப் போட்டு
வய்யடா யிருநாழிநீ யெட்டொன் றாக்கி
மைந்தனே கிழியரைத்து யந்திசந்தி கலக்கி
கொய்யடா மூன்றுதினம் கொடுத்து நீயும்
குடல்படுவன் பிளவைபுடைத் தெழுந்தகொடிநோய் குளம்பே! 195

பொ.ரை: சிற்றரத்தை, மலைதாங்கிவேர், பூநாகம், பெருமரத்துப்பட்டை இவற்றைச் சமமாய் எடுக்க. 10 கிராம்பினைக் கிழியாகக் கட்டிக் குடிநீரில் போடவும். பின் 2.6 லி தண்ணீரை எட்டொன்றாய்க் குறுக்கிய அக்குடிநீரில் கிழி மருந்தினை யரைத்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க குடல்படுவன், பிளவை தீரும்.

சிலந்திப்புண்களுக்குக்குழம்பு

குளம்புபல புண்களுக்குச் சிலந்திக் கெல்லாம்
கூறுகிறேன் சிறுகொட்டைப் பருப்பு ழக்கு
இளம்பிள்ளை முலைப்பாலில் ஆட்டி வாங்கி
உழக்கடா முலைப்பாலு மேரண்டத் தயிலம்
விளம்பெறவே மத்தித்து சிரட்டை யொன்றில்
வைத்துவை யெழுந்தவீக்கம் பிளவைக் கெல்லாம்
தளம்பெறவே முகம்விட்டுப் பக்கத்துக் கன்னத்தில்
தடவிடவே விதன்மைவிடும் தொற்றிந்தல்பற் றிடுமே! 196

பொ.ரை: சிலந்தி பல புண்களுக்கான குழம்பு வருமாறு. சிறுகொட்டைப்பருப்பு 325 மி.லி. எடுத்து தாய்ப்பாலில் அரைத்து அவ்விழுதையும் சிற்றாமணக்குத்தைலத்தையும்

கலந்து சிரட்டையொன்றில் வைக்கவும். வீக்கம், பிளவை யிருக்குமிடத்தில் முகம், கன்னத்தில் மருந்தைத் தடவவும்.

வற்றாமல் நீர்கொண்டு பறந்துகன்னத் திருந்தால்
வளையமாய் குழம்புதனைப் பூசு பூசு
வற்றாமல் எழும்பியே உடையு மப்பா
மறுபடியுஞ் சலமாணி கழன்று போகும்
வற்றாத குழம்பதனைச் சீலையிலே ஊட்டி
வாய்மேலே போட்டபின்பு வளையப் பூசு
வற்றாத சிலந்திபருப் படுவன் வீக்கம்
வன்பிளவை பிடைத்ததெல்லாம் வளமாய்ச் செய்யே! 197

பொ.ரை: கன்னத்தில் நீரானது தங்கி வீங்கிய இடத்து அக்குழம்பினைப் பூசவும். அப்படியே அமுங் கிடாது பிளவையானது வீங்கி பெரிதாகிப்பின் உடையும். நீர் வெளியேறும். குழம்பினைத் துணியிலே பூசி கட்டி வாயின்மீது போட்டுப் பின்சுற்றியும் பூசவும். சிலந்திகள், பரு, படுவன், வீக்கம், பிளவை இவை தீரும்.

செயவீரக்குழம்பு

செய்யடா செயவீரக் குழம்பு தன்னை
திறமாக வோர்கழஞ்சு சீந்தி டாமல்
பைய்யடா துணுக்கியே ஆவின் வெண்ணெய்
படிகால் தண்ணீர்வாங்கிப் பண்பாய்க் கூட்டி
யெய்யடா வொரு சாம மாட்டி
நலமாய் பரணியிலே அடைத்து வைத்து
வைய்யடா பிளவைமுதல் மார்பி லாணி
மகத்தான புண்பொடிக ளாறுந் தானே! 198

பொ.ரை: செயவீரக்குழம்பினை 5 கி எடுத்துப் பொடித்து பசு வெண்ணெயை 325 மி.கி. சேர்த்துத் தண்ணீர் ஊற்றி மூன்று மணி நேரமரைக்கவும். குழம்பைப் பரணில் அடைத்துப் பிளவை முதல் மார்பில் உண்டாகும் ஆணி வரைக்கும் உபயோகப்படுத்த புண் பொடிகள் ஆறிப் போகும்.

ஆறுந்தா னிக்களிம்பி லெல்லாம் போகும்
அப்பனே பழங்காடி புளியிலையை வெந்து
கூறாக அந்திசந்தி காடியாற் கழுவி
கூட்டுவாய் சீலைகொண்டு உழநீர் மாற்றி
வேறுபடி யிலைச்சீலை களிம்பை யூட்டி
விரைந்துநீ போடுபுண்க ளாறு மட்டும்
தாறுமாறாய் புரையும் புண்ணு மாறி
தழும்புகறுத்து உலர்ந்துவிடும் தன்மை பாரே! 199

பொ.ரை: பழங்காடியையும் புளியிலையையும் சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். காலை, மாலை புண்ணினைக் காடியினால் கழுவிவிடவும். வேகவைத்ததை அரைத்துச் சீலையிலே பூசி புண்வாயின் மீது போடவும். சுற்றிலும் களிம்பைப் பூசி விடவும். அவ்வாறு செய்ய புண் ஆறி கறுப்புத் தழும்பு உலர்ந்து விழும்.

தண்மையாய்ச் சொல்லிவிட்டோம் அடக்கம் விட்டு
சாத்திரத்தை யொருவருக்கும் காட்ட வேண்டாம்
உண்மையாம் பாசத்தோர்க் குரைக்க நன்று
உத்தமராய் தசதீட்சைக் குள்ளே சேர்க்கும்
வண்மையாய் கபடற்ற பேர்க்கு மைந்தா
வகைபிரித்துக் காட்டினால் மகிமை யுண்டு
பண்மையாய் இந்நூலைப் பார்க்க பார்க்க
பண்டித சிரோமணியாம் பாரு பாரே! 200

பொ.ரை: முறைகளைக் கூறினோம். சாத்திரங்களை யாருக்கும் கொடுக்க வேண்டாம். உண்மையாயிருப்போர்க்குக் கூறவும். பத்து வகை தீட்சைக்குள்ளே அடங்கும் இதைக் குற்றமில்லா தோர்க்குக் கூறவும். வகைகளைப் பிரித்துக் காட்டவும் நன்மை பயக்கும்.

கௌரி சிந்தாமணி செந்தூரம்

பாரப்பா கௌரிசிந்தா மணிசெந் தூரம்
பாடுகிறேன் ரசகெந்தி வெண்காரம் மூன்றும்
சீரப்பா வகையொரு பலந்தா னாகச்
செய்கின்ற சுத்தியிலே தெளிந்து பின்பு

வாரப்பா கல்வத்தி லிட்டு யாட்ட
மயனமென்ன வெண்காரத் தாலே மாளும்
நேரப்பா வறைபோல கருத்தி ருக்கும்
நேர்த்தியாம் பொடியதனைக் கிழிபோல் கட்டே! 201

பொ.ரை: இரசம், கெந்தகம், வெண்காரம் இவற்றை வகைக்கு 35 கி எடுத்துத் தனித்தனியே முறைப்படி சுத்தி செய்யவும். அதனைக் கல்வத்தில் போட்டு அரைத்து மை போன்று விழுதாக்கிக்கொள்ளவும். கருப்பான பொடியாகும்.

கிளிபோல கட்டியதே யவ்வண்ண மப்பா
கெட்டியாய் மிரட்டிலே கொட்டைப் பாக்கு
வளிபோல கிழிக்கெல்லாம் வெவ்வே றாக
வரிசைபெற கெட்டியாய் ஒருதாழி தன்னில்
ஒளிவான மணல்கொட்டி முக்கால் மட்டும்
ஒவ்வொன்று கிழிமணலி லூன்றிய பின்பு
தெளிவாக மணல்நிரம்ப விட்டு மப்பா
சிறப்பாக உலைமூடிக் கொண்டு மூட்டே! 202

பொ.ரை: மேற்சொன்ன பொடியை, 2.2 கி அளவுள்ள கிழிகளாகக் கட்டி வெவ்வேறாக வைக்கவும். தாழி ஒன்றினுள் முக்கால் பாகம் அளவுக்கு மணலைக் கொட்டி அதனுள் கிழி ஊன்றும் அளவுக்கு வைத்துப் பின் மேலும் மணல் நிரப்பி மூடி உலை வாயை மூடவும்.

மூட்டப்பா பரிசைபெறச் சாணாழக் குழியில்
முடிக்கவே யெருவடுக்கி மேற்றாளி கவிழ்த்தி
போட்டடா யெருவடுக்கி கசப்புடத்தை நன்றாய்
பொலிவாகக் கணேசனுக்குப் பூசை நடத்தி
நாட்டடா அக்கினியை மூட்டவொரு நாளு
நயமாக மறுநாளு மாறியபின் னப்பா
சூட்டடா தேவிமுதல் வடுகனை நன்றாகத்
தொழுவதற்குப் பூசைவிதி துடங்கு வாயே! 203

பொ.ரை: சாண் அளவு குழியினைத் தோண்டி வறட்டி கொண்டடுக்கி தாழியினை வைத்துப்பின் மேலும் ஆயிரம் வறட்டி யினை வைத்துக் கணேசனுக்குப் பூசை செய்து அடுப்பெரிக்கவும்.

ஒரு நாளெரித்து மறுநாள் ஆறினபின் எடுத்து தேவி முதல் வடுகன் வரை உள்ள தெய்வங்களுக்குப் பூசை செய்வாயாக.

துடங்குவாய் பலவியாதியும் நன்றாய்ச் செய்து
துதித்தந்தப் புடம்விரித்துச் சூட்டிப் பாரு
வடங்கினதோர் செந்தூரம் பூவம்பழம்போல் கறுத்து
அப்பனே யிருக்குமது அய்ய மில்லை
மடங்கா மாறுபுடம் போட வேண்டாம்
மகத்தான நோயெல்லாம் வாங்கும் வாங்கும்
புடங்காண போகாது அனுபானம் தன்னை
பூட்டிறேன் வகையாகப் பூட்டி றேனே! 204

பொ.ரை: தக்க நேரங்கழித்து புடத்தை ஆறவைத்து எடுத்துப் பார்க்க செந்தூரமானது பூவம்பழம் போல் கறுத்திருக்கும். வேறுபுடம் வேண்டாம். இச்செந்தூரத்தால் பல நோய்கள் குணமாகும். அனுபானத்தை முறையாகக் கூறுகிறேன். கேட்பீராக.

பூட்டடா திரிகடுகு வெதுப்பித் தூளில்
புகட்டடா வெருகடியில் தேனுங் கூட்டி
பூட்டடா பணவெடை செந்தூர மந்திசந்தி
பிலத்ததுற்கு மண்டலந்தான் பேணி பார்த்து
பூட்டடா சூலை பதினெட்டு வகையும்
பொல்லாத வாய்விரு பத்தாறு மகலும்
பூட்டடா பதினாறு குன்மம் உள்மாந்தை
பொல்லாத சுரங்களெலிக் கடியும் போமே! 205

பொ.ரை: சுக்கு, மிளகு, திப்பிலி, சேர்ந்த தூளை இளவறுவலாய் வெதுப்பி அதில் மூவிரலளவு எடுத்துத் தேவையான அளவு தேனையும் சேர்த்து 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து காலை, மாலை கொடுக்கவும். இவ்வாறு நாற்பது நாட்கள் உட்கொள்ள பதினெட்டு வகை சூலை, இருபத்தாறு வகை வாய்வு, பதினாறு வகைக் குன்மம், உளைமாந்தை, சுரங்கள், எலிக்கடி குணமாகும்.

போமப்பா மந்தார காசமோடு ஈளை
பொருமியதோர் இருமல்சயங் காச சுவாசம்

போமப்பா சுரமாந்தை முதலிரைப்பு
புகழாறு காமாலை யோனி சூலை
போமப்பா சயசூலை யண்ட வாதம்
பொல்லாத துடைவாழை விப்புருதி பலவும்
போமப்பா நாவில்வருஞ் சூலைபக்கச் சூலை
புரிசுத்தி வருங்கண்ட மாலையும்போய் விடுமே! 206

பொ.ரை: மந்தாரகாசம், ஈளை, இருமல், சயம், காசசுவாசம், சுரமாந்தை, இரைப்பு, காமாலை, யோனி சூலை, சயசூலை, அண்டவாதம், துடை வாழை, விப்புருதி, நாக்கு சூலை, பக்கச் சூலை, கண்டமாலையும் தீரும்.

போய்விடுமே கரப்பான்புண் கன்னவிப் புருதி
புகைதீரு மூங்குவளை விப்புருதி கூடப்
போய்விடுமே கூட்டுவிப் புருதி தானும்
பூட்டிறேன் அனுபானம் புகழ்ந்து கேளு
போய்விடுமே செந்தூரம் பணவிடையி னோடு
புனிதமுறுஞ் சாதிக்காய் பத்திரி கிராம்பு
போய்விடுமே அதிவிடையம் வெதுப்பித் தூளாய்
போக்குடனே வெருகடியில் தேனுங் கூட்டே! 206

பொ.ரை: கரப்பான், புண், கன்னவிப்புருதி, குவளை விப்புருதி, கூட்டுவிப்புருதி ஆகிய நோய்கள் தீருவதற்கான அனுபானம் வருமாறு. 488 மி.கி. செந்தூரம் எடுத்து சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடையம் ஆகியவற்றை வெதுப்பிச்சூரணித்து மூவிரலளவெடுத்துத் தேவையான தேனையும் சேர்த்துக்கொடுக்கத் தீரும்.

கூட்டியே அரிதாரம் பனிரெண்டு வகையும்
கூறரிய கடுப்புமுதல் கூறு கூறாய்
நீட்டியே செய்கின்ற கிராணிவகை தீரும்
நின்றுபோம் இன்னமொரு பணவெடைசெந் தூரம்
காட்டிலேவாழ் கறணைக்கிழங் குலர்த்திப் பொடியும்
கருஞ்சுறுக்கு திப்பிலிப் பொடியும் கூட்டி
மூட்டியே வெருகடியில் தேனுங் கூட்டி யுண்ண
மூலவகை யொன்பதுவும் பவுத்திரங்கள் போமே! 208

பொ.ரை: அரிதாரம் பனிரெண்டுவகையும் எடுத்து அதனுடன் செந்தூரத்தைக் கலந்து கொடுக்க கடுப்பு முதல் கிராணி வகைகள் குணமாகும். கறணைக் கிழங்கினை உலரச் செய்து பின் பொடித்து அதனுடன் திப்பிலிப்பொடியும் சேர்த்து மூவிரலளவெடுக்க. தேனைக்குறிப்பிட்டளவு கலந்து செந்தூரத்தை உட்கொள்ள பவுத்திரங்கள் தீரும்.

போமப்பா பவுந்திரங்கள் யொளிவ தல்லால்
பூட்டிறேன் செந்தூரம் பணவெடையி லின்னம்
ஆமப்பா ஆவிரையின் தயிலத் தூட்டு
அப்பனே சதையடைப்பான் பதினெட்டு வகையும்
வேமப்பா நீரழிவு இருபத் தொன்றும்
மென்மேலும் எலும்புருக்கி பனிரெண்டும் கூட
நாமப்பா யின்னங்கேள் மூத்திர மண்டஞ்சு
மால்கெடுக்கும் மூத்திரப்பா ளையந்தா ணாமே! 209

பொ.ரை: பவுத்திரங்கள் தீருவதற்கு 488 மி.கி. செந்தூரத்தை ஆவாரைத் தைலத்துடன் சேர்த்துக் கொடுக்க சதையடைப்பு பதினெட்டு வகையும் இருபத்தொரு வகை நீரிழிவும் தீரும். எலும்புருக்கி பனிரெண்டு வகையும் மூத்திரண்டம், மூத்திரப் பாளையும் தீரும்.

ஆறாக வருமேக மிருபத் தொன்றும்
அத்திசுர மெட்டுவகை யுஷ்ணமு மாறும்
நீராகுஞ் செந்தூரம் பணவெடை யினோடு
நெத்தியபேர் அழிஞ்சிவிரைத் தயிலத் தூட்டி
பேரான வயிற்றுநோய் அறுபத் துடனே
வாய்வுருண்டு திரண்டிருந்தி விடுமுப்பத் திரண்டுங்
கூரான விப்புருதி யெல்லாந் தீரும்
கூறுகிறே னின்னயனு பானங்கள் கேளே! 210

பொ.ரை: இருபத்தொரு வகை மேகமும் எட்டு வகை அஸ்திசுரமும் உட்டிணமும் தீருவதற்கு 488 மி.கி. செந்தூரத்தை அழிஞ்சிவிதைத் தயிலத்துடன் சேர்த்துக் கொடுக்கவும். அறுபது வகை வயிற்றுநோய், வாய்வுவகை முப்பத்திரண்டு, விப்புருதி அனைத்தும் தீரும்.

கேளப்பா செந்தூரம் பணவெடையி லின்னங்
கெடியான யெருக்கிலையில் பழுத்ததை வாட்டி
நாளப்பா ஒருசேரை தண்ணியிலே யூட்ட
நலமான வயிறெடுக்கும் மோருஞ்சோ றுண்ணு
கேளப்பா ஒன்றுமில்லை ஒன்றைவிட்டு ஒருநாள்
கொண்டிடவே விசபாகஞ் சோகை காமாலை
நீளப்பா சோபமொடு பயித்தியம் பாண்டு
நீர்க்கோர்வை அகவையொடு சுரமும் போமே! 211

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை எடுத்து, பழுத்த எருக்கிலையை வாட்டி 280 மி.கி. தண்ணீரில் போட்டு ஊறவைத்து அக்குடிநீரில் கலந்து கொடுக்க கழிச்சலாகும். பின்னர் மோர்ச் சோறு சாப்பிடவும். ஒரு நாள் விட்டொரு நாள் அவ்வாறு செய்ய விசபாகம், சோகை, காமாலை, பித்தபாண்டு நீர்க்கோர்வை, சுரம் ஆகியவை தீரும்.

சுரம்போகு மிந்தசெந் தூரத் தாலே
சொல்லரிய அனுபானம் சூட்டிப் பாரு
அரம்போலே நோயறுக்கு மப்பா சொன்னேன்
ஆச்சரியம் பத்தியத்தை யறையக் கேளு
பரம்பரைக்கு அறுநூறைப் படிநாம் சொன்னோம்
பத்தியந்தான் வெள்ளாட்டுப் பாலைக்கொள்ளு
திரம்பசிற் றுப்புக்கறிகள்
சீராட்டுக் கண்டமுதல் தேட லாமே! 212

பொ.ரை: இச்செந்தூரத்திற்கு வேண்டிய அனுபானங்கள் சொல்லப்பட்டன. அவற்றைப் பயன்படுத்தவும். நோய்கள் குணமாகும். பத்தியம், கூறக்கேட்பீராக! வெள்ளாட்டுப்பாலைக் குடிக்கவும். உப்பு குறைவாயுள்ள கறிகள், ஆட்டுக்கண்டம் சேர்க்கலாம்.

ஏலாதித்தைலம்

ஏலாதித் தயிலந் தன்னை
செப்புகிறேன் ரோகங்க ளனைத்தும் போக
மூடரிய வாலரசுப் பத்திரிநீ ரழிஞ்சில்
முதுகொன்றை மருதுஞ் சிலத்தி கோவை

யோடரிய வமுக்கிரா தலைச்சுருளி வேம்பு
பேய்ப்புடோல் லாலாசீர் பெரிய புரசு
நீடரிய வெட்டிமுத்தக் காசிவை வகைக்கு
நிறைபத்து பலம்வேர்ப் பட்டைரண்டு தூக்கே! 213

பொ.ரை: நோய்கள் நீங்குதற்கான தைலம் வருமாறு; ஆல், அரசு, சாதிபத்திரி, நீரழிஞ்சில், முதுகொன்றை, மருது, கோவை, அமுக்கிரா, தலைச்சுருளி, வேம்பு, பேய்ப்புடல், பெரும்புரசு, வெட்டிவேர், கோரைக்கிழங்கு இவற்றை வகைக்கு 350 கி எடுக்கவும்.

தூக்கியொன்றா யிடித்ததற்குச் சலம்பத்து மரக்கால்
சோர்வன்றி மிடாவிலே கசாயம் போட்டு
தாக்கியது தீயெரித்து நாலொன் றாக்கி
சங்கைபெற நெல்லிக்காய் சாறுபடி யொன்று
வாங்கிநல்ல ஆவின்பால் படிதான் மூன்று
அப்பனே நல்லெண்ணெய் படிதான் ரண்டும்
போக்கியே மருந்தைச் சொல்வோ
முத்தமனே யேலமொடு லவங்கம் சேரே! 214

பொ.ரை: மொத்தமாக 3.5 கி.கி. எடுத்திடித்து 53 லி தண்ணீருள்ள பாத்திரத்தில் போட்டுக்காய்ச்சி நான்கிலொன் றாய்ச் சுருக்கி மிடாவில் வடிகட்டிக் கொள்ளவும். 1.3லி நெல்லிக்காய்ச்சாறு, பசும்பால் 3.9 லி, நல்லெண்ணெய் 2.6 லி, ஏலம், இலவங்கம் சேர்க்கவும்.

சேராத காங்கய கச்சோலம் கல்மதம்
சிறுநாகப் பூவுடனே செங்கழுநீர் கோஷ்டம்
பேர்பெரிய தாளிசபத் திரியினோடு
பெருங்குரும்பை லிங்கமொடு சாடா மாஞ்சி
பார்புகழும் சதகுப்பை பொன்மெழுகு மஞ்சள்
பழந்தாரஞ் சாதிக்காய் புன்னைக் கொட்டை
சீரழிஞ்சில் வேருசன்னம் வித்துடன் நன்னாரி
சிறந்ததொரு குங்குமப் பூவுடன் குறச்செவ்வியே! 215

பொ.ரை: கச்சோலம், கல்மதம், சிறுநாகப்பூ, செங்கழுநீர், கோட்டம், தாளிசபத்திரி, பெருங்குரும்பை, இலிங்கம், சடாமாஞ்

சில், சதகுப்பை, பொன்மெழுகு, மஞ்சள், சாதிக்காய், புன்னைக் கொட்டை, சீரழிஞ்சில்வேர், சன்னம் வித்து, நன்னாரி, குங்குமப் பூ ஆகியவற்றைத் தக்க அளவு எடுத்து இடித்துப் போடவும்.

செய்தபின்பு நாலாம்நாள் பதத்திலே வடித்து
செப்புறேன் முன்மருந்து குங்குமங் கற்பூரம்
செய்ததொரு கோரோசனை புளுகுசட்ட மப்பா
தீருக்கன்றித் தட்டிநீ போடுவடித் திடவே
செய்தபலன் கணபதிக்குந் தேவிவடு கனுக்கும்
சிறப்பாக பூசிநீ சிந்தைகளி கூற
செய்துவண்டு கண்டிவைத்து யெட்டுநாளைக் கொருக்கால்
சிறப்புடனே முழுகிவர வகைசெப்பி றேனே! 216

பொ.ரை: முறைப்படி தைலமாய்க் காய்ச்சி நான்காம் நாள் பதத்தில் வடித்துக் கொள்ளவும். அச்சமயம் குங்குமம், கற்பூரம், கோரோசனை, புனுகுசட்டம் இவற்றை இடித்துப் போடவும். வடித்திறுத்து கணபதிக்கும் தேவிக்கும் வடுகனுக்கும் பூசை செய்து வைத்து வேடுகட்டி பத்திரப்படுத்தவும். எட்டு நாளுக்கொரு முறை தலை முழுகி வரவும்.

செப்புகிறேன் சீயக்கா யரப்பு மிட்டு
சீராக வெந்நீருந் திடமா யப்பா
ஒப்புறேன் நாளுநாளுக் கொருக்கால் பின்பும்
ஒரெட்டு நாளுக்கொருக்கால் மூழ்கச் சொல்லு
தப்பில்லா முழுக்கன்று பால்தயிர், மோரு
தவிர்ப்பது மற்றாநாள்தான் தாழ்வில்லா தருந்து
வைப்பில்லா தடக்கம்விட்டு சொல்லி விட்டேன்
மைந்தனே வியாதிபோம் வகையைக் கேளு! 217

பொ.ரை: சிகைக்காய், அரப்பு தேய்த்து வெந்நீரூற்றிக் குளிக்கவும். முதலில் நான்கு நாட்களுக்கொருநாளும் பிறகு எட்டு நாட்களுக்கொரு நாளும் முழுகவும். தலை குளிக்கும் நாள் பால், தயிர், மோர் நீக்குவது நன்மை பயக்கும். அடுத்தநாள் அவற்றைச் சேர்க்கவும். போகும் வியாதிகள் வருமாறு.

வகைகேளு சயரோகம் காச சுவாசம்
மண்டையிலே வருஞ்சூலை பீனசங்கள் ஒழியும்

பகையான உள்சுரமும் மாந்தை காந்தல்
பண்டிலுள்ள காவையுடல் எரிவுகளும் தீரும்
திகையாத மேகவகை பயித்தியம் பாண்டுந்
தீராத வினைதீர்க்கும் சிற்றரத்தை பாரே! 218

பொ.ரை: சயநோய், காசசுவாசம், மண்டைச்சூலை, பீனசங்கள், உள்சுரம், மாந்தை, காந்தல், உடல் எரிவு, மேக வகைகள், பித்தபாண்டு ஆகிய நோய்கள் ஏலாதித் தைலத்தால் தீரும்.

உஷ்ணத்துக்கு அட்ட சூரணம்

பாரப்பா அஷ்டசூர ணத்தைச் சொல்வேன்
பருத்திவிரை கழஞ்சு யிடப்புங் கூட்டி
சீரப்பா பெருங்காயம் பத்திரி கிராம்பு
தேடரிய வழகிலிந்து கல்லுப்புங் கூட்டி
சேரப்பா கருவேம்பு வகைக்குமுக் கழஞ்சி
சிறந்ததிரி கடுகுடனே சீரக மிரண்டு
நேரப்பா ஓமம் லவங்கப் பத்திரி
நிறைவகைக்கு ஒருபலந்தான் தூக்கு தூக்கே! 219

பொ.ரை: அட்ட சூரணத்திற்கான மருந்துவகைகள் பருத்தி விதை 5கி., பெருங்காயம், சாதிபத்திரி, கிராம்பு, இந்துப்பு, கல்லுப்பு, கருவேம்பு இவற்றை வகைக்கு 15 கி எடுக்கவும். சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், பெருஞ்சீரகம், ஓமம், இலவங்கப் பத்திரி இவற்றை வகைக்கு 35 கி எடுக்கவும்.

தூக்கியே மருந்தெல்லாம் வெதுப்பித் தூளாய்ச்
சூரணமா மதற்கு அனுபானம் சொல்வேன்
தாக்குவது உஷணத்தின் வாய்வு தாக்கில்
தனித்தயிள வெந்நீரில் வெருகடிதான் கொள்ளு
போக்கும்வெரு கடிபொடியைச் சோற்றில் தூவி
பிரட்டியது நெய்விட்டுப் பிடிகவள மஞ்சு
நீக்கில்லா துண்டபின்பு மறுகறிகள் கூட்டல்
நின்றுவிடு முஷ்ணம் வாய்வுக் கெல்லாம்! 220

பொ.ரை: மேற்சொன்ன மருந்துகளை இளவறுவலாய் வறுத்துத் தூளாக்கிக் கொள்ளவும். வெப்பத்தினால் தாக்கிய வாய்வெனில் வெதுவெதுப்பான நீரில் மூவிரலளவு சூரணத்தைக் கலந்து கொடுக்கவும். அவ்வளவான சூரணத்தையே வடித்தாற்றிய சோற்றில் தூவி நெய் ஊற்றிப் பிசைந்து ஐந்து கைப்பிடியளவு உருண்டைகளை உட்கொள்ள உஷ்ண வாய்வு குணமாகும்.

நேயமுடன் முத்தக்கா சறுகழஞ்சு கூட்டி
நீருமிரு நாழிதனை யெட்டொன் றாக்கி
வீயமுட னந்திசந்தி வெருகடி சூரணந்தான்
விரும்பிநீ கொண்டுவர வினையொழியும் பாரு
வாயமாம் பித்தவெட்டை வாய்வு வேணும்
பச்சையமுது படிகழுநீரி லந்திசந்தி யருந்தே! 221

பொ.ரை: கோரைக்கிழங்கு 30 கி. முடன் 2.6 லி தண்ணீர் ஊற்றி எட்டொன்றாய்க் குறுக்கிய குடிநீராய்க் காய்ச்சவும் அதில் மூவிரலளவு அட்ட சூரணத்தைக் கலந்து காலை, மாலை கொடுக்க வினை நீங்கும். பித்தவெட்டை, வாய்வு தீரும். பச்சரிசி கழுவிய நீரில் காலை, மாலை கொள்ளவும்.

ஏலாதிச் சூரணம்

அருந்துவது மண்டலந்தான் நேர்பலம தானால்
அற்பசற்ப நோய்களுக்கு அதிற்பாதி கொள்ளு
திருந்துமினி யேலாதி சூரணத்தை யப்பா
செப்புகிறேன் புலத்தியனே மச்சமுனி கேளு
மருந்தானால் பிணிதீர வயித்தி யத்தைச் செய்யும்
வகையேல மிலவங்கம் மஞ்சளதி மதுரம்
பொருந்துதிரி கடுகுடனே திப்பிலியின் மூலம்
புகழ்செவ்வியஞ் சிற்றரத்தை சந்தனத்தின் பொடியே! 222

பொ.ரை: சிறிது வன்மையான நோய்களுக்கு 40 நாட்களும் வன்மை குறைந்தவற்றிற்கு 20 நாட்களும், சூரணத்தை உட்கொள்ளவும். பிணி நீங்கும். ஏலாதி சூரணம் வருமாறு; ஏலம், இலவங்கம், மஞ்சள், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சிற்றரத்தை, சந்தனப் பொடி,

சந்தனமுஞ் சாதிக்காய் பத்திரி கிராம்பு
தாகமுடன் வால்மிளகு முந்திரிகை பேரீந்து
பந்தமுள்ள பேரினமாற்றாது கொத்து மல்லி
பருநெல்லி நெற்பொரி மாம்பருத்தி விதைப்பருப்பு
அந்தமுள்ள மாதுளை விளாவில்வத் தோடும்
அப்பனே நிலப்பனைவே ரமுக்கிரா நன்னாரி
கந்தமுத்தக் காசுடனே சீந்திதண்டு கூட்டி
கண்கண்டது கையதுக்கு கழஞ்சியொன் றாகிடுமே! 223

பொ.ரை: சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, வால்மிளகு, முந்திரி, பேரீந்து, கொத்துமல்லி, நெல்லி, நெற்பொரி, பருத்தியின் விதைப்பருப்பு, மாதுளை, விளா, வில்வப்பழத் தோல், நிலப்பனைவேர், அமுக்கிரா, நன்னாரி, கோரைக் கிழங்கு, சீந்தில் தண்டு இவற்றை வகைக்கு 5 கி எடுக்கவும்.

எடுத்த மருந்துகைக்கு நேர்சமனாய்ச் சீனி
இயல்பாக மருந்துலர்த்தி யிடித்துத்தூள் கலந்து
வடித்துநீ புதுக்கற்கத் திட்டுக் கொண்டு
மைந்தனே உண்டுவர அனுபானங் கேளு
கடித்தவாய் துடைத்தாப்போல் வியாதிகள் தீரக்
கற்மமசங்களே கழிந்துவிடு மண்டலந்தா னருந்து
பிடித்தபிடி வெருகடிதான் தேனிஞ்சிச் சாற்றில்
புகழ்நிம்பச் சாற்றிலு மூட்டயின்னங் கேளே! 224

பொ.ரை: அம்மருந்துகளை உலர்த்தி இடித்துச் சூரணமாக்கிப் புது கற்கத்தில் போட்டுக் கொள்ளவும். அதனைத் தக்க அனுபானங்களுடன் கொடுக்க பல நோய்கள் தீரும். நாற்பது நாட்கள் தொடர்ந்து கொடுக்கவும். மூவிரலளவு சூரணத்தைத் தேன், இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவற்றில் கொடுக்கவும்.

இன்னங்கேள் மாதுளையின் பழச்சாறு மாகு
மதினாலே நோயழியும் எரிவுடனே ரெத்தம்
சன்னமாய் வருந்தாப சோபம்சத்தி பித்தம்
தலைநோயுஞ் சத்திசுரம் வாத வாய்வு
பன்னுவிஷ பாகம் ஈளை இருமல்
பலசுரமும் உப்பிசமும் நெஞ்செரிப் புக்கும்

நன்னயஞ்சே ரசுவகெந் தாதிசூ ரணத்தை
நாட்டுறேன் புலத்தியனே நயந்து கேளே! 225

பொ.ரை: மாதுளம் பழச்சாற்றில் ஏலாதி சூரணத்தைக் கலந்து கொடுக்க எரிவு, பித்தம், தாபம், சோபை, சத்தி பித்தம், தலைவலி, சத்தி சுரம், வாத வாய்வு, விடபாகம், ஈளை, இருமல், பலவகைச்சுரம், உப்பிசம், நெஞ்செரிவு தீரும், அசுவகெந்தாதிச் சூரணம் வருமாறு.

அசுவகெந்தாதிச்சூரணம்

கேளப்பா அமுக்கிராவேர் பலமு மூன்றுங்
கெடியான சுக்கேலங் கூகை நீறும்
கேளப்பா வகையொன்றுக் கோர்ப லந்தான்
கிராம்புசிறு நாகப்பூ கிளர்பலந்தா னிரண்டு
கேளப்பா திப்பிலியோர் பலந்தா னெட்டு
கிருபைபெறு மிளகுநால் பலமுங் கூட்டு
கேளப்பா யிவையெல்லா மிடித்துத் தூளை
கெட்டியாய் வடிகட்டி சீனியிட்டுக் கிண்டே! 226

பொ.ரை: அமுக்கிராவேர் 105 கி, சுக்கு, ஏலம், கூகை நீறு இவற்றை வகைக்கு 35 கி, எடுத்து, கிராம்பு சிறுநாகப்பூ, வகைக்கு 70 கி, திப்பிலி, 280 கி, மிளகு, 140 கி எடுத்து இவையனைத்தையும் ஒன்று சேர்த்திடித்துத் தூய்மையான துணியினால் வடிகட்டி வைக்கவும்.

சீனியிட்டு நால்பலமுங் கலந்த சூரணந்தான்
செப்பிறே னனுபானந் தேனிஞ்சிச் சாற்றில்
சீனியிட்டுக் கிண்டியது வெள்ளைமுத்தக் காசில்
செலுத்தியது வெரு கடிதா னிரண்டு வேளை
சீனியிட்டுக் கிண்டியது மண்டலந்தா னருந்த
தீருகிற நோய்கேளு மந்தமுதல் வாய்வே! 227

பொ.ரை: 140 கி சர்க்கரையைச் சூரணத்துடன் கலந்து தேன், இஞ்சிச்சாற்றை அனுபானமாய்க் கொள்ளவும். மூவிரலளவு சூரணத்தை முத்தக்காசு சூரணத்துடன் கலந்து

நாற்பதுநாட்கள் காலை, மாலை உட்கொள்ள மந்தம் முதல் வாயு குணமாகும்.

கிராணி குன்மத்திற்குக் கருங்கோழிச்சூரணம்

வாய்வுவயறு வலிதீரும் அரோசிகந் தீரும்
வாதபித்தம் மூன்றுவகைப் பிணைப்புந் தீரும்
வாய்வுகின்ற உப்பிசமும் நெஞ்செரிப்பு பித்தம்
மரிகுரலும் வாந்திகப மீளையோடு மிருமல்
நேயமுடன் உண்டுவர நின்றுபோ மப்பா
நில்லாத நோய்கிராணி குன்மமும் நின்றிடுமே
சீயிறது கிராணிகுன்மம் குக்குட சூரணத்தைச்
செப்புகிறேன் கருங்கோழி திறமான தொன்றே! 228

பொ.ரை: வயிற்றுவலி, அரோசிகம், வாதம், பித்தம், கபம் மூன்றும் தன்னிலை திரிந்திருத்தல், வாய்வாகிய உப்பிசம் நெஞ் செரிப்பு, பித்தம், வாந்தி, கபம், ஈளை, இருமல், ஆகிய நோய் களும் தீரும். கிராணி, குன்மம் நீங்கிட குக்குட சூரணத்தைக் கூறுகிறேன். கருங்கோழி ஒன்றினை எடுத்துக் கொள்ளவும்.

திறமான கருங்கோழியொன்று கால்தலைதள்ளி
சித்திரமாய் வயிற்றிலுள்ள மண்டத்தைப் போக்கு
உறமாக மேல்மருந்து கூட்டவகை கேளும்
உத்தமனே திரிகடுகு வெள்ளுள்ளிப் பருப்பு
நிறையாக வகையொன்று கழஞ்சுமோர் பத்து
நேயமுள்ள வளையலிந்து கல்லுப்பு நேராய்
குறையாம லஞ்சுகழஞ்சு தன்னைக் கூட்டிடீரே! 229

பொ.ரை: அதன் கால், தலையினை நீக்கி வயிற்றினைக் கிழித்து அதனுள்ளே உள்ளவற்றை எடுத்துப் போட்டு சுத்தப்படுத்தவும். உள்ளே வைக்கும் மருந்துக்கேற்ற சரக்கு வகைகளைக் கேட்பாயாக. சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப் பூண்டுப்பருப்பு, இவற்றை வகைக்கு 50 கி, வளையலுப்பு, கல்லுப்பு, இந்துப்பு இவற்றை வகைக்கு 25 கி சேர்க்கவும்.

சூரான பருத்திவிரைப் பருப்புகா ரெள்ளு
குமரிவருக் கடுகுகரு வேப்பிலையின் பொடியும்
நீராகப் பொடித்தபொடி வகைக்கு மாழாக்கு
நீள்விடைய மதிமதுரம் அக்கிரா காரம்
பேரான வோமம்ரெண்டு சீரக மிரண்டு
பெருங்காயம் வாய்விளங்கம் கொடிவேலி வேரும்
வேரான லவங்கப்பட்டை பத்திரியு மாக
விளாவரிசி வெப்பாலை செவ்வியத்தோல் விரவே! 230

பொ.ரை: பருத்திவிதைப் பருப்பு, கறுப்புள், கடுகு, கருவேப்பிலை இவற்றின் பொடிகள் வகைக்கு 165 கி, அதிவிடையம், அதிமதுரம், அக்கிராகாரம், ஓமம், குரோசாணி ஓமம், நற்சீரகம் பெருஞ்சீரகம், பெருங்காயம், வாய்விடங்கம், கொடிவேலிவேர், இலவங்கப்பட்டை, இலை விளாவரிசி, வெட்பாலை, செவ்வியத்தோல்,

விரவு சீனிக்காரம் குக்கில் சவுக்காரம்
வெந்தயமுஞ் சிற்றரத்தையோடு தாளிசபத்திரியும்
கருவானப் பட்டையொடு வெண்கார மப்பா
கணக்காக வகையொன்று கழஞ்சி மூன்றாக்குப்
பறவில்லா சாதிக்காய் பத்திரி கிராம்பு
போட்டா அபின்கூடவ் விரண்டு கழஞ்சு
திறமாக யிவையெல்லாம் வறுத்திடித்துத் தூளாய்
செலுத்திடடா குக்குடத்தின் வயிற்றில்நீ தைய்த்தரையே! 231

பொ.ரை: சீனக்காரம், குக்கில், சவுக்காரம், வெந்தயம், சிற்றரத்தை, தாளிசபத்திரி, கருவாப்பட்டை, வெண்காரம், இவற்றை வகைக்கு 15 கி எடுக்க. சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அபின் இவற்றை வகைக்கு 10 கி எடுத்து அனைத்தையும் இளவறுவலாய் வறுத்திடித்துப் பொடித்து கோழியின் வயிற்றுக்குள் வைத்து தைத்துவிடவும்.

தைத்துவொரு தாழிக்குள் தண்ணீர்விட் டழுத்தி
தயவாகக் கவிழ்சட்டி தன்னாலே மூடி
வைத்ததுக்கு நாலஞ்சு சீலைமண் செய்து
வளமாக அடுப்பேற்றி தீமூட்டி யெரிக்கில்

எரித்துநீர் குறுக்கினது வற்றிப் பற்றாம
லெடுத்துகறி மருந்துதசை யேகமாய்ப் பிரட்டி
ஒய்த்திடாத பதத்திலிறக்கிய பின்ன ரப்பு
யரப்புத்தோடு வெச்சிடவே போட்டுவரும் பொடியே! 232

பொ.ரை: தாழி ஒன்றினை எடுத்து அதற்குள் கோழியை வைத்து கவிழ்த்து அதன்மீது சட்டியினை கவிழ்த்து மூடவும். அதன் வாய்ப்பட்டைக்குச் சீலை மண் செய்யவும். ஏற்றிய அடுப்பில் தாழியினை வைத்தெரித்து, தீய்த்து விடாது நீர் குறுகியதும் தசைக் கறியை எடுத்து இரும்பு வாணலியிலிட்டு வறுத்திடப் பொடியாகும்.

பொடிவறுத்தால் கருகாமல் புடமா கத்தான்
பொடித்துவடி கட்டினது குக்குட சூரணம்
விடிவேருந் திரிக்கும் வெருகடியாம் பொடியை
விரும்பியே மண்டலங்கொள் வியாதி போகு
மடிபடியே பகருகிறோம் அஷ்டகுன்மம் வாய்வும்
பதினெட்டு கிராணிவகை யதிசார வகையோடு
முடியாத வயற்றிரைச்சல் கழிச்ச லிரத்த
மூலமோடு உப்பிசங்கள் விசபாகம் போமே! 233

பொ.ரை: வறுக்கும் போதே கருகிடாது பின் வடிகட்டிப் பத்திரப்படுத்தவும். மூவிரலளவு பொடியை நாற்பது நாட்களுக்குத் தக்க அனுபானங்களுடன் கலந்து கொடுக்க அட்டகுன்மம், பதினெட்டு வகைக்கிராணிகள், அதிசார வகைகள், வயிற்றிரைச்சல், கழிச்சல், இரத்தமூலம், உப்பிசங்கள், விடபாகம் தீரும்.

கிரந்திக்குப் பரங்கிப்பட்டைச் சூரணம்

போமப்பா கரப்பனொடு கிரந்தி சூலைப்
புண்பொடிகள் சிரங்குவெட்டை குட்டம் போக
நாமப்பா பட்டையிலே சூரணத்தைச் சொல்வோம்
நல்லபுழு வாடினதாய் புதுசாய்
ஆமப்பா பரங்கியெனும் பட்டையஞ்சு பலந்தான்
அப்பனே தூக்கியபி னமுக்கிரா சங்கு

வேமப்பா சிறுபிரப்பன் கிழங்குகொன்றைப் பட்டை
வெற்றிபூறி சாரணைவேரு கொடிவல்லி வேரே! 234

பொ.ரை: கரப்பன், கிரந்தி, சூலை, புண்பொடிகள், சிரங்கு, வெட்டை, குட்டம், ஆகிய நோய்கள் தீர பரங்கிப்பட்டைச் சூரணத்தைக் கூறுவோம். 175 கி பரங்கிப்பட்டையை எடுக்கவும். அமுக்கிரா, சங்கு, சிறுபிரப்பங்கிழங்கு, கொன்றைப்பட்டை, சாரணைவேர், கொடிவல்லிவேர்,

வேராக வகைக்கொரு பலமொன் றாக
வெட்டியே காயவைத்துத் தூளா யாட்டி
சீராகத் தாழியொன்றில் பால்படிநால் விட்டு
திறமாக வேடுகட்டிப் பொடிவகைகள் கலந்து
பேராகப் பொடிவைத்து கவிழ்சட்டி மூடி
பிட்டவித்தாப் போலவித்து பின்புவதை வாங்கி
நேராக மேல்மருந்து கொத்துமல்லி மதுரம்
நெறியான ஓமம்ரெண்டு அதிவிடையம் நீட்டே! 235

பொ.ரை: ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுத்து வெட்டி உலர்த்திப் பொடித்துக் கொள்ளவும். 5.2 லி பாலைத் தாழி யிலூற்றவும். மேல் வேடுகட்டி அச்சூரணத்தை வைத்து பிட்டவியலில் சட்டியை மூடி வேகவைப்பது போல் வேக வைத்து ஆறியபின் எடுத்துக்கொள்ளவும். கொத்துமல்லி, அதிமதுரம், ஓமம், குரோசாணி ஓமம், அதிவிடையம்,

நீட்டடா வால்மிளகு வெந்தயம் சிற்றரத்தை
நேர்த்தியாய் அக்கிரா காரம்திப் பிலியும்
கூட்டடா சாதிக்காய் பத்திரி கிராம்பு
கூரான சீரகமு மிரண்டு திரிகடுகு
பூட்டடா வகையொன்றுக் கழஞ்சு மூன்று
புகழவே காயவைத்து தூளா யாட்டி
பூட்டடா முன்பொடியுங் கூடச் சேர்த்து
முறையோடே இதில்பாதி சீனிகலந் திடுமே! 236

பொ.ரை: வால்மிளகு, வெந்தயம், சிற்றரத்தை, அக்கிராகாரம், திப்பிலி, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, நற்சீரகம், பெருஞ் சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 15 கி

எடுத்து இடித்துச் சூரணமாக்கி முன் சூரணத்துடன் கலந்து கொள்ளவும். அதில் பாதியளவு சர்க்கரையைச் சேர்க்கவும்.

கலந்தபட்டை சூரணந்தான் வெருகடிப் பிரமாணம்
காலைஅந்தி மண்டலமே கருதிக் கொள்ளு
அலந்தகட்டி விரணங்கள் கரப்பான்தொடு சூலை
மகாவாதம் வெட்டையொடு அக்கினியு மந்தம்
புலர்ந்தவதி சாரமெனு கிராணியுப் பிசங்கள்
பொல்லாத வயிற்றிரைச்சல் புண்பொடியும் தீரும்
மலர்ந்தமுகம் போலிருக்கும் வச்சிர தேகம்
மறக்கிவைக்கும் பட்டையுட ஆண்மை தானே! 237

பொ.ரை: இப்பரங்கிப்பட்டைச் சூரணத்தை மூவிரலளவு எடுத்து காலை, மாலை, நாற்பது நாட்கள் உட்கொள்ள கட்டி, விரணங்கள், கரப்பான், தொடு சூலை, மகாவாதம், வெட்டை, அக்கினிமந்தம், அதிசாரம், கிராணி, உப்பிசங்கள் வயிற்றிரைச்சல், புண், பொடி ஆகியவை தீரும். இச்சூரணத்தால் உடல் உறுதியாகும்.

பரங்கிப்பட்டைப் பதங்கம்

ஆண்மைசொல்வோம் பரங்கிப்பட்டை யினிட பதங்கம்
அப்பனே தாவரம் வாடிதான் பார்த்து
ஆண்மைபெறு ஆறுபல பட்டை தன்னை
புகழாக பாக்குபோல் வெட்டி நீயும்
ஆண்மையுட னேசங்கங் குப்பிச் சாற்றில்
அதைப்பிரட்டி மூன்றுதரம் காய வைத்து
ஆண்மைநடு கற்கத்தி லிட்டு வைத்து
அடுக்காக பதங்கத்தின் வகையைக் கேளே! 238

பொ.ரை: 210 *கி பரங்கிப்பட்டையைப் பாக்கு போல சிறுதுண்டுகளாக நறுக்கி சங்கங்குப்பிச் சாற்றில் போட்டு நன்கு கலக்கவும். மூன்று முறை உலர்த்தவும். நன்றாகக் காய்ந்தபின் கலசத்திலிடவும்.*

கேளப்பா சங்கன்வேரு அமுக்கிரா வேரு
கெடியான சிறுபிரப்பின் கிழங்கின் மைந்தா

கேளப்பா கொடிவல்லி மூல மோடு
கிறைகொன்றைப் பட்டையெருக்கின் வேருங் கூட்டு
கேளப்பா சாரணைவேர் கருங்சூரை வேரு
கேடுயில்லா நாய்கொட்டான் பட்டைசிவன் வேம்பு
கேளப்பா வெள்ளறுகு பலந்தா னஞ்சு
கிருபையுடன் நொறுக்கிவொரு பாண்டத்தி லூட்டே! 239

பொ.ரை: சங்கம் வேர், அமுக்கிராவேர், சிறு பிரப்பங்கிழங்கு வேர், கொடிவல்லிவேர், கொன்றைப்பட்டை, எருக்கம்வேர், சாரணை வேர், கருஞ்சூரைவேர், நாய்க்கொட்டான்பட்டை, சிவனார்வேம்பு, வெள்ளறுரு இவற்றை வகைக்கு 175 கி எடுத்து இடித்து மற்றொரு பாண்டத்திலிடவும்.

பாண்டத்தி லூட்டியபின் சொல்லக் கேளு
பழம்புளி யம்ஒரு பாண்டத்தி லிட்டு
தாண்டவே தமரிட்டு புளிப்புரோணி மேலே
சங்கம்வேரு மருந்தடைத்த பாண்ட மேற்றி
பூன்றிடவே சந்துக்குஞ் சீலைமண் செய்து
புகழாக சாம்பிராணி பலமஞ்சு நொறுக்கி
நீண்டதோர் கலசத்தி லிட்டதிற்பின் தமுறு
நொறுங்க சந்துக்குச் சீலைமண் செய்யே! 240

பொ.ரை: மற்றொரு பாண்டத்தில் புளியம் சிராயினைப் போடவும். அதன்மீது நாம் மேற்சொன்ன கற்கத்திற்குக் கீழே துளையிட்டு ஏற்றவும். சரக்குடன் 175 கி சாம்பிராணியையும் உடன் சேர்க்கவும். பின் இரண்டின் சந்துகள் பொருந்துவதற்கேற்ப சீலை மண் செய்யவும்.

செய்தந்த கலசமேல் பட்டையிட்ட கலசத்தை
திறமாகக் கவிழ்த்தியே சீலைமண் செய்து
ஏற்றடுப்பு கவிழாவிலே துறுத்தி
ஏற்கவே தமரிட்டு தீயைப் போட்டு
வைத்தந்த யூத்தல்லா அந்திசந்தி சாமம்
வகையாக ஒன்பதுநாள் வரையு மூது
நைதந்த பேருக்கு மருந்தெல்லாம் வெந்து
நலமாக மேலேறி சாறும் பாரே! 241

பொ.ரை: பட்டையிட்ட கலசத்தை இக்கலசத்திற்குப் பொருந்துமாறு கவிழ்த்து மூடி சீலைமண் செய்யவும். இவ்வமைப்பை முறைப்படி, ஏற்றிய அடுப்பில் வைத்து காலை, மாலை மூன்று மணி நேரம் ஒன்பது நாட்கள் அடுப்பெரித்துப் பின் ஆறவிட்டெடுக்கவும். வெந்த மருந்து கீழிலிருந்து மேலேறி பதங்கமாகப் படிந்திருக்கும் அதனைப் பத்திரப்படுத்தவும்.

சாறுமே பட்டையிலே யெல்லாம் வெந்து
சஞ்சீவி போலாக மேலேறும் பாரு
பாறுமே பதங்கமப்பா தூளா யாட்டி
பருவமாய் வடிகொண்டு பாங்காய்ப் பின்பு
சேறுமே பட்டைதூள் சீனிசம னாக
சேர்த்தினபின் வெங்காரம் சுத்தி செய்து
நேறுமே அதிவிட்ட போல்நீர் கூட்டி
நீட்டடா நன்றாகக் கலந்து கொள்ளே! 242

பொ.ரை: பரங்கிப்பட்டையினின்று வெந்து வெளியேறிய சஞ்சீவி போன்ற பதங்கத்தைத் தூளாகச் செய்து வடிகட்டி வைக்கவும். இதற்குச் சமமாக சர்க்கரையைச் சேர்த்துப் பயன்படுத்தலாம்.. வெங்காரத்தை அனலிலிட்டுப் பொரித்துப் பின் தண்ணீரில் கலந்து சேர்த்துக்கொள்ளலாம்.

கெந்தக வைப்பு

கூறினோம் யிதற்கிசந்த கெந்தகம்வைப் பாக
கொஞ்சமல்ல சஞ்சீவி கூறக் கேளு
தேறினோம் கற்பூரக் கெந்தகஞ் சீனி
செப்பரிது செப்பரிது தேகம் பொன்னாம்
நாறினதோர் நெல்லிக்காய்க் கெந்தகந்தா னப்பா
நச்சுரைகாய் யம்பதுட பலந்தான் தூக்கு
வேறினமாம் வைப்பதற்கு பாடு மெத்த
என்மகனே லவணவகை இயம்பு றேனே! 243

பொ.ரை: கெந்தக வைப்பிற்குண்டான மருந்துகளை நோக்குவோம். கற்பூரக் கெந்தகம், சீனி இவற்றால் உடல்

பொன்னாகும். நெல்லிக்காய்க் கெந்தகம் 35 கி, சுரைக்காய் 1750 கி, ஐந்து உப்பு வகைகளான கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, கறியுப்பு வகைக்கு 35கி எடுக்கவும்.

கேளப்பா லவணவாகை யிந்துடனே வாகில்
கெடியான பாறையுப்பு சவட்டுப்பு நாலு
கேளப்பா வகையொன்று பலந்தான் பத்து
கிருபையுள்ள கறியுப்பு ரெண்டுமாம் நூறு
கேளப்பா யிவையொன்றாய் தாழியில் நீர்விட்டு
கெடியாக காய்ச்சியிட கிட்டம்போல் போகும்
கேளப்பா நீரற்றல் வெள்ளையா முப்பு
கிண்டியதை எடுத்துவைத்து கேளின்ன வகையே! 244

பொ.ரை: இந்துப்பு, பாறையுப்பு, சவுட்டுப்பு ஆகியவற்றை வகைக்கு 350 கி, கறியுப்பு, மற்றொரு உப்பு வகைக்கு 35 கி எடுக்க. அனைத்தையும் தாழியில் போட்டு தண்ணீரூற்றவும். அடுப்பிலிட்டுக் காய்ச்ச கிட்டம் போலாகும். நீர் முழுதும் சுண்டிய பிறகு வெண்மையான முப்புவாகும். அதைக் கிண்டி எடுத்து வைக்கவும்.

வகையாகா யுப்பெல்லாம் ஆறுகூ றிட்டு
வகையொன்றில் கெந்தகமுங் கூடக் கூட்டி
பகையாமல் சாத்தமினா லஞ்சு தன்னில்
பதியவே ஆறுமட்டும் பண்பாக அரைத்து
திகையாமல் மூடாநாளில் சலமுமிரு நாழி
தீமூட்டி கொதிகண்டு திட்டனவே இறக்கி
நகையாமல் அரைத்தபொடி நாலிலே சேர்த்து
நாட்டடா கவிழ்சட்டி நாலு மடவே! 245

பொ.ரை: உப்பினை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கவும். அதில் ஒரு வகையுடன் கெந்தகத்தைச் சேர்த்து அம்மியில் வைத்து நன்கு அரைக்கவும். அரைத்த விழுதைத் தாழியிலிட்டு 2.6 லி தண்ணீரை ஊற்றிக் கொதிக்கவைக்கவும். அரைத்த பொடி ஐந்து கூறுகளையும் தனித்தனியே ஒவ்வொரு சட்டியிலிட்டு இக்குடிநீரினை ஊற்றி மற்றொரு சட்டியினால் மூடவும்.

அடவாக நாளொன்று திரவாகத் தீர்ந்து
அப்பனே நல்லபச்சைக் கற்பூர மாக
திடமாகப் பானைக்கு ரவ்வண்டு கழஞ்சு
சீக்கிரத்தில் போட்டதிற்பின் திரும்பவதை மூடி
பிடமாக யோர்நாளு மப்படியே வைத்து
பின்புமூன்றாம் நாள்தான் தெளிவெல்லாம் களைந்து
யோகமோ பெரிய தாளிதனிற் சேர்த்து
வெய்யிலிலே காயவைத்து தெளியவைத்தி விடுமே! 246

பொ.ரை: ஒரு நாள் முழுதும் அவ்வாறே வைக்கவும். மறுநாள் 10 கி பச்சைக் கற்பூரத்தை ஒவ்வொரு பானையிலுமிட்டு அப்படியே வைத்திருக்கவும். மூன்றாம் நாள் கசடு கீழேபடிந்து மேலே தெளிந்திருக்கும். தாழியிலுள்ள தெளிவினை நீக்கி வெயிலிலேயே உலர்த்தவும்.

தெளிவகத்தின் மண்டிநின்றத் தவ்வளவும் பாட்டாய்
சேர்ந்திருக்கும் வெயிற்பட்டால் களிம்பிழிந்து சிதறும்
களிம்பகற்றி யிப்படியே ஆறுதினம் வைத்தாற்
களிம்பற்று சற்றெல்லாம் கனகம் போலாம்
அளிவற்ற கற்பூரம் கெந்தகமாஞ் சீனி
அடையடா குழலிலே அனுபானஞ் சொல்லக்கேளு
ஒளியுற்ற மாந்தருக்கு இம்மருந்தா மப்பா
ஓகோகோ ஆச்சரியம் பண்ணுபண மூன்றே! 247

பொ.ரை: வெயில் பட்டவுடன் களிம்புடன் அனைத்தும் நீங்கும். இவ்வாறே ஆறு நாட்கள் வைத்துப் பார்க்க களிம்பு, கசடுகள் நீங்கி பொன்போலாகும். இம்மருந்தைப் பத்திரப்படுத்தி குழலிலே அடைக்கவும். இவ்வைப்பினை 1½ கி அளவில் மாந்தருக்குப் பயன்படுத்தலாம்.

மூன்று பணத் தூக்கமுடன் வங்காளச் சீனி
மூம்மூன்று பணவெடைதான் முடுக்காய்க் கூட்டு
வென்றதொரு வெங்காரம் நீயாய் வாங்கி
யென்மகனே யெருமைச்சா ணங்கந்தான் சுற்றி
பொன்றவே பின்கழுவி யனலிலே சுற்றிப்
பொரித்த தூளாக்கி ரெண்டுந் தூக்கி சேர்த்து

ஒன்றதிந்த மூன்றுவகை மருந்தோ டப்பா
இயல்பாக பட்டையெனும் பதங்கம் நாலே! 248

பொ.ரை: கெந்தக வைப்பு 1 ½ கி, எடுத்து அவ்வளவே வங்காளச்சீனியையும் சேர்க்கவும். வெங்காரத்தை எருமைச் சாணி கொண்டு சுற்றி தண்ணீரில் கழுவி அனலிட்டு அதில் பொரித்தெடுக்கவும். பின் தூளாக்கி மேற்சொன்ன மருந்துடன் சேர்க்கவும். 2 கி பரங்கிப் பட்டை பதங்கத்தையும் கலக்கவும்.

நாலுபணத் தூக்கமாம் பட்டையுடன் பதங்கம்
நலமாக கலந்தொன்றாய்ச் சாரித்துச் சேர்த்து
மேலுமந்தி சந்தியுண்ணு மண்டலந்தா னப்பா
வியாதியதைக் கண்டவுடன் வெருண்டே ஓடும்
மாலுமயன் தேடாய் ஆத்தாள் வித்து
மருத்துவத்தைக் கக்கயொருவரால் காண்பது மரிது
நூல்களிலு மிந்தமுறை வைப்பா ரில்லை
நொறுக்குமடா நோயாகும் மார்பாணி கேளே! 249

பொ.ரை: அனைத்தையும் ஒன்று கலந்து காலை, மாலை, நாற்பது நாட்கள் உட்கொள்ளவும். இவ்வாறு தொடர பல வியாதிகள் நெருங்காது. திருமால், பிரமன் கண்டுபிடிக்க முடியாத ஆத்தாள் கொடுத்தளித்த இம்மருத்துவத்தை எவரும் காண இயலாது. இது எந்நூல்களிலும் இல்லை.

ஆணியென்ற கரப்பனோடு குட்டம் போகும்
அட்டகுன்மம் வெட்டைபோம் பயித்திய மிரண்டும்
ஊணுமென்ற கிரந்திமுதல் காசஞ் சூலை
ஒடுங்காத தாபமோடு சோபம் போகும்
பேணிநின்ற தாதுநஷ்டம் பொருமல்சீ ரத்தம்போகும்
பெரும்பாடு முள்ளுருக்கி ஈளைகளு மிருமல்
நாழிகையே பறந்தோடும் பயித்தியத்தைக் கேளு 250
நல்லாவின் பால்கூட நலமாய் பாரே!

பொ.ரை: கரப்பன், குட்டம், எட்டு வகைக்குன்மம் வெட்டை, இரண்டு வகை பித்தம், கிரந்தி, காசம், சூலை, தாபம், சோபை, தாது நட்டம், பொருமல், சீத இரத்தம், பெரும்பாடு,

உள்ளுருக்கி, ஈளை, இருமல் ஆகிய நோய்கள் குணமாகும். பசும்பால் நலம் பயக்கும்.

பால்கூட்டு மண்டலந்தான் அந்திசந்தி யப்பா
பரிமாற்றம் வெண்ணார்கள் மற்றொன் றாக
சாலவே மண்டலத்துக் கப்பா லுப்பைச்
சாந்தமாய்ச் சுத்திசெய்து கூட்டு கூட்டு
சீலமுடன் தூதுவளை யிலைக்காய் பூவுமாகும்
திறமான முருங்கைப்பூ பிஞ்சு மாகும்
ஞாலமெல்லாம் புகழ்பொன்னாங் காணிமுளைத் தண்டு
நறுநெய்யிந்து வரையோடு சிறுபயறு மாமே! 251

பொ.ரை: நாற்பது நாட்களுக்குக் காலை, மாலை, தொடர்ந்து உட்கொள்ளவும். பிறகு உப்பினைச் சுத்தி செய்து வறுத்துக் கூட்டவும். தூதுவளையின் இலை, காய், பூ, முருங்கைப்பூ, பிஞ்சு, பொன்னாங்காணி, வரையோட்டில் வறுத்த இந்துப்பு, முளைத்தண்டு, வாசனை மிக்க நெய், சிறுபயிறு ஆகியவை மருந்து சாப்பிடும்போது சாப்பிடவேண்டிய பொருட்கள்.

சிறுபயிறாஞ் சிறுகீரை அவரைப்பிஞ் சாகும்
தேட்டுமீன் முயல்காடை கவுதாரி யுள்ளான்
வெறுமுடைய ஊர்க்குருவி விராலிமீன் கண்டம்
வெள்ளாட்டுக் கண்டமும் வேறொன் றாகா
வறுதிரண்ட மண்டலத்துக் கப்பான பின்பு
அழகான தலைமுழுக எண்ணெய்சொல்வோம்
உண்மை பாரே! 252

பொ.ரை: சிறுகீரை, அவரைப்பிஞ்சு, தேட்டு மீன், முயல், காடை, கவுதாரி, உள்ளான், ஊர்க்குருவி, விராலிமீன், வெள்ளாட்டின் இறைச்சிக் கண்டம் ஆகியவை ஆகும். பிற பொருட்கள் ஆகாது. நாற்பது நாட்களுக்குப் பிறகு தலை குளிப்பதற்கான எண்ணெய் வருமாறு.

வார்த்தெண்ணெய் முழுகென்று கோழிச்சா றப்பா
வளமாக கறிவைத்துக் கூட்டு கூட்டு
வார்த்தெண்ணெய் நாலுநாளும் கொருக்கால் வேணும்
மைந்தனே முழுகமுறை கோழிச் சாறு

வார்த்தெண்ணெய் முழுக்கன்று பால்தயிர்மோர் புளிப்பு
மாற்றடா மற்றாநாள் தவிர வேண்டாம்
வார்த்தெண்ணெய் பதித்துண்டு கடந்தான் வேது
மயக்கமில்லை யுட்காந்தி பொன்னா மாற்றே! 253

பொ.ரை: கோழிச்சாற்றினை எடுத்துப் பின் அதனின்று இறைச்சியையும் எடுத்துச் சேர்த்து அடுப்பிலிட்டு எண்ணெயாய்க் காய்ச்சிக் கொள்ளவும். நான்கு நாட்களுக்கொருமுறை எண்ணெயைத் தலையில் தேய்த்துக் குளிக்கவும். அன்று பால், தயிர், மோர், புளிப்புப் பொருட்களை விலக்கவும். அடுத்த நாள் சேர்க்கவும். உடல் பொன்னாகும்.

கரப்பான் கிரந்திக்கு எண்ணெய்

மாற்றமில்லை யேரண்ட எண்ணெ யொன்று
மைந்தனே கிரந்தியோடு கரப்பான் போகச்
சாற்றுகிறேன் யவித்தூத்து தயிலமோர் படிதான்
சங்கங்குப்பிச் சாறுடனே கழற்சியிலைச் சாறு
வேற்றிமை யொன்றில்லா முருங்கையிலைச் சாறல்லா
வேசரிப்பா லத்திநீ ருள்ளிச் சாறே! 254

பொ.ரை: வேகவைத்தூற்றியெடுத்த சிற்றாமணக்கெண்ணெய் 1.3 லி, சங்கங்குப்பிச்சாறு, கழற்சியிலைச்சாறு, முருங்கையிலைச்சாறு, கழுதைப்பால், அத்திச்சாறு, நீருள்ளிச்சாறு இவற்றை வகைக்கு 325 மி.லி. எடுக்கவும்.

சாறுகள்தான் வகைக்கொன்று படிகா லாகுஞ்
சங்கைசிறு செருப்படிச்சா றுழக்கரையும் கூட்டு
வீறுடைய நெல்லிக்காய்க் கெந்தகம்தா ளகமும்
மேலான பரங்கியுட பட்டை தானும்
தேறியதோர் கடுக்காயும் நிலவாகை வேரும்
செந்தொட்டி வேருசித்திர மூலமொடு வசம்பு
பேர்படகருஞ் சீரகமும் வகைக்கோர் கழஞ்சு
பிசகாமல் சாறுகளில் வாட்டியதைக் கலக்கே! 255

பொ.ரை: மேற்சொன்ன சாறுகளுடன் சங்கிலைச்சாறு, சிறுசெருப்படிச்சாறு வகைக்கு 165 மி.லி. சேர்க்கவும். நெல்லிக்காய்க் கெந்தகம், தாளகம், பரங்கிப்பட்டை, கடுக்காய், நிலவாகை, செந்தொட்டிவேர், சித்திரமூலம் எனும் கொடி வேலிவேர், வசம்பு, கருஞ்சீரகம் இவற்றை வகைக்கு 5 கி எடுத்திடித்து, மேற்சொன்ன சாறுகளில் வதக்கிக் கலவையில் சேர்க்கவும்.

கலக்கியே எண்ணெயொடு சாறுகளும் கற்கங்
கலந்ததொரு தாளியிலே காப்பதனைச் சூட்டி
மலக்கமில்லா அடுப்பேற்றி எரித்துக் காய்ச்சு
வடிகிற பதங்கண்டு கடுகுடனே வாங்கி
துலக்கவே சூட்டுடனே அய்ங்கழஞ்சு சீனி
தோன்றவே போட்டதையும் கிண்டிவடி கட்டி
சொல்லக்கேளு மூன்றுநாள் ஆறியபின் னப்பா
தோன்றவே ஐந்துதின முண்டால்சுக மாகும்! 256

பொ.ரை: வதக்கின பொருட்கள், சாறுகள், எண்ணெய்கள், அனைத்தையும் தாழியிலே இட்டு அதன் வாய்ப்பட்டைக்குக் காப்பினைக்கட்டி ஏற்றிய அடுப்பில் வைத்துத் தைலத்தைக் காய்ச்சி கடுகு பதத்தில் வடிக்கவும். அப்பக்குவத்தில் 25 கி சர்க்கரையைப் பொடித்துப் போட்டுக்கலந்து வடிகட்டிக் கொள்ளவும். மூன்று நாட்கள் கழித்து ஐந்துநாட்கள் உட்கொள்ள நலமாகும்.

சுகமாக நாளுக்கொன்று கழஞ்சி மூன்று
சுத்தமாய் கொண்டாக்கால் சொல்லு சொல்லு
யுகமூழி காலத்து கரப்ப னில்லை
யொன்று மாகாது பத்தியங்கள் கடந்தால்
செகமேழும் புகழவே யாரிருப் பார்பார்
நிறைவாரி யுப்பை வறுத்துக் கூட்டு
இகற்பமுறு காண்பதுபோல் யேரண்டத் தெண்ணெ
எப்போது மொன்றைவிட் டொருநாளாய் மூழ்கே! 257

பொ.ரை: தினமும் 15 கி எண்ணெயை உட்கொண்டால் கரப்பான், கிரந்தி ஒழியும். எப்போதும் வராது. பத்தியங் களைக் கவனமுடன் கையாளவேண்டும். உப்பினை வறுத்துச் சேர்க்கவும். சிற்றாமணக்கெண்ணெயை ஒருநாள் விட்டொரு நாள் தலையில் தேய்த்து முழுகவும்.

ஒன்றைவிட் டொருநாளாய் பத்துமுழுக் கப்பால்
ஒருமுழுக்கு நாலுநாளுக் கொருக்கால் முழுகிடவே
நின்றபெறுங் கிரந்தியோடு கரப்பன் சூலை
நீண்டபெறும் புண்பொடியும் கால்கையி முழுயளவும்
வென்றியுள்ள வீக்கமும்போம் நன்றாகு மப்பா
விருகளு மறுமுழுக்கில் விலக்கு கறியை
தின்றிடா தொழிப்பதுதான் கரப்பனுள்ள பண்டந்
தேடரிய உழுந்துபன்றி மரைப்பால் சிக்கே! 258

பொ.ரை: பத்துநாட்கள், ஒரு நாள் விட்டொருநாள் தலை முழுவும். பின்னர் நான்கு நாட்களுக்கொருகால் முழுகவும். கிரந்தி, கரப்பன், சூலை, புண், கை கால் வீக்கம் ஆகியவை நீங்கும். அடுத்து தலை முழுகும் போது கரப்பான் பொருட்களை நீக்கவும். உளுந்து, பன்றி, மான் இவற்றை விலக்கவும்.

சிக்கான ஆறு தினங்க ளாகச்
சிறப்பாகப் பின்புயிவை தேடிநீ யருந்து
முக்காலுஞ் சொல்லிவிட்டோம் பத்தியங்கள் பருவம்
மோசமில்லை வியாதிகளும் நாசம் பாரு
எக்கால மொழியுமொன்று எண்ண வேண்டாம்
எண்ணெயுண்டு முழுகயிலே யெல்லாம் போகும்
சிக்காதே ஒருவருக்கும் நூலைக் காட்டாதே
சரிவுண்டு பிரயோகங் கன்று வாயே! 259

பொ.ரை: ஆறுநாட்கள் அவ்வாறே பின்பற்றவும். பின்பு அப்பொருட்களைச் சேர்க்கவும். பத்தியம் கடைபிடிக்கும் முறைகளைக் கூறியபடி செய்ய நோய் ஒழியும். எண்ணெயை உட்கொண்டு தலைகுளிக்கவும். நோய்கள் நலமாகும். இந்நூலை பிறர் எவருக்கும் காட்டாதே.

பிள்ளைகள் பிரளி கணைக்கு எண்ணெய்

வாய்க்கடங்க பிரளிகணை பலகணைக்கு மெண்ணெய்
வகையாகச் சொல்லுகிறோம் மைந்தா கேளு
நோய்க்கடங்கா யேரண்டத் தயிலமது நாழி
நுணுக்கமுடன் அரிபோகத் தோற்றதா னப்பா
வீக்கடங்காத் தலைகழஞ்சி மஞ்சளுடன் கடுகு
வெந்தயமும் வெள்ளுள்ளி சீரகமிரண் டேயோமம்
பேய்க்கடங்கா மிளகுகடுகு ரோகணி வசம்பு
பெருங்காயம் வகையொன்று கழஞ்சி ரண்டே! 260

பொ.ரை: பிரளி கணைக்கும் மற்றுமுள்ள பல கணைகளுக்குமான எண்ணெய் வருமாறு. சிற்றாமணக்கெண்ணெய் 1.3 லி, மஞ்சள், கடுகு,வெந்தயம், வெள்ளைப்பூண்டு, நற்சீரகம், பெருஞ்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், மிளகு, கடுகுரோகணி, வசம்பு, பெருங்காயம் இவற்றை வகைக்கு 10 கி எடுக்கவும்.

நவ்விரண கழஞ்சாக யிடித்துத் தூளாய்
நலம்பெறவே எண்ணெய்க்குள் போட்டுக் காய்ச்சு
செவ்வியதாய் சிவந்துவரும் பதம்பார்த் திறக்கி
திறத்துடனே கற்கத்தில் எண்ணெய்க் கொன்றாய்
வவ்வியமில் லாமலே வழித்து வைத்து
வாரியமாம் மூன்றுநாள் பிள்ளைகளுக் கப்பா
தவ்வியே கரண்டியொன்று தினந்தா னேற்றி
சாதகமாய் பிண்ணாக்க குளுமைகொடு தானே! 261

பொ.ரை: மேற்சொன்ன மருந்துப் பொருட்களை இடித்துப் பொடித்து எண்ணெய்க் கலவையிலிட்டு அடுப்பிலிட்டெரித்துக் காய்ச்சிக் கொள்ளவும். கொதித்து சிவந்து வரும் பக்குவத்தில் பதம் பார்த்து வடித்திறக்கி நாளொன்றுக்கு கரண்டியளவு குழந்தைகளுக்குக் கொடுக்க கணம் நீங்கி குளிர்ச்சியாகும்.

தானென்ற குளுமையென்ன சித்திரப் பாலாடை
தனிமதுரம் சீரகமும் தண்ணீரி லாட்டி
மானென்ற பிள்ளைகளுக் கவ்வண்ண மருந்த
மாந்தமோடு கிறகணை பிரளி யெட்டுந்

தேனென்ற பத்தியந்தான் உப்புமுத லாக
சீதத்துக் குளுமைமுதல் செலுத்தவுடல் தெளியும்
வேனென்ற எண்ணெய்க்கு வெகுகுணங்கள் நன்று
விரும்பிநீ வைத்துண்ண விகற்பமில்லை பாரே! 262

பொ.ரை: சித்திரப்பாலாடை, அதிமதுரம், சீரகம் இவற்றைத் தேவையான அளவு தண்ணீரில் சேர்த்தரைத்து அவ்விழுதைக் குழந்தைகட்குக் கொடுக்க பிரளிக்கணை எட்டு வகையும் தீரும். உப்பு முதலான பத்தியப்பொருட்களை நீக்க வேண்டும். குளிர்ச்சியான பொருட்களை உண்ண உடல் தெளிவடையும்.

கண்டாத்திரி லேகியம்

பாரப்பா கண்டாத்திரி லேகி யத்தைப்
பாடுகிறேன் புலத்தியனே கேளு நீயும்
நாரப்பா யில்லாமல் விளைந்த இஞ்சி
நலமாகத் தோல்போக்கி வில்லைபோல் நறுக்கி
நேரப்பா பதினஞ்சு பலந்தான் நீயும்
நிறுத்தங்கே நறுநெய்யில் சிவக்க வறுத்து
சீரப்பா பொடிசெய்து சீலைவடி கொண்டு
சித்திரமாய் மருந்தப்பா செப்பு றேனே! 263

பொ.ரை: இஞ்சியை மேலேயுள்ள தோலினைப் போக்கி நஞ்சினை நீக்கி வில்லைகளாக நறுக்கி 525 கி எடுக்கவும். வாணலியில் நெய்யைவிட்டு இஞ்சியைச் சிவக்க வறுத்துப் பின் பொடித்துக் கொள்ளவும். சீலையில் வடித்து வைக்கவும்.

அப்பாகேள் திரிகடுகு சிற்றரத்தை செவ்வியம்
அதிமதுரம் சிறுதேக்கு வாய்விளங்க மேலம்
ஒப்பான திரிபலையுங் கொத்துமல்லி யோடு
மொங்கிவளர் சிறுநாகத் தாளிச்சத் திரியும்
தப்பாத யிலவங்கப் பட்டைபத்திரியும்
தனிநெல்லும் பொரிகளிவை வகைக்குமுக் கழஞ்சு
இயல்பான சாதிக்காய் பத்திரி கிராம்பு
இயல்பான அதிவிடையம் முக்க ழஞ்சியே! 264

பொ.ரை: சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை, செவ்வியம், எனும் மிளகு, அதிமதுரம், சிறுதேக்கு, வாய்விடங்கம், ஏலம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கொத்துமல்லி, சிறுநாகம், தாளிசபத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி, நெற்பொரி, இவற்றை வகைக்கு 15 கி எடுக்கவும். சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடையம் இவற்றை 15 கி வகைக்கு எடுக்கவும்.

கழஞ்சாக மருந்தெல்லாம் நறுக்கியே நொறுக்கி
காயவைத்துத் தூளாக்கிப் பொடியை வடிகட்டி
தழஞ்சியாய் சீனியொரு பலந்தான் கூட்டி
தனியிஞ்சி பொடிகலந்து சாற்றக் கேளு
வகுஞ்சியாம் நல்லவெல்ல மஞ்சு பலமும்
வம்பருவம் பொடிதூவி வாகியக் கிண்டி
ஊஞ்சியமாய் நறுந்தேன் நெய்வகைக்கா ழாக்கு
உறவார்த்துக் கிண்டிடவும் லேகியமா யுண்ணே! 265

பொ.ரை: மருந்து சரக்குகளை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்திப் பொடித்து சலித்துக் கொள்ளவும். 35 கி சர்க்கரையைப் பொடித்துச் சேர்க்கவும். இஞ்சிச்சூரணத்தையும் உடன் கலந்து கொள்க. 175 கி வெல்லத்தைப் பொடித்துச் சேர்த்து இலாவகமாகச் கிளறி, நெய், தேன் வகைக்கு 165 மி.கி. சேர்த்து உறவாகும் அளவுக்குக் கிண்டி இலேகியமாக்கவும்.

உண்ணப்பா அந்திசந்தி கொட்டைப்பாக் களவு
மொருமண்டல மருந்து ஒடுகிற நோய்கேள்
பண்ணப்பா புகைச்சலோடு இருமல் பித்தம்
வறத்தனையும் நெஞ்செரிப்பு வாந்தி தீரும்
முண்ணப்பா மூவகையும் தொந்திப்போங் காரம்
முழங்கிய வயிற்றெரிவு மூலமெனும் வலியும்
காணப்பா குரல்கட்டு தலைநோவு குன்மம்
கூடும்வறட்சி மலசலக்கட் டுடனேபோய் விடுமே! 266

பொ.ரை: 2.2 கி இலேகியத்தை காலை, மாலையாக நாற்பது நாட்களுக்குக்கொடுக்க புகைச்சல், இருமல்,

பித்தம், நெஞ்செரிப்பு, வாந்தி, மூன்று வகை தொந்திப்பு, வயிற்றெரிச்சலையுண்டாக்கும் மூலவாய்வு, குரல்கட்டு, தலைநோய், குன்மம், வறட்சி, மலசலக்கட்டு ஆகிய நோய்கள் தீரும்.

போய்விடுமே உட்சுரமும் தாப சோபம்
பொருமலோடு வயிற்றிரைச்சல் சீற்றந் தீரும்
போய்விடுமே வாய்வுடன் அக்கினியின் மந்தம்
பொல்லாத உதரவெப்பு அபான வாய்வும்
போய்விடுமே கிராணியொடு அதிசாரக் கழிச்சல்
போக்கிவிடு மின்னமொரு புதுமை கேளு
போய்விடுமே பத்தியங்கே ளுப்புமிள கப்பா
புகழ்துவரை நெய்பாலாம் பூட்டக் கேளே! 267

பொ.ரை: உட்சுரம், தாகம், சோபை, பொருமல், வயிற்றிரைச்சல், அனல், வாய்வு, அக்கினிமந்தம், வயிற்றின் வெப்பம், அபானவாய்வு, கிராணி, அதிசாரக் கழிச்சல் ஆகிய நோய்கள் குணமாகும். உப்பு, மிளகாய் ஆகாது. துவரை, நெய், பால் ஆகும் பொருட்கள்.

பூட்டத்தான் வழுதலையின் பிஞ்சு மாகும்
பூக்காயாம் பத்திரியுந் தூதுவளை யப்பா
நாட்டப்பா புளிகையுப்பு புகையுந் தள்ளு
நச்சுவிடு வாய்வான பதார்த்தம் தள்ளு
ஆட்டிறைச்சி மீன்வகைக ளாந்தாய் கூட்டு
அப்பனே மற்றொன்று மாகா தப்பா
தீட்டுமுன்னே பாய்ந்துவிடும் நோய்க ளோடுந்
தீராத வினைதீர்க்குஞ் சிந்தைபரம் பரையே! 268

பொ.ரை: வழுதலையின் பிஞ்சு, தூதுவளையின் பூ, காய், இலை ஆகியவை ஆகும். புளிப்பு, கைப்புச் சுவையுள்ள பொருட்கள், புகை, நச்சு போன்ற வாய்வினை உண்டாக்கும் கறிவகைகள் ஆகியவற்றை நீக்கவும். ஆட்டிறைச்சி, மீன்வகைகள் இவற்றை ஆய்ந்து கூட்டவும். மற்றவை ஆகாது. பல நோய்கள் தீரும்.

கிரந்திபுண்ணுக்குக் கெந்தகத் தாளிநெய்

பரம்பரையாய் வருகின்ற கெந்தகத் தாளி
பாங்கான நெய்யைப் பண்பாய்க் கேளு
அரம்போலே அறுத்துவிடும் புண்ணை மாற்றும்
ஆச்சரியம் நெய்யினிட ஆண்மை யப்பா
உரம்பெறவே நறுநெய்யும் படிகா லளவாய்
உத்தமனே நறுந்தாளி மணத்தக் காளி
திரம்பெறவே ஈருள்ளி உள்ளியார் சாறும்
சிறுகவென்றால் சாறு வகைக்கா ழாக்கே! 269

பொ.ரை: புண்ணை நீக்கும் கெந்தகத்தாளி நெய்க்கு வாசனை மிக்க நெய் 325 மி.லி, நறுந்தாளி, மணத்தக்காளி, ஈருள்ளி, உள்ளி ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 162 மி.லி. எடுக்கவும்.

ஆழாக்கு கறுசாறு நெய்யுஞ் சேர்த்து
கடைமருந்து ஏலமதி மதுரங் கூட்டு
சீலமுடன் சாதிக்காய் கிராம்பு தானும்
சீரகமு மாசிக்காய் கூகை நீறும்
ஞாலமெல்லாம் புகழ்சீனி கற்கண் டோடு
நறுஞ்சிறந்த முந்திரிகை பழமும்காற் கழஞ்சி
தூலமாய் தூளாக்கி நெய்விட்டுக் காய்ச்சிச்
சோரவே பதத்திலே வடித்தி டாயே! 270

பொ.ரை: சாறு வகைகளுடன் ஏலம், அதிமதுரம், சாதிக்காய், கிராம்பு, சீரகம், மாசிக்காய், கூகைநீறு ஆகிய சரக்குகளைப் பொடித்துச்சேர்த்துக் காய்ச்சவும். சீனி, கற்கண்டு, முந்திரிகைப்பழம் இவற்றை வகைக்கு 1¼ கி தூளாக்கிப் போடவும். கொதித்து வெந்த பிறகு நெய்யைச் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடிக்கவும்.

வடித்திருத்து வழியேநெய் அந்தி சந்தி
வாகாக காசெடைதான் உண்டா யானால்
வெடித்திருந்த புண்மூலா தாரந் தொட்டு
வெந்துநீ ராய்வாய் நாற்றம் போக்கும்
கடுத்திருந்த நீர்த்தாரை மூலா தாரம்
கண்டம்வாய் தொண்டை நாக்குப்புண் ணாறும்

மடித்துவிடு முள்சூடு காந்தலே தாக
மனைத்தும்போம் கைப்புகுளிப் பதனையகற் றிடுமே! 271

பொ.ரை: வடித்த நெய்யை 4 கி அளவு காலை, மாலை உள்ளுக்குக் கொடுக்க புண், மூலாதாரம், வாய்நாற்றம், நீர்த்தாரை, மூலாதாரம், கழுத்து, வாய், தொண்டை, நாக்கு இவற்றில் ஏற்படும் புண், உள்சூடு, காந்துதல் ஆகியவை தீரும். பலவகையிலும் ஏற்படும் புண் ஆறும். கைப்பு, புளிப்புச்சுவைப் பொருட்களை நீக்கவும்.

சூசிகா சூரணம்

அகற்றிவிடுஞ் சூசிகா சூரணத்தைக் கேளு
அப்பனே முசுமுசுக்கை பொன்னாங் காணி
செகத்திலுள்ள பொடுதலையும் சமூலம்நிழ லுலர்த்தி
திறமாக வேவறுத்துத் தூளாக்கி யிடித்து
தகர்த்தபொடி வடிகட்டி சமன்வகை படிகால்
தனிபருத்தி விரைப்பருப்பு யவ்வண்ணங் கூட்டி
விகற்பமில்ல,, சிறுபயற்றின் பொடிய துவும்
உழக்குஞ்சீர்மை வெள்ளாட்டு நீரில் நனையே! 272

பொ.ரை: முசுமுசுக்கை, பொன்னாங்காணி, பொடுதலை ஆகியவற்றின் சமூலத்தை நிழலில் உலர்த்திப் பின் வறுத்துப் பொடித்து வடிகட்டி வகைக்கு 325 கி எடுக்கவும். பருத்திவிதைப் பருப்பினையும் சிறு பயிற்றின் பொடியையும் வகைக்கு 325 கி எடுத்து வெள்ளாட்டுச் சிறுநீரில் ஊறவைக்கவும்.

நனையடா சீரகத்தை வெள்ளாட்டு நீரில்
நாளொன்றுக் கொருபோது மூன்றுதர மப்பா
வினையமுறக் காயவைத்து தூளாக்கிப் பொடிதான்
விருப்பமுடன் கால்படியாய் வீதம் விரவி
யனையவிது வொன்றாகக் கலந்துசூ ரணமாய்
அனுபானம் பச்சரிசி கழுநீரி லருந்து
தினையளவு பத்தியங்கள் சாடாகா தப்பா
தினம்பத்து அந்திசந்தி திறமாக உண்ணே! 273

பொ.ரை: சீரகத்தையும் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்றுமுறை நனைத்துப் பின் உலர்த்தி வகைக்கு 325 கி ஆக எடுக்கவும். பொடித்து மேற்சொன்ன சூரணத்துடன் கலந்து கொள்ளவும். பச்சரிசி கழுவிய கழுநீரில் தினையளவு சூரணத்தைக் கலந்து உட்கொள்ளவும். காலை, மாலை கொள்ளவும். பத்தியங்கள் ஏதுமில்லை.

உண்டா யின்னமுண்டு அனுபானங் கேளு
உற்றமுத்தக் கசாயத்தில் அந்தி சந்தி
உண்டுதினம் பத்துபின்பு இளவெந்நீ ராக
ஊட்டடா அவ்வண்ணம் அந்தி சந்தி
உண்ணடா புளித்த மோரி லத்தனும்
உத்தமனே பத்துநாள் இரவு பகலும்
உண்ணடா பத்தியந்தான் வெள்ளாட்டுப் பாலாம்
உப்புமுச லொழித்துவிடு மண்டலந்தா னரையே! 274

பொ.ரை: கோரைக்கிழங்குக் குடிநீரில் சூரணங்கலந்து பத்து நாட்கள் காலை, மாலை, கொள்ளவும். இள வெந்நீரில் கலந்து காலை, மாலை பத்து நாட்கள், புளித்த மோரில் கலந்து பகல், இரவாக பத்து நாட்கள் சூரணத்தை உட்கொள்ளவும். வெள்ளாட்டுப் பாலைப் பத்தியமாக எடுக்கவும். உப்பு, முயற் கறியை இருபது நாட்களுக்கு நீக்கவும்.

மண்டலந்தான் யரைக்கப்பால் சுத்தி செய்த
உப்புவறை பொன்னாங்காணி யிலைக்கறியுங் கூட்டு
கண்டதெல்லாந் திண்ணாதே புளியு மோரு
கரியப்பா சிறுபயறு மிளகுசீ ரகமாம்
திண்டாடித் திரியாதே அனுபோகந் தள்ளு
தெளிந்துவிடும் அறுபத்துந் தீரு மட்டுவாய்
அண்டாது பிணிநோய்கள் ஒழிவதுதான் மெத்த
அறைகிறேன் புலத்தியனே அறைகி றேனே! 275

பொ.ரை: இருபது நாட்களுக்கப்பால் பாலையும் அரைப் பங்கு சுத்தி செய்த உப்பையும், பொன்னாங்காணி இலைக் கறியையும், சேர்க்க. கண்டவற்றையும் சாப்பிடக்கூடாது. புளி,

மோர் ஆகாது. சிறு பயறு, மிளகு, சீரகம் ஆகியவை ஆகும். இவ்வாறிருப்பின் அறுபது வயதாகும் வரையும் நோய்கள் அணுகாது.

அறையிறேன் சுக்கிலசு ரோணித வாய்வும்
அபானத்தி லிருந்தேறி மேல்நோக்கும் வாய்வும்
குறையாத கிராணிகுன்மம் வயிற்றிரைச்சல் கழிச்சல்
கூறரிய சீரெத்தந் திரண்டுருண்ட வாய்வு
கறையிறேன் நடுக்கெடுக்கும் சூசிகா வாய்வும்
கடிகவ்விக் கொண்டிருக்கும் கபால சூலை
நிறையுகிறேன் சுரோணிதத்தில் கெர்... னை
நெடுநாளை வியாதியெல்லாம் நின்று போமே! 276

பொ.ரை: சுக்கில சுரோணிதவாய்வு, அபானித்திலிருந்து மேல் நோக்கி எழும் வாய்வு, கிராணி, குன்மம், வயிற்றிரைச்சல், கழிச்சல், சீழ்இரத்தம், திரட்சியாகவும் இங்கும் அங்கும் ஓடும் வாய்வு, நடுக்கலையுண்டாக்கும் சூசிகாவாய்வு, கபா்லசூலை ஆகிய நோய்கள் தீர்ந்து போகும்.

சுரபாண உருண்டை

நின்று போகாத சுரமாறல் முதலெல்லாம்
நெடுநாளை விடாதசுரம் வியாதிகளு மொழிய
உண்டுதான் சுரா பாண உருண்டை
யென்மகனே புலத்தியனே அய்யா கேளு
வென்றுதினம் சூதமொடு வெள்ளைப்பாச் சாணம்
யிவைரண்டு வராகன் சமனாய்ச் சேர்த்து
பொன்றுத லில்லாத படிசுத் திகளும்
செய்துகல்வத்தில் புரளவரைத் திடவே! 277

பொ.ரை: சுரங்களில் ஒரு வகை மாறல்சுரம், நீண்ட நாள் விடாத சுரம் தீருவதற்குச் சுரபாண உருண்டை வருமாறு. இரசம், வெள்ளைப் பாடாணம் இவற்றை வகைக்கு 8 கி எடுத்து முறைப்படி சுத்தி செய்து கல்வத்தில் போட்டு அரைத்துக் கொள்ளவும்.

அரைத்திடவே பாகலிலைச்சாறு கொண்டு வைப்பாய்
அந்திசந்தி யிருசாம மரைத்த பின்பு
திரைத்திடவே இப்படித்தான் மூன்றுதின மாட்டி
சிறுபயிற்றின் பிரமாணம் குளிகைதனைத் திரட்டி
விரைத்திட நிழலுலர்த் தியபின் னப்பா
வீறடங்க பத்துநாள் தானியபுடம் வைத்து
உரைத்திடவே சுரங்களுக்கு யிஞ்சிமுலைப் பாலில்
ஒருருண்டை அந்திசந்தி யூட்டுதின மூன்றே! 278

பொ.ரை: பாகலிலைச்சாறூற்றி காலை, மாலை ஆறு மணி நேரமரைக்கவும். இவ்வாறு மூன்று நாட்கள் அரைத்து 32 மி.கி. அளவுள்ள குளிகைகளாய் உருட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும். அதனை அதன் வீரியத் தன்மை அடங்க தானியத்திற்குள் பத்து நாட்கள் வைக்கவும். இஞ்சி, தாய்ப்பால், இவற்றிலே தேனுமொன்றில் ஒரு உருண்டைவீதம் காலை, மாலை இருநேரமும் இழைத்து மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும்.

மூன்றாநாள் மாறலுக்கு மூன்றுதின மூட்டு
முறைநாலா மாறலுக்கு நாலுதின மூட்டு
என்றமற்ற பலசுரங்கள் கண்டுகண்டே யூட்டு
என்மகனே தினசுரத்துக் கொன்றேநா ளூட்டுத்
தோன்றாதே பறந்தோடும் பத்தியம் சிற்றுப்புச்
சுடுகஞ்சி வெந்நீராம் தூதளங்காய்ப் பிஞ்சு
ஈன்றியவாதம் மீகர்ம மிப்படியே செய்தா
லறுவினையு மற்றுவிடுங் குக்கிலாதி கேளே! 279

பொ.ரை: மூன்று நாட்கள் விட்டு விட்டு வரும் மாறல் சுரத்திற்கு மூன்று நாட்களும், நான்கு நாட்கள் மாறி வரும் காய்ச்சலுக்கு நான்கு நாட்களும் உருண்டையைக் கொடுக்கவும். பல சுரங்களுக்கு அதன் தன்மை பார்த்தும், நாளும் வருசுரத்திற்கு ஒரு நாளும் கொடுக்கவும். சிறிதளவு உப்பு, சுடுகஞ்சி, வெந்நீர், தூதுளங்காய்ப் பிஞ்சு இவை ஆகும் பொருட்கள். வாதத்தை நீக்கும் குக்கிலாதி வடகம் செய்முறை வருமாறு.

குக்கிலாதி வடகம்

குக்கிலாதி வடகமப்பா பாங்காய்க் கேளு
கூறுமிக் குக்கிலொரு கழஞ்சி மூன்று
முக்கியமாம் நல்லதொரு பரங்கிப் பட்டை
முக்கழஞ்சி ரசந்துருசு கூகை நீறும்
தக்கில்லா தொருகழஞ்சி லவங்கப் பட்டை
தானுமொரு கழஞ்சுகுங் குலியங் கழஞ்சு
பிக்கில்லா பனைவெல்ல மோர்க ழஞ்சு
பிலத்தநாவி கெவுரிபா சாணம் மூன்றே! 280

பொ.ரை: குக்கில் 15 கி, பரங்கிப்பட்டை 15 கி, இரசம், துருசு, கூகைநீறு, இவற்றை வகைக்கு 5 கி, இலவங்கப்பட்டை 5 கி, குங்கிலியம் 5 கி எடுத்துக் கொள்ளவும். பனைவெல்லம் 5 கி, நாவி, கௌரி பாடாணம் வகைக்கு 5 கி எடுக்கவும்.

மூன்று வகைக்கு கழஞ்சு கூட்டு
முறையோடே மிதிபாக லிலைதன்னை யப்பா
வென்றதொரு பிடியாக சமூலமொடு கசாயத்தில்
மருந்துரெண்டு மோர்கிழி தோலேந் திரமா
யூன்றவகை வேகவைத் தூறசுத்தி யாச்சு
ஒன்பதுவகை மருந்தும் உரலில் போட்டு
போன்றபின்பு நொச்சியுட கொழுந்துமுக் கழஞ்சு
போட்டதிலே குளிர்ந்தசலம் விட்டு நன்றாய்! 281

பொ.ரை: மிதி பாகலின் சமூலத்தினாலான (இலை, பூ, காய், வேர், பட்டை) குடிநீரைக் கொதிக்கச் செய்யவும். அதில் நாவி, கௌரி பாடாணத்தைத் தூய்மையான வெள்ளைத் துணியில் வைத்துக் கிழியாகக் கட்டி வேகவைத்தெடுக்க சுத்தியாகும். இதனுடன் மேற்கூறிய மருந்துகளைச் சேர்த்து உரலிலிட்டிடித்து 15 கி நொச்சிச்சாற்றையும் குளிர்ந்த தண்ணீரையும் சேர்த்து இடிக்கவும்.

இடித்த மருந்தெல்லாந் தானொன் றாகச்சேர்
இரதம்விட்டு மாளுமட்டும் இடித்த பின்பு
மடித்திடக் கறியுப்பும் பழம்புளியு மெளிதாய்
வகைக்கொரு கழஞ்சிட்டு ஆட்டு ஆட்டு

துடித்திடாது திறந்த மிறக்கி தானே
சூட்டடா குளிர்ந்த சலம்தெ ளித்து
இடிக்கச்சேறு மத்தாம் விடாமலே தொண்ணூறு கடிகை
பதியவே இடிப்பதினால் பாங்காகும் பாரே! 282

பொ.ரை: மருந்துகள் உறவாகும் வண்ணம் இரசத்தையும் சேர்த்திடித்து மடியும் வண்ணம் கறியுப்பையும் பழம்புளியையும் வகைக்கு 5 கி உடன் சேர்த்தரைத்து இறக்கவும். குளிர்ந்த தண்ணீரை விட்டு முப்பத்தாறு மணிநேரம் இடிக்க பதமான வடகம் தயாராகும்.

பாங்கான பதமப்பா மயில்கழுத்துப் போலாம்
பக்குவத்தில் சுண்டைக்காய் பிரமாண முண்டை
தேங்காமல் குளிகைகட்டி நிழலு லர்த்தி
சிறியதொரு புதுகலசத் திட்டாறி னால்போல்
நீங்காமல் தலைமுழுகிப் பேதிக்கு வாங்கி
நேயமுடன் மூன்றுநாள் அந்திசந்தி யப்பா
வாங்காமலே ஏரைநாள் பேதிலற....
வாகாகப் பனைவெல்லம் பொதிந்தருந்து மருந்தே! 283

பொ.ரை: மயில் கழுத்து நிறமான பதமாயுள்ள பொருளாகும். அதைச் சுண்டைக்காயளவுள்ள உருண்டைகளாய்த் திரட்டி நிழலில் உலர்த்தி புதிய கலசத்தில் பதப்படுத்தவும். தலைகுளிக்கச் செய்து கழிச்சலான பிறகு தொடர்ந்து மூன்று நாட்கள் காலை, மாலையில் இவ்வடகத்தைப் பனைவெல்லத்தில் பொதிந்து கொடுக்கவும்.

மருந்தருந்து மேழரைநாள் கரப்பா லோருண்டை
மறுத்திவிடு மொன்பதாம்நாள் தலையை மூழ்கு
பொருந்தலாய் நல்லெண்ணெய் ஒன்றைவிட் டொருநாள்
பெறவே பதினஞ்சு முழுக்கு முழுகப்பா
விருந்தான நோய்களெல்லாம் பறந்தோடிப் போகும்
விபரமரை யாப்புபவுத் திரமுந் தீரும்
விரைந்திருந்து பறந்தெழுந்த கரப்பனோடு கிரந்தி
வெருகின்ற சூலைபதி னெட்டும் போமே! 284

பொ.ரை: ஏழரை நாட்கள் குக்கிலாதி வடகத்தை உட்கொண்டு ஒன்பதாம் நாள் தலை குளிக்கவும். நல்லெண் ணெய் தேய்த்து ஒன்றை விட்டொரு நாள் ஆக பதினைந்து முழுக்குகள் முழுகவும். பல நோய்கள் நீங்கும். அரையாப்பு, பவுத்திரம், கரப்பான், கிரந்தி, பதினெட்டு வகை சூலை குணமாகும்.

சூலைபதி னெட்டும்போம் பிளவைகளும் போகும்
சூசிகா வாய்வுமுதல் பலாவாய்வு போகும்
வாலையாய் புடைத்தெழுந்த வீக்கமோடு புண்கள்
வாறகறடு முறடுகளும் வளர்சூலைக் கட்டும்
கால்முடக்கி யதுமேக வகையோடு சூலை
கைச்சூலை காசல் கைகூட....
பாலையிலே படுந்தீப்போல் நோய்களையு மெரிக்கும்
பத்தியங்கள் சகலமும் பன்றிமரை யகற்றே! 285

பொ.ரை: பிளவைகள், சூசிகாவாய்வு முதல் பலா வாய்வு, வீக்கம், புண்கள், சூலைக்கட்டு, கால்முடக்கம், மேக வகைகள், கைச்சூலை, கால், கை அசதி போன்ற பல நோய்களையும் பாலையில் பட்ட நெருப்பு போல் குணமாக்கும். உப்பு, புளிப்பு, கார்ப்புச்சுவை பொருட்களை நீக்கவும். பன்றி, மான் இவற்றின் இறைச்சிகளை நீக்கவும்.

அகற்றுவது செம்மறியின் ஆடுபன்றி இறைச்சி
அப்பனே பச்சைமீன் பூசணிக்காய் உழுந்தும்
அகற்றிவிடு பத்தியங்கள் ஆறு திங்கள்
கடந்தால் எல்லாந்தான் கசடொன் றில்லை
அகற்றிவிடும் பத்தியத்தில் தளவு செய்து
அப்போது வீக்கங்கள் உண்ட போது
அகத்திவிடு மிதிபாகல் கசாயம்போட் டருந்த
அசடெல்லாந் திறந்துவிடும் அழகுசவுந் திரியாமே! 286

பொ.ரை: செம்மறியாட்டிறைச்சி, ஆடு, பன்றி இவற்றின் இறைச்சி, சமைக்காத மீன், பூசணிக்காய், உளுந்து ஆகியவற்றை நீக்கவும். ஆறு மாதங்கள் பத்தியங்கள் அனைத்தையும் கடை பிடிக்கவும், பிறகு பத்தியங்களைத் தளர்த்தவும். மருந்து

உட்கொள்ளும் போது வீக்கங்கள் உண்டாயின் மிதிபாகல்குடிநீரைக் குடிக்க நலமாகும். அசதி தீரும்.

அரையாப்புக்கு லேகியம்

திறமாக அரையாப்பு தீர வென்றால்
செப்புகிறேன் வேர்க்கொம்பு திப்பிலியோர் பலமாம்
திறமாக மிளகோமம் வகைக்குமுக் கழஞ்சு
சிறந்ததொரு பெருங்காயம் இரண்டுகழஞ் சப்பா
திறமாக வெள்ளுள்ளிப் பருப்பஞ்சு கழஞ்சு
சீர்சிறந்த பனைவெல்லம் இரண்டுபலமுங் கூட்டி
திறமாக யிவையெல்லாம் உரலிலே இடித்து
தின்றுவர லேகியத்தைத் தீர்ந்துபோம் பாரே! 287

பொ.ரை: சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம் இவற்றை வகைக்கு 15 கி, பெருங்காயம் 10 கி, வெள்ளைப் பூண்டுப்பல் 25 கி, பனை வெல்லம் 70 கி, எடுத்து சரக்குகளைச் சுத்திப்படுத்தி உரலில் போட்டிடித்து இலேகியமாக்கி உண்டு வர அரையாப்பு குணமாகும்.

பித்தகாமாலை சூரணம்

பாரப்பா பித்தகா மாலைசூர ணத்தைப்
பாடுகிறேன் புலத்தியனே பண்பாய்க் கேளும்
சீரப்பா திரிகடுகு வகைக்கு மைங்காய
சீரகமிரண் டரையாம் மஞ்சளோடு ஓமம்
சேரப்பா வகைக்குமுறை சீர கந்தான்
பேருடமுக் கழஞ்சிவையும் ஒன்றாய்க் கலந்து
பாரப்பா எலுமிச்சஞ் சாற்றி லாட்டி
கறையவைத்தே மூன்றுதினம் இப்படியே செய்யே! 288

பொ.ரை: சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், வெந்தயம், நற்சீரகம், பெருஞ்சீரகம், மஞ்சள், ஓமம் இவற்றை வகைக்கு 15 கி எடுத்துப்பொடித்துச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைக்கவும். இவ்வாறே மூன்று நாட்கள் செய்யவும்.

செய்வதுதா னரைபலந்தா னப்பாயித் தெல்லாம்
திறமாக உலர்த்தியே தூளாக்கி வடித்து
உய்வதற்கு யெட்டொன்று சீனிகலந் திட்டு
ஒடுங்காத பித்தகா மாலைக்கு
உய்யவெரு கடியாய் கொள்ளு கொள்ளு
இருபோது மண்டலமுண் டனுபானங் கேளு
நய்வதில்லைப் பழச்சாறு தேனிலே யருந்து
நலமான யிஞ்சிதென்ற நீரிலு மருந்தே! 289

பொ.ரை: அவ்விழுதை நிழலில் உலர்த்திப் பொடித்து வடிகட்டிச் சூரணமாக்கவும். அச்சூரண எடைக்கு எட்டிலொரு பாகம் சர்க்கரையைக் கலக்கவும். மூவிரலளவு சூரணத்தை நாற்பது நாட்கள் காலை, மாலை எலுமிச்சம் பழச்சாறு, தேன், இஞ்சிச்சாறு இவற்றை அனுபானமாய்க் கொண்டு உட்கொள்ளவும்.

அருந்தினால் தீருகிற நோய்வகை யப்பா
அறைகிறேன் பித்தகா மாலைவகை யாறும்
பொருந்தவே சொல்லுகிறோம் வெள்ளைமஞ்சள் ரத்தம்
பொல்லாத நீரோடும் வறட்சியிது வெல்லாம்
தீராத வூதுகா மாலையோடு யிவைகள்
தீர்ந்துபோம் பத்தியந்தான் சிறுகீரை யுப்பே! 290

பொ.ரை: அவ்வாறு மருந்தைக் கொள்ள ஆறுவகைப் பித்த காமாலையும் வெள்ளை, மஞ்சள், இரத்தம், நீரோடும் வறட்சி, ஊது காமாலை ஆகிய நோய்களும் தீரும். சிறுகீரையும் உப்பும் பத்தியமாகும்.

தாளிசபத்திரி வடகம்

உப்பில்லாப் பத்தியந்தான் சுருக்காக வொழிய
மொழியாத வியாதிக்கு உரைக்கிறே னப்பா
ஒப்பில்லா தாளிசபத் திரியின் வடகம்
உத்தமனே வகைகேளு தாளிசபத் திரிதான்
முப்பத்தியொன்று விளம்பினார் கழஞ்சி யோடு
இதுக்கிசைந்த திரிகடுகும் ஏலம்

செப்பினார் சாதிக்காய் பத்திரி கிராம்பு
செவ்வியமும் லவங்கப்பட்டை யிவையுங் கூட்டே! 291

பொ.ரை: உப்பில்லாப் பத்தியம் பல நோய்களுக்கும் உகந்தது. தாளிசபத்திரி 155 கி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, செவ்வியம் எனும் மிளகு, இலவங்கப்பட்டை ஆகியவற்றை எடுக்கவும்.

கூட்டடா மதுரமொடு வாய்விளங்கம் ஓமம்
குரோசாணி சிறுநாகஞ் சீரகமோ டரத்தை
கூட்டடா வால்மிளகு அக்கிலக் காரம்
கோஷ்டமொடு தேசபுரம் கொத்துமல்லி கூகை
கூட்டடா சிறுதேக்கு அமுக்கிரா வேரும்
கூடறி பேரீந்து முந்திரிகைப் பழமும்
கூட்டடா வகையொன்று கழஞ்சி யொன்று
குமுறவே காயவைத்து யிடித்துதூ ளாக்கே! 292

பொ.ரை: அதிமதுரம், வாய்விடங்கம், ஓமம், குரோசாணி ஓமம், சிறுநாகப்பூ, நற்சீரகம், பெருஞ்சீரகம், அரத்தை, வால்மிளகு, அக்கிராகாரம், கோட்டம், தேசாவரம், கொத்துமல்லி, கூகைநீறு, சிறுதேக்கு, அமுக்கிராவேர், பேரீந்து, முந்திகைப்பழம் இவற்றைவகைக்கு 5 கி எடுத்து உலர்த்தி இடித்துப் பொடித்துக் கொள்ளவும்.

தூளாக்கி தாளிதனில் ஆவின்பா லிரண்டு
படி வேடுகட்டி ....
தூளாக்கி வைத்தபொடி புட்டவியல் செய்து
சூட்டுடனே தேன்வார்த்து ஆட்டியுண்டை செய்து
தூளாக்கி பிரமாணம் கொட்டைப்பாக் களவு
சூட்சமா யுருட்டியது புதுகற்கத் திட்டு
தூளாக்கிப் படியந்தி சந்தியிலொரு மண்டலம்
சுகமாக வேமென்று தின்னப் போமே! 293

பொ.ரை: தாழியில் 2.6 லி பசும்பாலை ஊற்றவும். அதன் மேல் பாகத்தில் வேடுகட்டி அத்துணியினுள் மேற்சொன்ன பொடியை வைத்துப் பிட்டவியலாக வேகவைத்து, அதனுடன்

தேனை ஊற்றி அரைத்து உருண்டைகளை 2.2 கி அளவில் செய்யவும். புதிய கற்கத்திலிட்டுப் பத்திரப்படுத்தவும். காலை, மாலை ஒரு உருண்டை வீதம் நாற்பது நாட்களுக்கு உட் கொள்ளவும்.

தின்னப்போம் காசவகை சயங்களோடு இருமல்
தீரும்தீராத வினையஞ்சு சுவாச காசம்
தின்னப்போம் மந்தார காசம்சிலேற் பனத்தில்
வருந்தொண் ணூற்றாறு ரோகங்கள்
தின்னப்போம் குன்மம்நீர்க் கட்டு வாந்தி
தேகத்தில் காந்தல்நெஞ் செரிப்புதா கங்கள்
தின்னப்போம் சுரம்வீறு அக்கினியின் மந்தம்
தெளியாத மூன்றுவகைப் புனைப்புந்தீர்ந் திடுமே! 294

பொ.ரை: காச வகைகள், சயவகைகள், இருமல், தீராத வினைவகை ஐந்து, சுவாசகாசம், மந்தாரகாசம், சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறு வகை, குன்மம், நீர்க்கட்டு, வாந்தி, உட லெரிவு, நெஞ்செரிப்பு, தாகம், காய்ச்சல், அக்கினி மந்தம்,

தீர்த்திடுமே ரத்தபித்தம் வாயினால் கக்கல்
செய்கிராணி மூலரத்தம் சலக்கழிச்சல் பொருமல்
தீர்ந்திடுமே பத்தியங்கள் புளிகைப்பு புகையும்
தீண்டாதே மாங்கிசங்கள் பச்சையொன்று மாகா
தீர்ந்திடுமே தாளிசபத்திரி தாதுநட்டம் மேகவகை
கூடச்சித்தியாம் வெள்ளாட்டுப்பால் கூட்டு தினந்தான்
தீர்ந்திடுமே தாளிசபத் திரிசூ ரணந்தான்
செப்புகிறேன் புலத்தியனே செப்பு றேனே! 295

பொ.ரை: இரத்த பித்தம், கக்கல், கிராணி, மூலரத்தம், சலக்கழிச்சல், பொருமல் தீரும். புளிப்பு, கைப்புச்சுவைகளை நீக்கவும். புகையை நீக்கவும். சமைக்காத இறைச்சி ஆகாது. தாதுநட்டம், மேக வகைகளும் தீரும். நாள் தோறும், வெள்ளாட்டுப் பாலைச் சேர்க்கவும். தாளிசபத்திரி சூரணந்தைக் கூறுகிறேன்.

தாளிசபத்திரி சூரணம்

செப்புகிறேன் தாளிசபத்திரி வகைதா னப்பா
திறமாக நாற்பதுவே கழஞ்சு கூட்டு
செப்புகிறேன் சீனியந்த யெடைக்கிடைதான் கூட்டு
திரிகடுகுந் திரிபலையுஞ் சீரகமிரண் டேலம்
செப்புகிறேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
சிறுதேக்கு அதிமதுரம் சிறுநாகப் பூவும்
செப்புகிறேன் லவங்கப்பட் டையும்பத் திரியும்
செவ்வியமோ வாய்விளங்கஞ் சிற்றரத்தை கூட்டே! 296

பொ.ரை: 200 கி தாளிசபத்திரியை எடுத்து அதே அளவு சர்க்கரையைச் சேர்க்கவும். சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், நற்சீரகம், பெருஞ்சீரகம், ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, சிறுதேக்கு, அதிமதுரம், சிறுநாகப்பூ, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, செவ்வியம், வாய்விடங்கம், சிற்றரத்தை சேர்க்கவும்.

கூட்டடா வால்மிளகு ஓமம் இரண்டு
கோஷ்டமும் கோரோசணை தேசாபுரம் அக்கிலாக்காரம்
தீட்டடா கொத்துமல்லி முந்திரிகைபே ரீந்து
கூகைதான் நீறுங் கூட்டு
மூட்டடா நிலைப்பனைவேர் அமுக்கிரா வேரு
முத்தக்காசு விலாமிச்சம் வெட்டி வேரு
நாட்டடா தூதுவளை கண்டங்காரி வேரும்
நல்லநெய்தல் கிழங்குடனே நெற்பொரியும் நாட்டே! 297

பொ.ரை: வால்மிளகு, ஓமம், குரோசாணி ஓமம், கோட்டம் கோரோசனை, தேசாவரம், அக்கிராகாரம், கொத்து மல்லி, முந்திரிகை, பேரீந்து, கூகைநீறு, நிலப்பனைவேர், அமுக்கிராவேர், கோரைக்கிழங்கு, விலாமிச்சம், வெட்டிவேர், தூதுவளை, கண்டங்காரி வேர், நெய்தல் கிழங்கு, நெற்பொரி.

நாட்டுமிந்த மருந்துவகை நாற்பதுக்கு மப்பா
நலமாக வகைக்குமொரு கழஞ்சு மாக
கூட்டுமிவை பழுதகற்றி வெயில்காய வைத்து
குமுறயிடி பொடிவகையும் கொண்டுபின்பு சீனி

காட்டுவொன்றாய்க் கலந்தபின்பு புதுகற்கத் திட்டுக்
கைக்கடங்க வெருகடிதா னிருபோது முண்ணு
பூட்டுவது தேனிஞ்சிச் சாறாகு மப்பா
புகலவறு மாதுளம்பழச் சாற்றில் போமே! 298

பொ.ரை: ஆகிய நாற்பது வகை மூலிகை மருந்து சரக்குகளை வகைக்கு 5 கி எடுத்துச் சுத்தித்து வெயிலில் உலர்த்தவும். பின்பு அவற்றை இடித்துப் பொடித்துச் சர்க்கரையையும் உடனிட்டுப் பொடித்துப் புதிய கற்கத்திலிடவும். மூவிரலளவு சூரணத்தைக் காலை, மாலையில் தேன். இஞ்சிச்சாறு, மாதுளம் பழச்சாறு இவற்றை அனுபானமாய்க் கொண்டு உட்கொள்ளவும்.

போமப்பா காசவகை தொண்ணூற் றாறும்
பொல்லாத காமாலை யாறு மாகும்
போமப்பா பலமூட்சை தாக சோபம்
பொருமலொடு ஈளைவலி இருமல் போகும்
போமப்பா வாந்தி யரோப்பு தானும்
பூண்டகுன்மம் நெஞ்செரிப்பு தேகங் காந்தல்
போமப்பா பித்தவெட்டை தாது நட்டம்
புகைச்சலொடு கண்மயக்கம் புண்பொடிகள் போமே! 299

பொ.ரை: தொண்ணூற்றாறு வகை காசமும் ஆறுவகை காமாலையும், மூட்சை, தாகம், சோபை, பொருமல், ஈளைவலி, இருமல், வாந்தி, அரோசிகம், குன்மம், நெஞ்செரிப்பு, உடல் காந்துதல், பித்தவெட்டை, தாதுநட்டம், புகைச்சல், கண் மயக்கம், புண்பொடி குணமாகும்.

புண்பொடிகள் சிரங்குடனே கரப்பான் போகும்
பூணாக வெந்தகெந்தத் தாளி போகும்
புண்பொடியாஞ் சூலைகளும் குட்டம் போகும்
பேர்பெரிய... ண பத்தாறும் போகும்
புண்பொடியாம் நோய்போக பத்தியத்தைக் கேளு
புகழ்துவரை முளைத்தண்டு தூதுவளைச் சமூலம்
புண்பொடியாம் வெள்ளாட்டுப்பால் யிதுக்குப் பிரியம்
பொல்லாத மாங்கிசங்கள் புளிகார்ப்பு மகற்றே! 300

பொ.ரை: சிரங்கு, கரப்பான், சூலை வகைகள், குட்ட வகைகள், வாய்ப்புண் ஏற்பட்டு வாய்நாற்றம் காணும் இரணநோய் தீரும். புண்பொடிகள் நீங்குவதற்கு உரிய பத்தியத்தைக் கேட்பாயாக! துவரை, முளைத்தண்டு, தூதுவளைச்சமூலம், இவற்றை உட் கொள்ளவும். வெள்ளாட்டுப்பாலைச் சேர்த்துக் கொள்ளலாம். இறைச்சி, புளிப்பு, கார்ப்புச் சுவைகளை நீக்கவும்.

சௌபாக்கியச் சுண்டி

அகற்றிவைக்கு மப்பனே நோய்களுக்கு மார்பாணி
செப்புகிறேன் சவுபாக்கியச் சுண்டி தன்னை
அகற்றிவைக்குங் கரிசாலை பொடுதலைச் சமூலம்
அழகாக நிழலுலர்த்தி
அகற்றிவைக்கும் யிடித்ததூள் வடிகொண் டதனை
அப்பனே வகையொன்று பலமு மெட்டு
அகற்றிவைக்கும் திரிகடுகு திரிபலையு மோடு
அதிமதுரம் ஓமமிரண்டு தாளிபத் திரியே! 301

பொ.ரை: கரிசலாங்கண்ணி, பொடுதலைச்சமூலம் இவற்றை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திர காயமிட்டு வகைக்கு 280கி எடுத்துக் கொள்ளவும். சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதுரம், ஓமம், குரோசாணி ஓமம், தாளிசபத்திரி,

பத்திரியுஞ் சிற்றரத்தை தேசாபுரமு மேலம்
பழுதன்றி வகைக்குவொரு பலந்தான் கூட்டு
பத்திரியுஞ் சாதிக்காய் கிராம்புவகை மூன்றும்
பனைப்பில்லா அதிவிடையம் சீரகங்க ளிரண்டும்
பத்திரியாம் வால்மிளகு கொத்து மல்லி
பாங்குடைய வெந்தயம்வகைக் கரைப்ப லந்தான்
பத்திரியைக் காயவைத்து யிடித்துவடி கட்டி
பழையபொடி யிரண்டுயிதில் பருவமுடன் விரவே! 302

பொ.ரை: சிற்றரத்தை, தேசாவரம், ஏலம் இவற்றை வகைக்கு 35 கி, சேர்த்து இடித்துப் பொடிக்கவும். சாதிபத்திரி,

சாதிக்காய், கிராம்பு இவை மூன்றையும், அதிவிடையம், நற்சீரகம், பெருஞ்சீரகம், வால்மிளகு, கொத்துமல்லி, வெந்தயம் இவற்றையும் வகைக்கு 17 ½ கி எடுத்துக்காயவைத்துப் பொடித்து மேற்குறிப்பிட்ட இருவகைச் சூரணத்துடனும் சேர்க்க.

விரவிவர பொடிகளுக்கும் பசுவின்பால் விட்டுகிண்டி
வேடுகட்டி நாலுபடி பாலுள்ளாய் விட்டு
விரவிவைத்து மருந்தையந்த வோட்டுமேல் வைத்து
வுடன்தேன் படிதா னொன்றுவிட்டுக் கிண்டி
விரவியதோர் யடுப்பேற்றிப் பிட்டவித்தாப் போலே
வெந்தபின்பு வாங்கியதைத் தன்னி லாட்டி! 303

பொ.ரை: பசும்பாலைச் சூரணத்தில் ஊற்றிக் கிளறி கலக்கவும். பின் மற்றொரு பாத்திரத்தில் 5.2 லி பாலை ஊற்றி மேலே வேடுகட்டி அதற்குள் சூரணத்தை வைத்து வேக வைக்கவும். வெந்தெடுத்த சூரணத்துடன் 1.3 லி தேனை விட்டுக் கிளறி வேகவிடவும்.

ஆட்டியதைச் சுண்டைக்காய் பிரமான முண்டை
அப்பனே கட்டியபின் நிழலு லர்த்தி
விட்டல்லா மலேநோய் பலமும் கண்டு
விரைந்துவொரு குளிகை .....
நாட்டுநீ நறுந்தேன் சீனியிஞ்சிச் சாற்றில்
நலஞ்சிறந்த மாதுளம்பழச் சாறு தன்னில்
கூட்டுநீ யிலுமிச்சன் நார்த்தம்பழச் சாற்றில்
குமறுயிள வெந்நீரில் கொண்டிடநன் றாமே! 304

பொ.ரை: வேகவைத்த சூரணத்தைச் சுண்டைக்காயளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்தவும். நோயின் தன்மை, நோயாளியின் வன்மை, மென்மையை உணர்ந்து ஒரு குளிகையை தேன், சர்க்கரை, இஞ்சிச்சாறு, மாதுளம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, இளவெந்நீர் ஆகியவற்றை அனுபானமாய்க் கொண்டு உட்கொள்ளவும்.

நன்றாடும் வியாதிகளை மென்றுதின்னு மப்பா
நலங்கெடுக்குஞ் சுகற்க்கிராணி குன்ம மோடு

கன்றாடும் வாய்வுகளும் கத.... யுறுப்பிசமுங்
கட்டோடே யோடுமடா குன்மவகை தீரும்
நின்றாடும் பொருமலோடு தாகம்வெதுப்பு ரோகி
நிலையடா நெய்பால் துவரையோ டண்டம்
ஆட்டிறைச்சி யுலர்த்தினது வழுதலம்பிஞ் சாகும்
ஆமடா தூதுவளை சமூல மாகும்! 305

பொ.ரை: கிராணி, குன்ம வகைகள், வாய்வு, உப்பிசம், பொருமல், தாகம், வெதுப்பு, அரோசிகம் ஆகியவை தீரும். நெய், பால், துவரை முட்டை, பக்குவப்படுத்தப்பட்ட ஆட்டிறைச்சி, வழுதலம் பிஞ்சு, தூதுவளைச் சமூலம் ஆகியவை ஆகும் பொருட்கள்.

.... ப்பிஞ்ச முளைத் தண்டு மாகும்
ஆமடா சிறுகீரை பொன்னாங் காணி
அயிறமீன் கெளுறுவிரா லுலர்த்தினதுங் கூட்டு
வாமடா வுப்புமிளகு... சிறுபயிறும்
அரகரா வெந்நீரும் அருந்திட லாமே! 306

பொ.ரை: முளைத்தண்டு, சிறுகீரை, பொன்னாங்காணி, உலர்த்தப்பட்ட அயிரை மீன், கெளிறு, வரால், ஆகியமீன்களும் ஆகும். உப்பு, மிளகு, சிறுபயிறு, வெந்நீர் இவை ஆகும் பொருட்கள்.

ஆமப்பா நீர்ப்பாடு கோபப்பாடு மல்லால்
அசீரணத்தில் மந்த ... பேதி மிகுந்தால்
ஆமப்பா சண்டை மறு ...... கு....
அப்பனே தும்பையோடு குப்பை மேனி
ஆமப்பா நாய்வேளை சமூலம் வாங்கி
வகைக்குவொரு படியதாக
ஆமப்பா சட்டியிலே தீயளவே கருக்கி
சாம்பலான கொட்ட சட்டி துடையே! 307

பொ.ரை: நீர்ப்பாடு, அசீரணம், மந்தக் கழிச்சல் ஆகியவை நீங்குவதற்குத் தும்பை, குப்பைமேனி, நாய்வேளை ஆகிய வற்றின் சமூலத்தை வகைக்கு 1.3 லி எடுக்கவும். அடுப்பில் சட்டியை வைத்து மூலிகைகளை இட்டு கருக்கிச் சாம்பலாக்கிக்

கொள்ளவும். அதனை மற்றொரு சட்டியில் கொட்டி இச் சட்டியைத் துடைக்கவும்.

துடைத்தசட்டி திரும்பவுந்தான் அடுப்பி லேற்றி
துடியான வெந்தயமும் ஓமம்முக் கழஞ்சு
உடைத்தருணம் மையதுபோல் சிவக்கவறுத் தப்பா
ஒருபடிதான் சலமும்விட் டெட்டொன்றாய்க் குறுக்கி
மடைத்தலைப் பாய்ச்சுவதாக வடித்துநீ யருந்து
வயிறடைக்கும் பேதியோடு வாந்தியுமுப் பிசமும்
படைத்தலையம் போலடைக்கும் தாகம்விட் டோடும்
பண்பில்லா பொரித்தகஞ்சி பரிந்து கூட்டே! 308

பொ.ரை: துடைத்த அச்சட்டியை அடுப்பிலிட்டு வெந்தயம், ஓமம் இவற்றை வகைக்கு 15 கி எடுத்துச் சிவக்க வறுத்து அதனுடன் 1.3 லி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் குறுக்கிக் குடிநீராய்க் காய்ச்சி வடித்து அளவுடன் குடிக்கவும். வயிறடைக்கும் கழிச்சல், வாந்தி, உப்பிசம், கோழை, தாகம் தீரும். பொரித்த கஞ்சியைச் சேர்க்கவும்.

அந்திரதாகத்துக்கு மண்குடிநீர்

பரிந்துசெய்யுந் தாகமோடு அந்திர தாகம்
பலசுரமும் கண்டாக்கால் பண்பாய் மைந்தா
தெரிந்துவொரு மண்குடிநீர் செப்பக் கேளு
சீனிமணற் கடுகுபோல் யொன்றேகால் படிதான்
எரித்துபோகத் தொருதாளி பொறுத்த ததிலே
நீட்டடா மணற்கொட்டிச் சாமம்வறு தீப்போல்
வெறித்ததிலே போடடா வாசங்கொள்ளு மப்பா
வாகாகப் பெரும்பிடிதான் யறுத்ததிலே போடு
கறிந்திட்டுத் தீய்ப்பதும் பருவங் கண்டு
கொண்டேன் வெளிபடுத்தி ஓமமிரு கழஞ்சே! 309

பொ.ரை: தாகம், அந்திரதாகம், பலவகைச்சுரம், தீரு வதற்குக் கடுகு போல் உள்ள சீனமண்ணினை, 1.625 கி எடுத்துத் தாழியிலிடவும். அடுப்பிலிட்டு எரித்து மூன்று மணிநேரம் வறுத்துக் கொள்ளவும். வாசனை முதலில் வரும்

அவ்வாறே தீய்ந்து போகும் வரை வறுத்து அந்நேரம் 10 கி ஓமத்தைச் சேர்க்கவும்.

ஓமமிட்டுப் பொரிந்தபின்பு போடுநற் சீரகந்தான்
ஒருமிப்பாய் முகமாறி பார்த்ததிலே விட்டு
நேமமுடன் யெரிநிறுத்தித் தீயாறாமல் நீயும்
நின்றுபோகாத படியது வண்டு கட்டுத்
தாமமில் லாமலே அடுப்பேற்றி நன்றாய்
தளமூட்டி யடுப்பேற்றித் தீயெரித் தந்த
நேமமதாய் நீராய் தாக்கியொரு செப்பில்
நிறையெடுத்து வடிகட்டிக் கொள்வதுக்குக் கொடுமே! 310

பொ.ரை: ஓமமிடும் போது பொரியும் நேரம் நற்சீரகத்தையும் விட்டுப் பொரித்து அனலைக் குறைக்கவும். வெப்பம் ஆறாத படிக்கு வண்டு கட்டிக்கொள்ளவும். பிறகு அடுப்பில் வைத்தெரித்துத் தேவையான அளவு தண்ணீரை ஊற்றி சிறிது நேரம் ஊறவைத்து செம்பில் வடிகட்டிக் கொடுக்கவும்.

கொடுத்திடவே தாகம்போம் மருட்சை போகும்
கொண்டபின்பு சிறுதாக மெடுத்தால் பின்பு
மடுத்திடாத் தாகத்துக் கரைசெம்பு கொடுக்க
அடக்கிவிடும் பருமாற்ற மானதற்கு மதுவே
படுத்திடா தெருப்பிடுந் தாகமொடு சோபம்
பறக்குமிந்த குடிநீரால் பரிவுமிக வுண்டாம்
தடித்திடா படிசொன்னோம் சஞ்சீவி மருந்து
சாற்றரிது வுற்பனங்கள் சாந்தவற்கு முரையே! 311

பொ.ரை: தாகம், மயக்கம் இக்குடிநீரால் நீங்கும். மீண்டும் தாகமெடுத்தாலும் இதனைக் கொடுக்க நீங்கும். அரைச்செம்பு குடிநீர் இத்தாகத்திற்கு பரிமாற்றமாகும். தாகத்துடன் சோபையும் தீரும். யான்கூறிய மருந்துகளைப் பிறருக்கும் உரையுங்கள்.

அஷ்டகுன்ம லேகியம்

உரைக்கிறேன் அஷ்டகுன்ம லேகியத்தை யப்பா
ஒடுங்காத வயிற்றுவலி வாய்வெல்லாம் போக

உரைக்கிறேன் நாய்வேளை பிரண்டைகுப்பை மேனிக்
கொவ்வொன்று ஒருபடியாஞ் சாறுதனைக் கூட்டு
உரைக்கிறேன் யிலுப்பையுட புண்ணாக்குத் தானும்
மோரஞ்சு லீரஞ்சு பலபுடத்தி லூட்டு
உரைக்கிறேன் சாறுவற்றி குழம்பான பின்பு
உண்டையுடன் புடக்கருக்கு மிடித்துத் தூளாக்கே! 312

பொ.ரை: வயிற்றுவலி, வாய்வு, தீருவதற்கு அஷ்ட குன்ம லேகியம் வருமாறு. நாய்வேளை, பிரண்டை, குப்பைமேனி இவற்றின் சாறுகளை வகைக்கு 1. 3லி எடுக்கவும். இலுப்பைப் புண்ணாக்கு, மோர் இவற்றை வகைக்கு 350 கி எடுத்துப் புடமிட்டு சாறுகளை வற்றச் செய்யவும். சாறு வற்றிக் குழம்பானபின்னர் நிழலிலுலர்த்தி இடித்துப் பொடித்துக் கொள்ளவும்.

தூளாட்டி வைத்தபின்பு வறுக்குமருந் தப்பா
சொல்லக்கேள் திரிகடுகு ஓமமோர் பலமாய்
தூளாட்டி ரோகணியும் அன்ன பேதி
சுருக்கான குரோசாணி காயமும்முக் கழஞ்சு
தூளாட்டி வறுத்திடித்து மருந்துஞ் சேர்த்துச்
சொற்பெரிய பனைவெல்லம் கூட்டித்
தூளாட்டும் முன்சாறு வற்றினதே உரலில்தூள்
சிதறாதே வழித்துவிடு பொடியைத் தூவே! 313

பொ.ரை: பொடித்த மருந்துடன், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் இவற்றை வகைக்கு 35 கி, கடுகுரோகணி, அன்னபேதி, குரோசாணி ஓமம், பெருங்காயம் இவற்றை வகைக்கு 15 கி எடுத்து இளவறுவலாய் வறுத்துப் பொடித்துச் சேர்க்கவும். பனை வெல்லத்தைத் தூளாக்கிக் கொள்ளவும்.

பொடிதூவிப் பனைவெல்லம் முக்கூறொன் றிட்டு
பூண்டிடவே யிடித்ததின்பின் பிரளவே கிண்டிப்
பொடிதூவி வெல்லமிட்டு நன்றாக யிடித்த
பின்புஇதின் மேற்பனை வெல்லமுத்த தூளான
பொடிதூவி யிடித்திடுவாய் சாமமொன்றுக் கப்பால்
புனிதமாய் மயில்கழுத்துத் தானாகு மப்போ

பொடிதூவி விடுமருந்தைச் சூட்டுடன் தான்றிக்காய்
....! 314

பொ.ரை: மூன்று பகுதி தூளுக்கு ஒரு பகுதி என்ற அளவில் பனைவெல்லத்தூளை மேற்கூறிய பொடியில் சேர்த்து இடிக்கவும். மூன்று மணி நேரமிடிக்க மயில் கழுத்து நிறம் போலாகும். இதனை நோயாளியின் வன்மைமென்மை நோயின் தன்மை அறிந்து கொடுக்க குன்மம் நீங்கும்.

சூத கற்பூரம்

தானென்ற சூதகற் பூரந் தன்னை
சாதகமாய்ச் சொல்லுகிறோம் சாற்றக் கேளும்
தேனென்ற சூதமொரு பலந்தான் இரண்டு
திறமாக மாம்பச்சை மஞ்சள்சுற்றி யாட்டி
வானென்ற சாமமிரண்டு ஆட்டி வாங்கி
மறுபடியு முவரந்த மஞ்சள் கசாயம் கொண்டு
மானென்ற யிருசாம மாட்டி வாங்கி
மைந்தனே மஞ்சயிலைக் குள்ளே வைய்யே! 315

பொ.ரை: 70 கி இரசத்தை எடுத்து பச்சை மஞ்சளால் சுற்றி ஆறு மணி நேரமரைத்து வைக்கவும். மஞ்சளினைக் கொதிக்க வைத்துக் குடிநீராக்கி அதில் இரசத்தை ஆறு மணிநேரம் அரைத்துப் பின் அதனை மஞ்சள் இலைக்குள் வைக்கவும்.

வைத்ததொரு சூதத்தை யிலையால் மூடி
வாகாக நூல்சுற்றி சட்டிக்குள் வைத்து
வைத்ததொரு சாறுவிட்டு வேடு கட்டி
மருவியதோர் புட்டுப்போல் அவித்து வாங்கி
வைத்ததொரு புடமெடுத்து மஞ்சள் சாற்றில்
ஆட்டடா ஒருசாமம் பழச்சாறு கொண்டு
வைத்ததொரு சாமமடா ஆட்டிய பின்பு
மறுபடியும் அழிசம்வேரு சாற்றில் ஆட்டி! 316

பொ.ரை: அவ்விலையினாலே மேலும் சூதத்தை நன்குமூடி நூலினைச் சுற்றி ஒரு சட்டிக்குள் வைக்கவும். ஒரு சட்டியினுள்

மஞ்சள் சாறூற்றி மேலே வேடு கட்டிப் புட்டவியலாக வேக வைத்து மஞ்சள் சாற்றில் மூன்று மணி நேரமரைக்கவும். எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று மணி நேரம் அரைக்கவும். பின் அழிஞ்சில் வேர்ச்சாற்றில் மூன்று மணி நேரம் அரைக்கவும்.

ஆட்டியே ஒருசாமம் எடுத்துக் கொண்டு
அப்பனே சீனமதில் பலந்தான் ரெண்டு
கூட்டியே மஞ்சள்சாறு தன்னால் நீயும்
குமுறவே யரைத்தனைக் குப்பிக் கேற்றி
நீட்டியே ஏழுசீலை மண்ணும் செய்து
நினவாக குப்பிவாய் வளப்பக் கல்லால்
ஊட்டியே பொதிந்ததனை யடையமண் கட்டி
உலரவே தாழிக்குள் மணலைக் கொட்டே! 317

பொ.ரை: சீனத்தை 70 கி எடுத்து மஞ்சள் சாற்றால் அரைத்து மேற்குறிப்பிட்ட விழுதுடன் சேர்த்து அதனைக் குப்பிக்குள் வைக்கவும். அதன் வாய்ப்பட்டைக்கு ஏழுசீலை மண் செய்து அடைத்துக் குப்பியின் வாயை வளப்பக் கல்லினைக் கொண்டு மூடவும். குப்பியைத் தாழிக்குள் வைத்து சுற்றியும் மணலினைக் கொட்டவும்.

மணலைவிடு நாலுவிரல் கனந்தான் நீயும்
மைந்தனே குப்பிவைத்து மறுபடியும் கேளு
மணலைவிடு தாழியுட கழுத்து மட்டும்
மாட்டடா காடாக்கினியைப் பதித்து நன்றாய்
மணலைவிடு குப்பிதனை யுடைத்துப் பாரு
மல்லிகைப்பூ போலிருக்கும் கற்பூரந் தானே! 318

பொ.ரை: நான்கு விரல் கனமுள்ள அளவு மணலினைக் கொட்டி நடுவில் வைத்து அதனைச் சுற்றி வறட்டியை அடுக்கி எரிக்கவும். மூன்று விறகு கொண்டு எரித்து தக்க நேரங் கழித்தெடுத்துப் பார்க்கவும். குப்பியை உடைத்துப் பார்க்க மல்லிகைப்பூ போல் இரசகற்பூரம் அமைந்திருக்கும்.

கற்பூரம் வூட்டுதற்கு வனுபானங் கேளு
கவரவே திரிகடுகு வெதுப்பி யாட்டி

கற்பூரம் பணவெடைதா னொன்று தூக்கி
கருத்துடனே வெருகடிதான் பொடியுந் தூக்கி
கற்பூரந் தேனிலே கரைத்துக் கொண்டு
கட்டாக யிருபதுநாள் யுண்டு காண
கற்பூரம் அஷ்டகுன்ம மெட்டு வாதங்
கடிதான மகோதரங்கள் சூலை போமே! 319

பொ.ரை: இரசகற்பூரத்தை 488 மி.கி. அளவெடுத்து அதனை மூவிரலளவு திரிகடுகு சூரணத்துடன் கலந்து அதற்குத் தக்க அளவு தேனை விட்டுக்குழப்பிக் கொள்ளவும். இருபது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள அட்டகுன்மம், எட்டுவகை வாதம், மகோதரங்கள், சூலை வகைகள் தீரும்.

சூலைபதி னாறும்போம் கிரந்தி குட்டம்
சொறிசிரங்கும் தகரியுந் தாமரைக் கன்னலும்
சூலைபோம் வெடிகரப்பான் சன்னி தோசம்
சூசிகா வாய்வோடு சிலேற்பனமாம் காசம்
சூலைபோம் நேத்திரத்தில் தொண்ணூற் றாறும்
துலங்குகின்ற அறுவகையும் தூளாய்ப் போமே! 320

பொ.ரை: பதினாறு வகை சூலைகள், கிரந்தி, குட்டம், சொறி வகைகள், சிரங்கு வகைகள், தகரி, படர் தாமரை, கன்றிப் போன தழும்பு, வெடி கரப்பான், சன்னி தோடம், சூசிகாவாய்வு, சிலேற்பனம், காசம், சூலை, தொண்ணூற்றாறு வகைக் கண்ணோய் ஆகிய நோய்கள் குணமாகும்.

மண்டூரச் செந்தூரம்

போமப்பா வியாதியெல்லாம் மண்டு ரத்தை
பொசித்திடவே செந்தூரப் போக்கைக் கேளு
பாமப்பா அந்தத்தி வெகுநாள் கிட்டம்
அதையெடுத்துக் கொண்டுவந்து உலையி லூதி
வாமப்பா கோமியந் தண்ணீரில் தோய்த்து
அஞ்சாறு திறமெடுத்து வறுக்க வைத்து
சாமப்பா கல்லுரலுக் குள்ளே போட்டு
சாதகமாய் கடப்பாரை தன்னா லாட்டே! 321

பொ.ரை: நீண்டநாள் வைத்துள்ள பழைய இரும்புக் கிட்டத்தை எடுத்து உலையில் வைத்து ஊதவும். பின் கோமிய நீரில் தோய்த்து ஊற வைத்தெடுக்கவும். இவ்வாறு ஐந்து அல்லது ஆறு முறை செய்து அனலிலிட்டு வறுத்தெடுக்கவும். கல்லுரலில் அதையிட்டு கடப்பாரையினால் ஆட்டிக் கொள்ளவும்.

ஆட்டியதோர் தூளெடுத்து கல்வத்தி லிட்டு
அப்பனே கரிப்பான்சாறு குமரிச் சாறும்
மூட்டியதோர் யிருசாமம் அரைத்து வாங்கி
உத்தமனே வில்லைசெய்து உலரப்போடு
மாட்டியதோர் மேலோடு கொண்டு மூடி
மண்செய்து உலரவைத்து மைந்தா நீயும்
மூட்டியதொரு எருவடுக்கி முழந்தாள் மட்டும்
முதிரவே யோடுதன்னை யதின்மேல் வைய்யே! 322

பொ.ரை: அத்தூளைக்கல்வத்திலிட்டு கரிசாலைச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு ஊற்றி ஆறுமணி நேரமரைத்து வில்லைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்தவும். அவற்றை ஓட்டிலிட்டு மேலோட்டினை வைத்து மூடவும். ஏழு சீலை மண் செய்து உலரவைக்கவும். முழங்கால் அளவு எருவினை அடுக்கி அதன் மேல் ஓட்டினை வைக்கவும்.

வைத்ததொரு ஓட்டின்மேல் அச்சு மட்டும்
வாகாக எருவடுக்கி விடைவுக் கெல்லாம்
பெய்த்ததொரு பொடிஎருவை நிரம்பக் கொட்டி
இயல்பாகப் புடம்போடு முப்ப தப்பா
வைத்ததொரு புடம்போடு கரிப்பான் சாற்றில்
அரைத்துநீ போடுவா யடைவாய் மைந்தா
மொய்த்ததொரு புடங்கேளு முப்ப தானால்
முருக்கம்பூ போலிருக்கும் செந்தூரம் பாரே! 323

பொ.ரை: ஓட்டின் மேல் விளிம்பு வரை எருவினை அடுக்கிப்பின் பொடியான வறட்டிகளையும் சுற்றி நிரம்பக் கொட்டி புடம் போடவும். முப்பது புடங்களிட்டு ஆறின பிறகு எடுத்துப் பார்க்கவும். மீண்டும் கரிசாலைச்சாற்றால் அரைத்து

மேற்சொன்னவாறே புடமிடவும். முப்பது புடங்களிட்டு குறிப்பிட்ட நேரங்கழித்து ஆறினபின் எடுத்துப்பார்க்க முருக்கம் பூ போல் சிவந்து செந்தூரமாகியிருக்கும்

பாரப்பா செந்தூரம் பணந்தான் தூக்கி
பஞ்சாரை யினிவொரு வெருகடியுங் கூட்டி
நேரப்பா குஞ்சரத்தின் யறுகம் வேரும்
நீபொடித்து வெருகடியில் பாதி சேர்த்து
வாரப்பா ஆவின்நெய்யில் குழப்பிக் கொண்டு
வளமாக பத்துநாள் யருந்தி னாக்கால்
வாரப்பா நரம்பெல்லாம் அமுர்த மூறி
வற்றிநிற்கும் தாதுவெகு வலுவாகும் பாரே! 324

பொ.ரை: 488 *மி.கி.* செந்தூரத்தை மூவிரலளவு பஞ்சதாரையுடன் கலக்கவும். பின் ஆனை அறுகம் வேரைப் பொடித்து மூவிரலளவிற் பாதி சேர்க்கவும். பசு நெய்யைத் தேவையான அளவு எடுத்து செந்தூரத்திற் கலந்து பத்து நாட்கள் தொடர்ந்து உட்கொள்ளவும். நரம்புகளுக்கு வலுவுண்டாகும். தாது விருத்தியாகும்.

வெகுவாகுஞ் செந்தூரம் பணந்தான் தூக்கி
மேல்பொடிதான் திரிகடுகு வெதுப்பி யாட்டி
வெகுவாகுந் தேனிலே கிளறிக் கொண்டு
வெருகடியும் பிரமாணம் இரு நேரந்தான்
வெகுவாகும் மண்டலந்தான் யுண்ட பேர்க்கு
வெல்லுகிற வியாதிதன்னை விபரம் கேளு
வெகுவாகும் யெரிகுன்மம் சத்தி குன்மம்
இறுகிவளர் பித்தகுன்ம மெரிந்து போமே! 325

பொ.ரை: 488 *மி.கி.* மண்டூரச் செந்தூரத்தை, திரிகடுகுச் சூரணத்துடனும் தேவையான அளவு தேனுடனும் கலந்து, மூவிரலளவு காலை, மாலை இருநேரமும், நாற்பது நாட்கள் உட்கொண்டு வர எரிகுன்மம், சத்தி குன்மம், பித்த குன்மம் தீரும்.

போகும்அஷ்ட குன்மங்கள் அகவை வெப்பு
பொறியான பொறியாமை ஆனந்த வாய்வும்

வேகுமே சுரபாண்டு பித்த பாண்டு
வீக்கமதில் வருஞ்சூலை விதனந் தீரும்
ஆகுமே சீரகத்தை வெதுப்பி யாட்டி
அப்பனே பணவெடைதான் நாலுந் தூக்கி
தாகுமே சீனியதில் வெருகடியுங் கூட்டி
சாப்பிடவே மண்டத்தில் விபரங் கேளே! 326

பொ.ரை: அட்ட குன்மவகை, எரிச்சல், பொறியாமை ஆனந்த வாய்வு, சுரபாண்டு, பித்தபாண்டு, வீக்கம், சூலை ஆகியவை நீங்கும். சீரகத்தை இளவறுவலாய் வறுத்துப் பொடித்து 1 ½ கி. எடுத்து அதனுடன் மூவிரலளவு சர்க்கரையையும் சேர்த்து, 488 மி.கி. செந்தூரம் கலந்து நாற்பது நாட்கள் உண்ண வாதம், பித்தம் தீரும்.

கேளப்பா வாதம்போம் பித்தம் போகும்
கெடியாக செந்தூரம் திப்பி லாதி
சூளப்பா சூரணத்தில் வெருகடிக் குள்ளே
சுகமாகத் தேன்விட்டு மண்டலந்தா னுண்ண
நீளப்பா வறட்சியோடு சிலேற்பன ரோகம்
நீண்டவகை தொண்ணூற் றாறும் போகும்
வாளப்பா காமாலை பாண்டு ரோகம்
வண்டுகடி எலிக்கடியும் மகோதரமும் போமே! 327

பொ.ரை: மூவிரலளவு திப்பிலாதிச் சூரணத்துடன் 488 மி.கி. செந்தூரத்தையும் தேனையும் கலந்து நாற்பது நாட்கள் உட்கொள்ள வறட்சி, சிலேற்பனநோய்கள் தொண்ணூற்றாறு வகை, காமாலை, பாண்டுநோய், வண்டுகடி, எலிக்கடி, மகோதரம் தீரும்.

போமப்பா மேகங்க ளிருபத் தொன்றும்
போவதுக்கு ரண்டுபலம் வீதமறிந்து விட்டு
வேமப்பா ஒருசாமம் வறுத்தா யானால்
வெள்ளையாந் திரும்பவதைக் கிண்டு கிண்டே! 328

பொ.ரை: இருபத்தொரு வகை மேகங்கள் நீங்க கேட்பீராக! 70 கி செந்தூரத்தை மூன்று மணி நேரம் அளவுடன் வறுக்க வெள்ளையாகும். மீண்டும் அதனைக் கிண்டுவாயாக.

கிண்டிவர மயில்கழுத்து நிறம்போ லாகும்
கெடியாகத் திரும்பவது மஞ்சள் போலாம்
கிண்டிவர செந்தூரம் அருணனைப் போலாங்
கேள்மகனே குழாயிலே யடைத்துக் கொண்டு
கிண்டியதோர் யாவரையை சமூலம் வாங்கி
கேள்தன்மேல் புல்லுருவி விளாம்பிசினும் பொடித்து
கிண்டியதோர் கதலிதோல் பழந்தா னாதல்
கிடைத்தொன்றில் சர்க்கரையுங் கூட்டு கூட்டே! 329

பொ.ரை: கிளறும் பொழுது மயில் கழுத்தின் நிறம் போலாகும். பிறகு மஞ்சள் நிறம் போலாகும். மீண்டும் கிண்ட செந்தூரம் அருணனைப் போலாகும். அதனைக் குழாயில் அடைக்கவும். ஆவாரையின் சமூலத்தையும் அதன் மேல் ஊடுருவும் புல்லுருவியையும் விளாம்பிசினையும் பொடித்து அதனுடன் வாழைப்பழத்தைத் தோலுடன் சேர்த்துப் பொடிக்கவும். சர்க்கரையையும் சேர்க்கவும்.

கூட்டியதோர் மருந்ததிலே வராகன் நாலுங்
கூடவதில் செந்தூரம் வராகன் ஒன்று
நீட்டியதோர் தினமாறு வுண்ணச் சொல்லு
நீரிழிவு பிரமேகம் நிவர்த்தி யாகும்
ஆட்டியதோர் யாவரைத் தயிலம் வாங்கி
மைந்தனே செந்தூர முண்ணச் சொல்லு
வாட்டியதோர் மேகவகை யிருபத் தொன்றும்
மதில்சூலையும் பிளவையிவை அடங்கும் பாரே! 330

பொ.ரை: இம்மருந்தில் 16 கி எடுத்து அத்துடன் 4 கி செந்தூரத்தைச் சேர்த்து ஆறுநாட்கள் உண்ணவும். நீரிழிவு பிரமேகம், தீரும். ஆவாரைத் தைலத்தை எடுத்து செந்தூரத்தைத்தக்க அளவு சேர்த்துண்ணவும். இருபத்தொரு மேகவகையும் சூலை, பிளவையும் குணமாகும்.

அப்பிரகச்செந்தூரம் – 3

பாரப்பா பிரமேகம் கழிச்சல் போக
பாடுகிறேன் அப்பிரகச் செந்தூ ரத்தை

பாரப்பா யிதின்பெருமை காண வல்லா
நப்பிரகமே தென்றாச் சத்தி நாதம்
பேரப்பா ரோகங்கள் யிதனைக் கண்டால்
பொறிபட்ட பஞ்சுபோல் பொசுங்கிப் போகும்
வேரப்பா காயசித்திக் காதி ஆதி
மேகமென்ற இருபதில் விழலாங் காணே! 331

பொ.ரை: பிரமேகம் நீங்குவதற்கு அப்பிரகச் செந்தூரத்தைக் கூறுகிறேன். அப்பிரகத்தில் சத்தியநாதத்தை (ஏமாப்பிரகம்) எடுப்பது சிறப்பானது. நெருப்புப் பொறியில் பட்ட பஞ்சு போல் நோய்கள் ஒழியும். காயசித்திக்காதியான இது, இருபது வகை மேகமும் நீங்கவழி வகுக்கும்.

காணநின்ற அப்பிரக கஷாடின் வண்ணம்
கலக்கவொரு பலம்பத்து தூளா யாட்டி
பூணநின்ற கல்லத்தி யாலினோ டரசு
புகழான அத்தியிவை நாலுதோலும் நன்றாய்
இடித்ததனைத் தண்ணீர் வார்த்துத் துவைத்து
இரண்டுதின மிதனை யூற வைத்து
வாணநின்ற வாககொண்டு வப்பி ரேகம்
உத்தமனே இருசாமம் கல்வத் தாட்டே! 332

பொ.ரை: அப்பிரகத்தை 350 கி எடுக்கவும். கல்லத்தி, ஆல், அரசு, அத்தி ஆகியவற்றின் பட்டைகளை இடித்துத் தண்ணீரூற்றி அரைத்து அக்கலவையில் அப்பிரகத்தை இரண்டு நாட்கள் ஊற வைத்துக் கொள்ளவும். நன்கு ஊறிய பின்னர் கல்வத்திலிட்டு ஆறு மணிநேரம் அரைத்துக் கொள்ளவும்.

ஆட்டியே எருக்கிலையில் வாங்கி வைத்து
அப்பனே பாதியதில் எருக்கந் தோலால்
மூட்டியே பொதிந்துநீ யெருவடுக்கி
முதிரவே வராகப் புடந்தான் போடு
நீட்டியே வூருகின்ற தண்ணீர் விட்டு
நினவாக யிப்படியே புடந்தோ ருந்தான்
ஆட்டியே புடமே இருபத் தொன்று
நயமாக போட்டுவர செந்தூர மாமே! 333

பொ.ரை: அரைத்ததனை எருக்கிலையில் வைக்கவும். அதில் பாதியை எருக்கம்பட்டைக்குள் பொதிந்து வைக்கவும். பத்து வறட்டிகளை அடுக்கிப் புடமிட்டு எரிக்கவும். இவ்வாறு இருபத்தொரு முறை புடமிடவும். குறிப்பிட்ட நேரங்கழித்தெடுத்துப் பார்க்க அப்பிரகச் செந்தூரமாகியிருக்கும்.

ஆமப்பா செந்தூரம் காவி போல
ஆகுமடா யெடுத்ததனை யெடுத்துக் கொண்டு
ஓமப்பா செந்தூரம் சலத்தில் போட்டால்
உள்ளடங்கும் மிதவாது உறுதி மெத்த
போமப்பா வெகுதூரம் தொட்ட தெல்லாம்
பொன்னாகும் இதில்சூதம் புகுந்து தானால்
நாமப்பா வுரைத்தவிதி யனேக மெத்த
நாதாக்கள் பலவிதமாய்ப் பார்ப்பார் தானே! 334

பொ.ரை: காவி போன்றிருக்கும் அப்பிரகச் செந்தூரத்தைத் தண்ணீரில் போட்டால் உள்ளே சென்று அடங்கி விடும். மிதக்காது. வன்மை மிக்கது. தொட்டதனைத்தும் பொன்னாகும். இதனுடன் இரசம் சேர்ந்ததாயின் விதிகள் பல. குருக்கள் பலரும் பலவிதமாய்க் காணுவர்.

தானென்ற செந்தூரம் வராகன் தூக்கித்
தனிதேனில் அறுபதுநாள் சாப்பிட் டாக்கால்
ஊனென்ற மேகங்கள் இருபத் தொன்றும்
ஓடிப்போம் தூலவுடல் இறுக்கிக் கட்டும்
மானென்ற சயரோகந் தொண்ணூற் றாறும்
வாடைபட்டால், நிமிடத்தில் மாண்டு போகும்
தேனென்ற மொழியுடையா ளெந்த நாளும்
தேகத்தை நீங்கள்காண சிறந்து வுண்ணே! 335

பொ.ரை: 4 கி அப்பிரகச் செந்தூரத்தைத் தேவையான அளவு தேனில் கலந்து அறுபது நாட்கள் சாப்பிட்டால் இருபத்தொரு வகை மேகம் நீங்கும். உடலின் வன்மை பெருகி கற்பமாகும். சயநோய் தொண்ணூற்றாறும் நிமிட அளவில் நீங்கும்.

இரச செந்தூரம்

உண்ணுகிற சலக்கழிச்சல் அனைத்தும் நன்றாய்
யொழியுகிற செந்தூர முரைக்கக் கேளு
உண்ணுகிற சூதமொரு பலந்தான் பத்து
உத்தமனே சுத்திசெய்து வூட்டக் கேளு
உண்ணுகிற செந்தூரம் பற்பவகைக் கெல்லாம்
உருவறிந்து சேர விட்டா லொன்றும்
உண்ணுகிற வெங்காரம் பலந்தான் மூன்று
உற்றகெந்தி யொருப லந்தான் மூன்றே! 336

பொ.ரை: சலக்கழிச்சல் தீரும் இரசசெந்தூரம் செய் முறையைக் கேட்பாயாக. 350 கி இரசத்தைச் சுத்தி செய்யவும். செந்தூரம், பற்பம் இவை செய்வதற்கு ஒவ்வொன்றையும் முறைப்படி சேர்த்து அரைத்தல் வேண்டும். அவ்வாறே வெங்காரத்தையும் கெந்தகத்தையும் வகைக்கு105 கி எடுத்து முறைப்படி சுத்தித்துப் பொடிக்கவும்.

மூன்றாக யிதுரெண்டு பேர்தான் செய்து
முதிரவே கலசமொன்று சிறிதாய் வாங்கி
மூன்றான கலசத்தில் பொடிபாதி யிட்டு
முறையாக யதின்பிறகு சூதம் விட்டு
மூன்றாக கால்படிதான் குமரிப் பூவும்
முன்னிட்டு பின்புநீ பொடியு மிட்டு
மூன்றாகும் முறுவிதனை சமூலம் ஆட்டி
மனமருந்தும் மடைமருந்தும் மூடு மூடே! 337

பொ.ரை: சிறிய கலசத்தில் மேற்சொன்ன பொடியைப் பாதியளவிட்டு, பிறகு இரசத்தை விடவும், 325 கி கற்றாழைப் பூவையும் மேற்குறிப்பிட்ட வெங்கார கெந்தகப்பொடியையும் சேர்த்துக் கலசத்தை மூடவும்.

மூடியே ஒடுவைத்து சீலை செய்து
முறையோடே யிப்பிடியே மூன்று சீலை
நாடியே செய்தபின்பு பானைக் குள்ளே
நயமாக குறுணிமணல் நடுவே கொட்டி

நீடியே கலசத்தைப் பானைக்குள் வைத்து
நினவாக சீலைசெய்து மண்ணும் செய்து
ஊடியே தொண்ணூறு கடிகை நீதான்
தீமூட்டு செந்தூரம் முருக்கம் பூவே! 338

பொ.ரை: கலசத்தின் வாயை அதற்குத் தக்க ஓட்டினால் மூடி சீலை மண்செய்து கொள்ளவும். பெரிய பானை ஒன்றை யெடுத்து 5.3 லி மணலை நடுவில் கொட்டி பரப்பி அதன் மேல் கலசத்தை வைக்கவும். இரண்டின் வாயையும் நன்கு பொருத்தி ஏழு சீலை மண் செய்யவும். முப்பத்து ஆறு மணிநேரம் எரிக்க முருக்கம் பூ நிறம் போல் சிவந்து செந்தூரமாகும்.

முருக்கம்பூப் போலிருக்கும் செந்தூ ரத்தில்
மூன்றுபணந் தூக்குமது நிறுத்துக் கொண்டு
பெருக்கவே தேனிலே மண்டலந்தா னுண்ணு
பேரான சலக்கழிச்சல் அனைத்தும் போகும்.
முருக்கவே எலும்புருக்கி கிரீச்சனங்க ளாறும்
முஷ்ணமோடு பிரமேகம் சுவாச காசம்
சுருக்கவே கிராணிபோம் பெரும்பாடு போகும்
துயரங்கள் தான்போகும் சுகமாய்க் கொள்ளே! 339

பொ.ரை: இச்செந்தூரத்தில் 1 ½ கி எடுத்துத் தக்க அளவு தேனிலே கலந்து நாற்பது நாட்கள் உட்கொள்ள சலக்கழிச்சல் பலவகையும் குணமாகும். எலும்புருக்கி, ஆறுவகை கிரீச்சனங்கள், வெப்பம், பிரமேகம், சுவாசகாசம், கிராணி, பெரும்பாடு ஆகிய நோய்கள் குணமாகும். துன்பங்கள் தீரும்.

இரசபற்பச்செந்தூரம்

சொல்லக்கேள் இரத பற்பச் செந்தூ ரத்தை
சூட்டுகிறேன் புலத்தியனே சுருக்க மாக
சொல்லக்கேள் சூதமொரு பலந்தான் தூக்கு
சுகமான கெந்தகந்தான் பலந்தான் தூக்கு
சொல்லக்கேள் முறிசையுப்பு பலங்கால் சேர்த்து
துவளவே யிவைமூன்றுந் தூளா யாட்டி
சொல்லக்கேள் தாமிரத்தில் சிமிழுண் டாக்கிச்
சூட்டுகிற மருந்துவகை தொகுத்துக் கேளே! 340

பொ.ரை: இரசம் 35 கி, கெந்தகம் 35 கி, வெண்காரம் 9 கி எடுத்து இவை மூன்றையும் முறைப்படிசுத்தி செய்து தூளாக்கிக் கொள்ளவும். தாமிரச்சிமிழை எடுத்து அதற்குள் வைக்கும் மருந்துமுறையைக் கேட்பாயாக.

கேளப்பா இந்துப்பு கழஞ்சு தூக்கி
கெந்தகந்தான் பொடியுடனே சேர்த்து நீயும்
வாளப்பா சிமிழுக்குள் பொடியைத் தூவி
மைந்தனே சூதத்தை நடுவே வைத்து
நீளப்பா முன்பொடியை மேலு மிட்டு
நினவாக மூடியதைக் கம்பி கட்டி
கேளப்பா சீலைசெய்து மண்ணுஞ் செய்து
குக்குடத்தின் பொடியோடு செந்தூர மாமே! 341

பொ.ரை: 5 கி இந்துப்பைப் பொடித்துக் கொள்ளவும். இத்துடன் கெந்தகப் பொடியையும் சேர்த்துச் சிமிழுக்குள் தூவவும். அதன் நடுவே இரசத்தை வைத்து முன் சொன்ன பொடியை மேலே தூவவும். அதன் மீது கம்பியைக் கட்டி வைக்கவும். வாய்ப்பட்டைக்கு ஏழுசீலை மண் செய்து பத்து வறட்டியினால் புடமிட செந்தூரமாகும்.

ஆமப்பா செந்தூரம் பணவெடைதான் தூக்கு
ஆவரையின் விரைப்பொடியும் விளாம்பிசினும் கூட்டி
நாமப்பா தேனிலே குழைத்துக் கொண்டு
நலமாக எட்டுநாள் தின்றா யானால்
போமப்பா சலஎலும்புருக்கி சூலைபுண் போகு
மின்னமொரு செந்தூரம் பாரு
வேமப்பா வியாதிகள்தான் பருத்தித் தோலை
விபரமுடன் னுரித்துநீ நனையப் போடே! 342

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை ஆவாரைவிதைத் தூளுடனும் விளாம்பிசின் பொடியுடனும் சேர்த்துத் தேவை யான அளவு தேனுடன் குழைக்கவும். இவ்வாறு எட்டு நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள நீர்எலும்புருக்கி, சூலை புண் தீரும். மற்றுமொரு செந்தூரம் வருமாறு. பருத்திப்பட்டையை உரித்துத் தண்ணீரில் ஊறவைப்பாய்.

இரச செந்தூரம்

போட்டேதா னூறியபின் மறுநாள் வாங்கிப்
புகழாக பிசைந்தந்த தண்ணீர் வார்த்து
நாட்டேதான் கெந்திபத்து சூதம் பத்து
நலமான அரிதாரங் கழஞ்சி அஞ்சு
நீட்டேதான் நாற்கழஞ்சி கெவுரி தூக்கி
நேராக ஒருசாம மாட்டி நீயும்
மூட்டேதான் குமரிச்சாற் கொண்டு சாம
முதிர்பதத்தில் தூளாக்கிக் குப்பிக் கேற்றே! 343

பொ.ரை: மறுநாள் அத்தண்ணீரைப் பிழிந்தெடுத்துக் கொள்ளவும். கெந்தகம் 50 கி, சூதம் எனும் இரசம் 50 கி, அரிதாரம் 25 கி, கௌரிபாடாணம் 20 கி, எடுத்து ஊறின தண்ணீரை ஊற்றி மூன்று மணிநேரம் அரைக்கவும். சோற்றுக் கற்றாழைச் சாற்றை ஊற்றி மூன்று மணி நேரமரைத்துப் பொடித்துக் குப்பிக்குள் வைக்கவும்.

ஏற்றியே சீலைமண்தான் ஏழு செய்து
இயல்பாக உலர்ந்தபின்பு தாழிக் குள்ளே
மாற்றியே மண்ணாலும் விரற்கனமு மிட்டு
மைந்தனே குப்பிவைத்து வாய்மூ டாமல்
சாற்றியே குப்பிவாய் திறந்து வைத்து
சாதகமாய் கழுத்துமட்டும் மண்ணுங் கொட்டி
போற்றியே நாற்சாமம் எரித்து நன்றாய்
பொங்கியே சலாகைகொண்டு வாட்டு வாட்டே! 344

பொ.ரை: குப்பியின் வாய்க்கு ஏழு சீலை மண் செய்து உலரச் செய்யவும். தாழிக்குள் விரற்கனமுள்ள மணலைப் பரப்பி குப்பியை வைத்து மேல் மூடியை மூடாது விடவும். குப்பியின் கழுத்தளவிற்கு மணலைக் கொட்டவும். பன்னிரெண்டு மணிநேரம் எரித்துவிடவும். பொங்கியவுடன் சலாகையினால் கிண்டி விடவும்.

ஆட்டியே நாழிகைதான் முப்ப தானால்
அப்பனே குழிக்குள்ளே தண்ணீர் விட்டு

வாற்றியே குப்பிதனை குழிக்குள்ளே வைத்து
வாட்டியபின் தூளாக்கி தேனோ டொக்க
வாத்தியே முன்போல கெந்தி வீரம்
அரிதாரம் அந்தநிறை யாகத் தானே
ஆற்றியே குப்பிக்கு முக்கால் வாசி
யமைத்து மூன்றுதிரஞ் செந்தூர மாக்கே! 345

பொ.ரை: தக்க நேரங்கழிந்த பிறகு குழி ஒன்று அமைத்து அதற்குள் குப்பியை வைப்பதற்குப் பொருத்தமாகத் தண்ணீரை ஊற்றி, குப்பியை வைக்கவும். பன்னிரெண்டு மணிநேரம் அப்படியே வைத்து ஆறினபின் தூளாக்கவும். தேனைச் சம அளவு கலந்து கொள்ளலாம். கெந்தகம், வீரம், அரிதாரம் இவற்றை அதே அளவெடுத்துக் குப்பிக்கு முக்கால் அளவாக அமைத்து மூன்று முறை செந்தூரமாக்கவும்.

ஆக்கியதோர் செந்தூரம் பணந்தான் தூக்கு
அனுபான மறிந்தேதான் வியாதிக் கெல்லாம்
தாக்கியதோ ரஞ்சுநா ளுண்ண வேதான்
சகசங்கை நோயெல்லாம் சாடிப் போகும்
பாக்கியமே செய்தவற்கு யிந்த நூல்தான்
பாவியென்றா லாகாது பற்ற வேணும்
தேக்கியதோர் செந்தூர மின்னஞ் சொல்வோம்
செயரசப் பிரளையமென்ற செந்தூரம் தானே! 346

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை எடுத்து நோய்க்கேற்றவாறு அனுபானத்தை மாற்றி கொடுக்கவும். ஐந்து நாட்கள் உட்கொள்ள நோய்கள் தீரும். பாக்கியங்கள் செய்தோர்க்கு இந்நூலைக் கொடுக்கவும். பாவிக்குக் கொடுக்காதே. செயரசப் பிரளய மெனும் செந்தூரம் கூறுவோம்.

செயரசப்பிரளயமென்ற செந்தூரம்

தானென்ற சூதமொரு பலந்தான் மூன்று
சாதகமாங் கெந்தியொரு பலம்ரெண் டேகால்
தேனென்ற செம்முள்ளிச் சாறு வார்த்து
திறமாக நாளொன்று திரள வாட்டி

மானென்ற தக்காளி மணத்தக் காளி
மைந்தனே சாறுவிட்டுத் தினந்தா னொன்று
கோனென்ற செருப்படிச்சாற் தினந்தா னொன்று
குறையாமல் மாதுளைச்சாற் தினந்தா னொன்றே! 347

பொ.ரை: இரசம் 105. கி., கெந்தகம் 79 கி எடுத்து செம்முள்ளிச் சாறூற்றி ஒரு நாள் முழுதும் நன்கு அரைத்துக் கொள்ளவும். மணத்தக்காளிச்சாறூற்றி ஒரு நாளும் செருப்படிச்சாறூற்றி ஒருநாளும் மாதுளைச்சாறூற்றி ஒரு நாளும் முறையே அரைக்கவும்.

ஒன்றாக மூன்றுதின மாதுளையின் சாறு
உத்தமனே மூன்றுதினம் செம்பருத்தஞ் சாறு
ஒன்றாக உலர்த்தியதைத் தூளா யாட்டி
உறவாகக் குள்ளே சீலை செய்து
ஒன்றாக வாரியபின் மருந்து தன்னை
உம்பமாய் குப்பிமுக்கால் வாசி விட்டு
ஒன்றாகக் குப்பிவாய் வளப்பக் கல்லா
லுறமூடிக் கவசிக்க மருந்து கேளே! 348

பொ.ரை: மாதுளைச்சாறூற்றி மூன்று நாளும் செம்பருத்திச் சாறூற்றி மூன்று நாளும் தொடர்ந்து அரைத்து அவ்விழுதை நன்கு உறவாக்கிக் கொள்ளவும். அதனைத் தேர்ந்தெடுத்த குப்பியினுள் முக்கால் பாகம் விடவும். குப்பியின் வாயை வளப்பக் கல்லால் பொருத்தமுற மூடிவிடவும். அதன்மீது கவசிக்கும் மருந்து வருமாறு.

கேளப்பா கடுக்காயும் குளவி மண்ணும்
கெடியான விந்துப்புக் கோல றக்கும்
நாளப்பா பழங்கிட்டங் கருவேலம் பிசினும்
நலமான பொன்மிளகும் வெற்றிலைக் காலும்
ஆளப்பா யிவையெல்லாம் செங்கருவா லாட்டி
அப்பனே சுண்ணமுடன் வெல்லம் கூட்டி
நீளப்பா முன்கருவா லாட்டி வாங்கி
நேராக பழச்சாறு விட்டு ஆட்டே! 349

பொ.ரை: கடுக்காய், குளவிமண், இந்துப்பு, பழங்கிட்டம், கருவேலம் பிசின், பொன்மிளகு, வெற்றிலைக்காம்பு இவற்றை முட்டையின் மஞ்சள் கருவிட்டரைத்துக் கொள்ளவும். சுண்ணாம்புடன் வெல்லத்தையும் சேர்த்து முட்டையின் மஞ்சள்கரு ஊற்றி அரைக்கவும். எலுமிச்சம் பழச்சா றூற்றி அரைக்கவும்.

ஆட்டியதோர் மருந்ததுவும் பிசின்போ லாகும்
அப்பனே குப்பிவாய் அடைத்துக் கட்டி
நீட்டியே ஓட்டுப்புக் குள்ளேதான்
நீவைத்து நால்குறுணி மண்ணும் கொட்டி
நாட்டியே மண்ணுமுக்கால் மண்ணு மூட்டு
நலமான குப்பிதனை நடுவே வைத்து
மூட்டியே நால்விரல்தான் தெரிய மட்டும்
முசியாமல் அடுப்பேற்றி தியானஞ் செய்யே! 350

பொ.ரை: அரைத்த விழுது பிசின் போன்றாகும். அம் மருந்தைக் குப்பியின் வாய்க்குக் கவசமாகப் பூசி திண்மையாகக் கட்டிவிடவும். பெரிய ஓடு ஒன்றினை எடுத்து அதற்குள் 20.8 லி அளவு மண்ணினைக் கொட்டி அதன் நடுவில் குப்பியினை வைக்கவும். நான்கு விரல் அளவு மேலே தெரியுமாறு இருக்கவும். ஏற்றிய அடுப்பில் வைக்கவும்.

தியான மென்ன பறை பூசை
தெட்சிணாமூர்த்தி பாதங் கேத்திர பாலன்
தியானமென்ன முத்தீயு மூன்று சாமம்
தீயிட்டு வாறியபின் செப்பக் கேளே
தியானமென்ன செந்தூரம் பொங்கித் தானால்
சிலக்கைக்கொண்டு குப்பிவாய் கிண்டு கிண்டே! 351

பொ.ரை: பூசைகளைச் செய்து இறைவனை வணங்கி தெட்சிணாமூர்த்தியின் பாதங்களை வணங்கி தீபாக்கினி (ஒரு விறகு), கமலாக்கினி (இரண்டு விறகு), காடாக்கினி (மூன்று விறகு) ஆகிய மூன்று வகைத் தீயால் தனித்தனியே ஒன்பது மணி நேரம் எரிக்கவும். நெருப்பு ஆறினபின் செந்தூரம் பொங்கினால் சிலாகையைக்கொண்டு கிளறி விடவும்.

கிண்டியே கற்றாழஞ் சோறு கொண்டு
கிழிகட்டி வாயதனில் நீபோத்தி போத்தி
மண்டியே அத்திகட்குச் சோறு போடு
மைந்தனே குப்பிதன்னை யுடைத்துப் பாரு
பிண்டியே ஒன்றுமில்லை முருக்கம் பூப்போல்
பேரான செந்தூர மிருக்கும் பாரு
கண்டியதன் பேர்சொன்ன நோய்கட் கெல்லாம்
கண்ணான திரிபுரத் தாண்டனும் காணே! 352

பொ.ரை: சோற்றுக்கற்றாழையினுள் உள்ள சோற்றினைக் கிழியாகக் கட்டி குப்பியின் வாய்வழி இட்டு அமர்த்தவும். அச்சோற்றினை யானைகளுக்கிடவும். பிறகு குப்பியை உடைத்து முருக்கம்பூ போல் சிவப்பாக உள்ள செந்தூரத்தை எடுத்துப் பத்திரப்படுத்தவும். நோய்கட்கேற்றவாறு இதனைப் பயன்படுத்தவும்.

காணப்பா செந்தூரம் கொள்ள வேதான்
காட்டுகிறேன் அனுபானங் களங்கம் விட்டு
ஊணப்பா திரிகடுகு வெதுப்பித் தூளாய்
ஒக்கவெரு கடிதூக்கி தேனும் கூட்டிப்
பூணப்பா செந்தூரம் பணந்தான் சேர்த்துப்
புகழாக இருபதுநா ளிரண்டு நேரம்
தோணப்பா வரவெடுத்துக் கொள்ளுஞ்
சுகமாகுஞ் சுகமாகுஞ் சுருதி காணே! 353

பொ.ரை: சுக்கு, மிளகு, திப்பிலி கலந்த சூரணத்தை மூவிரலளவெடுத்து, தக்க அளவு தேனைக்கலந்து கொள்ளவும். அதில் 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து இருபது நாட்கள் காலை, மாலை உட்கொள்ளவும். நோய்கள் நீங்கும்.

சுருதியோர் செந்தூர முண்ட பேர்க்குஞ்
சுகமாகுஞ் சொல்லுகிறோம். நோய்க ளெல்லாம்
மிருதிபெற்ற வாதமோடு பக்கச் சூலை
மேலான காமாலை பதினெண் வாய்வும்
பருதியொத்த பவுத்திரமு மீளை பாண்டு
பாரமெனும் கிரீச்சனமும் கிரந்தி தானும்

நிருதியொற்று நாடிப்போ மின்னங் கேளு
நேரான வெள்ளுள்ளி தயிலங் கேளே! 354

பொ.ரை: இச்செந்தூரம் உட்கொண்டவர்க்கு வாதம், பக்கச்சூலை, காமாலை, பதினெட்டு வகை வாய்வு, பவுத்திரம், ஈளை, பாண்டு, கிரீச்சன வகைகள், கிரந்திவகைகள் ஆகிய நோய்கள் நீங்கும்.

வாங்கியே பணவெடைதான் செந்தூர மிட்டு
மைந்தனே யெட்டுநா ளுண்ட போது
வாங்கியே பதிமூன்று சன்னி போகும்
வாகாகப் பூநாக முசுறு முட்டை
வாங்கியே முலைப்பாலில் குழைத்து வூட்ட
மரணசன்னி விரணசன்னி தோஷம் போகும்
வாங்கியே திரிகடுகும் இஞ்சிச் சாறும்
மைந்தனே தேன்கூட்டி நாளு மூட்டே! 355

பொ.ரை: வெள்ளைப்பூண்டு தயிலத்தில் 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து எட்டு நாட்கள் உட்கொள்ள பதின்மூன்று வகைச் சன்னி குணமாகும். பூநாகம், முசுறு முட்டை இரண்டையும் சேர்த்து தாய்ப்பாலில் குழைத்து உடன் செந்தூரத்தைக் கலந்து கொடுக்க மரணசன்னி, விரணசன்னி, தோடம்நீங்கும். சுக்கு, மிளகு, திப்பிலி சூரணத்துடன் இஞ்சிச்சாற்றையும் தேனையும் உடன் கலக்கவும்.

ஊட்டவே சயம்போகும் அக்கினியின் மந்தம்
உள்மாந்தை சுரமாந்தை யோடிப் போகும்
நீட்டவே கூவிளச்சா றதனுக் குள்ளே
நேராக பணவெடைதான் செந்தூரம் போடு
பூட்டவே பிள்ளைபெற்ற சீழ்கட்டும் போகும்
புகழான சதையடைப்பு மேகம் போகும்
மூட்டவே நெய்யிலிடு முருங்கைத்தோல் சாற்றி
லூட்டிட வறட்சிபோம் வங்கம் போமே! 356

பொ.ரை: அதில் செந்தூரத்தைக் குழைத்தூட்ட சயம், அக்கினிமந்தம், உள்மாந்தை, சுரமாந்தை குணமாகும். கூவிளைச் சாறுக்குள் 488 மி.கி. செந்தூரத்தைக்கொடுக்க குழந்தை

பெற்றவர்க் குண்டாகும் சீழ்க்கட்டு நீங்கும். சதையடைப்பு, மேகம் தீரும். நெய்யுடன் முருங்கைப்பட்டைச் சாற்றினைக் கலந்து அதில் செந்தூரத்தை அளிக்க வறட்சி வங்கம் நீங்கும்.

போகுமப்பா சர்வாங்க வாதந் தானும்
பேராக பணவெடைதான் செந்தூரம் வாங்கி
போகுமப்பா இண்டஞ்சாற் தன்னில் கொள்ளப்
பொடியாகும் தோசமெனத் தனைத்துப் போகும்
போகுமப்பா பணவெடைதான் வாகையிலைச் சாற்றால்
பூட்டவே மணிக்கட்டு வாதந் தீரும்
போகுமப்பா பணவெடைதான் ஒப்பு ரோகம்
புகழாக காந்தமொரு பலந்தான் தூக்கே! 357

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை இண்டஞ்சாற்றில் கலந்து உட்கொள்ள சர்வாங்க வாதமும் தோசங்களும் தீரும். அவ்வளவையே வாகையிலைச் சாற்றில் கொள்ள மணிக்கட்டு வாதம் குணமாகும். 35 கி காந்தத்தை எடுக்கவும்.

தூக்கியே ஆவரையின் அரிசி வாங்கி
சுழலவதை விளாங்காய்போல் கற்கடக சிங்கி
தாக்கியே விட்டரைத்து தேத்தின் வித்தும்
சமபாகங் கூட்டியே தயிர்தான் மேதி
தேக்கியே நீர்வடித்து யிருநே ரந்தான்
திறமாக யிரண்டு பணவெடைதான் கொள்ளு
தொக்கியே சலக்கழிச்சல் மதுக்கால கண்டந்
தூரோடே பறந்துபோஞ் சுதமாங் காணே! 358

பொ.ரை: ஆவாரையின் விதையை எடுத்து விளாங்காய் அளவு அரைத்துக் கொள்ளவும். கற்கடகசிங்கியையும் தேற்றான் விதையையும் சம அளவெடுத்துச் சேர்த்தரைத்து அத்துடன் எருமைத்தயிரையும் கலந்து நீரை வடித்து, அதில் 976 மி.கி. அளவு இரண்டு வேளைக்கும் கொடுக்க சலக்கழிச்சல், மதுக்கால கண்டம் தீரும்.

காணப்பா பணவெடைதான் செந்தூரந் தூக்கி
கனக்கவே நீருள்ளிச் சாற்றி லூட்டு

பூணப்பா சுரதோச மெல்லாம் போகும்
புகழாக யின்னமொரு செந்தூரம் கேளு
ஆணப்பா நோய்க்கெல்லாம் கால னாகும்
ஆச்சரிய மதன்போல் கேளப்பா நீயும்
சாணப்பா காட்டிலே முளக்காம்பு யெட்டு
சண்டமாருத மென்றசெந் தூரந் தானே! 359

பொ.ரை: நீருள்ளிச்சாற்றில் 488 மி.கி. செந்தூரத்தைக் கொடுக்க சுரதோடங்கள் குணமாகும். நோய்களை விரட்டி யடிக்கும் எமனாக விளங்கும். மற்றொரு செந்தூரத்தை இயம்புகிறேன். சண்டமாருதமெனும் செந்தூரம் வருமாறு.

சண்ட மாருதச்செந்தூரம்

தானென்ற சூதமொரு பலந்தான் மூன்றுஞ்
சாதகமாம் கெந்தியொரு பலந்தான் மூன்று
தானென்ற சூதத்தைச் செங்கத் தூளில்
தவறாமல் சுத்திசெய்து மஞ்சத் தூளில்
தானென்ற கொடிவேலி வேருங் கூட்டி
சாரணையின் தண்ணீரின் பிறகு மத்தி
தானென்ற பசுவின்பால் வாழைத் தண்டு
தண்ணீரும் கூடவிட்டுக் காக மொன்றே! 360

பொ.ரை: 105 கி இரசம், 105 கி கெந்தகம் எடுத்துக் கொள்ளவும். இரசத்தைச் செங்கல் (செங்கழுநீர்) தூளில் சுத்தி செய்யவும். மஞ்சள்தூள், கொடிவேலிவேர், சாரணைத்தண்ணீர், பசும்பால், வாழைத்தண்டுச்சாறு இவற்றில் முறையே உருக்கிச் சாய்க்க இரசம் சுத்தியாகும்.

காகத்தைச் சுத்தி செய்து தீபங்
காட்டியே கவாயிதம் கிழியாகக் கட்டி
காகத்தை குழிக்குள்ளே வாய்தெரியப் புதைத்துக்
கவறாக வண்டுமேல் கெந்தகத்தை வைத்துக்
காகத்தை யுலைமூடிக் கொண்டு மூடிக்
காலவே மணலிட்டு தீயை மூட்டி
காகத்தில் கெந்தகந்தா னுருகி விழுங்காண்
மக்கான கெந்தகந்தான் சுத்தி யாச்சே! 361

பொ.ரை: காகத்தை அதன் மீதுள்ள உரோமம், வயிற்றிலுள்ள குடல் தொடர்பானவைகளை நீக்கி தூய்மையான துணியில் கிழியாகக் கட்டி வைக்கவும். குழி ஒன்றினை வெட்டி மணலினைக் கொட்டவும். அதன் மீது காகத்தின் வாய் திறந்தவாறு வைத்து வண்டுகட்டி கெந்தகத்தை அதனுள் வைக்கவும். மேலே உலையினால் மூடவும். சுற்றி மணலினைப் பரப்பி தீயினை மூட்டவும். அனல் மேல்வரை சென்று கெந்தகம் உருகி சுத்தியாகும்.

ஆச்சப்பா கெந்தகமு மாகமுஞ் சேர்த்து
ஆட்டுநீ குமரிச்சாற் கொண்டு நன்றாய்
நீச்சப்பா குதம்பைச்சார் பிரள வாட்டு
நிலையாக மூன்றுதினம் அரசம் பட்டை
ஏச்சப்பா கடுக்காயும் நறுக்கித் தட்டி
இதமாக வூறவைத்துத் திரும்ப வாட்டு
போச்சப்பா நாலுதினம் செம்முள்ளிச் சாறும்
போதவிட்டு மயனம்போ லாட்டி வாங்கே! 362

பொ.ரை: கெந்தகத்தையும் எருக்கையும் சேர்த்துச் சோற்றுக் கற்றாழைச் சாற்றினாலும் குதம்பைச் சாற்றினாலும் முறையே ஒவ்வொரு நாளும் அரைக்கவும். அரசம் பட்டையையும் கடுக்காயையும் இடித்துத் தண்ணீரில் ஊறவைத்து அத்தண்ணீரால் மூன்று நாட்கள் அரைக்கவும். செம்முள்ளிச் சாறூற்றி நான்கு தினம் மைபோல் அரைக்கவும்.

வாங்கியதோர் மருந்துக்கு விபரங் கேளு
மைந்தனே யிரண்டுகுப்பி கெங்கை குப்பி
தாங்கியதோ ரதைப்பொதியக் கவசங் கட்டி
சாதகமாய் கருமண்ணும் வெள்ளைக் கல்லும்
தேங்கியதோ ருமிக்கரியும் புத்தோ டப்பா
திறமான கடுக்காயும் இவைதா னொக்க
காங்கியதோர் கல்வத்தி லாட்டி வாட்டி
கட்டாகச் சீலையிலே தடவி டாயே! 363

பொ.ரை: இரண்டு செங்கை குப்பிகளை எடுக்கவும். அதற்குக் கவசம் அமைப்பதற்கான செய்முறை வருமாறு. கருமண், வெள்ளைக்கல், உமிக்கறியின் சாம்பல், கடுக்காய் இவற்றைச் சம அளவெடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து அவ்விழுதைச் சீலையில் தடவவும்.

மூட்டியதோர் வாய்தனக்கு வடைமண் றானு
முயலவே கடுக்காயும் களிப்பாக் குப்பும்
நீட்டியே குளம்பின்னுங் கறங்கற கிட்டம்
நிலையான கருவேலம் பிசினுங் கூட்டி
நாட்டியே பொன்மெழுகு வெள்ளக் கல்லு
நயமாகச் செங்கருவா லரைத்துக் கூட்டு
பாட்டியே பழச்சாறு விட்ட ரைத்துப்
பருவமாய் குப்பிவாய் வளைத்துக் கட்டே! 364

பொ.ரை: குப்பியின் வாய்க்கேற்ற அடைமண்ணாக, கடுக்காய், களிப்பாக்கு, உப்பு, கிட்டம், கருவேலம்பிசின், பொன்மெழுகு, வெள்ளைக்கல் இவற்றை முட்டையின் மஞ்சள் கருவூற்றி அரைத்துக் கொள்ளவும். பின் மேலும் எலுமிச்சம் பழச்சாறூற்றி பக்குவமாய் அரைத்துக் குப்பியின் வாய்கேற்றவாறு துணியில் பூசி வளைத்துக் கட்டவும்.

காட்டியே சூட்டடுப்புக் குள்ளே பின்னுங்
கனத்ததொரு தாழிதனைப் புதைத்து வைத்து
நாட்டியே நால்விரற்குள் மண்ணும் விட்டு
நயமாகக் குப்பியதின் மேலே வைத்து
கெட்டியாய் கழுத்துமட்டு மண்ணுங் கொட்டு
கெடியான வாய்தெரிய வளைத்து மக்காள்
ஆட்டியே தொன்றுவில்லை தீயை மூட்டி
அப்பனே தீபாக்கினி சாம மாட்டே! 365

பொ.ரை: சூட்டடுப்பு ஒன்றிற்குள் கனமான தாழியினை வைக்கவும். நான்கு விரல் கனமுள்ள மண்ணை விடவும். அதன்மேல் குப்பியை வைத்து கழுத்தளவிற்கு மணலைக் கொட்டவும். வாய் தெரியுமளவு வைத்து ஒரு விறகினால் மூன்று மணிநேரம் எரிக்கவும்.

ஆட்டப்பா கமலவன்னி ரண்டு சாமம்
அதின்பிறகு காடாக்கினி யிருபத் தொன்று
நீட்டப்பா சாமமங்கே யெரித்து வாநீ
நினவாக யெரித்துவர பொங்கித் தானால்
மூட்டப்பா கற்றாழஞ் சோறு கொண்டு
முறைமுறையாய் பொட்டணங்கொண் டொத்தி யொத்தி
பூட்டப்பா குப்பிக்கு மோசம் வந்தால்
புகழாக மறுகுப்பி பூட்டு பூட்டே! 366

பொ.ரை: இரண்டு விறகு கொண்டு ஆறுமணி நேரமும் மும்மூன்று விறகாக ஏழுமுறை வைத்து மூன்று மணிநேரம் எரித்து வரவும். மருந்து குப்பியைப் பார்த்துக் கொண்டேயிருக்கவும். அனலின் கடைசியில் மருந்து பொங்கினால் கற்றாழஞ் சோற்றைத் துணியின் உள்ளே வைத்துப் பொட்டணமாகக் கட்டி ஒற்றி விடவும். குப்பிக்குச் சேதம் ஏற்படின் மறு குப்பிக்கு மாற்றிவிடவும்.

பூட்டப்பா கெந்தகந்தா னாகு மப்போ
பொரிபட்டாப் போலெடுத்து மருந்தைப் பாய்ச்சு
நாட்டடா நாலுநாள் வயிரவற்குப் பூசை
நலமாகச் செய்தேதா னுடைத்துப் பாரு
வாட்டப்பா செந்தூரம் முருக்கம் பூப்போல்
அருணநிறம் போலெண்ணு மரைய லாகும்
மூட்டப்பா செந்தூரம் சர்வ நோய்க்கும்
உத்தமனே ஆடுகண்ட வேங்கை யாமே! 367

பொ.ரை: பக்குவமாக அதனை எடுத்து நான்கு நாட்கள் வயிரவர் முன் வைத்துப் பூசை செய்யவும். பின் குப்பியை உடைத்துப் பார்க்கவும். முருக்கம்பூவின் நிறத்தைப் போன்று செந்தூரமாகியிருக்கும். திருவண்ணாமலையாரின் நிறத்தை யொத்து செம்மையாகியிருக்கும். ஆட்டினைக் கொல்லும் வேங்கை போன்று இச்செந்தூரம் நோய்களை நீக்கும்.

ஆமப்பா விபரங்கேள் நோய்க ளெல்லாம்
அனுபானஞ் சொல்லுகிறேன் அடவாய்க் கேளு
ஓமப்பா யென்னூற்குள் பண்டிதத்தைச் சொல்வோம்
உத்தமனே யிரண்டுபட்ச மதுக்குள்சூலை தீரும்

நாமப்பா உள்ளபடி பாடிப் போட்டோம்
நாலுவித வாகடமும் விபரம் பார்த்து
சோமப்பா கொண்டதினால் நன்றாய்க் கண்டோம்
துரோகிக்கு சூத்திரத்தைச் சொல்லொண் ணாதே! 368

பொ.ரை: நோய்களுக்கேற்ற அனுபானங்கள் வருமாறு. என்னுடைய நூலுக்குள் உள்ள பண்டிதத்தைக் கூறுவோம். ஒரு மாதத்திற்குள் சூலை தீரும் மருந்தும் உளது. நான்கு வித வாகடங் களைப் பார்த்து வைத்தியத்தைப் பாடியுள்ளேன். செய்த செயல் களை மறந்தோர்க்கும் நன்றியிலாதோர்க்கும் கூறவேண்டாம்.

ஒண்ணாதே யென்றாக்கால் பலித்தி டாது
உத்தமற்குப் பலிக்குமக்கா ளுண்மை யுண்மை
ஒண்ணாதென் றனுபானம் திரிகடுகுப் பொடியில்
ஒருபணந்தான் செந்தூரம் தேனுங் கூட்டே
ஒண்ணாதே மண்டலந்தான் தின்னத் தின்ன
ஒழியாத மகாவாதஞ் சலமுந் தீரும்
ஒண்ணாதே வாய்வுவருஞ் சூலை போகும்
உத்தமனே அஷ்டகுன்ம மொழியும் பாரே! 369

பொ.ரை: பொருந்தாது என்று கூறுபவர்க்கு வைத்தியம் பணிபுரியாது. உத்தமர்க்குப் பொருந்தும். திரிகடுகு சூரணத் துடன் 488 மி.கி. செந்தூரத்தையும் தேவையான அளவு தேனையும் கலந்து நாற்பது நாட்களுக்குக் கொடுக்க மகாவாதம், வேண்டாத நீர், வாய்வு சூலை, எட்டு வகைக் குன்மம் ஆகிய நோய்கள் தீரும்.

பாரப்பா செந்தூரம் பணந்தான் தூக்கி
பட்டையுட பொடியுமோர் கழஞ்சு மூன்று
நேரப்பா முக்கழஞ்சு திப்பிலியின் பொடியும்
நிறையாகத் தேனில் மண்டலந்தான் தின்ன
போரப்பா கிராணியென்ற தாறுந் தீரும்
பிளவையறுந் தீராப்புண் பித்தம் போகும்
ஆரப்பா யிதின்பெருமை சொல்ல வல்லா
ரதிவிந்த மென்றசெந்தூரந் தானே! 370

பொ.ரை: 15 கி பட்டைப் பொடியுடனும், திப்பிலிப் பொடியுடனும், 488 மி.கி. செந்தூரத்தையும் தேனையும் கலந்து கொடுக்கவும். அவ்வாறே நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள ஆறுவகைக் கிராணி, பிளவை, தீராப்புண், பித்தம் ஆகியவை நீங்கும். இச்செந்தூரத்தின் சிறப்பைச் சொல்லி மாளாது.

காணப்பா இண்டஞ்சாறு சேரை வாங்கி
கரைசெய்து செந்தூரம் பணந்தா னிட்டுப்
பூணப்பா யிருபதுநாள் கொள்ள கொள்ள
புகைச்சலோடு உள்மாந்தை தீரு மப்பா
மூணப்பா ஈளைமுதல் சுவாச காசம்
உத்தமனே அரிகுரலும் நெரிக்குரலும் தீரும்
வேணப்பா குருவைமா வெருகடியுந் தேனும்
விரவியே செந்தூரம் பணவெடைதான் போடே! 371

பொ.ரை: இண்டஞ்சாறு 280 கி எடுத்து 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து இருபது நாட்கள் உட்கொள்ள புகைச்சல், உளைமாந்தை, ஈளை, சுவாசகாசம், அரிகுரல், நெரிக்குரல், குணமாகும். குருவை நெல்லரிசி மாவு மூவிரலளவெடுத்து 488 மி.கி. செந்தூரத்தையும் தேனையும் உடன் கலந்து கொள்ளவும்.

செந்தூரம் அஞ்சுநாள் கொண்டால் கேளு
சிதறினதோ ரெலும்பெல்லா மூறும் மூறும்
வந்தாறும் பதகரியும் உடம்பு னோவும்
வாதபித்த சிலேற்பனமு மார்க்கங் கேளு
வெந்தாலும் வெந்நீரில் செந்தூர மிட்டு
வேகவைத்து மூன்றுநாள் குளிக்கத் தீரும்
முந்தூரு முகவாத சன்னிக் கேதான்
முட்டைநீர் செந்தூரங் குழைத்துப் பூசே! 372

பொ.ரை: இவ்வாறு ஐந்து நாட்கள் உட்கொண்டால் எலும்புகள் வன்மை பெறும். தசைநோய், உடல் வலி இவை தீரவும், வாதபித்த சிலேற்பனங்கள் நீங்குவதற்கும், வெந்நீரில் செந்தூரத்தைக்கலந்து வேகவைத்து மூன்று நாட்கள் தொடர்ந்து குளிக்கவும். முட்டையின் வெள்ளைக் கருநீரில் செந்தூரத்தைக் குழைத்து மேலுக்குப் பூச முகவாத சன்னி குணமாகும்.

பூசியதோர் செந்தூரம் பணந்தான் வாங்கி
புகலரிய வெள்ளுள்ளித் தயிலத் திட்டு
மூசியதோர் மூன்றுதின முண்ண வுண்ண
முப்பத்து மூன்றுசன்னித் தோஷம் தீரும்
பேசியதோர் செந்தூரந் தினந்தா னஞ்சு
பேய்க்கும்மட்டிச் சாற்றிலே பிலக்க வூட்டு
கேசியதோ ரறுசூலை வாய்வுக் குத்து
கெர்ப்பவிப் புருதியும்போம் கெட்டி தானே! 373

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை வெள்ளுள்ளித் தைலத்தில் குழைத்து மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து கொடுக்க முப்பத்து மூன்று வகை சன்னி தோடம் குணமாகும். பேய்க்குமட்டிச் சாற்றிலே இச்செந்தூரத்தைக் குழைத்துக்கொடுக்க அறுவகைச் சூலை, வாய்வுக்குத்து, விப்புருதி குணமாகும்.

கெட்டிகெர்ப்ப விப்புருதி குடல்தனில் விப்புருதி
கேள்மக்கள் மகுமாய விப்புருதி தீரும்
மட்டியெனுஞ் செந்தூரம் தேள்கொடுக்குச் சாறு
மப்பனே எருக்கம்பால் கலந்து பூச
கொட்டியதோர் சில்விஷமும் நல்ல பாம்பு
கொத்தினாச காஞ்சுரைத்தோல் தூள்தான் கேளு
துட்டியதோர் காசிரண்டு செந்தூரம் பணந்தான்
தூக்கியே வெந்நீரில் தின்னச் சொல்லே! 374

பொ.ரை: கெர்ப்ப விப்புருதி, குடல்விப்புருதி, மாயவிப்புருதி நீங்கும். தேள்கொடுக்குச்சாறு, எருக்கம்பால் இரண்டையும் கலந்து அதில் செந்தூரத்தைக் கலந்து சில்விஷம், நல்லபாம்பு கடித்த இடம் இவற்றின் மேல் பூசவும். காஞ்சிரைப்பட்டைப் பொடியுடன் 976 மி.கி. செந்தூரத்தையும் வெந்நீரையும் கலந்து குடிக்கவும்.

சொல்லப்பா நல்லவிஷ மெல்லாம் போகும்
சுகமான ஆவரையின் தயிலம் வாங்கி
நில்லப்பா செந்தூரம் பணவெடையின் வீசம்
நிசமாகத் தின்றுவர சகலக்கழிச்சல் போகும்
நல்லப்பா சீரகமும் வராகனிடை வெண்ணெய்
நாட்டியிடு செந்தூரம் பணந்தா னொன்று

வெல்லப்பா வரியவருஞ் சூலை போகும்
மென்பதாம் வாதம்போ மின்னங் கேளே! 375

பொ.ரை: அவ்வாறு செய்ய விஷங்கள் அனைத்தும் நீங்கும். ஆவாரைத் தைலத்தை 488 மி.கி. செந்தூரத்துடன் கலந்து கொடுக்க அனைத்து வகைக் கழிச்சல்களும் தீரும். பொடித்த 4 கி சீரகத்தையும் 488 மி.கி. செந்தூரத்தையும் உடனிட்டு வெண்ணையில் குழைத்துக் கொடுக்க சூலை, வாதம் தீரும்.

கேளப்பா செந்தூரம் பணந்தா னொன்று
கெடியான வேளைச் சாறதனுக் குள்ளே
தூளப்பா இருபதுநா ளுண்ண வுந்தான்
போகுமுடம் புலர்த்தல் தீர நீறி
கோளப்பா விட்டேகும் பணந்தான் வீதங்
கொண்டுவா வரநீரிற் ....
பாளப்பா வறுமையாதம் மதிம யக்கம்
பத்தியமும் பிரமைமுதல் பறந்து போமே! 376

பொ.ரை: வேளைச்சாற்றில் 488 மி.கி. செந்தூரத்தைக் கொடுக்கவும். அவ்வாறே இருபது நாட்களுண்ண உடம்பின் வறட்சி தீரும். புத்துணர்ச்சி பெறும். வறுமை, அறிவு, மயக்கமடைதல், பித்தம் அதிகமாதல், பிரமை நீங்கும்.

போகுமப்பா வெருகடி முத்தக்காசுத் தூளில்
பேரான செந்தூரம் பணந்தா னொன்று
தாகுமப்பா நோயெல்லாம் நிவர்த்தி யாகும்
தாதுயசந்து லெகுவாகுஞ் சரீரம் கெட்டி
ஆகுமப்பா முகமிலங்கு மழகு முண்டா
மிருபது நாள் கொள்ள
பாருமப்பா பழச்சாற்றில் பணவெடைதான் கொள்ளு
பறக்குமப்பா நூற்றெட்டு சுரமும் பாரே! 377

பொ.ரை: கோரைக்கிழங்குச் சூரணத்தில் 488 மி.கி. செந் தூரத்தைக் கலந்தூட்ட நோய்கள் பல நீங்கும். தாதுக்கள் வன்மை பெறும். உடல் இலேசாகி இளமையுடன் கற்பமாகும். முகத்தில் வசீகரமும் ஒளியுமுண்டாகும். எலுமிச்சம் பழச்சாற்றில் 488

மி.கி. செந்தூரத்தைக் கலந்து இருபது நாட்கள் உட்கொள்ள நூற்றெட்டு வகைக் காய்ச்சல் குணம்பெறும்.

பாரப்பா பணவெடைதான் செந்தூரந் தூக்கி
பாய்ச்சப்பா புளியிலைச்சா றரைசேரை வாங்கி
நேரப்பா உண்டிடவும் காமாலை சோகை
நிவர்த்தியாம் நிகண்டாகு மிந்த நூல்தான்
ஆரப்பா வயித்தியத்தைக் கரைகண்ட பேர்தான்
ஆச்சரியம் தன்வந்திரி யவரே கண்டார்
போரப்பா பிரட்டென்று சொல்வார்க் கேது
பிரகிருதி தாதுநிலை யறியார் தானே! 378

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை 140 கி புளியாரைச் சாற்றில் கலந்து கொடுக்க காமாலை, சோகை குணமாகும். இந்த நூல் நிகண்டாக விளங்கும். வைத்தியத்தைக் கரைகண்ட தன்வந்திரி இவரே தான். கோள் கூறுபவர்கள் யாவருக்கும் இந்நூல் இல்லை.

சர்வ குணரசம்

தானென்ற சர்வகுண ரசத்தைச் சொல்வேன்
சாயபஞ்சாட் சரமாகுஞ் செந்தூர மப்போ
தானென்ற யிரண்டுபேர் வந்த தேது
தார்மீக சர்வகுண மென்ற தாலே
தானென்ற விபரங்கள் மக்காள் நீங்கள்
சாதகமாம் ரசமூன்று பலந்தான் தூக்கு
தானென்ற கெந்தியிதிற் பாதி தூக்கு
சாறதற்கு மேனியுட சாறு வாங்கே! 379

பொ.ரை: பலவித குணங்களையும் பெற்று சிறப்பாற்றல் மிக்கதான இந்த பஞ்சாட்சர செந்தூரத்திற்கான மருந்துகள் வருமாறு. 105 கி இரசம், 52 கி கெந்தகம், வேண்டிய அளவு குப்பைமேனிச்சாறு எடுக்கவும்.

வாங்கியே யொருசாம மரைத்த பின்பு
மைந்தனே கொடுப்பைச்சா றந்த வண்ணம்

வாங்கியே சூதநவச்சாரஞ் செம்முள்ளிச் சாறும்
வாகாக யிதுகளிலே எட்டுச் சாமம்
வாங்கியே நன்றாக வாட்டிப் பின்னும்
வாகாகக் குப்பியிலே பொடித்துச் சேர்த்து
வாங்கியே வாங்கியெரைக் கான பின்பு
வளப்பக்கல் கொண்டடைத்து மண்கா டாக்கினியே! 380

பொ.ரை: அச்சாறூற்றி அவ்விரண்டையும் மூன்று மணி நேரமரைக்கவும். கொடுப்பைச் சாறூற்றி மூன்று மணிநேரமரைக்கவும். இரசம், நவச்சாரம் இவையிரண்டையும் செம்முள்ளிச்சாறூற்றி இருபத்து நான்கு மணிநேரம் அரைத்து அனலிலிட்டு வதக்கிப் பொடித்துக் குப்பியில் சேர்க்கவும். குப்பியின் வாயை வளப்பக் கல்லிட்டு அடைக்கவும். குப்பியைச் சுற்றி மணலைக் கொட்டி மூன்று விறகினை வைத்து எரிக்கவும்.

காடாக்கினியா யிரண்டுபத்து சாம முற்றுங்
கழித்தபின்பு தினமொன்று ஆறப் போட்டு
செடாக்கினியைக் கொண்டேதான் பூசை -பண்ணி
தேவியெனும் வளைநன்றாய்த் தெளிந்து கொண்டு
வடாக்கினிய செந்தூர மெடுத்துப் பாரு
மருணனிறம் போலிருக்கு மப்பா கேளு
திடாக்கினிய செந்தூரம் பணந்தான் தூக்கு
தேனோடு திரிகடுகுப் பொடியுங் கூட்டே! 381

பொ.ரை: அறுபது மணிநேரம் மூன்று விறகினாலேயே எரித்து ஒரு நாள் முழுதும் ஆறவிடவும் . இறைவனுக்குப் பூசைகள் செய்து தேவியை வணங்கி ஆறியுள்ள செந்தூரத்தை எடுத்துப் பார்க்க அருணனின் நிறம் போல் சிவந்திருக்கும். 488 மி.கி. செந்தூரத்துடன் தேவையான அளவு தேனையும் திரிகடுகுத் தூளையும் சேர்க்கவும்.

கூட்டியே யெட்டுநா ளூட்டு மைந்தா
குற்றம்போல் சூலையுங் குளிர்ந்து தேகம்
தீட்டியே திப்பிலித்தூள் தேனுங் கூட்டி
தின்றுவிடில் லகுவாகும் தாது தானும்
நீட்டியே செந்தூரம் பணவெடைதா னப்பா
நீயுண்ணு மானையைப்போல் பிலனு முண்டு

வாட்டியே இருபதுநாள் ரெண்டு நேரம்
மருளுண்டாம் நாற்றம்போம் ஆண்மை பாரே! 382

பொ.ரை: அம்மருந்தை எட்டு நாட்கள் தொடர்ந்து கொடுக்க சூலை நீங்கி உடல் குளிரும். திப்பிலித் தூளையும் தேனையும் கலந்து கொடுக்க தாதுவன்மை பெறும். உடல் இலேசாகும். 488 மி.கி. செந்தூரத்தை உட்கொள்ள யானையைப் போன்ற பலனுண்டாகும். இருபது நாட்கள் தொடர்ந்து கொள்ள உடலில் நாற்றம் நீங்கும். தாது வன்மை பெறும்.

நாற்றம்போம் மேனியெல்லாம் செங்கழுநீர் நாறும்
நவனாதி சித்தர்வந்து புத்தி கேட்பார்
மாற்றம்போ மாயையென்ற தனைத்தும் நீராம்
வாகான கற்பூரம் நித்தம் வீசும்
மாற்றம்போம் பல்கருவி விடையத் துள்ள
ஆண்போம் செந்தூரம் வேதை யாகும்
பாத்தபெரிது வெல்லாங்கை கண்ட வித்தை
பணவெடைதான் செந்தூரம் வாங்கிக் கேளே! 383

பொ.ரை: இச்செந்தூரத்தை உட்கொள்ள உடம்பிலுள்ள கெட்டநாற்றம் போய் அல்லியின் மணம் கமழும். கற்பூரமணம் வீசும். பலவித நோய்கட்கும் செந்தூரத்தை 488 மி.கி. அளவெடுத்துத் தக்க அனுபானங்களுடன் சேர்க்கவும். மாயைகள் நீக்கும் வல்லமை கொண்டதால் சித்தர்பலரும் இதனைப் பற்றி வினவுவர்.

வாங்கியதோர் செந்தூரந் தேனி லேதான்
மகாவேலிச் சாறுடனே திங்களொன்று கொள்ள
தூங்கியதோர் கிராணியென்ற தறுவகையுந் தீரும்
சாதகமாய் மூட்சையென்ற தெல்லாம் போகும்
நீங்கியதோர் பணவெடைதான் அஞ்சு உப்பில்
நிசமாக வெருகடிதான் பொடித்து வாங்கி
தேங்கியதோர் தேனிலே குழைத்துக் கொள்ள
செய்துகேள் அஷ்டகுன்மம் தீர்ந்து போமே! 384

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தைத் தேனுடனும் மகாவேலிச் சாறுடனும் கலந்து முப்பது நாட்கள் உட்கொள்ள அறுவகைக் கிராணி தீரும். மூர்ச்சையும் நீங்கும். கல்லுப்பு, வளையலுப்பு,

வெடியுப்பு, கறியுப்பு, இந்துப்பு ஆகிய ஐவகை உப்புசூரணத்தில் மூவிரலளவு எடுத்து 488 மி.கி. செந்தூரத்தையும் தேனையும் கலந்து கொடுக்க எட்டு வகைக் குன்மம் குணமாகும்.

போகுமே கேளதிரா வாய்வு தானும்
பொருமியதோ ரிரைச்சல்ரத்தக் கழிச்சல் தானும்
போகுமே அக்கினிமந்தம் பித்த வாய்வும்
புகழான நெஞ்செரிப்பு புளித்தேப்ப மந்தம்
போகுமே செந்தூரம் பணவெடைதான் தூக்கி
புதுபழச்சாற் கொதிதண்ணீர் புகட்டி யொன்றாய்
போகுமே தானருந்த நீர்க்க டுப்பு
பொசிந்தொழுகு முஷ்ணமா மேகம் போமே! 385

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தைப் புதிய எலுமிச்சம் பழச்சாற்றுடனும், கொதிநீருடனும் கலந்து கொடுக்க நீர்க் கடுப்பு, உட்டிணம், மேகம், அக்கினிமந்தம், பித்தவாய்வு, நெஞ் செரிப்பு, புளித்தேப்ப மந்தம், இரத்தக் கழிச்சல் தீரும்.

மேகம்போம் பணவெடைதான் கஞ்சாச் சாற்றில்
வேதிச்சு ஆறுநாள் கொள்ளக் கேளு
தாகம்போம் மூலமுளை சீத ரெத்தம்
தன்னோடே கடுப்பெல்லாந் தீரும் தீரும்
சோகம்போம் இருபதுநாள் கொள்ளக் கேளு
சுழன்றுவரும் எரியாமை செரியாமை போகும்
நாகம்போம் சுரங்கள் அனைத்தும் போகும்
நல்லசுரம் பெரும்பாடும் நயமாய்ப் போமே! 386

பொ.ரை: கஞ்சாச் சாற்றில், 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து ஆறுநாட்கள், உட்கொள்ள மேகம், தாகம், மூலமுளை, சீதரத்தம், கடுப்பு இவை தீரும். இருபது நாட்கள் உட்கொள்ள எரியாமை, செரியாமை, பலவகைச் சுரங்கள், பெரும்பாடு ஆகிய நோய்கள் தீரும்.

ஆமைபோ மரிகுன்மம் வலிகுன்மம் சத்திகுன்மம்
அஷ்டகுன்மம் வாய்நீரு சந்து தள்ளும்
பாமையொரு செந்தூரம் இஞ்சிச் சாற்றில்
பதைத்திடவே நாற்பதுநாள் பதினெண் குஷ்டம்

சேமைபோம் வெடிசூலை யாறு குறைநோய்
தீராப்புண் சொறிசிரங்கு விஷமும் போகும்
தீமைபோம் செந்தூரம் பணவீ தம்தான்
செப்பிறேன் அனுபானஞ் செப்பி றேனே! 387

பொ.ரை: அரிகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், எட்டு வகைக் குன்மம், வாய் நீர் ஒழுகுதல் ஆகியவை. இஞ்சிச் சாற்றில் 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து நாற்பது நாட்கள் உட்கொள்ள தீரும். பதினெண்வகைக் குட்டம். வெடிசூலை, குறைநோய் ஆறு, தீராப்புண், சொறி, சிரங்கு, விடம் ஆகியவையும் தீரும்.

செப்பிறேன் பூநாக மரைத்து நன்றாய்
சிறுயிலு மிச்சங் காயளவு தினந்தான் பத்து
செப்பிறேன் தின்னுவிடில் பித்தக் காச
சேர்ந்துவிடும் பதினெட்டு கழன்று முன்னே
கொப்பிறேன் செந்தூரம் பணவெடைதான் வீதங்
கொட்டியே சீதேவி செங்கழுநீர்ச் சாற்றில்
உப்பிறேன் இருபதுநாள் கொள்ள கொள்ள
உத்தமனே வாதபித்த சிலேற்பனமும் போமே! 388

பொ.ரை: பூநாகத்தினை அரைத்துச் சிறு எலுமிச்சங் காயளவு நாள்தோறும் எடுத்துக் கொள்ளவும். இதில் 488 மி.கி செந்தூரத்தைக் கலந்து பத்து நாட்கள் தொடர்ந்து உட் கொள்ள பதினெட்டு வகை பித்தகாசம் தீரும். 488 மி.கி. செந்தூரத்தைச் சீதேவி செங்கழு நீர்சாற்றில் கலந்து இருபது நாட்கள் உட்கொள்ள வாத பித்த சிலேற்பனம் குணமாகும்.

இரசபலம் நாராயணச் செந்தூரம்

சிலேற்பனம்போம் சூலைபோம் பவுத்திரம்போம் பிளவை
தீராத வாந்தியொடு உஷ்ணமும் போகும்
சிலேற்பனம்போ மின்னமொரு செந்தூரங் கேளு
செப்பக்கேள் உஷ்ணவீர மாறாம ரசத்தை
சிலேற்பனம்போம் மகாமேக ராமபாண வீத
திரிநாரா யணச்செந் தூர மென்பார்

சிலேற்பனம்போம் சிவனிட்ட பேரொன் றாகும்
சித்தரிட்ட பேரப்பா செந்தூரந் தானே! 389

பொ.ரை: சிலேற்பனம், சூலை, பவுத்திரம், பிளவை, வாந்தி, உஷ்ணம், தீருவதற்குச் செந்தூரம் வருமாறு. திரிநாராயணச் செந்தூரம் என்னுமிது உட்டிண இரசத்தாலாயது. சிலேற்பனத்தை நீக்கும். மகாமேக ராம பாணமான இதனைத் திரிநாராயணச் செந்தூரம் என்று சித்தர்கள் அழைத்தனர்.

செந்தூர பாலரசங்க ளறுப தப்பா
சிறப்பான கெந்தகமோர் செப்பக் கேளு
பந்தாறும் பதினஞ்சு பலந்தா னப்பா
பாய்ச்சுவரி தாரமதில் பலந்தா னெட்டு
வந்தூறு சுத்திசெய்து மனோசிலையைக் கூட்டு
மருவியதோர் லிங்கமிந்த படியே கூட்டு
தந்தூறு மிதுரண்டு யிந்தார விடையே சேறுஞ்
சாதகமாய் எருக்கம்பால் கொண்டு வாட்டே! 390

பொ.ரை: செந்தூர பாலரசங்கள் அறுபதாகும். கெந்தகம், 525 கி எடுக்க. அரிதாரம் 280 கி எடுத்துச் சுத்தி செய்து சேர்க்கவும். மனோசிலை, இலிங்கம் இவையிரண்டையும் அதே அளவு சேர்த்து எருக்கம் பாலூற்றி அரைத்துக் கொள்ளவும்.

ஆட்டுவது தும்பைச்சாற் செருப்படிச் சாறு
அப்பனே மாதுளையுஞ் செம்முள்ளிச் சாறு
மாட்டுவது சாமமொன்று வாட்டி நீயும்
அப்பனே மாதுளம்பூ முருக்கம்பூச் சாறு
ஆட்டுவது யிருசாம மாட்டி வாங்கி
அடவாகத் தூளாக்கி குப்பிக் கேற்றி
ஆட்டுவது முன்போலே யெரித்து வாங்கி
அப்பனே முருக்கம்பூப் போலே யாமே! 391

பொ.ரை: தும்பைச்சாறு, செருப்படிச்சாறு, மாதுளைச் சாறு, செம்முள்ளிச்சாறு, எடுத்து மூன்று மணி நேரம் தனித் தனியே ஊற்றி அரைக்கவும். மாதுளம் பூச்சாறு, முருக்கம்பூச் சாறு இவற்றில் ஆறுமணி நேரமரைத்துத் தூளாக்கிக் குப்பியில் சேர்க்கவும். குப்பியைச் சுற்றி மணலைக் கொட்டி

மூன்று விறகினை வைத்தெரித்துத் தக்க நேரங்கழித்தெடுத்துப் பார்க்கவும். முருக்கம்பூவின் நிறம் போன்று செந்தூரமாகும்.

முருக்கம்பூப் போலிருக்கும் செந்தூ ரத்தை
முன்சொன்ன முறையோடே வைத்து வாநீ
எருக்கம்பூப் போலிருக்கு வாசனை யப்பாலே
பேசவே யிதுஅஷ்ட திசையும் வீசும்
சுருக்கம்பூப் போலிருக்கும் செந்தூ ரத்தை
சூட்டுகிற முறைசொல்வோம் சுருதி யாக
செருக்கம்பூப் போலிருக்கும் வியாதி யுள்ளே
சென்றாக்கால் தின்றுவிடுந் திண்ணந் தானே! 392

பொ.ரை: சிகப்பான செந்தூரத்தை முறையோடு பயன்படுத்தவும். எருக்கம்பூவினைப் போன்று மணமுள்ளதா யிருக்கும். இதன் மணம் எட்டு திசையும் வீசும். நோய்கள் அனைத்தையும் இச்செந்தூரம் நீக்கிவிடும்.

தானென்ற செந்தூரம் பணவெடைதான் வீதம்
சாப்பிடவே யனுபானம் சாற்றக் கேளு
தானென்ற தூதுவளை யாடா தோடை
தனிகண்டங் கத்திரியும் புடகு வைத்து
தானென்ற திரிகடுகு வறுத்த தூளுந்
தனித்தேனும் ரேகித்து தினந்தான் பத்து
தானென்ற விருநேரம் கொள்ளக் கேளு
சாதகமா யிராகங்கள் சாற்றி னேனே! 393

பொ.ரை: தூதுவளை, ஆடாதோடை, கண்டங்கத்திரி, ஆகியவற்றின் சூரணத்தையும், திரிகடுகை வறுத்த சூரணத்தையும் ஒன்று கலந்து அத்துடன் தேவையான தேனைக் கலந்து கொள்ளவும். அதில் 488 மி.கி. செந்தூரத்தைக் குழைத்துக் கூட்டி காலை, மாலை இரு நேரமும் உட்கொள்ளவும். அவ்வாறே பத்து நாட்கள் தொடரவும்.

சாற்றினேன் ஈளைமுதல் மந்தார காசம்
சுரமாந்தை உள்மாந்தை சுவாசம்
ஏற்றினேன் எலிக்கடியும் சிலேற்பனமும் சன்னி
யிவைதீரும் அனுபானம் இன்னம் கேளு

மாற்றினேன் திப்பிலியை வறுத்துத் தூளாய்
வாங்கியே காசெடைதான் வீரம்
... ...
மண்டலந்தா னிருநேரம் மகத்துவம் கேளே! 394

பொ.ரை: அவ்வாறு மேற்கொள்ள ஈளை, மந்தாரகாசம், சுரமாந்தை, உளைமாந்தை, சுவாசம், எலிக்கடி, சிலேற்பனம், சன்னி ஆகிய நோய்கள் குணமாகும். மற்றுமுள்ள அனுபானங்களைக் கேட்பாயாக! திப்பிலியை வறுத்துப் பொடித்து 4கி வீரத்தைக் கலந்து உட்கொள்ளவும். நாற்பது நாட்கள் காலை, மாலை கொள்ளவும்.

கேளப்பா சூலைபுண்கள் குட்ட ரோகம்
கிளறுபதி னெட்டுகுறைநோய் வண்டுகடி கடிவிசமும்
நாளப்பா கால்வெட்டை கபாலச் சூலை
நயமாக சீவிசங்கள் சொறிகரப்பான் கட்டு
நீளப்பா கபாலக்கரடு நெஞ்சு குத்தும்
நேராகப் பீனசமு மண்டை சூலை
தூளப்பா கண்ணோவும் செவியொசி வாய்வுமட்டு
சுகமாகு திரேகந்தான் சொல்லக் கேளே! 395

பொ.ரை: சூலை, புண்கள், குட்டநோய் பதினெட்டு வகைகள், வண்டுகடி, விஷக்கடிகள், கால்வெட்டை, கபாலச் சூலை, சொறி கரப்பான், கட்டுக் கரப்பான், கபாலக்கரடு, நெஞ்சுகுத்து, பீனசம், மண்டைச்சூலை, கண்ணோய், காதுவழி பற்றிக்கொள்ளும் வாய்வுகள் மேற்சொன்ன மருந்தால் தீரும்.

கேட்கவே சீரமெல்லாம் பரிமளமே வீசும்
கிருபையுள்ள நாதாக்கள் ஒழித்தா ரேனோ
கேட்கவே சீரத்தில் சிகப்பேற வென்றால்
கெட்டியாய் சொர்ணநிறம் தோன்றும் காணும்
கொள்ளவே தாதுதன்னில் அமுர்த மூறும்
கிருபையுடன் நரம்பெல்லாம் கெட்டி யாமே! 396

பொ.ரை: உடலெங்கும் நன்மணம் வீசும். குருக்கள் கூறியவாறு உடல் வன்மைபெறும். தங்கநிறமாகும். தாது வன்மை பெறும். சுக்கிலம் பெருகும். நரம்புகள் வன்மையுற்று விளங்கும்.

போமப்பா வெள்ளுள்ளித் தயிலம் சுத்தி
புகட்டடா செந்தூரம் பணவெடைத் தூக்கி
ஓமப்பா மூன்றுநாள் ஆறு நேரம்
கண்டாக்கால் சன்னிபதி மூன்றுந் தீரும்
ஆமப்பா திரிதோசம் முடக்கல் சூலை
தளர்வாதம் குடல்வாதம் தந்த வாதம்
வேமப்பா கரவாதம் அப்பிதமர் வாதம்
வெந்துபோம் கண்ணோசி கரப்பான் றானே! 396

பொ.ரை: வெள்ளுள்ளித் தைலத்தில் 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து மூன்று நாட்கள், காலை, மாலையாகக் கொள்ள பதிமூன்று வகைச் சன்னி குணமாகும். திரிதோடங்கள், முடக்கல் சூலை, தளர்வாதம், குடல்வாதம், பல்வாதம், கைவாதம், அப்பிதமர் வாதம், கண்ணில் நீர் வடிதல், கரப்பான் ஆகிய நோய்கள் தீரும்.

காணப்பா இன்னமொரு அனுபா னத்தை
காணுயுள்ளி சுக்கோடு மிளகு நேராய்
ஊணப்பா யிவைவெதுப்பித் தூளா யாட்டி
முருங்கைத்தோல் நீருடனே லோகம் சேர்த்து
ஊணப்பா யிருநேரம் மண்டலந்தா னுண்ண
யொழிகிற வியாதிதன்னை யுற்றுக் கேளே
வேணப்பா முகவாதம் சன்னி வாத
மென்பதாம் பக்கமோடு வாதம் போமே! 397

பொ.ரை: உள்ளி, சுக்கு, மிளகு, இவற்றைச் சம அளவெடுத்து இளவறுவலாய், வெதுப்பிப் பொடித்து முருங்கைப் பட்டைச் சாறுடன் சேர்த்தரைத்து காலை, மாலை இருநேரமும் நாற்பது நாட்கள் உள்ளுக்கு வழங்க முகவாதம், சன்னிவாதம், பக்கவாதம் தீரும்.

வாதமென்ற தெண்பதுக்கு மாட்டந் தீரும்
மகத்தான செந்தூரம் பணந்தான் வீதம்
சீதமென்ற நிலவாகைச் சாற்றி னுள்ளே
தினம்பத்து தான்கொடுக்க செயலைக் கேளு
சேதமென்ற விப்புருதி கெர்ப்பவிப் புருதிபோகும்
கெடியான கலவிப் புருதியுங் கூட

காதையென்ற வாதை உள்மாந்தை சுரமாந்தைக்
கடியபக்க வாய்வுமண்ட வாய்வும் போமே! 398

பொ.ரை: எண்பது வகை வாதங்கள் தீருவதற்கான அனுபானம் வருமாறு. நிலவாகைச் சாற்றில் 488 மி.கி. செந் தூரத்தைக் கலந்து கொடுக்க விப்புருதி, கெர்ப்ப விப்புருதி, கல விப்புருதி, வாதை, உளைமாந்தை, சுரமாந்தை, பக்க வாய்வு, அண்ட வாய்வு ஆகிய நோய்கள் தீரும்.

வாய்வென்ற குடல்வாதம் பதினெண் சூலை
மகத்தான செந்தூரத் தாலே போகும்
வாய்வுறு சங்கமென்ற செந்தூரப் போக்கை
வகைவகையாய்ச் சொல்லுகிறேன் மக்காள் கேளு
வாய்வுறு வங்கமுண்டால் தங்க மாகும்
வாக்கடங்கா மனத்தடங்கா வங்க வித்தை
வாய்வுறுந் திடக்கேளு வங்க மல்லோ
வாதிகளையேச்சு மகத்துவமாஞ் சஞ்சீவியாகும் பாரே! 399

பொ.ரை: குடல்வாதம், பதினெண் வகைச்சூலையும், இரசபல நாராயண செந்தூரத்தால் தீரும். வங்கத்தினால், செய்யப்படும் செந்தூரத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக! வங்கத்தினாலான பற்பம் அல்லது செந்தூரத்தை உட்கொள்ள உடல் தங்கமாகும். வாக்குக்கும் மனத்திற்கும் அடங்காத வங்கவித்தை மருத்துவத்திற்கு மிகுந்த பயனளிக்கும் சஞ் சீவியாகும்.

வங்கச் செந்தூரம்

வாரான வங்கமப்பா பலந்தான் பத்து
மைந்தனே சுத்திசெய்து மாட்டக் கேளு
வீரான வெடியுப்பு பலந்தா னொன்று
விபரமுடன் சட்டிக்குள் வங்கம் வைத்து
தாரான வெடியுப்பு கூட விட்டு
சாதகமாய் வறுத்திடவும் தவிடு போலாம்
பேரான ஆவரைவேர் வட்டத் துத்தி
பெருவேருந் தரித்திட்டு செவக்க மாட்டே! 400

பொ.ரை: 350 கி வங்கத்தைச் சுத்தி செய்தெடுக்கவும். 35 கி வெடியுப்பை எடுக்கவும். சட்டிக்குள் வங்கத்தை வைத்து வெடியுப்பையும் உடனிட்டு பக்குவமாய் வறுத்துவிட தவிடுபோன்றாகிவிடும். ஆவாரை வேர், வட்டத்துத்திவேர், பெருவேர் இவற்றையும் இணைத்து வறுக்க சிவக்கும்.

செவப்பேது செந்தூரம் முருக்கம்பூப் போலானால்
தேவிக்கும் வயிரவற்கும் மந்திரித்துச் செய்து
உவப்பேது செந்தூரம் எடுத்துக் கொண்டு
வூட்டுகிற அனுபானம் உற்றுக் கேளு
தவப்பேது சீரகமும் சீனி கூட்டி
சகம்பாக செந்தூரம் அரைப்பணந்தான் வீதம்
நவப்பேது வெண்ணெயிலே குழைத்துக் கொண்டு
நயமாக இருபதுநா ளுண்ணச் சொல்லே! 401

பொ.ரை: முருக்கம்பூவின் நிறமொத்த செந்தூரத்தைப் பூசைக்கு வைத்து தேவிக்கும் வயிரவர்க்கும் மந்திரங்களைக் கூறி எடுத்து வைக்கவும். சீரகத்தையும் சர்க்கரையையும் சேர்த்து 244 மி.கி. செந்தூரத்தைத்தக்க வெண்ணெயுடன் கலந்து இருபது நாட்களுண்ணவும்.

உண்டவுடன் கிரீச்சனமும் தசையடைப்பும் போகும்
உஷ்ணம்போம் கல்லடைப்பு வழலை தீரும்
கண்டவுடன் மூர்ச்சைபோம் எலும்பு ருக்கி
காணாத உள்ளுருக்கி பனிரெண்டு வகையும்
கொண்டவுடன் முகவெரிவுங் கையெரிவு மிக்க
குடலெரிவுங் காலெரிவுந் தாக மூர்ச்சை
கொண்டவுடன் சுக்கிலமும் சுரோணிதமும் போகும்
கோபமில்லை யின்னமதிற் கூட்டக் கேளே! 402

பொ.ரை: கிரீச்சனம், தசையடைப்பு, வெப்பம், கல்லடைப்பு, வழலை, மூர்ச்சை, எலும்புருக்கி, உள்ளுருக்கி பன்னிரெண்டு வகை, முகவெரிவு, கையெரிவு, குடலெரிவு, காலெரிவு,தாகமூர்ச்சை ஆகிய நோய்கள் தீரும். சுக்கிலமும் சுரோணிதமும் வலுப்பெறும்.

கேள்மகனே புலத்தியனே மச்ச கேந்திரா
கெட்டியாய்ச் சொல்லுகிறோம் வங்கப் போக்கை
வாள்மகனே இஞ்சிச்சாற் தெளிவு வாங்கி
வரைப்பணந்தான் வீதமுங் கெந்திமூன்று கொள்ளு
ஆள்மகனே சுரதோச மென்பதுந்தான் மீளும்
உற்றுக்கே எஷ்டசூ ரணமுஞ் சேர்த்து
தோள்மகனே செந்தூரம் காந்தம் வங்கம்
தூக்கிரண்டு ஒருபணந்தான் தேனுங் கூட்டே! 403

பொ.ரை: புலத்தியனே! மச்சகேந்திரா! வங்கப் போக்கைக் கூறுகிறேன்! இஞ்சிச்சாற்றினைப் பிழிந்து 244 *மி.கி.* செந்தூரத்தைக் கலந்து கொள்ளவும். அத்துடன் 1½ கி சுத்தி செய்த கெந்தகத்தையும் சேர்த்துக் கொடுக்க சுரதோசங்கள் தீரும். அட்டசூரணத்துடன் சேர்த்து காந்த வங்க செந்தூரங்கள் வகைக்கு 488 *மி.கி.* முடன் தேனைக் கலந்து கொடுக்கவும்.

கூட்டியே பத்து நாள் தின்னத்தின்ன
கூறுகிறேன் நாலுவகை கிராணியதி சாரம்
தீட்டியே அதிசாரம் நீங்கு ....
திறமான பின்னை ....
நாட்டியே சீயக்கிராணி மூலமுளை யப்பா
நயமான கீழகர் மங்கள் போமே! 404

பொ.ரை: அவ்வாறே பத்து நாட்கள் உட்கொள்ள நான்கு வகைக் கிராணி, அதிசாரம் தீரும். சீழ்கிராணி, மூலமுளை, முன்வினையால் நிகழ்ந்த நோய்கள் துன்பங்கள் தீரும்.

உரையேது காந்தமொடு லோகமது விரண்டும்
உத்தமனே யிரண்டுபண வெடைதான் தூக்கு
வரையேது வங்கமெங்கே யரைப்பணந்தான் தூக்கு
மைந்தனே திரிகடுகு தேனுங் கூட்டி
நிரையேது முப்பதுநாள் தின்னக் கேளு
நீர்ப்பாண்டு காமாலை சோகை தானும்
நிரையேது நீர்ப்பித்தம் வீக்க மோடு
நேராக விஷபாக மனைத்தும் போமே! 405

பொ.ரை: காந்தம், இரும்பு, இவையிரண்டின் செந்தூரம் வகைக்கு 976 மி.கி. வங்கசெந்தூரம் 244 மி.கி. எடுத்து திரிகடுகு சூரணத்துடன் கலந்து முப்பது நாட்கள் கொடுக்கவும். நீர்ப்பாண்டு, காமாலை, சோகை, நீர்ப்பித்தம், வீக்கம், விடபாகம் அனைத்தும் குணமாகும்.

போமப்பா பயித்தியமும் பாண்டு சோகை
பொருமலோடு மேலிளைப்பு உப்பிசமு மீளை
வேமப்பா விஷபாக மெலிக்கடியுங் காசம்
மென்மாந்த காசமோடு காச சுவாசம்
நீமப்பா உள்மாந்தை சுரமாந்தை சகல
நீர்க்கடுப்பும் பீனசமும் நீராய்ப் போகும்
நாமப்பா யிதுவெல்லாம் நன்றாய்க் கண்டோம்
நாட்டிலுள்ள பெரியோர்கள் நடத்தை யாமே! 406

பொ.ரை: பித்தம், பாண்டு, சோகை, பொருமல், மேலிளைப்பு, உப்பிசம், ஈளை, விடபாகம், எலிக்கடி, மாந்தகாசம், காச சுவாசம், உளைமாந்தை, சுரமாந்தை, அனைத்து வகை நீர்க்கடுப்பு, பீனசம் அனைத்தும் இம்மருந்தால் தீரும்.

வங்கச் செந்தூரம் (வேறு)

நடத்தையா யின்னமொரு வங்கம் சொல்வோம்
நயமாக அயம்பலந்தா னஞ்சு
நிடத்தையாய் கோமயத்தில் பத்தி ரண்டு
நீயுருக்கி சாய்த்திடுவாய் வங்கம் போகும்
துடத்தையாய் சட்டிக்குள் வங்கம் வைத்து
துப்புரவாய் சிறுகீரை கற்றாழம் வேரு
திடைத்தியா யிருவேரும் நொறுக்கி வாங்கி
செப்பிறேன் வெடியுப்பு பலந்தா னஞ்சே! 407

பொ.ரை: மற்றமொரு வங்கத்தைக் கூறுவோம். 175 கி அயத்தைக் கோமியத்தில் இருபது முறை உருக்கிச் சாய்த்திட வங்கம் சுத்தியாகும். சட்டிக்குள் வங்கத்தை வைத்து சிறுகீரை, கற்றாழை இரண்டின் வேர்களையும் இடித்து உடனிடுக. 175 கி வெடியுப்பையும் சேர்க்க.

அஞ்சினிட வேர்வகையுங் கூட விட்டு
அப்பனே தினமாகக் கிண்டு கிண்டு
துஞ்சுடனே வங்கமது செந்தூர மாகும்
சோதிநிறம் போலிருக்கும் சூட்டக் கேளு
உஞ்சுடனே சலம்விட்டு கழுவி நன்றாய்
உப்புவரக் கழுவியதை யெடுத்துக் கொண்டு
பஞ்சுடனே பாரம்வைத்தாப் போலே மக்காள்
பாய்ச்சுநீ யரைப்பணந்தான் செந்தூரம் கேளே! 408

பொ.ரை: ஏற்றிய அடுப்பிலிட்டு ஒரு நாள் முழுதும் கிளறவும். வங்கமது மற்ற பொருட்களுடன் கூடி வினை புரிந்து செந்தூரமாக மாறும். சோதியின் நிறம் போன்று சிவப்பாகி யிருக்கும். மேலே படிந்து நிற்கும் உப்பினைக் கழுவி 244 மி.கி. அளவு எடுக்கவும்.

கேளப்பா தேனதிலே யிருபதுநா ளுண்ண
கெடியாக அஷ்டகுன்ம மெட்டும் போகும்
நீளப்பா பதினெட்டு குட்டம் தீரும்
நிலையாக குறைநோவு செவ்வண்டு கடியும்
நாளப்பா சில்விசங்க ளெல்லாம் போகும்
நலமான பாசமருங் கெர்ப்ப முண்டாம்
ஆளப்பா பிள்ளைபெற்ற சீகட்டு கிராணி
வயிற்றுவலி வெப்புமுத லெல்லாம் போமே! 409

பொ.ரை: இச்செந்தூரத்தைத் தேனில் கலந்து இருபது நாட்கள் உட்கொள்ள எட்டு வகைக் குன்மம், பதினெட்டு வகைக் குட்டம், செவ்வண்டு கடி, சில்வகை விடங்கள் தீரும். குழந்தை பிறப்புண்டாகும். குழந்தை பிறப்பிற்குப் பின் ஏற்படும் சீழ்கட்டு, கிராணி, வயிற்றுவலி, வெப்பு ஆகிய நோய்கள் தீரும்.

காரீயச்செந்தூரம்

போமப்பா நோய்க ளெல்லாம்தூ ளாக
பூட்டுகிறேன் மாதரச வங்கந் தன்னை
வாகுமப்பா காரீயம் பலந்தா னஞ்சு
அப்பனே கோமியத்தில் பத்துவிசை யுருக்கிச்சாய்த்து

....
பம்பான புதுசட்டிக் குள்ளே வைத்து
வேகுமப்பா வெடியுப்பு படிதான் ரெண்டு
விரவியிட வறுத்திட்டுப் பின்பு கேளே! 410

பொ.ரை: வங்கம், காரீயத்தை வகைக்கு 175 கி எடுத்து பத்து முறை உருக்கிச் சாய்க்கவும். சுத்தியான பிறகு புதுசட்டிக்குள் வைத்து உடன் 2.6 கி.கி. வெடியுப்பையிட்டுக் கலந்து வறுத்துக் கொள்ளவும்.

கேளுநீதான் புலத்தியனே மச்ச கேந்திரா
கெடியான அரசன்தோல் சிவந்த பட்டை
கேள்மகனே சிறுகவதை நறுக்கி யிட்டு
கெட்டியால் வறுத்திடுவாய் சிவக்க மட்டும்
கேள்மகனே செந்தூரஞ் சீலையிலே கட்டி
கெட்டியாய் ஒத்திவொத்தி யுப்பைப் பொத்தி
கேளுநீ அதின்பெருமை ஏதென் றாக்கால்
கெட்டிமாதர் ரசவங்க செந்தூர மாமே! 411

பொ.ரை: புலத்தியனே, மச்சகேந்திரா, யான்கூறுவதைக் கேட்பாயாக, அரச மரப்பட்டையைச் சிறு துண்டுகளாக வெட்டி ஏற்றிய அடுப்பிலிட்டுச் சிவக்குமளவுக்கு வறுத்துச் சீலையில் உள்ளே வைத்துக்கட்டவும். மேற்படிந்துள்ள உப்பைப் பொத்தி எடுக்கவும். இரச வங்கச்செந்தூரமாகும்.

ஆமப்பா செந்தூரம் யுண்ணு தற்கு
அனுபானந்தான் சொல்லக் கேட்டுக் கொள்ளு
ஓமப்பா ஆவரையைச் சமூலம் வாங்கி
யுலர்த்திநன்றாய்ச் சூரணித்து அத்தோ டொக்க
வேமப்பா சீந்தியுட சர்க்கரையும் சேர்த்து
மேலான சீனியோடு தேனுங் கூட்டி
போமப்பா விருநேரம் நாற்பதுநா ளுண்ண
பொல்லாத மேகமென்ற நீரிழிவு தானே! 412

பொ.ரை: இரசவங்கத்திற்கான அனுபானம் வருமாறு. ஆவாரைச் சமூலத்தை எடுத்துலர்த்தி நன்கு பொடித்துச் சூரண மாக்கி சீந்தில் சர்க்கரையையும் சீனி சர்க்கரையையும் அதே

அளவு சேர்த்து தேனைக்கலந்து நாற்பது நாட்கள், காலை, மாலை உட்கொள்ள மேகமாகிய நீரிழிவு குணமாகும்.

நீரிழிவு மதுமேகம் காண மேகம்
நிலையான அஷத்திவொரு சுரசுரோ ணிதமும்
நீரிழிவு கல்லடைப்பு கிரீச்சனங்கள் பாளை
நிலையாத பிரமேக மிந்திரியக் கட்டி
நீரிழிவு சடைப்பான சோம ரோகம்
நில்லாத கடுப்புமுதல் உஷ்ண ரோகம்
நீரிழிவு யெலும் புருக்கி யெரிவு
நீர்ப்பாளை இந்திரியக்கட்டி யுழலை தானே! 413

பொ.ரை: நீரிழிவு, மதுமேகம், சுரசுரோணிதம், கல்லடைப்பு, கிரீச்சனவகைகள், பிரமேகம், இந்திரியக்கட்டி, சோம நோய், கடுப்பு, வெப்பநோய், எலும்புருக்கி, எரிவு, நீர்ப்பாளை, இந்திரியக் கட்டியாலேற்படும் உழலை ஆகிய நோய்கள் தீரும்.

தானென்ற யுழலையொடு தாகம் சோபம்
சாதகமா யுள்சுரமு யுடம்பெரிவு நோவு
வானென்ற புழுவெரிப்பு பஞுபாக சறசுரமு
மணியுந்தாக கொதிப்புமிவை யெல்லாம் கேளு
கானென்ற தீயிலிட்ட திறணம் போலே
காட்டுமுன்னே பற்பமாங் காணு மக்கா
ஆனென்ற யித்துடனே ரசசெந் தூரம்
உத்தமனே சாந்தசெந் தூரந் தானே! 414

பொ.ரை: உழலை, தாகம், சோபை, உள்சுரம், உடம்பெரிவு, வலி, கொதிப்பு, புழுவரிப்பு, சுரங்கள், தாகம் அதிகமாதல் ஆகியவை தீர்வதற்கு இரச செந்தூரத்தையும் வங்க செந்தூரத்தையும் சரியான பக்குவத்தில் பயன்படுத்திக் கொள்ளவும்.

நாகசித்திர காரீயச்செந்தூரம்

பாரப்பா நாகசித்திர காரீயச் செந்தூரம்
பாடுகிறேன் காரீயம் பலந்தான் பத்து
நேரப்பா தூக்கியே எடுத்துக் கொண்டு
நிலையாத கோகுல கோமியமும் ஒன்றாய்

சேரப்பா ஒன்றாக்கி அதுக்குள் வங்கம்
சிறக்கவே சாய்த்திடுநீ பத்துரண்டு வாட்டி
பேரப்பா புதுச்சட்டிக் குள்ளே போட்டு
புரட்டினதும் வெடியுப்பு ரெண்டுநாள் போடே! 415

பொ.ரை: நாகசித்திர காரீய செந்தூரம், செய்முறை வருமாறு. 350 கி காரீயத்தையும் கோமியத்தையும் சட்டியிலிட்டு ஒன்று சேர்த்துக் கொள்ளவும். அதில் வங்கத்தினை இருபது முறை உருக்கிச்சாய்க்கவும். பின் எடுத்துப் புதுச் சட்டிக்குள் வைத்து 675 மி.கி. வெடியுப்பை உடனிட்டு இரண்டு நாள் அனலில் வறுக்கவும்.

உப்பேது அரைப்படிதா னப்பா நீயும்
ஊட்டுவாய் சிவந்தநா யுருவி கொண்டு
கொப்பேது துண்டுதுண்டாய் நறுக்கிக் கொண்டு
குறுகாமல் சிறுசாவிட்டு சிவக்க மட்டும்
தப்பேது முருக்கமது போலே ஆகும்
சாதகமாய் தேவியிட வாம பூசை
எப்போது செய்துவர முறைவி டாமல்
என்மக்கள் அனுப்பானம் இயம்பி றேனே! 416

பொ.ரை: செந்நாயுருவியைச் சிறிது சிறிதாக நறுக்கி உடன் சேர்த்து சிவப்பாகும் அளவுக்கு வறுக்கவும். முருக்கம்பூ போல் சிவப்பாகும். செந்தூரமானதை இறைவியின் முன் வைத்துப் பூசை செய்து தக்க அனுபானங்களுடன் கொடுக்க நலமாகும்.

நீரிழிவுக்கு மருந்து

இயம்பக்கேள் வகைநீ நற்சீரகம் வெங்கார
மேலமொடு கஸ்தூரி மஞ்சள் சுக்கு
இயம்புகிறேன் வாய்விளங்கம் மலவேம்பின் பிசினும்
என்மக்களொரு பலந்தான் நிறுத்துக் கொண்டு
இயம்புறேன் ஆவிரையின் விரைதா னப்பா
யெண்ணஞ்சு நாற்பது பலந்தான் தூக்கே! 416

பொ.ரை: நற்சீரகம், வெங்காரம், ஏலம், கஸ்தூரி மஞ் சள், சுக்கு, வாய்விடங்கம், மலைவேம்பின் பிசின் இவற்றை

வகைக்கு 35 கி எடுத்துக் கொள்ளவும். ஆவாரை விதையை 1400 கி எடுக்கவும்.

தூக்கப்பா முருங்கைவிதை சமுத்திராப் பழமும்
சூட்டுநீ சீந்தியினிட கிழங்குங் கூட
தூக்கப்பா நிலப்பனைக் கிழங்கு தானும்
துகையேது ஒவ்வொன்று பலந்தான் பத்து
தூக்கப்பா அபினியோர் பலந்தான் அஞ்சு
சுகமான கூவிளத் தந்த வண்ணம்
தூக்கப்பா தாமரைவிரை அந்த வண்ணம்
சொல்லுகிறேன் பிரமிவித்து அவ்வண்ணந் தானே! 417

பொ.ரை: முருங்கை விதை, சமுத்திராப்பழம், சீந்தில்கிழங்கு, நிலப்பனங் கிழங்கு, இவற்றை வகைக்கு 350 கி எடுக்க. அபினி, கூவிளம், தாமரை விதை, பிரமி விதை வகைக்கு 175 கி எடுக்கவும்.

காணவே இதுவெல்லாம் தேற்றாதாங்காய்ப் பாலால்
களறவே ஆட்டியதைத் தூளாய் வாங்கி
பூணவே வெருகடிநீர் அந்தத் தூளில்
புகழவே வெருகடிதான் பின்னுங் கேளே
தோணவே பலம்பத்து சீனியுட உப்பு
தூக்கியிடு முன்சேர்ந்த சூரணத்தில் கூட
ஊணவே வெருகடியில் சீனி சேர்த்தி
உண்ணையிலே குளுமைகண்டால் தேனுங் கூட்டே! 418

பொ.ரை: மேற்கூறிய சரக்குகளுடன் தேற்றங்காய் சாறூற்றிக் கல்வத்திலிட்டு மைபோலரைத்துக் கொள்ளவும். அதில் மூவிரலளவெடுத்து 350 கி சர்க்கரைத்தூளைச் சேர்த்துக் கொள்ளவும். குளுமையான தன்மை அதிகமானால் தேனைச்சேர்க்கவும்.

தேன்கூட்டு சூடானால் வெண்ணெய் கூட்டு
திறமாக யிருநேரம் மண்டலந்தான் உண்ணு
தேன்கூட்டு நீரிழிவு பதினாறு வகையுந்
தீராத சுக்கிலமாம் மூத்திரப் பாளை
தேன்கூட்டு ரத்தங்கட்டி செகற கிராணி
சிக்கியெறா தொந்திப்பு சிதறிப் போகும்

தேன்கூட்டு மேகமென்ற தனைத்தும் போகும்
செந்தூரம் அறிந்தாக்கால் சிறுமை போமே! 419

பொ.ரை: தேனைக்கூட்டிய பிறகு, வெப்பம், உடலுக்கு ஏற்பட்ட தென்றால் அவ்வெப்பத்தினைக் குறைக்க வெண்ணெயைச் சேர்த்தல் நலம் பயக்கும். நாற்பது நாட்கள் காலை, மாலை உட்கொள்ள பதினாறு வகை நீரிழிவு, சுக்கிலம், மூத்திரப்பாளை, இரத்தக்கட்டி, தொந்திப்பு ஆகிய நோய்கள் நீங்கும். மேக வகைகள் குணமாகும்.

நாகசெந்தூரம்

சிறுமையென்ன வங்கம்விட்டு நாகந் தன்னை
செந்தூரம் செய்யுகிற திறத்தைக் கேளு
சிறுமையென்ன சீராமல் புகைந் திடாமல்
சீருடனே யிலுப்பைநெய் விட்டுருக்கிச் சாய்த்து
சிறுமையென்ன திரும்பவதை வெண்ணெய் தேய்த்து
சிறப்பாக யிலுப்பைநெய் விட்டு ருக்கி
சிறுமையென்ன வெள்ளாட்டுப் பாலி லப்பா
திறமாக பத்துரண்டு தினந்தான் செய்யே! 420

பொ.ரை: வங்கத்திற்கு அடுத்து நாகத்தினால் செந்தூரம் செய்யும் முறை வருமாறு. நாகத்தை ஒரு சட்டியிலிட்டு இலுப்பை நெய் ஊற்றி உருக்கிச் சாய்த்துக் கொள்ளவும். மீண்டும் வெண்ணெய் விட்டு தேய்த்து இலுப்பை நெய்யையும் ஊற்றி உருக்கிக் கொள்ளவும். வெள்ளாட்டுப் பாலில் இருபது முறை ஊற்றி உருக்கிச் சாய்க்கவும்.

சாய்த்தபின்பு திரும்பவதைச் சட்டிக்குள் ளிட்டு
சாதகமாய் வெடியுப்பு சமபாகஞ் செய்து
சேர்த்திரண்டு மிப்படியே பொடித்துக் கொண்டு
சிறுகவதை வறுத்துத் தூவியே வறுப்பாயப்பா
தேய்த்தபின்பு சிவந்த நாயுருவி கொண்டு
சுருக்காக நொறுக்கியிட்டு வறுக்க நன்றாய்
பார்த்தபின்பு செந்தூர மாகும் பாரே
பாளைப்பூப் போலிருக்கும் பருவங் காணே! 421

பொ.ரை: சாய்த்த பின்பு அதைச் சட்டியினுள் இடவும். வெடியுப்பினைச் சம அளவு சேர்க்கவும். வெதுப்பான இள அனலில் இலேசாக வறுத்துப் பொடித்துக் கொள்ளவும். சட்டியிலிட்ட இதனுடன் செந்நாயுருவியைத் துண்டுகளாக இட்டு வறுக்க செந்தூரமாகும். பாளைப்பூ போன்ற வண்ணத்துடன் விளங்கும்.

பாளைப்பூப் போற்சிவந்த செந்தூ ரத்தை
பாய்ச்சுதற்கு அனுபானம் பரிந்து கேளு
கறனைப்பூத் திரிகடுகு வறுத்த தூளில்
கட்டியே தேனோடு குழப்பிக் கொண்டு
வேளைப்பூ செந்தூரம் பணந்தான் தூக்கி
என்மக்கா யிருநேரம் நாற்பதுநாள் உண்ண
வீளைப்பூ சிலேற்பனத்தில் மந்தார காசம்
ஈளைமுதல் எலிக்கடியும் சுவாசம் போமே! 422

பொ.ரை: செந்தூரத்திற்கான அனுபானம் வருமாறு. கரணைப் பூ, திரிகடுகு சூரணத்தில் 488 மி.கி. செந்தூரத்தையும். தேனையும் கலந்து குழப்பி நாற்பது நாட்கள் காலை, மாலை இரண்டு நேரமும் உட்கொள்ள சிலேற்பனத்தில் மந்தாரகாசம், ஈளை, எலிக்கடி, சுவாசம் தீரும்.

போமப்பா சுரகாசம் சுவாச காசம்
புகழான வரிகுரலும் நெஞ்சு நோவும்
வேமப்பா பிரமேகம் அஷ்தி மேகம்
வெடிசூலை கடிவிசமும் வெப்புப் பார்வை
ஓமப்பா யிவைதீரு மிந்திர கண்டி
உத்தமனே கல்ல டைப்பு தானும்
வாமப்பா நாகத்தா லெல்லாந் தீரும்
மைந்தனே ஆவரையைத் தயிலம் வாங்கே! 423

பொ.ரை: சுரகாசம், சுவாசகாசம், நெஞ்சுவலி, பிரமேகம், எலும்புமேகம், வெடிசூலை, கடிவிடம், வெப்புப்பார்வை ஆகிய நோய்கள் தீரும். இந்திரகண்டி, கல்லடைப்பு ஆகியவையும் நாக செந்தூரத்தால் தீரும். ஆவாரைத் தயிலத்தை எடுக்கவும்.

தயிலத்தி லோர்பணந்தான் செந்தூரம் விட்டு
சாப்பிடவே நாற்பதுநாள் சலக்க ழிச்சல்
முளைபயிலுற்ற கிரீச்சனங் ளெலும்புருக்கி யிதுவும்
பாடகமேக முள்ளுருக்கி கபாலச் சூலை
பயிலுற்ற முறைமைபோல் வெளியைக் கண்டால்
மாண்டுபோ மின்னமொரு வரிசை கேளு
வெயிலுற்ற சித்திரமூலத் தூளில் காட்டுநீ
வெருகடியில் நீதேனுஞ் சேர்த்தி சேரே! 424

பொ.ரை: 488 மி.கி. செந்தூரத்தை ஆவாரைத் தைலத்தில் கலந்து உட்கொள்ளவும். நாற்பது நாட்கள் அவ்வாறு தொடர சலக்கழிச்சல், கிரீச்சனங்கள், எலும்புருக்கி, உள்ளுருக்கி, கபாலச்சூலை ஆகிய நோய்கள் குணமாகும். மற்றுமொன்றைக் கேட்பாயாக. சித்திரமூலம் எனும் கொடிவேலித் தூளில் மூவிரலளவெடுத்துத் தேனைக் கலக்கவும்.

சேர்த்ததொரு செந்தூரம் பணவி டைதான்
திறமாக யிருநேரம் நாற்பதுநா ளுண்ண
சேர்ந்ததொரு வலிகுன்மம் சத்தி குன்மம்
செய்யாம்பல் வாதமோ வாளை வாய்வு
சேர்ந்ததொரு யிவைபோகு மின்னங் கேளு
திறமான பேய்ப்பீர்க்கு தயிலத் தோடு
சேர்ந்ததொரு செந்தூரம் பணந்தா னிட்டு
திறமாகத் தண்டிலிட்டு லேவிப் பாயே! 425

பொ.ரை: 488 மி.கி. நாக செந்தூரத்தை அதில் கலந்து நாற்பது நாட்கள் காலை, மாலை உட்கொள்ள வலி குன்மம், சத்திகுன்மம், ஆமில வாதம், வாளை வாய்வு, நீங்கும். பேய்ப் பீர்க்கு தைலத்தில் 488 மி.கி. செந்தூரத்தைக் கலந்து ஆணுறுப்பில் தடவி விடவும்.

லேபித்துப் புணர்ந்திடவே கெர்ப்பச் சூலை
நேராக முண்ணும் புழுவுஞ் சாகும்
லேபித்துப் புணர்ந்திடவே கெர்ப்ப ரோகம்
நிவர்த்தியா மிப்படிதான் மூன்றுநாள் தானே
லேபித்து மூலமுளை கழன்று போகும்
நிலையான பவுத்திரங்கள் கிழங்கும் வீழும்

லேபித்து ஆசனத்தில் தடவ மக்காள்
நிலைகெடுமே பவுத்திரமும் மூலமுளை தானே! 426

பொ.ரை: தடவியபின் புணர்ந்திட கெர்ப்பச்சூலை தீரும். கெர்ப்பப் புழு இறக்கும். மேல்பூச்சாக இத்தைலம் பூசிபுணர கெர்ப்ப நோய்கள் நீங்கும். மூல நோயில் முளை எழும்பி யிருக்குமிடத்தில் மேற்பூச்சாகப் பூச அம்முளை கழன்றுவிடும் ஆசனத்தில் தடவ பவுத்திரங்களின் மூலவேர்கள் அற்று விடும்.

பூரணசந்திரோதயம்

தானென்ற நாகத்தில் வேதை யாகும்
சாதகமாம் பூரணச் சந்திரனைக் கேளு
வானென்ற சூதமோடு கெந்தி சீனம்
மகத்தான வெங்காரம் நாவி சங்கு
வேனென்ற மனோசிலையும் பவளப் புற்று
மீறாமல் சமபாகம் கல்வத் திட்டு
பானென்ற பழச்சாற்றில் ஒருநா ளாட்டுப்
பக்குவமாங் குமரிச்சாற் மறுநா ளாட்டே! 427

பொ.ரை: நாகத்தில் வேதையாகும் பூரணசந்திரனின் செய்முறையைக் கேட்பாயாக,. இரசம், கெந்தகம், சீனம், வெங்காரம்,நாவி, சங்கு, மனோசிலை, பவளப்புற்று ஆகிய வற்றைச் சமமாக எடுத்துக் கல்வத்திலிடவும். எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு நாளும் கற்றாழைச் சாற்றால் மறு நாளும் அரைக்கவும்.

ஆட்டியே வில்லைதட்டி கற்கத் திட்டு
அப்பனே மேல்கற்கங் கொண்டு மூடி
நாட்டியே சீலைசெய்து மண்ணும் பூசி
நயமாக அடுப்பேற்றி முத்தீ கொண்டு
நீட்டியே நாளொன்று மெரித்து வாங்கி
நினவாக திரும்பவதைக் கல்வத்தி லிட்டும்
மூட்டியே தங்கமொன்று லிங்க மொன்று
முறையோடே நினவாகப் பொன்கழஞ்சு கூட்டே! 428

பொ.ரை: விழுதை வில்லைகளாகத்தட்டி கல்வத்தில் இட்டு மற்றொரு கல்வம் கொண்டு மேலே மூடவும். இரண்டு

கல்வங்களை இணைக்கும் வண்ணம் சீலை மண் செய்து அடுப்பில் வைக்கவும். ஒரு விறகு, இரு விறகு, மூன்று விறகு, (தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி) கொண்டு எரித்து ஆற விட்டெடுக்கவும். பிறகு அதைக் கல்வத்திலிட்டு தங்கம், இலிங்கம்,

கூட்டிடுவாய் வெள்ளியொன்று கழஞ்சி தானும்
குறை பவள மிப்படியே யாகும்
தீட்டியே யுத்திராட்ச முத்து தானும்
திறமான அக்கிரா காரம் தானும்
மூட்டுவா யிவையெல்லாம் கழஞ்சி யொன்று
உத்தமனே முலைப்பாலாற் றினந்தா னொன்று
ஆட்டுவாய் மாதுளம்பூச் சாற்றி லொன்று
அப்படியே துளசிச்சார் தினந்தான் மூன்றே! 429

பொ.ரை: வெள்ளி, பவளம், உருத்திராட்சம், முத்து, அக்கிராகாரம், இவற்றையும் வகைக்கு 5 கி எடுத்துத் தாய்ப் பாலினை ஊற்றி ஒரு நாளும் மாதுளம்பூ சாற்றினை ஊற்றி ஒரு நாளும் துளசிச்சாற்றினால் மூன்று நாளும் அரைத்துக் கொள்ளவும்.

மூன்றுநா ளரைத்துவதைப் பின்பு கேளு
முன்வைத்த சந்திரனைக் கூட விட்டு
மூன்றுநா ளாட்டியதை சிறுவில்லை தட்டி
உத்தமனே நெற்குருதி னுள்ளே வைத்து
தோன்றுநா ளிருபதங்கே சென்ற தானால்
சேர்க்க சந்திரோதைய மஞ்சு சுருக்கி மெத்தப்
போனென்ற நாள்சன்னி தோசத் துக்கும்
பொல்லாத நோய்க்கெல்லாம் பூட்டு பூட்டே! 430

பொ.ரை: அரைத்த விழுதினுடன் அல்லிப்பூச் சாற்றினைச் சேர்த்து மூன்றுநாளரைத்துச் சிறுவில்லைகளாகத் தட்டி நெற்குருதின் உள்ளே வைக்கவும். இருபது நாட்கள் கழித்து எடுத்துப் பார்க்கவும். சந்திரோதயம் அங்கு தயாராகிச் சுருங்கி நிற்கும். சன்னிகளுக்கும் தோசத்துக்கும் பொல்லாத நோய்களுக்கும் ஏற்ற மருந்திது.

பூட்டப்பா சன்னிபோகும் தோசம் போகும்
புகழாக நீரழிவு ஈளைபோம்
தீட்டப்பா அரோசிப்பு சீலை தானும்
சீக்கட்டு மகோதரமும் கவுசை பாண்டு
ஆட்டப்பா முகவாதம் கழுத்து வாதம்
உஷ்ணமும் எலும்புருக்கி உழலை தாகம்
பூட்டப்பா பறந்துபோம் திக்கு கெட்டு
முறைமுறையாய் கோடிநோய் தீருந் தானே! 431

பொ.ரை: சன்னி, தோடம், நீரிழிவு, ஈளை, அரோசிகம், சீலை, மகோதரம், கவிசை, பாண்டு, முகவாதம், கழுத்துவாதம், வெப்பம், எலும்புருக்கி, உழலை, தாகம் போன்ற பல நோய்கள் பூரண சந்திரோதயத்தால் குணமாகும்.

வங்காரச் சஞ்சீவி

பாரப்பா வங்காரச் சஞ்சீவி யென்னும்
பண்பான அக்கினிக் குமாரி யென்றும்
நேரப்பா யிதின்பெருமை காண வென்றால்
நெட்டோட்டம் குட்டோட்டம் நோயை யுண்ணும்
தூரப்பா கோடிக்கி ஒன்று பத்து
சூத்திரத்தில் சேர்த்துவைத்தேன் சுருக்க மெல்லாம்
ஆரப்பா யின்னூலை நன்றாய்ப் பாரு
ஆகாத பாழ்வினை யெல்லாம் தூளே. 432

பொ.ரை: வங்காரச் சஞ்சீவி என்றும் அக்கினிக்குமாரி என்றும் அழைக்கப்படும் இக்குளிகைகள் பல நோய்களை நீக்கும் திறன் பெற்றது. கோடி சூத்திரத்தில் பத்து சூத்திரத்தைச் சுருக்கமாகக் கூறியுள்ளேன். பாழ்வினை அனைத்தும் தூளாய்ப் போய்விடும்.

தூளாகும் வியாதியெல்லாம் குமரி யாலே
சொல்லுகிறேன் அரைப்பொடிப்பு முருக்குச் செம்பு
வில்ளாகும் வெங்கலமும் மனோசிலைவெங் காரம்
மின்னலரி தாரமுடன் திப்பிலியும் நேராய்
கூளாகுங் குமரியினிட சாற்றை விட்டு
குமறவே மூன்றுநா ளாட்டி வாங்கி
சூளாகும் சட்டிக்குள் அதனை வைத்து
சுகமாக மேல்சட்டி கொண்டு மூடு! 433

பொ.ரை: குமரி எனும் கற்றாழைச்சாற்றாலே பல நோய்கள் குணமாகும். அரப்பொடி, உருக்குச்செம்பு, வெங்கலம், மனோசிலை, வெண்காரம், அரிதாரம், திப்பிலி ஆகியவற்றைச் சமமாக எடுத்துச் சோற்றுக் கற்றாழைச் சாற்றை ஊற்றி மூன்று நாட்கள் அரைக்கவும். அரைத்த விழுதைச் சட்டிக்குள் வைத்து மேலே வேறொரு சட்டியினை வைத்து மூடவும்.

மூடியே சீலைசெய்து மண்ணும் செய்து
முறையோடே அடுப்பேற்றி மூன்று நாள்தான்
தீயெரிக்க செந்தூர வண்ண மாகும்
நேராக யெடுத்ததனை வைத்துக் கொண்டு
ஊட்டியே நாவிவொரு பலந்தான் வெட்டி
உத்தமனே கோமியத்தில் அதனைப் போட்டு
நாடியே நாவிதனை எடுத்து மைந்தா
நாட்டுகிற மருந்துவகை அறிந்து கேளே! 434

பொ.ரை: சீலை மண் செய்து மூடி அடுப்பில் வைத்து மூன்று நாட்கள் எரிக்க செந்தூரமாகும். அதனையெடுத்து பத்திரப்படுத்தவும். 35 கி நாவியைக் கோமியத்தில் இட்டு சுத்தி செய்தபின் அதனுடன் சேர்க்கும் பிற மருந்துகளைக் கேட்பாயாக.

கேளப்பா திப்பிலியின் மூலம் தானும்
கெடியாக ரெண்டுபலம் அதனைத் தூக்கி
நீளப்பா வெள்ளுள்ளித் தயிலத்தி லிட்டு
நீயாட்டும் செந்தூரம் கூட விட்டு
நாளப்பா பணவெடையாய்க் குளிகை கட்டி
நயமாக நிழலுலர்த்திக் கொண்டு நீயும்
கேளப்பா குளிகைவொன்று வெள்ளுள்ளிச் சாற்றில்
கொண்டவுடன் பதின்மூன்று சன்னி போமே! 435

பொ.ரை: திப்பிலிமூலம் 70 கி எடுத்துப் பொடித்து வெள்ளுள்ளித் தைலத்தில் கலக்கவும். மேற்சொன்ன செந்தூரத்தையும் சேர்த்து அவ்விழுதை 488 மி.கி. எடையுள்ள குளிகைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். அதில் ஒரு குளிகையை எடுத்து வெள்ளைப்பூண்டு சாற்றில் இழைத்துக் கொடுக்க பதின்மூன்று வகைச்சன்னியும் குணமாகும்.

போகுமப்பா மாவிலிங்கஞ் சாற்றை வாங்கி
புகழாக அரைப்பணந்தான் செந்தூரம் சேர்த்தி
வாகுமப்பா யெட்டுநாள் கொள்ள வேதான்
வாதமென்ற தெண்பதும்போம் பதினெண் சூலை
வேகுமப்பா குன்மமோடு வாய்வு தானும்
வேர்த்துப்போம் வண்டுகடி செவ்வண்டுக் கடியும்
பாகுமப்பா கடிவிசங்கள் கபாலக் குட்டம்
பரவிநின்ற சிரங்குகுட்டம் தாமரைதான் போமே! 436

பொ.ரை: மாவிலிங்க சாற்றைப் பிழிந்து அதில் 244 மி.கி. செந்தூரத்தைக் கலந்து எட்டு நாட்கள் உட்கொள்ள எண்பது வகை வாதங்கள், பதினெண் வகைப்பட்ட சூலை, குன்மம், வாய்வு, வண்டுகடி, செவ்வண்டுக் கடி, கடிவிடங்கள், கபாலக் குட்டம், சிரங்கு, குட்டம், தாமரை ஆகிய நோய்கள் நீங்கும்.

கேளப்பா வெங்குட்டம் செங்குட்டம் கறுப்பு
கெடியான மேல்புள்ளி தாமரைகள் கூடா
கேளப்பா யிவைகளெல்லாம் கொழுந்தீ பற்றி
கும்மட்டிக்காய் சாற்றில் குமரி சேர்த்து
நாளப்பா ஒன்றுவிட்டு ஒருநாள் வீதம்
நாற்பதுநாள் தவறாது சேர்த்துக் கொள்ளில்
வேளப்பா வுதானத்தீ யுரைந்த ரோகம்
வேகுமப்பா வாய்வுமெல்லாம் வீழாம் பாரே! 437

பொ.ரை: வெங்குட்டம் செங்குட்டம், கறுப்பு புள்ளிகள், தாமரை இவை தீரும். கும்மட்டிக்காய் சாறு, சோற்றுக் கற்றாழைச்சாறு இவை கலந்த கலவையில் செந்தூரத்தைக் கலந்து ஒரு நாள் விட்டொருநாள் வீதம் நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள நாவியில் நிற்கும் உதானவாயு குற்றத்தால் விளைந்த நோய்கள், வாய்வு நோய்கள் தீரும்.

வீழாகும் விப்புருதி கவுசை வீக்கம்
மேலான மகோதரமும் கொர்ப்பச் சூலை
வீழாகும் சீயிகையும் பதினெண் குட்டம்
விம்மிவரும் பெருவயிறும் வீக்கம்
வீழாகும் நீராமை பதினான்கு பாண்டு
வீறுகொண்ட கெண்டைமுதல் அடிவயற் வீக்கம்

வீழாகும் அக்கினி குமாரி யென்றால்
வேடிக்கை மெத்தவுண்டு விரிக்கி றேனே! 438

பொ.ரை: விப்புருதி, கவிசை வீக்கம், மகோதரம், கெர்ப்பச் சூலை, பதினெண்வகைக் குட்டம், பெருவயிறு, வீக்கம், நீராமை, பதினான்கு வகைப்பாண்டு, கெண்டைவீக்கம் முதல் அடிவயிறு வீக்கம் ஆகிய நோய்கள் தீரும். அக்கினி குமாரி குளிகையின் செய்முறை வருமாறு.

அக்கினிக் குமாரி

விரிக்கிறேன் அக்கினிக் குமாரி யென்றுபேராம்
வல்லோர்கள் நல்லோர்கள் பரப்பில் மெத்த
தரிக்கிறேன் பலநூலில் என்னூல் நன்றாய்
தரித்தக்கால் சகலசித்து தானே யேதும்
தெரிக்கிறேன் தபோதரைக்குத் தெரியுறா வண்ணம்
தெய்வதீர்த்தி யோர்க்கெல்லாம் செப்பி றேனே! 439

பொ.ரை: அக்கினிக் குமாரி எனும் பொற்புடைய குளிகை பல நோய்களைத் தீர்க்கும். பலநூல்களைக் காட்டிலும் என் னூலில் நயம்பட பல சித்துகளைக் கூறியுள்ளேன். தெளிவுபட நவின்றுள்ளேன்.

செப்பிறேன் சூதமொன்று காந்த மொன்று
செகமரிய கெந்தியொன்று சிலைதா னொன்று
செப்பிறேன் செம்பொன்று லிங்க மொன்று
சரிசமனாய் வகையொன்று பலந்தான் பத்து
செப்பிறேன் பெருங்காயம் பலந்தா னஞ்சு
சிறந்த வெள்ளுள்ளியோர் பலந்தான் தூக்கு
செப்பிறேன் குமரிச்சாற் விட்டு ஒருநாள்
திரளவே மயனம்போ லாட்டி ஆட்டே! 440

பொ.ரை: இரசம், காந்தம், கெந்தகம், மனோசிலை, செம்பு, இலிங்கம் ஆகியவற்றை வகைக்கு 350 கி எடுக்கவும். 175 கி பெருங்காயம், 35 கி வெள்ளைப்பூண்டு, எடுத்துச் சோற்றுக் கற்றாழைச் சாற்றை ஊற்றி, ஒரு நாள் முழுதும் அரைத்து மைபோலாக்கவும்.

ஆட்டப்பா நாளொன்று சாம மொன்று
அப்பனே மூன்றுநாள் ஆட்டி வாங்கி
நீட்டப்பா குப்பியிலே அடைத்து வைத்து
நீதியால் வளப்பக்கல்லால் கொண்டு மூடி
மூட்டப்பா ஒட்டுப்பிற குப்பிதன்னை வைத்து
முத்தீயும் மூன்றுநாள் யெரித்து வாங்கு
ஊட்டப்பா வடுகனுக்கும் நிர்வா ணிக்கும்
ஊட்டியே ஆறவிட்டு எடுத்துக் கொள்ளே! 441

பொ.ரை: ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் வீதம் மூன்று நாள் அரைத்துக் குப்பியிலே இட்டு அடைக்கவும். குப்பியின் வாயை வளப்பக்கல்லினை வைத்து மூடவும். மற்றொரு குப்பியினை மேலே வைத்து மூடி அடுப்பில் வைக்கவும். ஒருவிறகு , இரண்டு விறகு, மூன்று விறகு, கொண்டு மூன்று நாள் தொடர்ந்தெரித்து ஆறவிடவும். செந்தூரமாகும்.

எடுத்ததொரு செந்தூர மத்துடனே கேளும்
என்மகனே திப்பிலியும் சாதிபத் திரியும்
கடுத்ததொரு திப்பிலியும் மூலந் தானும்
கடுகுரோ கணியுமிவை பலங்கால் வீதம்
அடுத்ததொரு வெண்கருவால் சாம மாட்டி
மைந்தனே மிளகுபோல் குளிகை கட்டி
தொடுத்ததொரு அனுபானம் முள்ளிச் சாற்றில்
சூட்டியுண்ணில் சன்னிபதி மூன்றும் போமே! 442

பொ.ரை: அச்செந்தூரத்துடன் திப்பிலி, சாதிபத்திரி, திப்பிலி மூலம், கடுகுரோகணி இவற்றை வகைக்கு 9 கி எடுத்து முட்டையின் வெள்ளைக் கருவிட்டு மூன்றுமணி நேரமரைத்து மிளகளவுள்ள குளிகைகளாய் உருட்டிக்கொள்ளவும். முள்ளிச் சாற்றில் குளிகையை இழைத்துக்கொடுக்க பதிமூன்று வகைச் சன்னியும் தீரும்.

போகுமப்பா திரிகடுகு வறுத்த தூளில்
புகழாக வெருகடி நறுந்தேனும் சேர்த்து
வேகுமப்பா குளிகையொன்று நாளும் பத்து
விரவியுண்ணல் பத்தெட்டு வாத மொக்க

சாகுமப்பா சயரோகம் உஷ்ண ரோகம்
சலக்கட்டு குறைரோகம் தானே போகும்
ஏகுமப்பா விசக்கடியும் சூலை மூச்சை
யிவையெல்லாம் தீர்ந்துபோ மின்னங் கேளே! 443

பொ.ரை: சுக்கு, மிளகு, திப்பிலி இவை மூன்றையும் இளவறுவலாய் வறுத்துப் பொடித்து அத்தூளினை மூவிரலளவு எடுக்கவும். அதில் ஒரு குளிகையை இழைத்து பத்து நாட்கள் கொள்ள எண்பது வகை வாதம், சயநோய், வெப்பநோய், குறை நோய், விடக்கடி, சூலை, மூர்ச்சை ஆகிய நோய்கள் தீரும்.

சடாச்சரக் குமரி

இன்னமொரு அக்கினிக் குமாரி சொல்வேன்
இதன்பேர்கேள் சடாச்சர குமரி ஆகும்
சொன்னதொரு மால்விசையன் வேல்கை கொண்ட
சுப்பிர மன்னிய னென்று சொல்லும்
வெண்ணதொரு அரப்பொடியும் கெந்தி காந்தம்
வெங்காரம் லிங்கமொரு பலந்தான் பத்து
வண்ணதொரு அஷ்டவகை வீரம் சேர்த்து
ஆட்டடா கற்றாழஞ் சோறு வார்த்தே! 444

பொ.ரை: அரப்பொடி, கெந்தகம், காந்தம், வெங்காரம், இலிங்கம் இவற்றை வகைக்கு 350 கி, வீரம் சேர்த்துக் கற்றாழைச் சோற்றினையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

சாற்கொண்டு நாலுசாமம் மயனம் போல
சாதகமாய் ஆட்டியே பொடித்துக் கொண்டு
கல்வத்தில் பொடியைத் வைத்து தானே
மாத்திடுவாய் தாம்பூரக் கிண்ணி யாலே
வீறுகொண்ட அடவில்வைக்க புகைந்து போகும்
மீண்டுவகை முன்சாற்றில் நாலு சாமம்
பேருகொண்டு ஆட்டிநன்றாய்ப் பொடித்து முன்போல்
பிசகாமல் தலத்தின் நடுவே வைய்யே! 445

பொ.ரை: சாறூற்றிப் பன்னிரெண்டு மணிநேரம் அரைத்துப் பொடித்துக் கல்வத்திலிடவும். பின்னர் அதனைத் தாமிரக் கிண்ணியில் எடுத்துப் பத்திரமாக வைக்க புகைந்து

போகும். மீண்டும் அதனுடன் சோற்றுக்கற்றாழைச் சாற்றை ஊற்றி பன்னிரெண்டு மணிநேரமரைத்துப் பொடித்து முன் போலவே தாமிரக் கிண்ணியின் நடுவில் வைக்கவும்.

வைத்திடுவா யிப்படிநீ மூன்று வாட்டி
வைக்கவது செந்தூர மாகும் ஆகும்
மெய்த்ததொரு செந்தூரம் பணந்தான் வீதம்
வேதித்து திரிகடுகு தேனு மொக்க
வெய்த்ததொரு மண்டலந்தா னுண்ண உண்ண
எண்பதுதான் வாதமொடு வாயில் சூலை
மொய்த்ததொரு அஷ்டகுன்மம் சன்னி வாதம்
.... மூர்ச்சை போமே! 446

பொ.ரை: இவ்வாறே மூன்று முறை வாட்டி வைக்க செந்தூரமாகும். திரிகடுகு சூரணத்துடன் தேனையும் வேண்டிய அளவு சேர்க்கவும். அதில் 488 மி.கி. செந்தூரத்தைக்கலந்து நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள எண்பது வகை வாதம், வாய் சூலை, எட்டுவகைக்குன்மம், சன்னிவாதம், மூர்ச்சை தீரும்.

மூர்ச்சையோடு சிலேற்பனமும் பித்தம் போகும்
முயல்வலியும் குதிரைவலி குமரகண்ட வலியும்
மூர்ச்சையோடு மேகமறு கவிசை போகும்
முட... நெஞ்சடைப்பு மொளியால் சூலை
மூர்ச்சையோடு யிவைகளெல்லாம் தீரு மப்பா
மோசமாம் குமரிக்கு முடுக்கு மெத்த
மூர்ச்சைஅறுங் குமரிவிட்டு பூபதியை சொல்வோம்
முறையாய் அப்படியேவந்தென முழுதுங் கேளே! 447

பொ.ரை: மூர்ச்சை, சிலேற்பனம், பித்தம், முயல்வலி, குதிரைவலி, குமரகண்டவலி, கவிசை, நெஞ்சடைப்பு, சூலை ஆகியவை சடாட்சரக் குமரியினால் தீரும். பூபதிக் குளிகையின் செய்முறையைக் கூறுவோம்.

பூபதி

கேளப்பா அரைப்பொடியும் வங்க பற்பம்
கெடியான திறப்பொடியும் வெங்கலத்துப் பொடியும்

மாளப்பா வெங்காரம் பச்சை நாவி
மகத்தான சவுக்காரம் சத்திச் சாரம்
ஆளப்பா யவாச்சாரம் காந்த பற்பம்
அப்பனே பித்தளையு முருக்கு லோகம்
சூளப்பா வகையொன்று பலந்தான் ஒன்று
தூக்கடா கெந்தகமும் பலந்தான் ஆமே! 448

பொ.ரை: அரப்பொடி, வங்கபற்பம், வெங்கலப்பொடி, வெங்காரம், பச்சைநாவி, சவுக்காரம், சத்திச்சாரம், யவாச்சாரம், காந்தபற்பம், பித்தளை, உருக்கிரும்பு ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுக்கவும். 35 கி கெந்தகத்தையும் சேர்க்கவும்.

ஆராக வகையெல்லாம் குமரிச் சாற்றில்
அப்பனே நாள்மூன்று ஆட்டி நீயும்
வேராகப் பொடியாக்கி குப்பிக் கேற்றி
விபரமுடன் மண்சீலை செய்து கொண்டு
கூராக வளப்பக்கல் மண்ணுஞ் செய்து
குமுறவே முத்தீயும் மூன்று நாள்தான்
தேறாக எரித்துவர நாலாம் நாளில்
செந்தூரமாம் வாங்கையிலே பூசை செய்யே! 449

பொ.ரை: மேற்கூறியவற்றைக் கல்வத்திலிட்டு சோற்றுக் கற்றாழைச் சாறூற்றி மூன்று நாட்கள் அரைத்து அப்பொடியைக் குப்பி ஒன்றில் அடைத்துக் கொள்ளவும். வாய்க்குச் சீலை மண்செய்து வளப்பக்கல்லினால் மூடி அதற்கும் சீலைமண் செய்யவும். ஒரு விறகு, இரண்டு விறகு, மூன்று விறகு கொண்டு மூன்று நாட்கள் தொடர்ந்தெரிக்கவும். நான்காம் நாள் எடுத்துப் பார்க்க செந்தூரமாகும். பூசை செய்து வைக்கவும்.

விஷ்ணுரச பூபதி

பூசைசெய்து இதன்பேர்கேள் விஷ்ணு ரச
பூபதியென் றேவேதம் புகலு மும்மை
ஆசைசெய்யும் நோயிதற்குப் பக்க மாகும்
ஆட்டுதற்கு மருந்துவகை நாடி யோடும்
ஆசைசெய்யும் திப்பிலியு மதனின் மூலம்
வகையொன்று பலம்நாலும் தூக்கிக் கொண்டு

கோசைசெய்யுங் கோமியத்தில் கசாயங் கொண்டு
கூட்டியே நன்றாக ஆட்டு ஆட்டே! 450

பொ.ரை: வேதம், விஷ்ணுரச பூபதி என்று இதனைப் பாராட்டும். திப்பிலி, திப்பிலி மூலம் இவற்றை வகைக்கு 140 கி எடுத்துக் கொள்ளவும். கோமியத்தைக் குடிநீராய்க் காய்ச்சி இம்மருந்து சரக்கில் ஊற்றி அரைக்கவும்.

ஆட்டியே செந்தூர முளுந்து போல
அப்பனே உண்டைசெய்து நிழலு ணத்தி
தீட்டியதோர் குளிகையொன்று இஞ்சிச் சாற்றில்
நீயூட்டு தனுர்வாதம் பிறவலியும் குத்து
மூட்டியதோற் குதிரைவலியும் கலிப்பு வாதம்
முத்தோஷம் மூர்ச்சையோடு முழுதுங் கேளே! 451

பொ.ரை: செந்தூரத்தினை உளுந்தளவு உருண்டைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்தி எடுத்து வைக்கவும். அதில் ஒரு குளிகையினை இஞ்சிச்சாற்றில் இழைத்துக் கொடுக்க தனுர்வாதம், புறவலி, குத்து, குதிரைவலி, கலிப்புவாதம், முத்தோடம், மூர்ச்சை ஆகியவை குணமாகும்.

ஈஸ்வர பூபதி

கேளப்பா நங்கண்டி மூர்ச்சை தானும்
கெடியான தோஷமொடு சன்னி தானும
நீளப்பா பறந்தோடு மின்ன மொன்று
நீகேளு புலத்தியனே மச்ச கேந்திரா
வீளப்பா வென்றவுட னோடுகிறே னெங்கும்
ஈஸ்பர பூபதி யென்றதற்கு நாமம்
கோளப்பா நோய்க்கெல்லாம் கடுங்கோ ளாகுங்
கூட்டிதனை வரிசைசொல்வேன் கூர்ந்து காணே! 452

பொ.ரை: மூர்ச்சை, தோடம், சன்னி ஆகியவை தீருவதற்குப் புலத்தியனே! மச்சகேந்திரா! ஈஸ்வர பூபதி என்ற குளிகையின் செய்முறையைக் கேட்பாயாக! நோய்களுக்கெல்லாம் தீமை பயக்கும் கிரகமாகச் செயல்படும் இம்மருந்திற்கான மருந்து சரக்குகள் வருமாறு.

காணப்பா சூதமொன்று கெந்தி யொன்று
காந்தமுமே லோகபற்பம் முருக்குச் செம்பு
பூணப்பா அரைப்பொடியும் பித்தளையின் பொடியும்
புகழாக வெங்கலத்தின் பொடியும் கூட்டி
ஊணப்பா அரிதாரஞ் சிலையுந் துத்தம்
உத்தமனே உண்ணாம்பு மன்ப தாக
வேணப்பா சேங்கொட்டை கற்பொரியும் நேராய்
மேலான குமரிச்சாற் தன்னா லாட்டே! 453

பொ.ரை: இரசம், கெந்தகம், காந்தம், உலோக பற்பம், உருக்குச் செம்பு, அரப்பொடி, பித்தளைப்பொடி, வெங்கலப்பொடி, அரிதாரம், மனோசிலை, துத்தம், சேங்கொட்டை, கற்பொரி ஆகிய சரக்குகளைச் சமமாய் எடுக்கவும்.

ஆட்டப்பா சாமமொன்று கள்ளிப் பாலால்
அப்பனே யொருசாம மரைத்து நன்றாய்
பூட்டியே பொடியாக்கிக் குப்பிக் கேற்றி
புகழாக முன்போலே மூன்று தீயும்
மூட்டப்பா மூன்றுநாள் தீயெ ரித்து
முறையோடே பூபதியே வாங்கு வாங்கு
ஊட்டப்பா நாவியொன்று திப்பிலி மூலம்
ஒரெடையாய் கோசலத்தி லூறப் போடே! 454

பொ.ரை: கள்ளிப்பாலால் மூன்றுமணி நேரமும் சோற்றுக் கற்றாழைச்சாற்றால் மூன்று மணி நேரமும் அரைத்துப் பொடியாக்கி குப்பிக்கேற்றி அடுப்பில் வைக்கவும். ஒரு விறகு, இரண்டு விறகு, மூன்று விறகு கொண்டு மூன்று நாட்கள் தொடர்ந்தெரித்து எடுக்கவும். நாவி, திப்பிலி மூலம் இவற்றைச் சமமாயெடுத்துக் கோமியத்தில் ஊறவைக்கவும்.

போட்டதனை யெடுத்தேதான் கல்வத் திட்டு
பூபதியுங் கூட்டுள்ளிச் சாற்றி னாலே
ஆட்டதனை யொருசாமம் வாங்கிக் கொண்டு
அப்பனே குன்றியிடை குளிகைக் கட்டி
ஊட்டதனை யனுபான முன்போ லப்பா
ஒருகுளிகை சன்னிமுதல் பிரமியமும்
மூட்டதனை வாதம்போம் சயரோக மான
மூலம்போம் மகோதரமுங் கவிசை போமே! 456

பொ.ரை: எரித்தாறியதையும் ஊற வைத்ததையும் எடுத்துக் கல்வத்திலிட்டு பூண்டுச் சாறூற்றி மூன்று மணி நேரமரைத்து அவ்விழுதை 130 மி.கி. அளவுள்ள குளிகைகளாக உருட்டி நிழலி லுலர்த்தவும். மேற்சொன்னவாறே இஞ்சிச்சாற்றில் ஒரு குளிகையை இழைத்துக் கொடுக்க சன்னி வாதம், பிரமியநோய், மூலம், மகோதரம், கவிசை தீரும்.

வடபான பூபதி

போகுமப்பா வடபான பூபதிதா னொன்று
பூட்டுகிறேன் வடபான பூபதிதான் பேரு
வாகுமப்பா கெந்தியொன்று சூத மொன்று
வப்பனே காந்தமொன்று லிங்க மொன்று
வேகுமப்பா சிலையொன்று தாளகந்தா னொன்று
வெங்காரம் நாகபற்பம் வங்க பற்பம்
தாகுமப்பா அரப்பொடியும் தாம்பிர லோகம்
சாதகமாய் படித்தனையும் வெண்கலமும் சங்கே! 457

பொ.ரை: கெந்தகம், இரசம், காந்தம், இலிங்கம், மனோ சிலை, தாளகம், வெங்காரம், நாகபற்பம், வங்கபற்பம், அரப்பொடி, தாமிர பற்பம், இரும்புப் பற்பம், வெண்கலப் பற்பம், சங்கு பற்பம் இவற்றை வகைக்கு 35 கி எடுக்கவும்.

சங்கோடு நேர்வாளம் திப்பிலியும் நேராய்
சாதகமாய் வகையொன்று பலந்தா னொன்று
சங்கோடு கெவுரியிதில் பலங்கால் கூட்டி
சாதகமாய் கற்றாழும் சாற்றி லாட்டி
சங்கோடு சாமமொன்று வெள்ளாட்டின் பாலால்
சாமமொன்று எருக்கம்பாலால் சாம மொன்று
சங்கோடு தானாட்டிப் பொடிய தாக்கி
சாதகமாய் குப்பிதனக் கேற்றி டாயே! 458

பொ.ரை: நேர்வாளம், திப்பிலி இவற்றையும் 35 கி எடுத்து 9 கி கௌரியையும் சேர்த்துச் சோற்றுக் கற்றாழைச் சாற்றாலரைத்துக் கொள்ளவும். மூன்று மணிநேரம் அரைத்த அவ்விழுதை வெள்ளாட்டுப் பாலில் மூன்று மணி நேரமும் எருக்கம்பாலில் மூன்று மணி நேரமும் அரைத்துப் பொடியாக்கிக் குப்பிக்குள் வைக்கவும்.

ஏற்றியதை மூன்றுதினந் தீயை மூட்டி
எரித்தாறி நாலாம்நாள் எடுத்துக் கொண்டு
மாட்டியதில் நாவியோடு திப்பிலியின் மூலம்
வகையொன்று பலமொன்று மூன்றுந் தூக்கி
ஆற்றியே எருக்கிலையின் பழுப்புச் சாற்றில்
அப்பனே சாமமட்டும் குளிகை செய்து
பாத்தியாய்ப் பரணிதனில் அடைத்துக் கொண்டு
பாய்ச்சடா அனுபானம் உள்ளிச் சாறே! 459

பொ.ரை: அடுப்பில் வைத்தெரித்து ஒரு விறகு, இரண்டு விறகு, மூன்று விறகு கொண்டு மூன்று நாட்கள் தொடர்ந் தெரிக்கவும். நான்காம் நாள், ஆறிய பின் 35 கி நாவியையும் 105 கி திப்பிலி மூலத்தையும் சேர்த்து எருக்கிலையில் பழுப்பாக உள்ளவற்றின் சாற்றில் மூன்று மணி நேரமரைத்துக் குளிகை செய்து பரணியில் அடைக்கவும். உள்ளிச் சாற்றை அனுபானமாய்க் கொள்ளவும்.

சாற்கொண்டு குளிகையிட சன்னி போகும்
தழல்வாதம் சிலேற்பனமாம் சன்னி மூர்ச்சை
வீற்கொண்ட முயல்வலியும் குமர்கண்டன் வலியும்
வெளிகுத்துக் கணுவலியு மங்கி
மாற்கொண்ட முகவாதம் கழல்வாத சன்னி
மகோதரமும் பீலிகையும் மகவை வெர்ப்பு
வேற்கொண்டு மருந்தோடு பூபதியைக் கண்டால்
மேலான பூபதியின் விபரந் தானே! 460

பொ.ரை: இச்சாற்றில் குளிகையை இழைத்துக் கொடுக்க சன்னி, தழல்வாதம், சிலேற்பனம், சன்னி, மூர்ச்சை, முயல்வலி, குமரகண்டன்வலி, குத்துக்கணுவலி, முகவாதம், கழல்வாத சன்னி, மகோதரம், பீலிகை ஆகிய நோய்களும் தீரும்.

இரசப்பதங்கம்

தானென்ற செங்கல்தூள் கால்படிதா னிட்டு
திறமாகக் கழித்ததிலே சூதம் விட்டு
வேனென்ற மறுசட்டி கொண்டு மூடி
வேதாந்தத் தாயெனக்கு வெளியாய்ச் சொன்னாள்

கோனென்ற குருபாதத்தைக் கருத்தால் மைந்தா
கொஞ்சமல்லாக் கருணையினால் கொள்ளை கொள்ளை
வேனென்ற சந்துவாய் அதுக்கு மைந்தா
இயல்பான ஒருசீலை மண்ணும் செய்யே! 461

பொ.ரை: செங்கல் பொடியை 325 கி கல்வத்தில் போட்டு அதனுடன் இரசத்தைச் சேர்க்கவும். மற்றொரு சட்டியை மேலே மூடி இரண்டின் வாயினைச் சேர்த்து ஒரு சீலை மண் செய்து கெட்டியாக மூடவும்.

மண்செய்து தொண்ணூறு கடிகை யப்பால்
வாகாக முற்றீயும் எரித்து மைந்தா
மண்செய்தா மேல்சட்டிக் குள்ளே கேளு
வாகாக யுறஞ்சிறுக்கு வழலை மெத்த
மண்செய்து கற்பூரக் குழலில் வைத்து
வாகாக பணவெடைதான் தூக்கிக் கொண்டு
மண்செய்து பனைவெல்லம் நல்ல வெல்லம்
வாகாக உழத்திடுவாய் வழக்கங் கேளே! 462

பொ.ரை: ஏற்றிய அடுப்பில் வைத்து முப்பத்தாறு மணி நேரம் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியாக (ஒரு விறகு, இரண்டு விறகு, மூன்று விறகு) எரிக்கவும். மேலே கவிழ்ந்துள்ள சட்டியில் படிந்துள்ள மருந்தைக் கற்பூரக்குழலில் அடைத்து வைக்கவும். 488 மி.கி. மருந்தை பனைவெல்லம், நல்லவெல்லத்திற்குள் வைத்து கொடுக்கவும்.

கேளப்பா தீருகிற வியாதி கேளு
கிரந்தி பதினாறு அஷ்ட குன்மம்
வாளப்பா தமரோகம் ஆறு சூலை
மகத்தான குட்டமோடு குறைநோய் தானும்
பாளப்பா பறக்குமே கற்பூரங் கண்டால்
பத்தியந்தான் புளிகரப்பான் பதார்த்தம் தள்ளு
நீளப்பா நேத்திரத்து வியாதிக் கெல்லாம்
நீகேளு மருந்துவகை நினவாகத் தானே. 463

பொ.ரை: கிரந்தி பதினாறு வகைகள், எட்டு வகைக்குன்மம், தமரோகம், ஆறுவகைச் சூலை, குட்டம், குறைநோய் ஆகிய நோய்கள் தீரும், புளி, கரப்பான் பொருட்களையும் பண்டங் களையும் நீக்கவும். கண்ணோய்களுக்கான மருந்து வருமாறு.

நேத்திர ரோகத்துக்குக் கலிக்க மாத்திரை

தானென்ற இந்துப்பு பூதரோ கணியும்
சாதகமாய்த் திப்பிலியும் சமனாய் சேர்த்தி
கோனென்ற நந்தியா வட்டப் பூச்சாற்
குமறவிட்டு இருசாமம் ஆட்டி வாங்கி
கோனென்ற கயற்போல குளிகை கட்டி
காட்டடா முலைப்பாலில் உரைத்துக் கொண்டு
ஊனென்ற கண்ணோய்தான் தொண்ணூற் றாறும்
ஒழிவதற்கு முலைப்பாலில் உரைத்துப் போடே! 464

பொ.ரை: இந்துப்பு, பூதரோகணி, திப்பிலி ஆகியவற்றைச் சமமாய் எடுக்கவும், நந்தியாவட்டைப் பூச்சாறூற்றி ஆறுமணி நேரமரைத்து அவ்விழுதைக் கயிறு போல திரட்டிக் குளிகை களாய்ச் செய்து கொள்ளவும். தாய்ப்பாலில் ஒரு குளிகையை, இழைத்துக் கொடுக்க தொண்ணூற்றாறு வகை நோய்கள் குணமாகும்.

கனகரத்தினாதி கலிக்க மாத்திரை

போடுதற்கு நேத்திரநோய் தொண்ணூற் றாறும்
பூட்டுகிறேன் கனகரத்தி னாதி தன்னை
ஆடுவதற்கு யிதுவென்றால் கண்ணோ யெல்லாம்
ஆச்சரிய மொழிந்துபோம் அறிந்து கேளு
நீடுதற்கும் கெம்புவச்சிர கேளு கேளு
நேரான மரகதமும் புஷ்ப ராகம்
கோடுதற்கு கோமேதகம் பவளப் பச்சை
கெடியான வயிடூரியத்தோடே யொம்ப தாச்சே! 465

பொ.ரை: கண்ணோய்கள் நீங்குதற்குக் கனகரத்தினாதியைக் கூறுகிறேன். கண்நோய்கள் நீங்க கெம்பு (அல்) மாணிக்கம், வச்சிரம் (அல்) வைரம், மரகதம், (அல்) பச்சைக்கல், புட்பராகம், கோமேதகம், பவளம், வயிடூரியம், முத்து, நீலம் ஆகிய நவரத்தினங்கள் ஒன்பதையும் எடுத்துக் கொள்ளவும்.

ஆச்சப்பா ரெத்தினங்கள் ஒன்பது ஆகும்
அப்பனே லோகங்கள் ஒன்பது ஆகும்
வாச்சப்பா தங்கமோடு வெள்ளி செம்பு
மைந்தனே பித்தளையும் துத்த நாகம்

போச்சப்பா வெள்ளீயம் காரீயங்க ளஞ்சு
உத்தமனே ஒன்பதையும் யொக்கக் கூட்டு
நீச்சப்பா துருசினோடு துத்தம் சங்கு
நீலாஞ்சனமு பீத அஞ் சனமும் பாரே! 466

பொ.ரை: நவரத்தினங்கள் ஒன்பதுடன் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, துத்தநாகம், வெள்ளீயம், காரீயம், வெண்கலம், அயம் ஆகிய ஒன்பது உலோகங்களையும் வகைக்குச் சம அளவாக எடுக்கவும் துருசு, துத்தம், சங்கு, நீலாஞ்சனம், பீதாஞ்சனமும்,

பாரப்பா கடல்நுரையும் பீத ரோகணியும்
பரிவான மஞ்சளோடு கடுகுரோ கணியும்
நேரப்பா திப்பிலியும் கோஷ்டம் தானும்
நிறையான நீர்ப்புங்கம் விரையும் தானும்
அண்டமோடு ஆமையோடு கபால வோடும்
இந்துப்பு கற்பூரந் தானும்
தாரப்பா சந்தனமும் செம்பஞ்சு கடுக்காய்
தாமரையின் கிழங்குடனே நெல்லிக்காய் தானே! 467

பொ.ரை: கடல்நுரை, பீதரோகணி, மஞ்சள், கடுகுரோகணி, திப்பிலி, கோட்டம், நீர்ப்புங்கம் விதை, முட்டைஓடு, ஆமை ஓடு, கபால ஓடு, இந்துப்பு, கற்பூரம், சந்தனம், செம்பஞ்சு, கடுக்காய், தாமரைக்கிழங்கு, நெல்லிக்காய்

காணப்பா மருந்துவகை நாற்பத் தஞ்சு
கானொன்றுங் குறையாமல் நிறுத்து வாங்கி
ஊணப்பா கல்வத்தி லிட்டு நீயும்
உத்தமனே பழச்சாற்றா லொருநா ளாட்டி
பூணப்பா கொடுப்பைச்சாற் மறுநாள் ஆட்டி
புகழாக சிறுகிளா மூன்றுநாள் ஆட்டி
தோணப்பா நாலாம்நாள் கரிப்பான்சாற் சுகமாக
அஞ்சாம்நாள் புள்ளடி பொடுதலையின் சாறே! 468

பொ.ரை: ஆகிய அனைத்து மருந்து வகைகளையும் சம எடையிட்டுக் கல்வத்தில் போட்டுக் கொள்ளவும். எலுமிச்சம் பழச்சாறூற்றி ஒரு நாள் அரைத்து, அவ்விழுதைக் கொடுப்பைச் சாறூற்றி மறுநாள் அரைத்தெடுக்கவும். மூன்றாம் நாள்

சிறுகிளாச்சாறூற்றியும் நான்காம் நாள் கரிசாலைச் சாறூற்றியும் ஐந்தாம் நாள் புள்ளடி, பொடுதலை இவையிரண்டின் சாறூற்றியும் அரைக்கவும்.

சாறுகே ளாறாநாள் பிச்சிப்பூச் சாறு
சாதகமாய் ஏழாம்நாள் மல்லிகைப் பூச்சாறு
வீறுகே ளொம்பதாம்நாள் புள்ளடியின் சாறு
மேலான பதினோராம்நாள் முலைப்பா லப்பா
ஆறுகேள் நேத்திரத்தில் வியாதி ஆனால்
அப்பனே கண்ணிலிட்டால் அனேக நோய்தீரும்
வேறுகேள் அரைத்துடனே கயிறு போலாம்
விபரமுடன் உருட்டியே நிழலில் வைய்யே! 469

பொ.ரை: ஆறாம்நாள் பிச்சிப்பூ சாற்றாலும் ஏழாம் நாள் மல்லிகைப்பூச் சாற்றாலும் ஒன்பதாம் நாள் புள்ளடியின் சாற்றாலும். பதினோறாம் நாள் தாய்ப்பாலிலும் முறையே அரைத்து, அவ்விழுதைக் கயிறு போன்ற மாத்திரைகளாகத் திரட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

வைய்த்ததொரு கயிறெடுத்துக் கண்ணில் தீட்ட
அப்பனே அருந்ததியைக் காணு காணு
மொய்த்ததொரு சூத்திரத்தில் சொன்ன மருந்தெல்லாம்
மொழிக்குற்றம் வாய்க்குற்றம் மோச மில்லை
எய்த்ததொரு ஏழுவகைச் சாறு கொண்டு
இடுகனக ரத்தினவகை யெல்லாம் போமே! 470

பொ.ரை: இக்கலிக்க மாத்திரையை இழைத்துக் கண்ணிலிட கண் ஒளிபெறும். விண்ணிலுள்ள அருந்ததி நட்சத்திரத்தை இங்கிருந்து காணலாம். மேற்சொன்னவாறு சாறுகளினால் அரைத்துச் செய்யப்பட்ட கனகரத்தின வகையினால் தீரும் நோயாவது.

குந்தத்திற்கு மாத்திரை

போகுமப்பா பத்தியங்கள் கிரந்திப் பண்டம்
புளியும்கைப்பு அகற்றலது துவர்ப்பா காது
வாகுமப்பா வுப்போடு பால்நெயாகு மப்போது
வருந்துதிதான் யின்னளவு காணும் காணும்

ஏகுமப்பா குந்தங்கள் கரைவ தற்கு
இயம்புகிறேன் சூதமொன்று காரிய மாகும்
... ...
மிரட்டிதுத்தம் தாம்பூரம் இன்னங் கேளே! 471

பொ.ரை: கிரந்திப்பண்டங்கள், புளிப்புச்சுவை, கசப்புச் சுவைப் பொருட்கள், துவர்ப்புப்பொருட்கள் இவற்றைப் பத்தியமாய்க் கொண்டு நீக்கவேண்டும். உப்பு, பால், நெய் இவை ஆகும். பொருட்கள், குந்தங்கள் கரைவதற்கு இரசம், காரீயம், துத்தம், தாமிரம் ஆகியவற்றினாலான மருந்து வருமாறு.

கேளப்பா தாமிரத்தின் றட்டி சங்கு
கெடியாக யிதுவெல்லாம் பழச்சாறு கொண்டு
நாளப்பா மூன்றுதினம் ஆட்டி வாங்கி
நலமாக குளிகைகட்டி நிழலு ணத்தி
வேளப்பா பழச்சாற்றில் உரைத்துத் தீட்ட
விரணம்போம் குரதம்போம் வெளியுங் காணும்
நீளப்பா சுருக்குமெத்த ஒளியுங் காணும்
நேத்திரத்தில் நோய்களெல்லாம் நீக்கும் பாரே! 472

பொ.ரை: மேற்கூறியவற்றுடன் இசங்கையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறூற்றி மூன்று நாட்கள் அரைத்துக் கயிறு குளிகைகளாய்த் திரட்டி நிழலில் உலர்த்தவும். உலர்த்திய குளிகைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் இழைத்துக் கொடுக்க இரணம் நீங்கும். சுருக்கு நீங்கி ஒளியும் ஏற்படும். கண்நோய்கள் நீங்கும்.

கண்ணோய்களுக்கு வெண்ணை

நீக்குமப்பா மேதிவெண்ணை பலந்தா னொன்று
நேரான சீனக்கால் பலந்தா னப்பா பீதரோகணி
நிலைத்துப்பா ரரைப்பணந்தான் தூக்கிக் கொண்டு
நயவெண்ணை அன்றிந்த மருந்தை மூன்றும்
நிலைத்துப்பார் தூளாட்டிக் கல்வத்தி லிட்டு
நீட்டுவாய் வெண்ணைதனைக் கூட விட்டு
நிலைத்துப்பார் சாமமொன்று ஆட்டி வாங்கி
நிசமான வெங்கலத்தில் கல்தூரில் வைய்யே! 473

பொ.ரை: 35 கி எருமைவெண்ணை, சீனக்காரம் 9 கி, 244 மி.கி. பீதரோகணி எடுக்கவும். கல்வத்தில் மூன்றையும் சேர்த்து மூன்று மணி நேரமரைத்துப் பின் அவ்விழுதையெடுத்து வெங்கலத்தூரில் இடவும்.

வைத்ததொரு மருந்துதன்னைச் செம்பு கொண்டு
மயனம்போல் இருசாம மாட்டி வாங்கி
மொய்த்ததொரு தாமிரத்தின் சிமிழுக் குள்ளே
முறையாக அமைத்தேதான் மூடி போட்டு
வைத்ததொரு நேத்திரத்தின் நோய்களுக் கெல்லாம்
என்மகனே யிடுகடுகு பிரமா ணந்தான்
மைந்தனே ஒருகண்ணி லிடவுந் தீரும்
மைந்தனே வகையாகக் கேளு கேளே! 474

பொ.ரை: அம்மருந்தைச் செம்பினைக் கொண்டு, ஆறு மணிநேரம் அரைத்துத் தாமிரச் சிமிழுக்குள் வைத்து மூடிப் பத்திரப்படுத்தி வைக்கவும். கண்ணோய்கள் அனைத்திற்கும் கடுகளவு மருந்தினை மிதமாக இழைத்து கண்ணிற்குள் இடவும்.

கேளப்பா நேத்திரத்தின் வாய்வு தானும்
கெடியான மாலைக்கண்ணு நீச்சக் கண்ணும்
சூளப்பா கண்ணோவு வலிகள் தானும்
மற்றிந்த கண்ணும்
வாளப்பா முளிமுறடு நீர்ப்புல்லம் பூவும்
வளமான குந்தம்முதல் யனைந்துந் தீரும்
வேளப்பா நேத்திரநோய் தொண்ணூற் றாறும்.
வெல்வதற்கு வெண்ணையொன்று விள்ளு றேனே! 475

பொ.ரை: நேத்திரவாய்வுகள் அனைத்தும் மேற்சொன்ன மருந்தால் குணமாகும். மாலைக்கண், நீச்சகண், கண் வலிகள், நீர்ப்பில்லம், கண்பூ, குந்தம் ஆகிய கண்ணோய்கள் தீரும். தொண்ணூற்றாறு வகை கண்ணோய்கள் தீர வெண்ணை யொன்று கூறுகிறேன்.

வெண்ணை (வேறு)

விள்ளுறேன் பசுவின்வெண்ணை பலந்தா னொன்று
விபரமுடன் புதுப்பாண்டத் துள்ளே போட்டு

விள்ளுறேன் குளுந்தசலம் நிரம்ப விட்டு
மென்மேலு மிப்படியே எரித்து நித்தம்
விள்ளுறேன் திரும்பவதைக் கல்வத் திட்டு
மேல்பீத ரோகணியை யிடைகால் சேரே! 476

பொ.ரை: 35 கி பசு வெண்ணையை எடுத்துப் புதிய கலத்திற்குள் இட்டு குளிர்ந்த தண்ணீரை முழுவதும் நிரப்பவும். இவ்வாறு பல முறை செய்யவும். பின்பு எடுத்து வேறு கல்வத்தி லிடவும். 9 கி பீதரோகணியை உடன் சேர்க்கவும்.

சேர்த்தேதான் செம்பதனால் பழச்சாற் குத்தி
திறமாக யிருசாமம் களிம்பு சேர்த்து
பார்த்தேதான் கடுகிடையாங் கண்ணிற் றீட்ட
பறக்குமடா தொண்ணூறும் பாரு பாரே
போர்த்தேதா னோர்திங்கள் மண்டலந்தா னொன்று
போட்டிருந்த வெண்ணெயுமாம் போக்குக் கெல்லாம்
காத்தேதான் குருப்பிறேன் கவடு நீக்கி
கார்க்கவே கருணையினால் கடாட்சி பாரே! 477

பொ.ரை: சேர்த்ததைச் செம்புப் பாத்திரத்தில் இட்டு எலுமிச்சம் பழச்சாறூற்றிக் களிம்பைச் சேர்த்து ஆறுமணி நேரமரைத்துக் கொள்ளவும். அம்மருந்தினைக் கடுகளவு எடுத்து முப்பது நாட்களுக்குக் கண்ணில் மைபோல் தீட்டிவர தொண்ணூற்றாறு நோய்கள் தீரும்.

காசக்குடோரி

கடாட்சமுள்ள காசக் குடோரி யொன்று
காட்டுறேன் புலத்தியனே கண்டு பாரு
கடாட்சமுள்ள தங்கமொன்று வெள்ளி யொன்று
கடும்புலி நகமொன்று பீத ரோகணி
கடாட்சமுடன் யிவைசமனாய் நிறுத்துக் கொண்டு
கனக்கவே நாலுவகைப் பாலும் விட்டு
கடாட்சமுறுங் கயிறுபோல் திரட்டி நீயும்
காரிகையாள் முலைப்பாலி லரைத்துப் போடே! 478

பொ.ரை: காசத்திற்கான குடோரி ஒன்றினை இங்கு கூறுகிறேன். கேட்பீராக! தங்கம், வெள்ளி, புலிநகம், பீதரோகணி இவற்றைச் சமமாய் எடுக்கவும். காய்ச்சிய பால், குழம்புப்பால்

திரட்டுப்பால், பீய்ச்சும்பால் ஆகிய நால்வகைப் பாலினை விட்டு அரைத்துக் கயிறு போன்று திரட்டு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும். பின் அதனைத் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் விடவும்.

கண்ணோய்களுக்குக் குளிகை

போட்டவுடன் நேத்திரநோ யனைத்தும் போகும்
பூட்டுறேன் இன்னமொரு குளிகை தன்னை
நாட்டவே அரிதார சங்கு சுக்கு
நலம்பெரிய நல்மிளகு பீத ரோகணி
நீட்டவே திப்பிலியும் அதிமதுரந் தானும்
நேரான புங்கம்விரை சிலைதா னறுத்த
மூட்டவே யிவைசமனாய் நிறுத்துக் கொண்டு
முக்கியமுள்ள நந்திப்பூச் சாற்றி லாட்டே! 479

பொ.ரை: அனைத்துக் கண்ணோய்களும் தீரும் மற்றொரு குளிகை செய்முறை வருமாறு. அரிதாரம், சங்கு, சுக்கு,மிளகு, பீதரோகணி, திப்பிலி, அதிமதுரம், புங்கம்விதை, மனோசிலை ஆகியவற்றைச் சமமாய் எடுத்துக்கல்வத்திட்டு நந்திப்பூச் சாற்றினாலரைக்கவும்.

ஆட்டியதைக் கயிறுகட்டி வைத்துக் கொண்டு
அப்பனே முலைப்பாலி லரைத்துக் கொண்டு
மாட்டியதை நேத்திர நோய்கட் கெல்லாம்
புடவாக அதிலொன்று உரைத்துப் போடு
மூட்டியிதில் திட்டந்தரம் மூலிகை யொன்று
முத்திருக்கச் செவியதனைச் சாறு நாழி
காட்டியிது காப்புகட்டி பராபரிக்குப் பூசை
நன்றாகச் செய்து அர்க்கநாளில் வாங்கே! 480

பொ.ரை: அரைத்த விழுதைக் கயிறு போன்ற நீளமான மாத்திரைகளாகத் திரட்டி வைக்கவும். தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணுக்கிட கண்ணோய்கள் நீங்கும். முத்தெருக்கஞ்செவி எனும் மூலிகைக்குக் காப்பு கட்டி பூசைகளைப் பராபரத்திற்குச் செய்து ஞாயிற்றுக் கிழமையன்று அவ்விலைகளைப் பறித்துக் கொள்ளவும்.

புறவடைக்கு மருந்து

வாங்கப்பா அர்க்கநாளில் பிடுங்கி வந்து
மயந்தென இந்தயிலைச் சாற்றில் ஆட்டி
வாங்கப்பா கண்ணிலிடு குருடர்க் கெல்லாம்
வாணில்பரு மருந்ததியு மருகில் காண்பார்
வாங்கப்பா புறவடைக்கி மருந்து சொல்வேன்
மகத்தான நேத்திரநோய்க் கெல்லா மாகும்
வாங்கப்பா கடுக்காயும் காசுக் கட்டி
மடல்துத்தம் பொன்மெழுகு சீனந் தானே! 481

பொ.ரை: ஞாயிற்றுக் கிழமையில் முத்தெருக்கஞ் செவியின் இலைகளைப் பறித்துச் சாறெடுத்து மருந்தினை அரைத்துக் கண்ணிலிட கண் ஒளிபெறும். கண்ணைச் சுற்றிப் போடும் பற்று மருந்திற்கான மருந்து சரக்குகள் வருமாறு. கடுக்காய், காசுக்கட்டி, மடல்துத்தம், பொன்மெழுகு, சீனக்காரம்.

தானென்ற மதுரமோடு புனிதப் பாக்கு
சாதகமாய் சரியாகத் தூக்கி வாங்கி
கோனென்ற தூளாட்டி யிதனை யொக்க
கூட்டுகிற மருந்துதன்னைக் கூறக் கேளு
கானென்ற தேற்றின்விதை யவுரி யோடு
கடியதொரு கடுக்காயும் புளியும் நேராய்
தேனென்ற பழச்சாற்றால் வாட்டி வாங்கி
திரும்பவதைத் தூளுடனே சேரு சேரே! 482

பொ.ரை: அதிமதுரம், பாக்கு ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்து வைக்கவும். தேற்றாங்கொட்டையின் விதை, அவுரி, கடுக்காய், புளி இவற்றைச் சமமாயெடுத்து அதனுடன் பழச்சாற்றைச் சேர்த்தூற்றி வதக்கிப் பொடித்து அப்பொடியுடன் சேர்க்கவும்.

சேர்த்துரண்டு மொன்றாக்கி பழச்சாற் விட்டு
திரளவே பிசைந்துகொண்டு காற்றில் நெய்யை
வார்த்துநன்றாய் பிரட்டியே மருந்து தன்னை
மைந்தனே ரண்டுவிரற் கனத்தில் நீயும்

பார்த்துவொரு விரல்நீளங் கயிறு கட்டி
பாங்காக நிழலுலர்த்தி பழத்தின் சாற்றால்
கார்த்து நல்லகாடி யாலும் சாற்றால்
கருவேலங் கசாயத்தில் அரைத்தி டாயே! 483

பொ.ரை: இரண்டு பொடிகளுடனும் எலுமிச்சம்பழச்சாறு ஊற்றிப் பிசைந்து நெய்யை ஊற்றித் திரட்டி, விரலளவு கனத்தில் கயிறளவு மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தவும். உலர்ந்த பிறகு எலுமிச்சம் பழச்சாற்றாலும் நல்ல காடியாலும் கருவேலங்குடிநீராலும் அரைத்துக் கொள்ளவும்.

கண்ணோய்க்கு நசியம்

அரைத்ததொரு மருந்துதன்னைக் கொதிக்க வைத்து
அப்பனே புறவிடைதான் போடு போடு
நிரைத்ததொரு நேத்திரநோய்க் கெல்லா மாகும்
நேராக யின்னமொரு வழியைக் கேளு
விரைத்ததிரி கடுகுடனே வேளை வேரும்
வெந்நீரு விட்டரைத்துக் கயிறு பண்ணி
கரைத்ததொரு வெந்நீரில் கலக்கிக் கொண்டு
கட்டாகப் பஞ்சிலே துவைத்தி டாயே! 484

பொ.ரை: அரைத்த மருந்தை நீரிலிட்டுக் கொதிக்க வைத்துக் கண்ணைச் சுற்றியிடும் பற்று மருந்தாகப் பயன்படுத்தவும். அனைத்துக் கண்நோய்களுக்குமாகும். மற்றுமொரு முறையைக் கேட்பாயாக. சுக்கு, மிளகு, திப்பிலி, வேளைவேர் இவற்றை வெந்நீர் ஊற்றி அரைத்துக் கயிறு மாத்திரைகளாகத் திரட்டி வெந்நீரிலிட்டுக் கரைத்துக் கொள்ளவும். அத்திரவக் கரைசலைப் பஞ்சில் தோய்க்கவும்.

கண்பூவிற்கு மூலிகை மருந்து

வைத்ததொரு மருந்துதன்னை நாசி ரண்டில்
சுருக்காக நசியம்விடு துன்பம் போகும்
வைத்ததொரு மூலிகையி லுசிதமும் உண்டு
வாய்திறந்து சொல்லுகிறேன் மைந்தா கேளு
வைத்ததொரு வெள்ளையா வரையின் வேரை
பாகமாய்ச் சனிக்கிழமை காப்பு கட்டி

வைத்ததொரு பராபரையைத் தியானம் செய்து
இயல்பான அருக்கநாள் மூலம் வாங்கே! 485

பொ.ரை: தோய்த்த பின் இரண்டு நாசித் துளைகளிலும் நசியமாக விட கண்ணோய் நீங்கும். மூலிகையின் பயன்பாட்டில் நலம் விளையும் என்று கருதி வெள்ளை ஆவாரையின் வேருக்குச் சனிக்கிழமை காப்பு கட்டி பராபரத்தை நினைத்துத் தியானம் செய்து ஞாயிற்றுக் கிழமை வேரினை எடுக்கவும்.

வாங்கியதோர் வேருடைய யிலைச்சாற் கொண்டு
வளமாக வுரைத்தேதான் கண்ணிற் றீட்ட
ஏங்கியதோர் பூனைபோல் நேத்திர ரோகம்
ஏகியே பிழைத்தோடும் ஈசன் வித்தை
தாங்கியதோர் தேவர்களும் ரிஷிகள் சித்தர்
சத்திமுதல் வயித்தியத்தைச் சாற்றி னார்கள்
பாங்கியதோர் சூத்திரத்தைப் பார்க்க பார்க்க
பண்டிதசிரோ மணியாம் பாரு பாரே! 486

பொ.ரை: வேரினை இடித்துச்சாறு பிழிந்தெடுத்து கண்ணின் கீழ் புறவளையமாக இழைத்துத் தீட்டவும். கண்ணோய்கள் பலவும் குணமாகும். இது ஈசனுடைய வித்தையாகும். தேவர்கள், ரிஷிகள், சித்தர்கள் அனைவரும் சித்த வைத்தியத்தை விவரமாகக் கூறியுள்ளார்கள்.

கெர்ப்பக்கோளம்

பாரப்பா பெண்கள்மல டாறுங் கொளின்
பக்குவத்தைச் சொல்லுகிறோம் பண்பாய்க் கேளு
ஆரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலடோ யாது மில்லை
நேரப்பா தவசிருந்து பிள்ளை யில்லா
நேர்மையென்ன ஆறுவகைச் சூலை யுண்டு
வாரப்பா தேவதைகள் எல்லாம் கர்மம்
விவரமாய்ச் சொல்லுகிறோம் வித்தை யெல்லாம்
போரப்பா ஆசனமுன் வகையைச் சொல்லு
புலத்தியனே உங்களுக்குப் புகலு றேனே! 487

பொ.ரை: பெண்களின் ஆறுவகை மலட்டுத் தன்மைக்கான காரணம் பற்றி தொடர்ந்து கூறுவோம். ஆண்மலடு

உள்ளதேயொழிய பெண் மலடு என்றேதுமில்லை. குழந்தை யில்லாதோர்க்கு ஆறுவகைச் சூலை நோயுண்டு. கர்மங் களினாலும் நாம் செய்த வினைப்பயனினாலும் ஏற்படுவதுண்டு என்பர்.

புகலுகிறேன் உதிரந்தான் மலடி யென்றால்
பூவையற்கு கருக்குழிதான் விளக்க மற்று
அகலுகிறேன் பாசம்பற்றி அடைத்தி ருந்தால்
விந்து வங்கே நேர்ப டாது
நிகலுறேன் மறுபடிதான் கருக்குழியில் வாய்வு
நிறைந்திருந்து யிருந்தால் விந்துவங்கே நேர்ப டாது
தகலுகிறேன் பின்னுமந்த கருக்குழியை மூடி
சதைவளர்ந்தால் விந்துவங்கே செல்லா தாமே! 488

பொ.ரை: கருக்குழியானது செயல் திறமையற்று விளங்கும். இக்குழியைச் சுற்றி சவ்வானது அதிகமாகப் பரந்து சூழ்ந்திருப்பின் அதனுள்ளே விந்து சென்றடையாது. கருக் குழியில் வாயுவானது அதிகமாகச் சேர்ந்திருப்பின் விந்து உள்சென்று பாய்ந்து விழுவதற்குத் தடையாய் விளங்கும். கருக்குழியை மூடியவாறு சதை வளர்ந்திருப்பினும் விந்து உள்ளே விழாது.

செல்லாது நாலாவ தப்பா கேளு
ஸ்ரீகளுக்கு கருக்குழியில் கிருமி மொய்த்தால்
செல்லாது அஞ்சாவ தப்பா நீகேள்
செறிந்தங்கே சோரைகட்டி நிறைந்து தானால்
செல்லாது யிவையானும் வியாதி யாகும்
செப்பக்கேள் விரோதம்மே லாகுங் காணே! 489

பொ.ரை: கருக்குழியினுள் கிருமிகள் சென்றடைந்தாலும் சோரைக்கட்டி அடைத்திருந்தாலும் விந்து தடைபடும். மேற் சொன்ன இந்த ஆறு வகையாலும் கெர்ப்பம் தடைபட்டு மலடாகும்.

காணப்பா யிதின்விபரம் விரித்துச் சொல்வோம்.
கன்னியர்க்குப் புணர்வேளை தலைதான் நொந்தால்
கோணப்பா கருக்குழியில் பாசம் பற்றிக்
கொண்டதென்று தானிதற்குச் சாந்தி கேளு

பூணப்பா கோழியினிட பிச்சு வாங்கி
புகலாக பருத்திவிரைப் பருப்பு மாட்டி
தோணப்பா அவள்குளித்த அன்று தொட்டு
சொல்லுகிறேன் மூன்றுநாள் நீதான் கேளே! 490

பொ.ரை: மலட்டு வகைக்கான காரணமும் சிகிச்சைகளும் பற்றி கூறுவாம். பெண்களுக்குப் புணர்தலின் போது தலை வலிக்குமாயின் கருக்குழியைச் சுற்றி சவ்வூடு பரவியுள்ளது என்று புரிந்துகொள்ளலாம். கோழியின் பித்தையும் பருத்தி விதைப் பருப்பையும் சேர்த்தரைத்துக் கொள்ளவும்.

கேளப்பா யிம்மருந்தை யோனிக்குள் தேய்த்து
கெடியாக புருசனையும் புணரச் சொல்லி
நாளப்பா மூன்றுதின மிப்படியே செய்யில்
நலமாகப் பாசமறும் பிள்ளை யுண்டாம்
மாளப்பா புணர்வேளை யுடம்பெல்லாம் நொந்தால்
அப்பனே வாய்வுநிறைந்து இருக்கு தென்று
ஆளப்பா பெருங்காயம் நல்லெண்ணெய் விட்டு
வார்த்தரைத்து யோனிக்குள் பூசச் சொல்லே! 491

பொ.ரை: மாதவிடாய் முடிந்த மூன்றாம் நாளில் இம் மருந்தைப் பெண்ணின் பிறப்புறுப்பில் தேய்த்துப் புணரச் செய்யவும். இவ்வாறு மூன்று நாட்கள் தொடர்ந்து மேற்கொள்ள குழந்தைப் பேறுண்டாகும். இரண்டாவது வகையில், புணரும் வேளையில் உடல் வலித்தால் கருக்குழியைச் சுற்றி வாய்வு நிறைந்துள்ளது என்று பொருள். அப்போது பெருங்காயத்தையும் நல்லெண்ணெயையும் சேர்த்தரைத்துப் பெண்ணின் பிறப்புறுப்பில் பூசச் சொல்லவும்.

பூசியே மூன்றுதினம் புணர்ந்தா ராகில்
பிள்ளையுண்டு மூன்றாவ தப்பா கேளு
கூசியே புணர்வேளை அவளுக்குத் தானும்
குறையாமல் நெஞ்சுவலி கூடித் தானால்
தாசியே யோனியெல்லாம் மூடிக் கொண்டு
சதைவளர்ந் திருக்குதென்று திப்பிலி கற்பூரம்
வாசியே கோழியுட பித்துஞ் சேர்த்தி
ஆட்டியதை யோனிக்குள் தடவச் சொல்லே! 492

பொ.ரை: மூன்று நாட்கள் அவ்வாறே பூசிப் புணர மகப் பேறுண்டாகும். மூன்றாவது வகையில், உடலுறவு கொள்ளும் வேளையில் நெஞ்சு வலி அதிகமானால் பிறப்புறுப்பு தெரியாத அளவிற்குச் சதை வளர்ச்சி அடைந்துள்ளதென்று தெரிந்து கொள்ளவும். திப்பிலி, கற்பூரம் இரண்டையும் கோழிப் பித்தினுடன் சேர்த்தரைத்துப் பிறப்புறுப்பில் தடவச் செய்யவும்.

தடவியே மூன்றுதினம் புணர்ந்தா ளாகில்
தப்பாது பிள்ளையுண்டாம் நாலாங் காச்சி
அடவியே புணர்வேளை முதுகு நொந்தால்
அப்பனே புழுநிறைந்து யிருக்கு தென்று
அடவியே யிந்துப்பு அரிதாரம் காயம்
வெந்நீரால் மூன்றுபணம் தூக்க மாட்டி
படவியே மூன்றுநாள் யோனிக்குள் பூசி
படுத்திடவே புத்திரனுண்டு பண்பாய்த் தானே! 493

பொ.ரை: தடவி மூன்று நாட்கள் புணர குழந்தைப் பேறுண்டாம். நான்காவது வகையில் அவ்வேளையில் முதுகு வலித்ததாயின் கருக்குழியில் புழுக்கள் நிறைந்திருக்கும். இந்துப்பு, அரிதாரம், பெருங்காயம் இவற்றை வகைக்கு 1½ கி எடுத்து அரைத்துப் பெண் பிறப்புறுப்பில் மூன்று நாட்கள் தொடர்ந்து பூசிப் புணரச் செய்யவும்.

தானென்ற அஞ்சாவ தப்பா கேளு
தழுவையிலே கெண்டைக்கால் வலித்து தானால்
வானென்ற சோரையங்கே கருக்குழியை மூடி
மறைந்திருக்கு தென்றறிந்து மைந்தா நீயும்
பானென்ற கடுக்காயும் பஞ்ச தாரை
பச்சையாம் புழுகுடனே யாட்டி வாங்கி
மானென்று முழுகினநாள் மூன்று நாளும்
மாற்று உள்ளுக்குக் கொடுத்தி டாயே! 494

பொ.ரை: ஐந்தாவது வகையில், உடலுறவு கொள்ளும் போது கெண்டைக்கால் வலித்தால் சோரைக்கட்டியானது கருக் குழியை மூடி மறைத்திருக்கும். கடுக்காய், பஞ்சதாரை, பச்சைப் புனுகு இவற்றைச் சேர்த்தரைத்து தலைகுளித்த மூன்று நாளும் தொடர்ந்து உள்ளுக்குக் கொடுத்திடவும்.

கொடுத்திடவே பிள்ளையுண்டாம் குறையோ யில்லை
கூறக்கேள் யோனிக்குள் மருந்து கூட்டு
நடுத்திடவே அதிமதுரம் குங்குமப்பூ தானும்
நற்சீரகத் துடனே மூன்றுங் கூட்டி
படுத்திடவே யோனிக்குள் தடவிநன்றா யப்பா
அதின்மேல் புணர்ந்திடவும் பிள்ளை யுண்டாம்
எடுத்திடவே ஆறாவது யப்பா கேளு
ஏப்பம்விட்டால் புணர்வேளை மத்தது தென்னே! 495

பொ.ரை: அம்மருந்தினால் குழந்தையுண்டாகும். அதிமதுரம், குங்குமப்பூ, நற்சீரகம் இவை மூன்றையும் சேர்த்தரைத்துப் பெண் பிறப்புறுப்பில் தடவவும். அதற்குப் பிறகு புணர்ந்திட குழந்தை யுண்டாகும். ஆறாவது வகையில் புணரும் வேளையில் ஏப்பம் வந்ததாயின் கொழுப்பு அடைத்துள்ளதென்பது பொருள்.

மத்ததுமே கொழுத்திருக்கு தென்று எண்ணி
வாகான சவுக்காரம் கடுக்காய் சாரம்
மத்ததுயிவை சமபாக மரைத்துக் கொண்டு
தடவியே புணர்ந்தப்ப மூன்று நாளும்
மத்ததை மாற்றும் பிள்ளை யுண்டாம்
ஏழாங்காச்சி பேயாலும் பித்தாலும் பிள்ளையுண்டு
சுத்ததுமினி சாந்தியொன்று சூட்ச மாக
சொல்லுகிறேன் கேளு கேளே! 496

பொ.ரை: கொழுப்பினை நீக்கும் பொருட்டு சவுக்காரம், கடுக்காய், சாரம் இவற்றைச் சமமாக எடுத்தரைத்துப் பிறப்புறுப்பில் தடவவும். புணர்தலை தலை முழுகிய மூன்று நாளும் தொடர குழந்தைப் பேறுண்டாகும். ஏழாவது வகையில் பேயாலும் பித்தத்தாலும் குழந்தையில்லாது போயின் அதற்கான சாந்தி ஒன்று கூறுகிறேன்.

கேளப்பா சூதயிலை மாதுளை யிலையும்
கெடியாக கஸ்தூரிமஞ்சள் இவை நாலும்
நாளப்பா அரைத்துநன்றாய் பாதம்முதல் கழுத்துமட்டும்
நலமாக மேல்நோக்கி தடவச் சொல்லி
வேளப்பா புருசனையும் திரும்ப நோக்கி
விபரமுடன் கீழ்நோக்கி தடவச் சொல்லி
வாளப்பா மருந்தெல்லா மெடுத்துக் கொண்டு
மாவிலையால் பொதிந்ததனை வாங்குவாங்கே! 497

பொ.ரை: சூதயிலை, மாதுளையிலை, கஸ்தூரி, மஞ்சள், இவை நான்கையும் சேர்த்தரைத்து அவ்விழுதைப் பாதத்திலிருந்து கழுத்து வரை மேல் நோக்கி பெண்ணைத் தடவச் செய்யவும். புருடனைக் கீழ்நோக்கு முறையாக அம்மருந்தைத் தடவச் செய்யவும். மீதமுள்ள மருந்தை மாவிலையில் பொதிந்தெடுத்துக் கொள்ளவும்.

வாங்கியதோர் மருந்துதன்னை அவள்முன்னே காட்டி
வாசலிலே புதைப்பித்து மைந்தா அப்போ
பாங்கிதனைக் குளிப்பித்துப் புடவை நல்கி
பண்பான அகிலுடனே சாம்பிராணி கெந்தம்
தேங்கியதோர் தேகமெல்லாம் புகைத்து நன்றாய்
தினமொன்று மூன்றுதரம் புகைத்த போது
ஏங்கியதோர் தேவதையும் பூதப் பிரேத
ஏவலொடு பிசாசுவகைகள் எல்லாம் போமே! 498

பொ.ரை: அதனை அப்பெண்ணிடம் காண்பித்து வாசலில் புதைத்து வைக்கவும். குளிக்கச் சொல்லி ஆடை உடுத்திய பின் அகில், சாம்பிராணி, சந்தனம் ஆகியவற்றினாலான தூபப் புகையை நாளொன்றுக்கு மூன்று முறை புகைக்கச் செய்யவும். பூதம், பிசாசுகள் அவளை விட்டு நீங்கும்.

போகுமப்பா மருந்துவகை யோனிக் குள்ளே
பூசுகிற விபரமதைப் பூட்டக் கேளு
ஆகுமப்பா வகையொன்று பணவெடைதான் அஞ்சு
ஆண்பிள்ளை ஆனாக்கால் பணவெடைதா னொன்று
ஏகுமப்பா வியாதிமுதல் விரோத மெல்லாம்
என்மக்கள் சஞ்சலங்கள் இல்லை யப்பா
பாருமப்பா மலடியில்லை பிள்ளை யுண்டாம்
பாடினேன் கெர்ப்பத்தின் கோளைத் தானே! 499

பொ.ரை: பிறப்புறுப்பில் பூசும் மருந்தாயின் பெண்களுக்கு 244 கி. அளவும் ஆண்களுக்கு 488 மிகி. அளவும் ஆகும். நோய், பகைமை, துன்பங்கள், இடர்கள் ஏதுமில்லை. கெர்ப்பக் கேடிற்கான காரணங்களையும் அதற்கான சிகிச்சையையும் கூறிவிட்டேன். குழந்தைப் பேறுண்டாகும்.

தானென்ற பத்தியத்தைச் சூத்தி ரத்தில்
சொல்லுவோம் சாதகமாய் கட்டியதோருப் பாகும்.
வானென்ற புளியாரை சீவிக்காய் கொழுந்து
மைந்தனே நெல்லிக்காய் அறுநெல் லிக்காய்

தேனென்ற வெள்ளாடு முயலாமை யாகும்
திறமான ஊர்க்குருவி காடைமா னாகும்
பானென்ற மரையாகும் சுறாமீ னாகும்
பண்பான கெளுத்தி மீன் மிளகு மாமே! 500

பொ.ரை: மருந்திற்கான பத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. உப்பை வறுத்துச் சேர்க்கவும். புளியாரையின் காய், கொழுந்து, நெல்லிக்காய், அறு நெல்லிக்காய், வெள்ளாடு, முயல், ஆமை, மரை என்னும் ஒருவகை மான், ஊர்க்குருவி, காடை, மான், சுறாமீன், கெளுத்திமீன், மிளகு ஆகிய உணவுப் பொருட்களைச் சேர்த்துக் கொள்ளவும்.

ஆமப்பா சர்க்கரைதேன் சிறுகீரை யாகும்
ஆவின்பால் நெய்யாகும் சிறுபயிறு மாகும்
ஆமப்பா துவரையோடு பொன்னாங் காணி
அவரையோடு தூதுவளைச் சமூல மாகும்
ஆமப்பா தித்தித்த தெல்லா மாகும்
அப்பனே புளிதுவர்ப்பு கசப்பு மாகா
வாமப்பா பழவகைக ளெல்லா மாகும்
ஆத்தாளே பூசித்த மதுவு மாமே. 501

பொ.ரை: சர்க்கரை, தேன், சிறுகீரை, பசும்பால், நெய், சிறுபயிறு, துவரை, பொன்னாங்காணி, அவரை, தூதுவளைச்சமூலம் ஆகிய உணவுப்பொருட்கள் சேர்க்க வேண்டியவை. இனிப்பான பொருட்கள் அனைத்துமாகும். புளிப்புச்சுவை, துவர்ப்புச்சுவை, கசப்புச்சுவை ஆகாதவை. பழவகைகள் அனைத்துமாகும். பூசனை செய்யப்பட்ட மதுவும் ஆகும்.

மதுவாகு குளிர்ந்த பட்டணங்க ளாகா
மைந்தனே கொதிதண்ணீர் வெந்நீர் ஆகும்
மதுவாகும் இதுவுமாகும் மென்றே எண்ணி
அலைந்து திரியாமல் அருளை நோக்கி
போது......... கொண்டே இருப்பா ராகில்
புத்திமுத்தி சித்திமுதல் புனித மாமே. 502

பொ.ரை: குளிர்ச்சியான பொருட்கள் ஆகாது. கொதிக்கப் பட்ட நீர், வெந்நீர் ஆகும். உணவுப் பொருட்களில் இது ஆகும், அது ஆகும் என்றுணர்ந்து கொள்ளவும். அதற்காகவே இங்கும் அங்கும் வருந்தி அலையாது இறைவனின் அருளை நோக்கியே செயல்படவேண்டும். புத்தி, சித்தி தெளிவடையும்.

– முற்றும் –

